LONGMANS' VERNACULAR SERIES FOR MADRAS

HEROES OF INDIAN HISTORY

BY
J. C. ALLEN
AUTHOR OF "A NARRATIVE OF INDIAN HISTORY"

TAMIL EDITION

SECOND EDITION

இந்திய சரித்ர சிகாமணிகள்

ஜெ. ஸி. ஆலென்
இயற்றியது

LONGMANS, GREEN & CO.
167, MOUNT ROAD, MADRAS
BOMBAY AND CALCUTTA

லாங்மன்ஸ், க்ரீன் அண்ட் கம்பனி
167, மௌன்ட் ரோட், மதராஸ்
பொம்பாய், கல்கத்தா
1921

முகவுரை

இந்தச் சிறிய புஸ்தகத்திலுள்ள கதைகள் இந்திய சரித்ரம் உருப்படுவதற்கு உபகாரமான கார்யங்களைச் செய்த ஆடவரையும் பெண்டிரையும் பற்றிச் சொல்பவை. இந்த ஆடவர் பெண்டிர்களில் சிலர், பெரிய மனது படைத்தவர்கள்; உண்மையும் வாய்ந்தவர்கள். அவர்கள், தங்கள் நன்மையைக் கருதாமல், தம்மைச் சுற்றியுள்ளவர்களுடைய க்ஷேமத்தையே கருதி உழைத்தவர்கள். மற்றவர்கள், தங்களையும் தங்கள் நன்மைகளையுமன்றி வேறொன்றையும் கருதாதவர்கள்.

பெரிய வெற்றியாளரென்று தங்கள் பெயர் சரித்ரத்தில் வழங்குமாறு உபயோகமற்ற யுத்தங்களைச் செய்து சுயநன்மை கருதிய அரசரைப் பற்றியும், தங்கள் ராஜ்யத்தின் நன்மைகளைக் கருத்தாய் கவனிப்பதும் தங்கள் தேசத்தைச் சண்டை சச்சரவில்லாமல் காக்கவும் பிறதேசங்களைத் தங்கள் செங்கோலின் கீழ்ப்படுத்தவும் யுத்தம் செய்வதுமான பெரிய நோக்கமுள்ள அரசரைப் பற்றியும், தங்கள் உபேக்ஷையாலும் அஜாக்ரதையாலும் தங்கள் தேசம் ஒழுங்குகெட்டுத் தடுமாறும்படி செய்த அரசரைப் பற்றியும் இந்தக் கதைகளில் வாசிப்போம். தவிரவும், ஜனங்கள் கௌரவமான எண்ணங்களைப் படைக்கவும் சுயநயம் பாராட்டாமல் வாழவும் வற்புறுத்துவதில் முழுமனதோடு ஊக்கங்கொண்ட பெருமக்களைப் பற்றியும் வாசிப்போம்.

முற்காலத்தில் ஜனங்களுக்கு வழிகாட்டிகளாக இருந்த இந்தப் பெருமக்களைப் பற்றி வாசிப்பதில், இழிவாகவோ சுயநயம் அநுஸரித்தோ கொடுமையாகவோ இருந்தவர்களை இகழ்ந்து தள்ளி, உத்தமர்களாகவும் உண்மை யுடையவர்களாகவும் இருந்தவர்களையே சிகாமணிகளாகக் கொள்வோம்.

பொருளடக்கம்

இந்திய சரித்ர சிகாமணிகள்

பூகோளத்தில் இந்தியாவைப் பற்றிய விவரம்

நம்முடைய வாஸஸ்தானம் இந்தியா. அது எங்கே இருக்கிறது? பூலோகத்தில் அதற்குரிய நிலை என்ன? பூலோகப் படத்தைப் பார்த்தால், நிலமானது பிண்டம் பிண்டமாய்ப் பிரிவுற்றிருப்பது தெரியும். ஒரு பக்கத்தில் அமெரிக கண்டமும் ஒரு பக்கத்தில் ஆப்ரிக கண்டமும் ஒரு பக்கத்தில் ஆஸ்ட்ரேலிய கண்டமும் இருக்கின்றன. ஒரு பக்கத்தில் ஏஷ்ய கண்டமும் யூராப் கண்டமும் ஒரேபிண்டமாகக் கூடியிருக்கின்றன. இந்தியா ஏஷ்யவின் தெற்கில் இருக்கிறது. ஏஷ்யவிலும் யூராப்பிலும் வஸிக்கிற அநேக கூட்டத்தாருக்கு ஏஷ்யவே உற்பத்தி ஸ்தானம். இவர்களெல்லாம் ஆர்யர்கள். ஏஷ்யவில் வஸிக்கிற ஜனங்களைப்பற்றிப் படிக்குமுன்னே, நம்முடைய தேசத்தை நன்றாய் கவனித்துப் பார்க்கலாம்.

ஏஷ்ய படத்தைப் பார்த்தால், மத்தியில் பல மலைகள் இருப்பது புலப்படும். இந்த மத்யபாகம்மேடுபள்ளமான சீதள ப்ரதேசம். இதற்குத் தெற்கிலும் மேற்கிலுமுள்ள பாகங்கள் இப்படியன்றி ஸௌகர்யமான ஸமபூமியாயிருக்கும். தெற்கிலுள்ளது இந்தியா: மேற்கிலுள்ளது பெர்ஷ்யா.

ஏஷ்யவின் மத்யபாகம் உயரமான ஒரே பீடபூமி. இந்தப் பீடபூமியின் தெற்கில் உயரமான மலைத்தொடர்கள் உண்டு. இவற்றில் சில மலைகள் உலகிலுள்ள மற்ற மலைகளைக்காட்டிலும் மிகவும் உயரமானவை. பனிக்கு இருப்பிடமாகிய ஹிமாலயம் என்னும் பெரிய மலைத்தொடரைப்பற்றி நீங்கள் படித்திருக்கிறீர்கள். மத்ய ஏஷ்யவிலுள்ள மலைகள் எல்லாவற்றிற்கும் தெற்கில் உள்ளது இதுவே. இதற்குத் தெற்கில் ஹிந்துஸ்தானம் இருக்கிறது. ஹிந்துஸ்தானம் வெதுவெதுப்பாய்ச் செழுமை பொருந்திய ஸமதள ப்ரதேசம்.

மலைகளைத் தீண்டின வளவில், மேகங்களிலுள்ள ஒதமானது மழை ரூபமாகி மலைகளின்மேல் பெய்யும். அந்த மழை

நீர் மலைச்சாரல்களிலும் மலைவெடிப்புகளிலும் சிற்றாறுகளாக உருண்டு பாயும். இவ்விதமாக ஹிமாலயத்தின் சரிவுகளில் மழைநீர் உருண்டு புரண்டு விழுந்து சிற்றாறுகளாகும். அவை பலகூடிப் பேராறுகளாகி, மலையடிவாரங்களைச் சூழ்ந்து வளைந்து இறங்கிவந்து, ஸமநில ப்ரதேசங்களில் பாயும். இவ்விதமாகத்தான் கங்கையும் ஸிந்துவும் உபநதிகளோடு கூடி, தெற்கில் நிலம் தாழ்வான இடங்களில் வழி செய்துவந்து, ஹிந்துஸ்தானமாகிய பெரிய ஸமதள ப்ரதேசத்தில் பாய்ந்து செல்கின்றன.

எங்கே ஜலம் உண்டோ அங்கே தான்யதவசங்களும் காய் கனிகளும் பலவித மரங்களும் உண்டாகும். ஆகவே, ஹிந்துஸ்தானம் ஆஹாரம் அபரிமிதமாய் உண்டாகிற தேசம் என்பது தெளிவு. ஹிந்துஸ்தானத்தில் மிகவும் செழிப்பான பாகம் வங்காளம். ஆறுகளில் அடித்துவருகிற வளமான மண்ணானது, அங்கே டடுகை நிலங்களில் வண்டலாகத் தங்கிவிடுகிறது: ஒவ்வொரு வருஷமும் காலமழை குறைவில்லாமல் பெய்கிறது.

ஹிந்துஸ்தானத்துக்குத் தெற்கில் விந்த்ய பர்வதங்கள் உயரமாய்க் கிளம்பி யிருக்கின்றன. இவைகளுக்குத் தெற்கிலுள்ள ப்ரதேசம் உயரமாயிருக்கிறது. இந்த உயரமான ப்ரதேசமே தக்ஷிண பீடபூமி. இந்தப் பீடபூமியின் இருபக்கங்களிலும் மலைகள் இருக்கின்றன. மேற்கிலுள்ளவை மேற்கு மலைத்தொடர் என்றும், கிழக்கிலுள்ளவை கிழக்கு மலைத்தொடர் என்றும் வழங்கிவருகின்றன. இந்த இரண்டிலும் மேற்கு மலைத்தொடரே உயரமானது. ஆகவே, அவைகளின் கிழக்குச் சரிவுகளில் பாய்கிற நதிகள், தக்ஷிணதேசத்தில் கிழக்குமுகமாகக் குறுக்கிட்டோடி, கிழக்கு மலைத்தொடர்களின் மூலமாய் ஸமதள ப்ரதேசங்களில் பாய்ந்து, வங்காள விரிகுடாவில் கலக்கின்றன

மேற்கு மலைத்தொடர்களைப்போல் கிழக்கு மலைத்தொடர்கள் ஸமுத்ரத்துக்கு ஸமீபத்தில் இல்லை. படத்தில் கிழக்கு மலைத்தொடரின் போக்கை வடக்கிலிருந்து தெற்கு முகமாகத் தொடர்ந்துவந்தால், அது சிறிது சிறிதாய் உள்ளூற ஒதுங்கிச் செல்வதைக் காணலாம். அதனால் அதற்கும் ஸமுத்ரத்துக்கும் இடையிலுள்ள ஸமவெளி, தெற்கே போகப்போக

அகன்றுகொண்டே போகிறது. இந்த ஸமவெளி ப்ரதேசம் கர்நாடகம் என்று வழங்குகிறது. போதுமான ஜலம் கிடைத்தலால், இந்த ப்ரதேசம் மிகவும் செழிப்பாக இருக்கிறது. தக்ஷிண பீடபூமியின் தென்பாகம் உள்ளபடி மிகவும் உயரமானதே. அது முடிவாகிற இடத்தில் நீலகிரி மலைகள் இருக்கின்றன. அவை உயரமானவை.

மேற்குமலைத்தொடரின் வடபாகத்துக்கும் அரேபிய கடலுக்கும் இடையிலும் செழிப்பான ஓர் ஓடை ப்ரதேசம் இருக்கிறது. (ஓடை என்பது ஒடுக்கமான நிலம்). ஹிந்துஸ்தானம் கர்நாடகம் மேற்கு (கூர்ஜர) ஸமவெளிகள் ஆகிய இந்தச் செழிப்பான இடங்களில் எத்தனையோ ஆயிரம் வருஷங்களாகப் பல கூட்டத்தினர் வஸித்து வருகிறார்கள். நெடுங்காலத்துக்கு முன் அவ்விடங்களில் குடியிருந்தவர்களைப்பற்றி இப்பொழுது படிக்கப்போகிறோம்.

இந்திய ஜனங்கள்

தற்காலத்தில் நாம் நாகரிகம் அடைந்திருப்பதுபோல் பூலோகத்திலுள்ள ஜனங்கள் எல்லாருமே நாகரிகம் அடைந்திருக்கவில்லை. ஆப்ரிகவில் சுதேசிகளான (நீக்ரோவர்) காப்பிரிகள் இன்னும் நாகரிகம் அடையாதவர்கள். எழுதுகிற வித்தை நமக்கு அநேகம் ஆயிரம் வருஷங்களாகத் தெரிந்திருக்கிறது. ஸாதாரணமான இந்த வித்தை இன்னும் அவர்களுக்கு ஏற்படவில்லை. இந்திய ஜனங்களும் ஒருகாலத்தில் நாகரிகமின்றி இருந்தவர்களே. ஆப்ரிகவில் தற்காலத்தில் அநேக கூட்டத்தினர் வனவாஸம் பண்ணிக்கொண்டு அங்கே விளைவதை உண்டு ஜீவித்திருப்பதுபோலவே, இந்தியாவிலும் தற்காலத்தில் சில கூட்டத்தினர் வனவாஸம் பண்ணிக்கொண்டு வஸ்த்ரம் யாதொன்றும் தரிக்காமல் வனத்தில் கிடைப்பதை உண்டு ஜீவித்திருக்கிறார்கள். அவர்கள் நம்மைப்போல் நிலத்தைப் பண்படுத்தி தான்யம் விளைப்பதில்லை. மழைக்கு ஆதரவாக உரமான வீடுகளைக் கட்டிக்கொள்வதுமில்லை. மத்ய இந்தியாவின் காடுகளில் வஸிக்கிற காண்டுகளும், ராஜபுதனத்திலுள்ள பீலரும், நீலகிரியில் இருக்கிற குன்றவர் கூட்டங்களும் இப்படிப்பட்டவர்களே. இந்தப்

பூர்விக ஜனங்கள் எல்லாரையும் நாம் கோலர் என்கிறோம். அவர்கள் இந்தியாவின் ஆதிக்குடிகள்.

ஹிமாலயத்துக்கு வடக்கிலுள்ள தேசம் உந்நதமான மலைகளுள்ளதும் குளிர்காற்று வீசுவதுமாய்க் காடுமுரடாயிருக்கும். பொதுவாய்ச் சொல்லுமிடத்தில் இந்த தேசம் காடுமுரடேயாயினும், அங்கங்கே பள்ளத்தாக்கான சில ப்ரதேசங்கள் உண்டு. அவைகளில் ஸூர்ய வெப்பம் நன்றாக உறைக்கும்; பல ஜாதி மரங்கள் பூத்துக் காய்த்துப் பழுக்கும்: பக்ஷிகள் உல்லாஸமாய்ப் பாடியிருக்கும். மழை பெய்தால் பச்சைப் பச்சென்று புல் வளர்தலான மைதானங்களும் அங்கே அநேகம் உண்டு. இந்த ப்ரதேசந்தான் ஆர்யர்களுக்கு ஆதியான வாஸஸ்தானம்.

அக்காலத்தில் ஆர்யர்கள் ஆடுமாடுகளையே தங்கள் ஆஸ்தியாகப் பாராட்டியிருந்தனர். ஓரிடத்திலும் நிலையாய் வஸிக்காமல், ஆடுமாடுகளுக்குப் புல் தேடிக்கொண்டு, அவர்கள் பள்ளத்தாக்குப் பள்ளத்தாக்காய் மைதானம் மைதானமாய்த் திரிவார்கள். அவர்களுடைய தொகை அதிகரிக்கவே, மத்ய ஏஷ்யவில் இடம் போதாமல், சிலர் மேற்கிலும், சிலர் தெற்கிலும் போகத் தொடங்கினர். தெற்காக வந்தவர்களில் சிலர், மலைகளைக் கடந்து ஹிந்துஸ்தானத்துக்கு வந்தனர். குளிரான தங்கள் தேசத்துக்கும் ஹிந்துஸ்தான ஸமவெளிகளுக்குமுள்ள வித்யாஸம் அவர்களுக்குத் தெளிவாகத் தோன்றியிருக்கவேண்டும். ஆகவே, ஐந்து நதிகள் உள்ள பஞ்சாப் சீமையில் அவர்கள் நிலைத்தலானதில் அதிசயம் ஒன்றுமில்லை. கண்டுபிடித்த புதிய தேசத்தைக் கைக்கொள்ளும்படி அவர்கள் இந்தியாவிலிருந்த பழைய ஜனங்களோடு சண்டை போட்டதிலும் அதிசயம் ஒன்றுமில்லை.

ஆர்யர்கள் அந்தசந்த மானவர்கள். மலைநாடுகளில் பிறந்தவ ராகையால் அவர்கள் உயரமாய் தேகவலிமை பெற்றிருந்தனர். அவர்களோடு எதிர்த்து நிற்கமாட்டாமல் கோலரும் த்ராவிடர்களும் பின்னிடைந்து கொஞ்சங் கொஞ்சமாய்த் தெற்கு நோக்கி வந்துவிட்டனர். ஆர்யர்கள் மேன்மேலும் கூட்டங்கூட்டமாய் வந்து ஹிந்துஸ்தானத்தில் குடியேறினர்கள். புதிய மேய்ச்சல் நிலங்களைத் தேடிச் செல்லும் அவசியமில்லாமையால், அவர்கள் பஞ்சாப்பில் நிலைத்தலாகி, தான்-

யம் விளைவிக்கலாயினர். தான்யத்தை மாவாக அரைத்து அப்பமாக (ரொட்டியாக)ச் செய்துகொள்வது அவர்களுக்கு வழக்கம். வெள்ளாடு செம்மறியாடுகளின் மாம்ஸத்தையும் அவர்கள் உண்டுவந்தனர். ஸோமலதையின் சாற்ருேடு பாலைக் கலந்து லஹரியான ஒருவித பானம் செய்து பருகி-வந்தனர். சண்டைக்குப் போகும்போது குதிரைகள் கட்டிய ரதங்களில் ஏறிப்போவர்.

ஸம்ஸார வாழ்க்கையில் ஆர்ய ஸ்திரீகளுக்கு அதிக கௌரவம் ஏற்பட்டிருந்தது. அந்தப்புரத்தில் அடைபட்டிருத்தலான நியதி அக்காலத்தில் இல்லை; இஷ்டமான இடங்களுக்குப் போவதும் வருவதும் இயற்கையாயிருந்தது. குடும்ப கார்யங்களை கவனிப்பதும் குழந்தைகளை வளர்ப்பதும் அவர்களுடைய கடமை. பிள்ளைகளும் அவர்களுடைய மனைவிமார்களும் பிதாவோடு ஒரே குடும்பமாய் வஸித்துவந்தனர். பிதாவானவர் குடும்பத்தலைவர். குடியிருப்பைச் சூழ்ந்துள்ள நிலத்தில் பயிரிட்டு விளைவதை அவர்கள் பங்கிட்டுக்கொள்வர்.

காலாந்தரத்தில் ஆர்யர்கள் கொஞ்சங் கொஞ்சமாய்த் தொகையில் அதிகரித்து வந்தனர். வடக்கில் அவர்கள் விஞ்சிவிட்டமையால், த்ராவிடர்கள் அவர்களோடு சண்டை செய்வதை ஒழித்துவிட்டுத் தென்னிந்தியாவில் நாகரிகமுள்ள பலத்த ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டனர். ஆர்யர்களுடைய தேசத்தில் தங்கிவிட்ட த்ராவிடர்களும் கோலர்களும் சூத்ரஜாதி என்பவராயினர். முதலில் ஹிந்துஸ்தானத்துக்கு வந்தபோது ஆர்யர்களுள் ஜாதிபேத மென்பது கிடையாது. அங்கே அவர்கள் நிலைத்த பின்பே ஜாதியேற்பாடு கொஞ்சங் கொஞ்சமாய் ஒழுங்குபெற்று வந்தது. குடியேறினவர்களுடைய தொகை மேன்மேல் அதிகரித்து வரவே, அவர்கள் சில கூட்டத்தினராகப் பிரிவுற்றனர். அதன்மேல் ஜாதிவித்யாஸம் ஏற்பட்டது. ஜாதிகள் முதலில் ப்ராஹ்மணர் (குருமார்) என்றும், க்ஷத்ரியர் (ராஜாக்களும் யுத்தவீரரும்) என்றும், வைஸ்யர் என்றும், சூத்ரர் என்றும் நான்கே இருந்தன. சூத்ர ரென்போர் ஊழியக்காரர்களும் வேலையாள்களுமே.

நாளடைவில் ஆர்யர்கள் பின்னும் தெற்காகச் சென்று, அயோத்யாவை அடைந்து, அங்கே ஒரு பலத்த ராஜ்யத்தை ஏற்படுத்தினர். அப்பால் வங்காளத்தில் ப்ரவேசித்தனர்.

ஆர்யர்கள் படிக்கவும் எழுதவும் செய்யுள் செய்யவும் வல்லவர்கள். அவர்கள் பாடிய தேவாரப் பாசுரங்கள் அடங்கிய ப்ரபந்தம் ரிக்வேதம் என வழங்கிவருகிறது. அக்காலத்தைப்பற்றி மேலே சொல்லிய எல்லா விஷயங்களையும் அறிந்துகொள்வதற்கு அந்த ப்ரபந்தமே ஆதாரம். ஹிந்துஸ்தானத்தில் ராஜ்யங்களை ஏற்படுத்திய பிறகு, அவர்கள் தங்களில் ஒருவரோடொருவர் சண்டைபோடத் தொடங்கினர். அந்த ராஜ்யங்களில் இரண்டு ஒன்றோடொன்று செய்த ஒரு மஹாயுத்தம், மஹாபாரதம் என்கிற ஸமஸ்க்ருத காவ்யத்தில் சொல்லியிருக்கிறது. அந்தக் காவ்யம் நெடுங்காலத்துக்கு முன் ஆர்யர்கள் செய்தது. அவர்களுடைய கதைகளில் மற்றொன்று ராமாயணம் என்று வழங்கிவருகிறது.

மேற்கே சென்ற ஆர்யர்கள் யூரப்பில் பரவினார்கள். சிலர் பெர்ஷியாவிலும், சிலர் அரேபியாவிலும் நிலைத்தனர். யூரப்பில் தற்கால ஜனங்களில் பெரும்பாலினர், இங்ஙனம் மேற்கில் சென்று யூரப்பில் பரவின ஆர்யர்களுடைய கால்வழிகளே யாவர்.

ராமாயணம்

நெடுங்காலத்துக்கு முன்னே கோஸலம் என்கிற பழமையான தேசத்தில் அயோத்யை என்கிற பெயர்பெற்ற பட்டணம் ராஜதானியாக இருந்தது. அந்தப் பட்டணத்து ஜனங்கள் அனைவரும் தனவான்கள். புண்யவான்க ளாகையால் அவர்கள் க்ஷேமமாயிருந்தார்கள். அங்குள்ள ப்ராஹ்மணர்கள் மஹா பண்டிதர்கள். குடிகளெல்லாம் பழமையான பரம்பரையில் வந்தவர்கள். யுத்த வீரர்களெல்லாம் மஹா பராக்ரமசாலிகள்.


அந்த ராஜ்யத்தைச் சில காலம் தசரத மஹாராஜன் ஆண்டிருந்தார். புத்ரபாக்யம் தவிர, அவருக்கு வேறே யாதொரு குறைவும் இல்லை. புத்ரபாக்யம் பெறுவதற்கு என்ன செய்யலாமென்று அவர் ப்ராஹ்மணோத்தமர்களைக் கேட்டார். அவர்கள் அசுவமேதம் செய்தால் நல்லது என்றனர். அப்படியே அவர் ஓர் அசுவமேதம் நடத்தி ப்ராஹ்மணர்களுக்கு விசேஷமாய் ஸ்வர்னதானமும் கோதானமும் கொடுத்தார்.

அப்பால் அவருக்கு நான்கு குமாரர்கள் பிறந்தனர். அவர்களுக்கு ராமன் பரதன் லக்ஷ்மணன் சத்ருக்நன் என்று குல குருவாகிய வஸிஷ்டர் பெயரிட்டார். ராமன் பட்டமஹிஷியின் குமாரர். பரதன் ராஜாவுடைய ஆசைநாயகியின் குமாரர். லக்ஷ்மணனும் சத்ருக்நனும் மூன்ருவது மனைவி வயிற்றில் இரட்டைப்பேருகப் பிறந்தவர்கள்.

அக்காலத்தில் அநேக கொடிய ராக்ஷஸர்கள் வஸித்திருந்தனர். அவர்கள் அரண்யங்களில் ஸஞ்சரிப்பதும், ஜனங்களைக் கொலைசெய்வதும், வனங்களிலுள்ள ஸந்யாஸிகளையும் தபஸிகளையும் தங்கள் தங்கள் வைதிக கார்யங்களைச் செய்ய வொட்டாமல் கெடுப்பதுமாகக் காலங்கழிப்பவர். இந்த துஷ்டர்களை வதைக்கும்படி விசுவாமித்ரர் என்கிற மஹரிஷி அயோத்தியை அடைந்து ராமனைக் கூட்டிக்கொண்டு போனூர். அப்போது ராமனுக்கு வயது பதினறு. லக்ஷ்மணனும் ராமனேடு போனர்.

ராமனும் லக்ஷ்மணனும், விசுவாமித்ரரோடு போகும்போது, வனத்தில் முதல் முதலில் தாடகி என்கிற ராக்ஷஸி அவர்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள், புழுதிப் படலங்களைக் கிளப்பி ராஜகுமாரர்கள்மேல் கற்களை வீசியெறிந்தாள். ராமன் அம்புகளை ஒன்றின்பின் ஒன்ருக விரைவாய்த் தொடுத்து எய்தார். அந்த அம்புகள் அந்தக் கற்களைச் சிதறடித்தன. ராமனும் லக்ஷ்மணனும் அவளுடைய மூக்கையும் காதுகளையும் கைகளையும் அறுத்துவிட்டனர். அதன்மேல் அவள் தந்த்ரமாய் உருமாறித் தப்பிப்போகப் பார்த்தாள்: அது முடியாமல் ராமரால் கொலையுண்டு விழுந்தாள். தேசத்தாருக்கு அவளால் உண்டாகிவந்த கெடுதி அதனேடொழிந்தது.

அப்பால் ராமலக்ஷ்மணர்கள் விசுவாமித்ரரோடு வழியில் அங்கங்கேயுள்ள ஆசிரமங்களில் தங்கியிருப்பதும் முனிவர்கள் கொடுக்கும் பாலும் ஆஹாரமும் உண்டு களைதீர்த்துக் கொள்வதுமாய்ப் பலநாள் பயணம் செய்தனர். இங்ஙனம் பயணம் செய்யும்போது, வழியில் அநேக ராக்ஷஸர்களோடு சண்டைசெய்து, அவர்களைக் கொன்றுகொண்டே போயினர். முடிவில் அவர்கள் மிதிலாபுரத்தை அடைந்தார்கள்.



ராமன் தாடகையின்மீது பாணம் போடுவது.

அந்த ராஜ்யத்தை ஆண்டிருந்த ஜநக மஹாராஜனுக்கு ஸீதை என்று ஓர் அழகிய பெண் இருந்தாள். அவரிடத்திலிருந்த பெரிய சிவதநுஸை எடுத்து வளைப்பவனுக்கே ஸீதையை மணஞ்செய்து கொடுப்பதாக அவர் விளம்பரம் செய்திருந்தார். அநேக ராஜகுமாரர்கள் வந்து வில்லை எடுக்கமாட்டாமல் வெட்கமடைந்து போய்விட்டார்கள். அந்த வில்லை வளைத்துப்பார்க்க வேண்டுமென்று ராமன் ராஜ ஸபைக்குப் போனார்.

மிகவும் பெரிதாய் பளுவாயிருந்ததனால், அந்த வில்லை ஆள்கள் ஒரு பெரிய பண்டியில் ஏற்றிக்கொண்டு வந்தனர். உடனே ராமன் வில்லையெடுத்து வளைத்து உடைத்துவிட்டார்.

ஜநகர் இந்த ஸங்கதியைத் தூதர்கள் மூலமாக தசரதருக்கு அறிவித்தார். மற்ற இரண்டு பிள்ளைகளையும் மனைவிமார்களையும் அழைத்துக்கொண்டு தசரதர் உடனே ராமனுடைய விவாஹத்துக்கு வந்து சேர்ந்தார். கல்யாணச்சடங்குகள் முடிந்ததும், ராமன் ஸீதையோடு அயோத்யாவுக்குத் திரும்பினர். தசரதரோடு ராமனும் ஸீதையும் வருவதைக் கண்டு ஜனங்கள் ஸந்தோஷமாய் ஆரவாரித்தனர்.

சில வருஷங்கள் கழிந்த பிறகு, தசரதர் தனக்கு முதிர்பருவம் மேலிட்டதைக் கண்டு, ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய விரும்பினர். இந்தச் செய்தியைக் கேட்டபோது, பர-

தனுடைய தாயான கைகேயி, ராமனுக்குப் பட்டங் கட்டா-மல் தன் மகனுக்குக் கட்டுவிக்க விரும்பினாள்.

முன்னொரு காலத்தில் தசரதருக்கு ஒரு கொடிய கஷ்டம் நேர்ந்தபோது, கைகேயி கிட்டவிருந்து உதவிசெய்தாள். அத-னால் தசரதர் ஸந்தோஷமடைந்து, அவளுக்கு மூன்று வரங்-கள் கொடுப்பதாக வாக்கிட்டிருந்தார்.

ராமன் பட்டங்கட்டிக்கொள்ளப் போகிறானென்று ஜனங்-கள் அதிக ஸந்தோஷம் அடைந்தார்கள். ராமனுடைய கண்-கள் விசாலமாய்த் தாமரைபோன் றிருக்கும். திருமேனி நீலோத்பலம் போன்றது. அவருடைய கைகள் முழங்கால-ளவு நீண்டிருக்கும். அவர் மஹா பலசாலியான வில்லாளி: மத்தகஜம்போன்ற கம்பீரமான நடையுள்ளவர். பராக்ரமம், ஸத்யம், அடக்கம், பெரியோர்களிடத்தில் மரியாதை, ப்ராஹ்-மணரிடத்தில் தயாளம் ஆகிய நற்குணங்கள் அமைந்தவர்: ஐம்புலன்களையும் அடக்கக் கூடியவர். இப்படிப்பட்ட லக்ஷ-ணங்களுள்ள மஹாபுருஷன் ராஜாவாகப்போகிறா னென்றால், ஸந்தோஷமடையாதவர் உண்டோ? கடைசியாக தசரதர் கைகேயியின் வேண்டுகோளுக்கு இசைந்து, பரதனை ராஜா-வாக்கப் போகிறாரென்று செவிப்பட்டால், ஜனங்களுக்கு உண்டான துக்கம் எப்படி யிருக்கும்? அதுவும் போதாமல், கைகேயியின் இஷ்டத்தை அநுஸரித்து, ராமன் பதினான்கு வருஷகாலம் வனவாஸம் செய்யப்போகிறாரென்று கேட்டால், அந்த துக்கத்துக்கு அளவுண்டோ?

தந்தையின் சொற்படி நடப்பதே கடமை யென்று, ராமன், ஒரு வார்த்தையும் சொல்லாமல் வனவாஸத்துக்குப் புறப்பட்-டார். அவருடைய மனைவியான ஸீதையும் அவரைவிட்டுப்-பிரிந்திருக்க முடியாதென்று கூடவே புறப்பட்டாள். ஸஹோ-தரரான லக்ஷ்மணனும் ராமனோடு போய்விட்டார். மூவரும் மாவுரி தரித்துக்கொண்டு ப்ரயாகையை நோக்கிச் செல்லலா-யினர்.

அவர்கள் போனபிறகு, அதே ஏக்கமாய் தசரதர் சில நாளில் இறந்துபோனார். கைகேயியின் பிதாவைப் பார்க்கப் போயிருந்த பரதனை வஸிஷ்டர் வரவழைத்தார். நடந்த செய்-திகளைக் கேட்டு, பரதன் பட்டங்கட்டிக்கொள்ள இசையாமல், ராமனை அழைத்துவருவதாக ஸேனைகளோடு புறப்பட்டார்.


மந்த்ரி ப்ரதானிகளும் பல்லாயிரம் நகரஜனங்களும் கூடவே புறப்பட்டார்கள்.

வழியில் பல கஷ்டங்களைப் பட்டு நெடுநாள் பயணம் பண்ணி, பரதன், ராமனிருந்த இடத்தைக் கண்டுபிடித்தார். ராமன் தலைமயிர் சடைத்து மரவுரி தரித்திருந்தார். ஸீதையும் லக்ஷ்மணனும் கூடவே இருந்தனர்.

தசரதர் இறந்துபோன செய்தியைக் கேட்டு ராமன் மூர்ச்சை யடைந்தார். மூர்ச்சை தெளிந்து, செய்யத்தக்க சடங்குகளைச் செய்தபிறகு, அவரைத் திரும்பிவந்து அரசனுகும்படி பரதன் வேண்டிக்கொண்டார். தந்தை வார்த்தையைத் தப்பி நடப்பதில்லையென்று ராமன் கடைப்பிடித்திருப்பதைக் கண்டு பரதன் திரும்பினர். ராமன் பின்னும் தெற்குநோக்கிப் பயணமானர்.

ஒவ்வொரு வருஷமாய்க் காலம் கழிந்துகொண்டே யிருந்தது. ராமன் அரண்யங்களில் அங்கங்கே ஸஞ்சரித்துப் பல ராக்ஷஸர்களோடு சண்டைசெய்து அவர்களைக் கொன்றுகொண்டே போனர். தங்கியிருக்கும் இடங்களைப்பற்றியாவது ஆஹாரத்தைப்பற்றியாவது ஸீதை யாதொரு குறையும் சொன்னதே இல்லை: ராமனுக்கு வனவாஸத்தில் கஷ்டம் தோன்றுதபடி கூடவிருந்து அவருக்கு உபசரிப்பதையே மஹா பாக்யமென்று எண்ணியிருந்தாள்.

தண்டகாரண்யத்தில் ஸஞ்சரிக்கும்போது, சூர்ப்பநகை என்கிற கொடிய ராக்ஷஸி, ஸீதையைக் கொல்லப்பார்த்தாள். அவள் கையில் ஸீதை சிக்காதபடி ஸஹோதர ரிருவரும் எச்சரிக்கையாக இருந்தனர். லக்ஷ்மணர் சூர்ப்பநகையின் மூக்கை அரிந்துவிட்டார். அவள் அந்தக் காட்டில் காவலாக இருந்த ராக்ஷஸக் கூட்டத்துக்குத் தலைவனுன கரன் என்பவனுக்குத் தங்கை. சூர்ப்பநகை தான் பட்ட பாட்டை அவனிடம் தெரிவித்தாள். அவ்வளவில் அவன் ராக்ஷஸர்களைக் கூட்டிக்கொண்டு வந்தான். கதைகளும் அம்புகளும் பாசங்களுங்கொண்டு ராக்ஷஸர்கள் ராமனை எதிர்த்தார்கள். பலமுறை காயப்பட்டும், எதற்கும் சலிக்காமல், ராமன் பல்லாயிரம் அம்புகளை எய்து அந்த ராக்ஷஸர்களை ஸம்ஹரித்தார். ஓர் ஆக்நேயாஸ்த்ரங்கொண்டு கரனையும் கொன்று சாய்த்தார்.



ஹநுமான் கடலைத் தாண்டுவது.


லங்காதிபதியான ராவணனும் சூர்ப்பநகைக்கு ஒரு ஸஹோதர னுகையால், தான் கொலையுண்ட செய்தியை அவள் போய் அவனிடம் அறிவித்தாள். பழிக்குப் பழிவாங்குவ-தாக ராவணன் அவளிடம் உறுதி கூறினன்.

ராவணன் ஸீதையின் அழகைப்பற்றிக் கேள்வியுற்றிருந்-தவன். ஆகவே அவளை ராமனிடத்திலிருந்து கவர்ந்துவருவ-தென்று முடிவு செய்துகொண்டான். ஒரு ராக்ஷஸனை ராமனு-டைய பர்னசாலைக்கு அனுப்பினன். அந்த ராக்ஷஸன் வெள்-ளைப் புள்ளிகளுள்ள பொன்மான்போல் உருவங்கொண்டு போனன். அந்த மானைப் பிடித்துத் தரும்படி ஸீதை ராம-னைக் கேட்டுக்கொண்டாள். ஸீதையை பத்ரமாய்ப் பார்த்தி-ருக்கும்படி லக்ஷ்மணனிடம் சொல்லிவிட்டு, ராமன் அந்த மானைப் பிடிக்கும்படி போனர்.

மான் ஓட்டங் காண்பித்துக்கொண்டே நெடுந்தூரம் போ-யிற்று. ராமனைப் போய்த் தேடும்படி ஸீதை லக்ஷ்மணனை அனுப்பினள். பர்த்தாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு ஸீதை பர்னசாலையின் வாயிலில் உட்கார்ந்திருந்-தாள். இன்னும் ராமன் வரவில்லையே யென்று துக்கித்திருக்-கையில், ராவணன் ஸந்யாஸிபோல் மாறுவேஷம் பூண்டு அங்கே வந்தான்; கொஞ்சநேரத்தில் பத்துத்தலையும் இருபது கையுமாகத் தன் நிஜரூபத்தை அடைந்து, கழுதைகள் கட்-டிய தன் வாஹநத்தில் ஸீதையைத் தூக்கி வைத்துக்கொண்டு ஆகாச மார்க்கமாய்ப் போய்விட்டான்.

ராமன், திரும்பிவந்து பார்க்கையில், ஒருவரு மில்லாமல் பர்நசாலை வெறுமையாயிருக்கக் கண்டு, துக்கமடைந்தார். ஸீதை என்னவானுள், அவளை எங்கே தேடிக் கண்டுபிடிப்பது என்பதொன்றும் தெரியவில்லை. இதற்குள் ராவணன் ஸீதை-யைக் கொண்டுபோய்ச் சிறையில் வைத்தான்.

ராமன் ஸீதையைத் தேடிக்கொண்டு போகும்போது வாநர ராஜனுக்கு மந்த்ரியான ஹநுமான் வழியில் எதிர்ப்பட்டார். ஸீதையை மீட்பதற்கு உதவிசெய்வதாக வாநரராஜன் ராமனி-டம் சொல்லி, கணக்கில்லாத தன் ஸேனையைக் கூட்டிக் கொண்டு போனன். வாநரர்கள் கூடி ஸமுத்ரத்தில் அணை-கட்டி அதன்மீது ஏறிப்போய் லங்கையை அடைந்தனர்.



கையில் மரங்களையும் கற்களையும் மலைச் சிகரங்களையும் எடுத்துக்கொண்டு வானரர் ராக்ஷஸரோடு யுத்தம் செய்வது.

வாநரர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் சண்டை நடந்தது. வாநரர்கள் மரங்களையும் கற்களையும் மலைப்பாறைகளையுங் கொண்டு சண்டைசெய்தனர். ராக்ஷஸர்கள் ஈட்டியும் வாளுங் கொண்டு சண்டைசெய்தனர். கடைசியில் ராமன் ஒரு ப்ரஹ்மாஸ்த்ரங் கொண்டு ராவணனை ஸம்ஹரித்துவிட்டார். மஹா ஸந்தோஷத்தோடு ஸீதை ராமனிடம் வந்துசேர்ந்தாள்.

வனவாஸத்துக்குரிய பதினான்கு வருஷமும் கழிந்து போனபடியால், ராமனும் ஸீதையும் லக்ஷ்மணனோடு அயோத்திக்குத் திரும்பினர். திரும்பிவந்ததும் பரதன் ராமனிடம் ராஜ்யத்தை ஒப்பித்தார்.

வனவாஸம் பண்ணியும் சிறையிருந்தும் பட்ட கஷ்டமெல்லாம் போக, இனியாவது ஸீதை தன் பர்த்தாவோடு அயோத்யாவில் ஸௌக்யமாக இருக்கலாம். ஆனால், நெடுநாள் ராக்ஷஸர்களிடம் சிறையிலிருந்தவளை மீட்டுவந்து ராமன் வீட்டில் சேர்த்துக்கொண்டாரென்று ஒரு பழி உண்டாயிற்று. இதனால் ராமன் மனம் வருந்தி, ஜனங்களுக்கு ஸமாதானம் உண்டாகும்படி, ஸீதையை மறுபடியும் வனவாஸத்துக்கு அனுப்பிவிட்டார்.

மஹா பாரதம்

பாண்டவர்களும் கௌரவர்களும்

நெடுங்காலத்துக்கு முன்னே இந்தியாவின் வடக்கில் ஓரரசன் இருந்தான். அவன் சந்த்ரனுடைய கால்வழியில் ஓரரச பரம்பரையைச் சேர்ந்தவன். அவனுக்கு சந்தனு என்று பெயர் வழங்கியிருந்தது. அவனுடைய மனைவி கங்காதேவி. அவர்களுடைய புத்ரர் தேவவ்ரதராகிய பீஷ்மர் என்பவர்.

சந்தனு இறந்துபோன பிறகு பட்டந்தரித்த புத்ரன் கொஞ்ச காலம் ஆட்சிசெய்திருந்து இறந்துபோனான். அவனுக்குப் புத்ர ஸந்தானம் இல்லை. அதனால் அவனுடைய மனைவியர் மஹாபாரத க்ரந்தகர்த்தாவாகிய வ்யாஸபகவானிடம் ஒவ்வோர் புத்ரனைப் பெற்றனர். ஒருவன் பெயர் த்ருத-

ராஷ்ட்ரன்: அவன் பிறவிக்குருடன். மற்றவன் பாண்டு என்பவன்: அவன் தேகம் விசித்ரமாக வெளுத்திருந்தது.


பாண்டு பாலனு யிருக்கையில், பெரிய தகப்பனுன பீஷ்மர் ராஜ்யத்தை நடத்திவந்தார். வயது வந்தபோது, பாண்டு, விவாஹம் பண்ணிக்கொண்டு, ராஜ்யபாரத்தை ஏற்ருன்.

பாண்டுவின் முதல் மனைவி மூன்று பிள்ளைகளைப் பெற்ருள். அவர்கள் தேவாம்சமாகப் பிறந்தவர்கள். மூத்தவனுன யுதிஷ்டிரன் யமதர்மராஜனுடைய புத்ரன். கனிஷ்டனுன பீமன் வாயுபுத்ரன். இளையவனுன அர்ஜுனன் இந்த்ரகுமாரன். பாண்டுவின் இளைய மனைவி இரண்டு பிள்ளைகளைப் பெற்ருள். அவர்கள் அஸ்வனிதேவதைகளின அம்சமானவர்கள்: நகுலன் ஸஹாதேவன் என்பவர். இந்த ஐவரும் மஹா பாரதத்தில் கதாநாயகர்களாய்ப் பஞ்சபாண்டவர் என வழங்கப்பெறுவர்.

பிள்ளைகள் பிறக்கு முன்பே ராஜ்யபாரத்தைப் பாண்டு த்ருதராஷ்ட்ரனிடம் ஒப்பித்துவிட்டுச் சில காலத்தில் மாண்டுபோனுன். பின்பு பஞ்சபாண்டவர்களும் ராஜதானியான ஹஸ்திநபுரத்துக்குப் போயினர். த்ருதராஷ்ட்ரன் அவர்களைத் தன் மக்கள் நூற்றுவருடனே பரிவாய்ப் பரிபாலித்து வந்தான். இந்த நூற்றுவரும் கௌரவர் என வழங்கப்பெறுவர். உரிய பருவத்தில், கௌரவரும் பாண்டவரும் வித்யாப்யாஸம் பண்ணி, த்ரோணர் என்னும் ப்ராஹ்மணரிடத்தில் படைக்கலப்பயிற்சியும் செய்துவந்தனர்.

படைக்கலப்பயிற்சியில் விற்பத்தியடைந்த பிறகு அவர்களுடைய திறத்தைக் காட்டும்படி த்ரோணர் அவர்களை அரங்கேற்றுவித்தார். கனவான்களும் ஜனங்களும் பலவிடங்களிலிருந்து வந்து அரங்கமேடையைச் சூழ்ந்திருந்தார்கள்.

வாள்வித்தையிலும் வில்வித்தையிலும் அவர்களுடைய திறத்தைக் காட்டின பிறகு, கௌரவகுமாரனுன துர்யோதனனும் மஹா பலசாலியென்று பெயர்பெற்ற பீமனும் விளையாட்டாக கதாயுத்தம் செய்வதென்று த்ரோணர் கட்டளையிட்டார். அந்த வீரர்கள் கொழுத்த யானைகள்போல் கர்ஜனைசெய்து அதியுக்ரமாகச் சண்டைசெய்தனர். அதனுல் தீங்கு விளையாதபடி அவர்களை த்ரோணர் விலக்கிவிட்டார். அப்பால் பொன்கவசம் அணிந்து அர்ஜுனன் கையில் வில்லெடுத்து



த்ருதராஷ்ட்ரன் பாண்டவர்களுக்கு நல்வரவளித்தது.

வந்தான். அவனுடைய வில்லாண்மையை எல்லாரும் மெச்சிக்கொண்டனர்.

எல்லாம் முடிவுபெறுகிற ஸமயத்தில் புதிய வீரன் ஒருவன் புறப்பட்டான். அவன் ஸூர்யகுமாரனான கர்னன். உயரமாய், ஆள் அந்த சந்தமாய், உடன்பிறந்த கவசகுண்டலங்களோடு, அவன் அரங்கமேறி, தன்னுடன் விற்போர் செய்யும்படி அர்ஜுனனை அழைத்தான். அர்ஜுனனிடத்தில்

பொறுமையுள்ள துர்யோதனனே கர்னனை அங்ஙனம் செய்யும்படி ஏவினவன். பாண்டவகுமாரனைப் போருக்கு அழைத்தலான கௌரவம் கர்னனுக்கு இல்லாமையால், அந்தக் கஷ்டத்தை நிவிர்த்திசெய்யும்படி துர்யோதனன் அப்பொழுதே கர்னனை அங்கதேசத்துக்கு அதிபதியாக்கினன். எவ்விதத்திலாவது அர்ஜுனனைத் தோற்பிக்கவேண்டும் என்பது துர்யோதனனுடைய கருத்து. ஆயினும், பொழுது சாய்ந்தமையால், கர்னன் அர்ஜுனனேடு விற்போர் செய்வதற்கு ஸமயப்படவில்லை. அரங்கேற்றம் அவ்வளவோடு முடிந்தது.

அரக்கு மாளிகை

த்ருதராஷ்ட்ரன், தனக்குக் கிழத்தனம் வந்ததை உணர்ந்து, பாண்டுகுமாரனை யுதிஷ்டிரனை யுவராஜாவாக நியமித்தான். இதனல் கௌரவ சகோதரர்கள் பொறுமையடைந்து, பாண்டவர்களை எவ்விதத்திலாவது கொலைசெய்விக்கவேண்டுமென்று சூழ்ச்சிசெய்தனர். ஹஸ்திநபுரத்துக்கு ஸமீபத்தில் வாரணவர்த்தம் என்றொரு பெயர்பெற்ற நகரம் உண்டு. இந்த நகரத்தைப் புகழ்ந்துபேசி, த்ருதராஷ்ட்ரன் பாண்டவர்களை அங்கே போய்ச் சில காலம் வேடிக்கையாய் வஸித்திருக்கும்படி சொன்னன். பாண்டவர்கள் அவ்விடத்துக்குப் புறப்பட்டுப் போனபோது, அவர்களுக்கு என்ன தீங்கு நேரிடுமோவென்று ஹஸ்திநபுரத்திலுள்ள ஒவ்வொருவரும் கவலையடைந்தனர்.

பாண்டவர்கள் வஸிப்பதற்கென்று வாரணவர்த்தத்தில் துர்யோதனன் ஓர் அரக்குமாளிகை கட்டிவைத்திருந்தான். அந்த மாளிகையில் அமைந்திருந்த மூங்கில்களும் வைக்கோலும் நெய்யில் ஊறியிருந்தவை. அவைகளில் நெருப்புப்பொறி பட்டால் போதும்: உடனே மாளிகை தீப்பற்றிக்கொள்ளும்.

பஞ்சபாண்டவர்களும் தாயாகிய குந்திதேவியும் அங்கே போய்ச் சேர்ந்தார்கள். அங்கே அவர்களுக்கு ஏதாவது தீங்கு நேரிடக்கூடுமென்று எவரோ எச்சரிக்கை செய்திருந்தனர். அங்ஙனம் ஏதாவது ஆபத்து நேரிட்டால் தப்பிப்போகும்படி அவர்கள் உடனே ஒரு கீழறை அமைத்துக்கொண்டனர்.

ஒருநாள் முன்மாலையில் குந்தி சில ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் செய்வித்தாள். அப்பால் ஓர் எளிய மாதும் அவ-ளுடைய மக்கள் ஐவரும் அங்கே வந்து அன்னமிடப்பெற்ற-னர். வழிநடந்த இளைப்பால் அவர்கள் அறுவரும் அவ்விர-வில் அந்த மாளிகையில் படுத்து உறங்கியிருந்தனர். அவர்கள் உறங்கியிருந்தது பீமனுக்குத் தெரியாது. கொஞ்ச நேரத்தில் பலத்த காற்று அடிக்கத் தொடங்கியது. மாளிகையில் பீமன் நெருப்புவைத்துவிட்டான். காலையில் பார்க்கும்போது மாளி-கை யத்தனையும் சாம்பலாயிருந்தது. சாம்பலில் அறுவரு-டைய எலும்புகள் இருந்தன. அவை குந்தியும் அவள் பிள்-ளைகளுமான அறுவருடைய எலும்புகள் என்றும், விரோதி-கள் மாண்டொழிந்தனர் என்றும், துர்யோதனனும் அவனு-டைய ஸஹோதரர்களும் அகமகிழ்ச்சி அடைந்தார்கள். பா-ண்டவர்கள் மாண்டுபோகவில்லை. கீழறை வழியாகத் தப்பிப்-போய் அவர்கள் ப்ராஹ்மண வேஷங்கொண்டு காட்டில் ஒளித்-திருந்தனர்.

பாண்டவர்கள் பாணிக்ரஹணம்

பாண்டவர்கள் பலநாள் காட்டில் ஸஞ்சரித்திருந்தார்கள். அவ்விடத்திலும் அவர்களுக்குப் பல ஆபத்துகள் நேரிட்டன. கொல்லவந்த கொடிய ராக்ஷஸர்களோடு சண்டைசெய்து, பீமன் அவர்களைக் காப்பாற்றிவந்தான். அங்கங்கே மூடியிருக்கும் செடிகளையுங் கொடிகளையும் பிடுங்கியெறிந்து, போகவும் வர-வும் பீமன் வழிகளை உண்டாக்கினான்.

இங்ஙனம் வனஸஞ்சாரம் பண்ணியிருந்தபோது அவர்கள் வ்யாஸமுநிவரை ஸந்தித்தார்கள். பாஞ்சால தேசத்து ராஜ-குமாரியான த்ரௌபதிக்கு ஸ்வயம்வரம் நடக்கப்போகிற-தென்று அவர் தெரிவித்தார். தாங்கள் பூண்டிருந்த ப்ராஹ்-மண வேஷத்துடனே பாண்டவர்கள் பாஞ்சாலத்துக்குப் போயினர். ஸ்வயம்வரத்துக்கென்று வந்த பல தேசத்து ராஜ-குமாரர்களும் அங்கங்கே எழுநிலைமாடங்களில் தங்கியிருந்-தனர்.

அந்த மாடங்களின் இடையில் ஒரு வெளிநிலம் உண்டு அங்கு ஸ்வயம்வரமண்டபம் அமைத்திருந்தது. ஒரு கோடி-யில் உயரமான ஒரு ஸ்தம்பம் நாட்டியிருந்தது. அந்த ஸ்தம்-

பத்தின் நுனியில் பொன்னால் செய்த ஒரு மீன் தொடுத்திருந்தது. அதன்கீழே இடைவிடாது சுழலும் ஒரு யந்த்ரம் வைத்திருந்தது. அதனுடைய சக்ரத்தின் மூலமாய் அந்த மீனின் கண்ணில் எவன் அம்பு எய்கிறானோ, அவனுக்கே த்ரௌபதி மாலை சூட்டுவாள் என்று எங்கும் விளம்பரம் செய்திருந்தது.

பதினாறுவது நாளில் த்ரௌபதி தமயனோடு அவ்விடம் வந்தாள். தாதியர் ஒரு தட்டில் அக்நிதேவனுக்கு நிவேதனங்களும் ஒருதட்டில் ஸ்வயம்வரமாலையும் எடுத்துவந்தனர். த்ரௌபதி கார்மேனியும் கருங்கூந்தலும் கருவிழியுமாய்க் கறுப்பில் அழகு வாய்ந்தவள்.

ஸ்தம்பத்தின் கீழே ஒரு பெரிய வில் வைத்திருந்தது. ஒவ்வொருவராய் ராஜகுமாரர்கள் வந்து பார்த்து, வில்லைக் கையிலெடுத்து நாணேற்றவும் முடியாமல் தலைகுனிந்து போயினர். கவசகுண்டலங்களோடு கர்னன் வந்து வில்லையெடுத்து நாணேற்றி அம்பு தொடுத்தான். அதற்குள் த்ரௌபதி, "ராஜகுமாரனுக்கு மாலையிடுவதன்றி நான் தேர்ப்பாகன் குமாரனுக்கு மாலையிடமாட்டேன்" என்றாள். கர்னன் தேர்ப்பாகன் வீட்டில் வளர்ந்திருந்தது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவன் ஸூர்யகுமாரன் என்பது ஒருவருக்கும் தெரியாது. வில்லை வளைத்து அம்பை எய்யப்போகிற ஸமயத்தில் த்ரௌபதியின் வார்த்தையைக் கேட்டு, அவன் வெறுப்புடன் வில்லை எறிந்துவிட்டுப் போனான்.

பின்னும் பல ராஜகுமாரர்கள் வந்துவந்து பார்த்துத் தவறிப்போயினர். க்ஷத்ரியர்களெல்லாரும் வந்து போனபிறகு, ப்ராஹ்மண வேஷத்தோடிருந்த அர்ஜுனன் வந்தான். கர்னனைப்போல் அவன் ஸுலபமாய் வில்லை யெடுத்து நாணேற்றி அம்பு தொடுத்துச் சக்ரத்தின் மூலமாய் அம்பை மீனின் கண்ணில் பாய்ச்சினான். அவ்வளவிலே த்ரௌபதி அவனுக்கு மாலையிட்டாள்.

அவனைக் கண்டு ராஜகுமாரர்களெல்லாரும் மிகவும் பொறாமை கொண்டார்கள். ராஜகுமாரி ப்ராஹ்மணச் சிறுவனை மணந்துகொள்வது அவர்களுக்கு இஷ்டமில்லை. த்ருபதராஜன் த்ரௌபதியை அர்ஜுனனிடம் ஒப்பிக்கப்போகிற ஸமயத்தில், அந்த ராஜகுமாரர்கள் அர்ஜுனன் மீது பாய்ந்து

போனார்கள். பீமன் ஒரு மரத்தைப் பிடுங்கிக்கொண்டு வந்தான். அர்ஜுனனும் பீமனுமாகச் சண்டைசெய்து த்ருபதனை ஹானிபடாதபடி காப்பாற்றினார்கள். அப்புறம் அர்ஜுனன் த்ரௌபதியை அழைத்துக்கொண்டு போனான்.

பஞ்சபாண்டவர்களும் த்ரௌபதியோடு தாயிடம் திரும்பினர். தாங்கள் தங்கியிருந்த கொட்டகையின் வெளியிலிருந்து, அவர்கள், "அம்மா, இன்று கிடைத்த பிக்ஷையோடு திரும்பி வந்தோம்" என்றார்கள். ப்ராஹ்மணவேஷத்தோடு சென்றவர்களாதலால், த்ரௌபதியைத் தாங்கள் பெற்ற பிக்ஷையாகக் கருதி அங்ஙனம் வேடிக்கையாக வார்த்தை சொன்னார்கள். அதைக் கேட்ட தாயானவள் உள்ளிருந்தபடியே, "நீங்களெல்லாருமாகப் பெற்றதை நீங்களெல்லாருமாகப் புசியுங்கள்" என்று சொல்லி வெளியில் வந்தாள். வந்து த்ரௌபதியைக் கண்டு; "அந்தோ, என்ன வார்த்தை சொன்னேன்!" என்று கவலை அடைந்தாள். த்ரௌபதி ஐவருக்கு மனைவியாய் இருக்கவேண்டுமென்று விதி ஏற்பட்டிருந்ததால், அவ்விதமான தேவவாக்யம் குந்திவாயிலிருந்து புறப்பட்டது.

ஐவரையும் மணந்துகொள்வது முதலில் த்ரௌபதிக்கும் விருப்பமில்லை: அவள் பிதாவுக்கும் விருப்பமில்லை. ஆயினும் இந்த மணம் தலைவிதியின்படி ஏற்பட்டதென்று வ்யாஸர் விளக்கினார். அதைக் கேட்டு எல்லாரும் அமைதியுற்றனர். அதன்மேல் தினம் ஒருவராக ஐவரும் த்ரௌபதியை மணம் புரிந்தனர். த்ருபதராஜன் அதிசயமான அநேக ஸ்த்ரீதனங்களைக் கொடுத்து த்ரௌபதியைக் கூட்டியனுப்பினான். பாண்டவர்கள் த்ரௌபதியோடு இந்த்ரப்ரஸ்தம் என்னும் நகரத்தையடைந்து, அங்கே அரசுசெய்திருந்தனர்.


ராஜஸூயயாகம்

யுதிஷ்டிரர் ராஜஸூயயாகம் செய்து (ஸம்ராட்) ராஜாதிராஜன் என்று பட்டம்பெற விரும்பினார்.

மகததேசத்தில் உத்தரமதுரையில் ஜராஸந்தன் என்பவன் அரசாட்சி செய்திருந்தான். அவன் மஹா பராக்ரமசாலி: எண்பது ராஜகுமாரர்களைச் சிறைப்படுத்தியிருந்தான். அவனும் யுதிஷ்டிரர் போலவே மஹா பலசாலி யாகையால், யுதிஷ்டிரர் ஸம்ராட் என்று பட்டம் பெறுவது எளிதான கார்யமன்று.

யுதிஷ்டிரர் இந்த எண்ணம் கொண்டபோது, பாண்டவர்களுக்கு உறவினரான க்ருஷ்ணபகவான் இந்த்ரப்ரஸ்தத்தில் தங்கியிருந்தார். பாண்டவர்களுக்கு ஸஹாயம் பண்ணுமாறு அவர் ஓர் உபாயம் செய்தார். அர்ஜுனனையும் பீமனையும் அழைத்துக்கொண்டு அவர் மகததேசத்துக்குப் புறப்பட்டார். மூவரும் வேதியர்போல வேஷம்பூண்டு போய் மதுராபுரத்தை அடைந்தனர். அடைந்த வுடனே அவர்கள் தங்கள் வருகையை அரசனுக்கு அறிவித்து, "சிறையாளரை ருத்ரபகவானுக்கு நீர் பலியிடப் போகிறதாய் அறிந்து, உம்மைக் கொலைசெய்ய வந்தோம்" என்று சொல்லிப் போருக் கழைத்தார்கள். ஜராஸந்தன் நல்லதென்று சொல்லி, பீமனோடு சண்டை செய்வதாக இசைந்தான்.

அவர்கள் இருவருக்கும் சண்டை நடக்கப் போகிறதென்று அறிந்து, ஜனங்கள் மதுராபுரத்தில் திரள்திரளாய் வந்து கூடினார்கள். இருவரும் நிராயுதபாணிகளாகச் சண்டைசெய்தனர். சண்டை பதின்மூன்று நாள்கள் வரையில் நடந்தது. இருவரும் உண்ணப்போவதும் உறங்கப்போவது மின்றியே



இந்தரப்ரஸ்தத்தின் மதில் சுவர்கள்.

சண்டைசெய்தனர். கடைசியாய் பீமன் ஜராஸந்தனைத் தன் முழங்காலில் படுக்கவைத்து அவனுடைய முதுகை உடைத்துவிட்டான்

அதற்கப்புறம் யுதிஷ்டிரர் ராஜஸூயயாகத்தை நடத்த யாதொரு தடையும் இல்லை. ஹிந்துஸ்தானத்திலுள்ள எல்லா அரசர்களிடத்தும் பகுதிப்பணம் வாங்கிவரும்படி அவர் தம்முடைய தம்பிமார் நால்வரையும் நான்கு பாகங்களிலும் போக்கினர். அரசர்களெல்லாரும் இந்த்ப்ரஸ்தம் வந்துசேர்ந்தனர், யாகம் சிறப்பாக நடந்தேறியது.

பாண்டவர்கள் அரசிழந்தது

பாண்டவர்களுக்கு இங்ஙனம் கார்யஸித்தி உண்டானதைக் கண்டு கௌரவர்களுக்குப் பொறாமை பின்னும் அதிகரித்தது. பாண்டவர்களை எவ்விதத்தில் நாசப்படுத்துவதென்று ஆலோசனைபண்ணி, கௌரவர்கள் தந்த்ரமான ஓர் உபாயம் செய்தனர். பளிங்கினால் வில்வடிவான வளைவுகள் வைத்து, ஆயிரந் தம்பங்கள் நாட்டி, நூறு வாயில்கள் வைத்து, பொன்னால் சித்ரவேலைகள் செய்து, இரண்டுமைல் சதுரமாய் ஓர் அதிசயமான மஹாமண்டபத்தை நிர்மித்தார்கள். மண்டபம் முடிவானதும் க்ருஹப்ரவேசமென்று சாக்கிட்டுக்கொண்டு பந்து மித்ரர்களை அழைத்தார்கள். க்ருஹப்ரவேசத்துக்குரிய சடங்குகளெல்லாம் முடிந்ததும், சற்றுநேரம் பொழுதுபோக்காகச் சூதாடலாமென்று அவர்கள் யுதிஷ்டிரரைக் கேட்டார்கள்.

சூதாட்டத்தில் யுதிஷ்டிரருக்கு இஷ்டமில்லை. ஆயினும், க்ஷத்ரியராகையால், சூதாட அழைத்தபோது, மறுக்கமுடியாமல் இணங்குவது அவசியமாக இருந்தது. சூதாடிவருகையில் நற்கால மில்லாமல் அவர் அணியும் மணியும் பொன்னும் பொருளும் இழந்துவந்தார். அரசாட்சியும் இழந்து, பந்தயத்துக்குப் பொருளில்லாமல் தம்பிமார்களைப் பந்தயமாக வைத்தாடினர். அவர்களையும் தோற்றபிறகு தம்மையும் முடிவில் தங்கள் மனைவியையும் பந்தயமாக வைத்துத் தோற்றுவிட்டார்.


சூதாட்டம் முடிவானதும், கௌரவர்கள் த்ரௌபதியை ஸபையில் இழுத்துவந்து மானபங்கம் செய்தார்கள். பீமன் பல்லை அரக்கிக்கொண்டு துர்யோதனன் தொடையை உடைத்துவிடுவதாக ப்ரதிக்ஞை பண்ணினன். அந்த ஸமயம் ஒன்றும் செய்வதற்கில்லை. ஸபையில் இங்ஙனம் நடந்துகொண்-

டிருக்கையில், கௌரவராஜனுடைய பள்ளியறையில் ஒரு நரி ஊளையிட்டது.

இவ்விதம் கௌரவர்கள் இரண்டாவது முறை பாண்டவர்களுடைய செல்வத்தையெல்லாம் உரிந்துகொள்ளவே, பாண்டவர்கள் பாவம் தாயான குந்தியை ஒரு நண்பரிடத்தில் விட்டுவைத்து, மனைவியான த்ரௌபதியோடு அரண்யாவாஸம் செய்யப் புறப்பட்டார்கள். பீமனுக்குக் கண்களில் தீப்பொறி பறந்தன. பாண்டவர்களைப் பார்த்துக் கறுவிக்கொண்டு போனான். த்ரௌபதி அலங்கோலமாய்த் தலைவிரித்து அழுதுகொண்டு போனாள்.

மஹா பாரத யுத்தம்


பாண்டவர்கள் வனவாஸம் பண்ணவேண்டிய காலம் ஒவ்வொரு வருஷமாய்க் கழிந்துவந்தது. பதின்மூன்றுவது



துர்யோதனன் க்ருஷ்ணபகவானுக்குத் தலைமாட்டிலும் அர்ஜுனன் கால்மாட்டிலும் உட்கார்ந்திருந்தது.

வருஷம் முடிவானதும், கௌரவரும் பாண்டவரும் முடிவாக ஒரு பெரிய யுத்தம் செய்வதென்று அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யலாயினர். அப்போது த்வாரகையில் க்ருஷ்ணபகவான் அரசாட்சி செய்திருந்தார். இருதிறத்தாரும் அவருடைய ஸஹாயத்தை விரும்பிச் சென்றனர். அவர்கள்

சென்றபோது க்ருஷ்ணபகவான் சயனித்திருந்தார். துர்யோதனன் போய்ப் படுக்கையின் தலைமாட்டில் உட்கார்ந்தான். அர்ஜுனன் கால்மாட்டில் உட்கார்ந்தான். விழித்தெழுந்த-



ஒரு யுத்தவீரன் தலையில் மூன்று அம்புகள்
பொத்துக்கொண்டிருந்தன.

போது க்ருஷ்ணபகவான் அர்ஜுனனைக் கண்டார். துர்யோதனனும் வந்திருப்பதை அறிந்தவளவில், அவர், "நானாவது வருகிறேன், அல்லது என்னுடைய பத்துக்கோடி ஸேனையை யாவது அனுப்புகிறேன். இரண்டில் எது வேண்டினாலும் அது செய்கிறேன்" என்று அர்ஜுனனிடம் சொல்லினார். அர்ஜுனன், "நீர் வருவதே போதும்" என்றான். துர்யோதனன், "உம்முடைய ஸேனையை அனுப்புவது போதும்" என்றான்.

செய்யத்தக்க முயற்சிகளெல்லாம் முடிவானதும், கௌரவ ஸேனையும் பாண்டவ ஸேனையும் ஸ்தானேஸ்வரம் என்கிற பட்டணத்தருகில் குருக்ஷேத்ர பூமியில் சென்று சேர்ந்தன. கௌரவ ஸேனைக்கு பீஷ்மர் ஸேனாதிபதியாக நின்றார். கர்ணனும் கௌரவர் பக்கத்தில் நின்றான். கௌரவர்களுடைய ஸேனையே மிகவும் பெரியது. பாண்டவர்கள் பக்கத்தில் வில்லாளியான அர்ஜுனனும் மஹா பலசாலியான பீமனும் க்ருஷ்ணபகவானுடைய விவேகமும் தவிர வேறு ஸேனாபலம் விசேஷித்திருக்கவில்லை. க்ருஷ்ணபகவான் அர்ஜுனனுக்கு ரதஸாரதியாக இருந்தார்.

ரதங்களும் கஜங்களும் துரகங்களும் பதாதிகளுடன் அணியணியாக வந்தன. ஒவ்வொரு பக்கத்திலும் அம்புகளும் நாணிகளும் வில்லுகளும் குந்தாலிகளும் ஈட்டிகளும் கதைகளும் விஷமிட்ட அஸ்த்ர சஸ்த்ரங்களும் குவியல் குவியலாகக் குவித்திருந்தன. எதிரிகளின் மீது உகுக்கும்படி கொதியெண்ணெயும் பாகும் ஆயத்தமாக இருந்தன. எதிரிகள் நெருங்கி நிற்கும் இடங்களில் வீரர்கள் மனங்கலங்கித் தடுமாற்ற மடையும்படி அவர்கள் தலைமீதுபோட்டு உடைக்குமாறு பாம்புக்குடங்களும் தயாராக இருந்தன.

யுத்தம் தொடங்குமுன் அர்ஜுனன் தன் ரதத்தை இரண்டு ஸேனைக்கும் இடையில் கொண்டுபோய் நிறுத்தும்படி க்ருஷ்ணபகவானை வேண்டிக்கொண்டான். கொடிகள் பறப்பதும் ஆயுதங்கள் ஒளிவீசுவதுமாய் ஸேனாவீரர்கள் அணிவகுத்திருப்பதைக் கண்டு அர்ஜுனனுக்கு அதிசயம் உண்டாயிற்று. யுத்தம் ஆரம்பமானால் யுத்தகளம் எவ்விதம் தோன்றும் என்கிற எண்ணம் உண்டாயிற்று. "உற்றுப் பார்த்தால் அநேகர் பந்து மித்ரர்களா யிருக்கிறார்கள். வீணாக இந்த வீரர்-



மஹா பாரத யுத்தம்.

களை வதைப்பானேன்? யுத்தகளத்தை விட்டுப் போய்விட-லாமா?" என்று கிருஷ்ணபகவானைக் கேட்டான். அப்போது அவர் அவனோடு ஸம்பாஷித்து அவனுடைய ஸந்தேஹங்களைப் போக்கினார். அங்ஙனம் அவர் அர்ஜுனனிடத்தில் சொன்ன வார்த்தையே பகவத்கீதை என்று வழங்கிவருகிறது.

அப்பால் யுத்தம் ஆரம்பமாகிப் பதினெட்டு நாள் வரை-யில் மிகவும் உக்ரமாக நடந்தது. அம்புகள் மேகம்போல் ஆகாசத்தை மூடிக்கொண்டன. அஸ்த்ர சஸ்த்ரங்களுக்கு அதிக ஆற்றலுண்டாகும்படி சில வீரர்கள் அவைகளை அபி-மந்த்ரித்து விட்டனர். உடலெல்லாம் அம்புகள் பொத்துண்டு ரத்தம் சொட்டியிருக்கவும், சில வீரர்கள் அந்த நோவைச் சட்டை பண்ணாமல் சண்டைசெய்து நின்றனர்.

ஒரு வீரனுடைய நெற்றியில் மூன்று அம்புகள் பொத்துக்-கொண்டு நேராக நின்றன. பீமன், கதைகொண்டு, காட்டி-லுள்ள சிங்கம்போல் கர்ஜனைசெய்து, தேர்களையும் யானைகளை-யும் புடைத்து நொறுக்கினான். அர்ஜுனன் கையில் வில் கொண்டு வீரர்களைக் கூட்டங் கூட்டமாகக் கொன்றான். மிக-வும் பொறுமையுள்ளவரான யுதிஷ்டிரரும் உக்ரமாய்ச் சண்-டைசெய்தார்.

கௌரவர் பக்கம் நின்ற பீஷ்மரும் த்ரோணரும், பாண்-டவ ஸேனையில் எண்ணத்தொலையாத வீரர்களைக் கொன்றார்-கள். விழுந்துகிடப்போரை மிதித்துச் செல்லும் ஓசையும், காயம்பட்ட குதிரைகள் கதறுகின்ற ஓசையும், வில்லாளிகள் பண்ணும் நாண் ஓசையும், எக்காளம் ஊதுகிற ஓசையும், காயம்பட்ட யானைகள் உக்காரம்போடுகிற ஓசையும், இன்ன-திதுவென விளங்காமல், எல்லாம் ஒரே ஓசையாய்த் தொடர்-ந்துவந்தன. இரவாகி இருட்டினவளவில் இந்த ஓசை அட-ங்கி, பிணங்களைப் பிடுங்கித்தின்ன வருகின்ற நரிகள் ஊளை-யிடுகிற ஓசையே கேட்கும். பகலில் பொழுதேற ஏற, செத்த யானைகளும் மனிதரும் குதிரைகளும் ரத்தக்கறையுள்ள படைக்கலங்களும் உடைந்த ஈட்டிகளும் கொடிகளும் போர்-க்களத்தில் அலங்கோலமாயிருக்கும்.

இவ்விதம் சிலநாள் ஆனபிறகு பீஷ்மர்மேல் அர்ஜுனன் அம்பெய்தான். அவர் ரதத்திலிருந்து விழுந்து விட்டார். அவ-

ருடைய உடல் முழுவதும் அம்புமயமாக இருந்தது. அதனுல் அம்பு முனைகளே அவர் படுக்கும் படுக்கையா யிருந்தன.

அப்பால் த்ரோணர் ஸேனைத்தலைவராய்ச் சண்டையை நடத்தினர். அவரோடு சண்டைசெய்வது பாண்டவ ஸேனைக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. த்ரோணருடைய சண்டையின் உக்ரத்தைப் பொறுக்க முடியாமையால், ஒருநாள் க்ருஷ்ணபகவான் தம்முடைய சக்ராயுதத்தை ஏவி ஸூர்யபிம்பத்தை மறையும்படி செய்தார். பொழுது சாய்ந்ததென்று கௌரவஸேனை போர்க்களத்தை விட்டு நீங்கும் ஸமயத்தில், அர்ஜுனன் அவர்களை எதிர்த்து அநேகரைக் கொன்றுன்.

சண்டை நடக்கும்போது த்ரோணர் இறந்துபோனர். அதன்மேல் கர்னன் தண்டத்தலைவனுனன். அர்ஜுனன் அவனையும் தோற்கடித்தான். பதினெட்டாநாள் மாலையில் கௌரவர்களில் உயிரோடிருந்தவர் நால்வரே. துர்யோதனன் பீமனுெடு கதாயுத்தம் செய்து கொலையுண்டான். சண்டை முடிந்தது.

ஜயமடைந்த பாண்டவர்கள் ஹஸ்தினபுரத்தை அடைந்தார்கள். யுதிஷ்டிரர் ஸிம்ஹாஸநத்தில் ஏறினர். அப்பால் க்ருஷ்ணபகவானை வைத்துக்கொண்டு அதிகச் சிறப்பாக அசுவமேதம் செய்து கோதானம் ஸ்வர்னதானம் முதலான தானங்களை விசேஷமாகச் செய்தார்.

முடிவு

யுதிஷ்டிரர் ஸிம்ஹாஸநம் ஏறிச் சில வருஷங்கள் ஆனபிறகு, பாண்டவர்கள், வனத்தில் வஸித்திருந்த த்ருதராஷ்ட்ர மஹாராஜனைப் போய்ப் பார்த்தார்கள். சண்டையில் போய்விட்ட அநேக பந்துமித்ரர்களைப் பற்றிப் பேசியிருந்தார்கள். துக்ககரமான இந்த விஷயங்களைக் குறித்துப் பேசியிருக்கும்போது வ்யாஸ மஹாமுனிவர் அவர்களெதிரில்வந்து, அவர்கள் எவ்வெவர்களைக் குறித்து துக்கித்திருந்தார்களோ அவர்களைக் காட்டுவதாக உறுதிகூறினர். கங்கையில் ஸ்நானம்பண்ணி அவர்கள் யாவரும் கரையிலிருந்து பார்த்திருந்தார்கள். இருந்தாற்போலிருந்து ஒரு பெரிய ஓசை கேட்டது. கங்காஜலம் நுரைத்துக் குமிழியிட்டது. இறந்துபோனவர்களெல்லாரும் கவசத்தோடு தேரில் ஏறிவருவதாகத் தோன்-


றினர் வாத்யகோஷமும் கேட்டது. மாண்டுபோய் இப்பொழுது எழுந்து வந்தவர்களிடத்தில் உயிரோடிருந்தவர்கள் பொழுது விடிகிறவரையில் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தனர். அங்ஙனம் தோன்றினவர்கள் பொழுது விடியும்போது மறைந்துபோயினர்.

அப்பால் இரண்டுவருஷம் கழித்து த்ருதராஷ்ட்ரன் இறந்துபோனான். பாண்டவர்களுக்குப் பலவிதத்திலும் ஸஹாயம் செய்து கொண்டிருந்த க்ருஷ்ணபகவானும் போய்விட்டார். அப்பால் இல்வாழ்க்கையில் இச்சையற்றுப் பாண்டவர்கள் ஐவரும் தேவர்களுக்கு வாஸஸ்தானமான மஹாமேருவை நோக்கி ஒருவர் பின் ஒருவராகச் சென்றார்கள். யுதிஷ்டிரர் முன்னேபோனார். ஸஹதேவன் பின்னே போனான். எல்லாருக்கும் பின்னாக த்ரௌபதி போனாள். அன்புள்ள அவர்களுடைய நாயும் கூடவே சென்றது. இவ்விதமாக அந்த ஸஹோதரர் ஐவரும் உலக வாழ்க்கையை விட்டு மேல் உலகத்தை அடைந்தார்கள்.

ஞானதீபத்தை நாடிய ராஜகுமாரர்

இரண்டாயிரம் வருஷங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு முன்னே ஒரு ராஜன் இருந்தார். அவருடைய ராஜ்யம் ஹிமாலயத்தை அடுத்திருந்தது. அவர் சாக்ய பரம்பரையைச் சேர்ந்தவர். அவருக்கு ஸித்தார்த்தர் என்றொரு குமாரர் இருந்தார். குமாரரும் தன்னைப்போல் பெரிய யுத்தவீரராகவேண்டு மென்பது அவருடைய இச்சை.

ராஜகுமாரர் அங்ஙனமே படைக்கலப் பயிற்சியில் திறமையடைந்து வீரதீரமுள்ள காளையானார். ஆயினும் அவர் வீண்சோலிக்குப் போவதில்லை. முன்பின் பாராமல் எந்த வேலையிலும் தலையிட்டுக் கொள்வ தில்லை. வீணருடைய சேர்க்கை அவருக்குக் கிடையாது. மனைவியின் மணமாலையைப் பெற்றபோது அநேக ராஜாக்களோடும் ராஜகுமாரர்களோடும் அவர் போர்புரியும்படி நேரிட்டது. இங்ஙனம் பராக்ரமசாலியாக இருந்தும், அவருக்கு யுத்தத்தில் விருப்பமில்லை. கவலையில்லாமல் அவரவர்கள் தங்கள் வேலையைச்



புத்தர் தாம் இறக்கும்போது உபதேசம் செய்தது.

செய்திருக்கவேண்டு மென்பதே அவருடைய விருப்பம். சலிக்காமல் பொறுமைபோடு மனிதர்களுக்குக் கஷ்டவேலைகளைச் செய்யும் வாயில்லாத ஜந்துக்களுக்கு நல்ல ஊட்டம் கொடுத்து, மனிதர் அவைகளை மிகவும் பராமரிப்போடு பார்த்துவரவேண்டும் என்பதும் அவருடைய விருப்பம்.

அவர் சில ஸமயங்களில் பிதாவுடன் நகரைச் சுற்றிவருவார். சிலர் தனவான்களாய் இன்புற்றிருக்கையில் சிலர் தரித்ரவான்களாய்த் துன்புற்றிருப்பதைக் கண்டு, "ஐயோ சிலர் செல்வராயும் சிலர் வறியராயும் பிறப்பானேன்?" என்று வருந்துவார். ஆயினும் செல்வர்கள் எல்லாருமே எப்போதும் ஸந்தோஷித்திருக்கிறார்கள் என்பதும் இல்லை; ஏழைகள் எல்லாருமே எப்போதும் துக்கித்திருக்கிறார்கள் என்பதும் இல்லை என்று, அவர் மனதுக்கு விளங்கியிருந்தது. அப்படியிருக்கவும், பணக்காரர்களுக்குள்ளும் ஏழைகளுக்குள்ளும் தங்கள் நன்மையை நாடுகின்றவர்கள் அநேகரும், எளியாருக்குக் கொடுமை செய்கிறவர்கள் அநேகருமா யிருப்பதைக் கண்டு, ஸித்தார்த்தருக்குப் பெருங்கவலை உண்டாயிற்று. எல்லாரும் பொது நன்மையை நாடி ஸந்தோஷித்திருக்கும் விதம் என்னவென்று சிந்தித்துவந்தார். நல்ல வித்வான்கள் இருவரை வைத்துக்கொண்டு இரண்டு வருஷகாலம் பல நூல்களை ஆராய்ச்சிசெய்தார். அதனால் அவருக்கு அமைதி பிறக்கவில்லை. முடிவாகத் தபஸில் வாழ்நாளைக் கழிக்க எண்ணி, பிதா மாதாக்களையும் பெண்டு பிள்ளைகளையும் இன்னும் அருமையான எல்லாவற்றையும் துறந்துபோவதென்று உறுதி செய்து கொண்டார். வாலாயமாய் வீரர்கள் தலைமயிரை நீளமாய் வளரவிட்டிருப்பார். அவர் அங்ஙனம் வளர்திருந்த தன் தலைமயிரைக் கத்தரித்தெறிந்து, வழியில் தன் உடைகளை ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுத்து அவன் உடைகளை வாங்கித் தரித்துக்கொண்டு, தனியாய்க் காட்டுக்குப் போய்விட்டார்.

இப்பால் அவருக்கு கௌதமர் என்கிற குடிப்பெயர் வழங்கலாயிற்று. ஆஹாரம் உண்ணாமலும், உயிர் தரித்திருப்பதற்கு வேண்டியவைகளைத் தேடாமலும், ஏழுவருஷ காலம் காட்டி லிருந்தார். அதனால் ஒரு நன்மையும் உண்டாகவில்லை. உடலை வாட்டிவந்ததனால் அவருக்கு ஒன்றும் அமைதி உண்டாகவில்லை. தவ வ்ரதங்களை நிறுத்திவிட்டு, தினந்தோறும் யோசனையில் ஆழ்ந்திருக்கலானார். ஒருநாள் ஞானோதயம் உண்டானதாக அவருக்குத் தோன்றியது. மனிதரெல்லாரும் ஸந்தோஷத்தை அடையத்தக்க ஒரு மார்க்கம் அவருக்குத்தோன்றியது. சுயநன்மையை நாடாமல் நல்லொழுக்கத்தை அநுஸரிப்பவர்களுக்கே மனவமைதி உண்டாகும். பிறருக் கு

நன்மை செய்பவர்க்கே பேராநந்தம் உண்டாகும். இந்தக் கோட்பாட்டை அங்கங்கே ப்ரஸங்கிக்கவேண்டுமென்று உறுதிசெய்து கொண்டார். தாம் வாடவாடத் தவம் செய்வதைக் கைவிட்டபோது, அவரிடம் சேர்ந்திருந்த சிஷ்யர்கள் அவரிடத்தில் நம்பிக்கையற்றுப் போய்விட்டார்கள். அதனுல் அவர் மனது புண்பட்டது. திரும்பிப்போய் மனைவாழ்க்கையை அடையலாம் என்கிற விருப்பம் உண்டாயிற்று. ஓர் அரசமரத்தின் கிழிருந்து, முடிவாகச் செய்யத் தக்கது என்னவென்று நெடுநேரம் ஆலோசித்தார். மனைவாழ்கைக்குத் திரும்புகிற விருப்பத்தை விட்டொழித்து, தம்முடைய சிஷ்யர்களுக்கு உண்மையை அறிவிக்குமாறு அவர்கள் ஐவரையும் தேடிக்கொண்டு காசிக்குப்போனுர். தமக்கு வெளிப்பட்ட பரமார்த்தங்களை அவர் காசியில் ஒரு நந்தவனத்தில் அவர்களுக்கு விளக்கினுர். சிஷ்யர்கள் அவருடைய கோட்பாட்டை நம்பி மறுபடியும் அவரிடம் சேர்ந்தனர். அப்பால் பின்னும் அநேகர் அவரைப் பின்பற்றத் தொடங்கினர். இந்த நல்ல கோட்பாட்டைப் பல இடங்களில் ப்ரஸங்கிக்கும்படி அவர் அவர்களைப் பல பக்கங்களிலும் அனுப்பினுர் அது முதல் அவர் புத்தர் என்று பேபர் வைத்துக்கொண்டார். அதற்கு அறிவு தேளிந்தவர் என்பது பொருள். ஒருவரிடத்தில் ஒருவர் அன்புடன் நன்மை செய்க என்றும், ஜீவஜந்துக்களுக்கு அன்புடன் நன்மை செய்க என்றும் ஜனங்களுக்குக் கற்பித்து வந்தார். நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையும் பொருந்தி, அடக்கமும் நன்றியறியும் தர்மசிந்தையும் உள்ளவர்களாய், உண்மையன்றி ஒன்றும் உரையாதவர்கள், நிர்யாணதசையை அடைவர் என்று அவர் ஜனங்களுக்கு போதித்து வந்தார். கௌதமர் தம்முடைய நகரத்துக்குப் போய்த் தம்முடைய மனைவியைக் கண்டு தம்முடைய கோட்பாட்டை போதித்தார். அவள் உடனே அவருடைய மதத்தைத் தழுவிக்கொண்டாள்.

கௌதமர் கற்பித்துவந்த மதம் பௌத்தம் என்று வழங்கலாயிற்று அவர் இறந்து அநேக வருஷங்கள் ஆனபிறகு, ஓர் இந்திய சக்ரவர்த்தி இந்த மதத்தை அநுஸரித்தார். தவிர, இந்த மதத்தை இந்தியாவில் பல விடங்களிலும் பரவச்செய்ததன்றி, கடலுக்கு அப்பாலுள்ள தூரதேசங்களிலும் பரவச் செய்தார்.

கௌதமர் புத்தரான இடம் (போதி கயா) புத்தகயா என வழங்கிவருகிறது.

மஹா வீரர்

ஏறக்குறைய அக்காலத்தில் இப்படிப்பட்ட கோட்பாட்டைப் பாவச் செய்திருந்தவர் வேறொருவரும் உண்டு. அவர் வர்த்தமானர் என்பவர். அவருக்கு மஹாவீரர் என்றும் ஒரு பெயர் வழங்கும். புத்தர் தமது மதத்தை மகததேசத்தில் பாவச் செய்திருந்தபோது, இவரும் அதே தேசத்தில் தமது மதத்தை வெளியிட்டுவந்தார். இவர்களுடைய கோட்பாட்டில் உள்ள வித்யாஸ மெல்லாம் தவம் செய்வது ஒன்றே. தவ ஒழுக்கங்களைப் பல வருஷகாலம் அநுஸரித்த பிறகே நிர்யாணதசை வித்தியாகும் என்பது மஹாவீரருடைய கொள்கை. சில காலத்துக் கப்புறம் அவர் ஜிநன் (வெற்றிபெற்றவன்) என்று பெயர் வைத்துக்கொண்டார். அதனால் அவருடைய மதம் ஜைநம் என வழங்கலுற்றது.

பொய் பேசுதலாகாது என்று அவர் தவிர்த்தார்; எல்லா ஜீவன்களுக்கும் ஆத்மா உண்டென்று நம்பி, ஜீவன்களை மேன்மையாகப் பாராட்டிவந்தார். அவருடைய சிஷ்யர்கள் ஜீவன்களுக்கென்று வைத்யசாலைகள் ஏற்படுத்தியிருந்தனர். அந்த வைத்யசாலைகளில் புழுக்கள்கூட ஆதரவு பெற்று வந்தன.

அக்காலத்தில் மகததேசத்தில் அவர் போதித்திருந்த மதத்தை அநுஸரிப்பவர்கள் இக்காலத்தும் இந்தியாவில் அநேகர் உண்டு.

அலெக்ஸாண்டர் படையெழுச்சி

முற்காலத்தில் க்ரீஸ் தேசத்தில் மாஸிடன் என்னும் மாகாணத்துக்கு அரசனான அலெக்ஸாண்டர் என்பவர் யூரபிய அரசர்களில் மிகவும் பெயர்பெற்றவர். அவர் மஹா பலசாலி: மிகவும் உயரமானவர்: மிகவும் அழகுள்ளவர். எவருக்கும் அடங்காத ஒரு குதிரை அவரிடத்தில் இருந்தது: அது கம்பீரமான தோற்றம் உள்ளது. அந்தக் குதிரையை அவர் ஒரு நண்பனைப்போல் அருமையாய்ப் பாராட்டிவந்தார். அவர்



புருஷோத்தம ராஜனுக்கும் அலெக்ஸாண்டருக்கும் நடந்த யுத்தம்.

பெரிய போர்வீரர். தம் ஸேனைக்கு நல்ல யுத்தப்பயிற்சி செய்வித்திருந்ததனால், அவருக்கு உண்டான வெற்றிகள் அநேகம். அவர் எங்கே போக விரும்பினாலும், அவருடைய ஸேனைகள் அதற்குப் பின்வாங்குவ தில்லை. அக்காலத்தில் தெரிந்திருந்த தேசங்களில் ஏறக்குறைய எல்லாவற்றையும் அவர் வென்றுவிட்டார். முடிவாக ஹிந்துஸ்தானத்தை வெல்லவேண்டுமென்று விரும்பி ஒரு பெரிய ஸேனையைத் திரட்டிக்கொண்டு புறப்பட்டார்.

இந்தியாவை அடைவதற்குப் பெர்ஷியவில் விசாலமான ஸமநில ப்ரதேசங்களையும் அப்கானிஸ்தானத்தில் ஆஹாரம் கிடைக்காத மிகவும் குளிரான குன்றுகளையும் கடந்து வர வேண்டும். குளிர் அதிகமில்லாமல் ஆஹாரம் நிரம்பக் கிடைத்தலான க்ரீஸ் தேசத்தாருக்கு ஹிமாலய பர்வத ப்ரதேசங்களில் பயணம் செய்வது மிகவும் கஷ்டமான கார்யம்.

பலவிதமான கஷ்டங்களையும் சமாளித்துக்கொண்டு, அலெக்ஸாண்டர் வழியில் அங்கங்கே வெற்றிபெற்று, ஹிமாலயத்தைக் கடந்து இந்தியாவின் வடமேற்கு எல்லையான ஸிந்துநதிதீரத்தை அடைந்தார். ஸிந்துநதி ஹிந்துஸ்தானத்துக்கு வடமேற்கு எல்லை. அட்டாக் என்கிற பட்டணத்தின் அருகிலே ஒஹிண்ட் என்கிற இடத்தில் வேகமாய்ப் பாய்கிற ஒரு சிற்றுரு உண்டு. அலெக்ஸாண்டருடைய சேனுவீரர்கள் அங்கே ஒரு பாலத்தைக் கட்டினர். அந்தப் பாலத்தின் மேல் ஏறிவந்து அலெக்ஸாண்டர் இந்தியாவில் புகுந்தார். முதலில் தக்ஷசீலம் (Taxila) என்கிற பட்டணம் எதிர்த்தும் தடுத்தும் நிற்காமல் தாழ்ந்துகொடுத்தது. அது அக்காலத்தில் இந்தியாவில் மிகவும் பெரிய பட்டணங்களில் ஒன்று. பெரிய ராஜ்யங்களை ஆண்டிருந்த இந்து ராஜாக்களும் அங்ஙனமே தாழ்ந்து கொடுப்பார்கள் என்று அலெக்ஸாண்டர் எண்ணினர்.

சீனுப் ஜீலம் என்கிற நதிகளுக்கு இடையில் அரசாட்சி செய்திருந்த புருஷோத்தமர் என்பவர் பெரிய போர்வீரர். ஒரு பெரிய யூரபிய ஸேனை வழியெல்லாம் வெற்றிபெற்று இந்தியாவில் வந்திருக்கிற ஸங்கதி தெரிந்தவுடனே, அவர் தம்முடைய சிற்றரசர்களையும் நட்பரசர்களையும் ஒன்றுப்க்

கூட்டிக்கொண்டு யூரபிய ஸேனையோடு சண்டை செய்யப் புறப்பட்டார். யூரபிய ஸேனையைத் தம்முடைய ராஜ்யத்தில் புகவொட்டாமல் தடுக்கும்படி அவர் ஜீலம் நதியை அடைந்தார்.

அதற்குள் அலெக்ஸாண்டரும் அக்கரையில் வந்துசேர்ந்தார். அந்த நதிக்கு அவர் ஹைடாஸ்பேஸ் (Hydaspes) என்று பெயரிட்டார். இங்ஙனம் இக்கரையில் இந்திய ஸேனையும் அக்கரையில் யூரபிய ஸேனையும் வந்து இறங்கியிருந்தன. ஹிமாலயத்திலுள்ள பனிக்கட்டிகள் உருகிவருகிற காலமாகையால் அந்த ஆறு நிறைவெள்ளமாய் ஓடிக்கொண்டிருந்தது.

புருஷோத்தமருடைய ஸேனையில் யானைகள் இருநூறும் நந்நான்கு குதிரைகள் கட்டிய ரதங்கள் முந்நூறும் இருந்தன. இக்கரையில் தும்பிக்கைகளை ஊசலாட்டியும் கர்ஜித்துமிருந்த யானைகளைக் கண்டு, அவற்றின் எதிரில் ஆற்றை எவ்விதம் கடப்பதென்று அலெக்ஸாண்டர் அஞ்சியிருந்தார். முன்னெப்போதும் பார்த்திராத அதிசயமான பெரிய ஜந்துக்களைக் கண்டு, அவருடைய வீரர்கள் ஒன்றும் செய்யமுடியாமல் அஞ்சியிருந்தனர். நன்ருய் இருட்டின பிறகு அலெக்ஸாண்டர் தம் சேனையில் ஒரு பிரிவை வடக்குமுகமாகப் பதினறு மைல் தூரம் நடத்திக்கொண்டு போய் ஆற்றைக் கடந்துவிட்டார்.

மறுநாள் காலையில் இந்த சங்கதி புருஷோத்தமருக்குத் தெரியவந்தது. உடனே அவர் தம் அணிகளை நடத்திக்கொண்டு போனர். ஸேனையின் ஒரு பக்கத்தில் தேர்வீரரும் மற்றொரு பக்கத்தில் குதிரைவீரரும் சென்றனர். மத்தியில் வில்வீரரும் வாள்வீரரும் சென்றனர். இவர்களுக்கு முன்னும் பின்னும் யானைகள் ஆதரவாகச் சென்றன.

க்ரீஸ் காலாள்கள் அவர்களுக்குள்ள வழக்கம்போல் சண்டைசெய்யத் தொடங்கினர். ஈட்டிகளை அசைக்காமல், கேடயங்களை வரிசையாகப் பிடித்துக்கொண்டு, அசைந்து வருகின்ற சுவர்கள்போல் வந்தனர். ஒவ்வொரு பக்கத்திலும் வில்லாளிகள் குதிரைகளின்மீது ஏறிவந்தனர்.

புருஷோத்தமர் பெரிய யானையின்மீதேறி, யூரபிய ஸேனையின் இடையில் புகுந்து, மிதித்துத் துவைத்துக்கொண்டு



போனர். யூரபிய ஸேனை நல்ல யுத்தப்பயிற்சி யுடையதாகையால் சலிக்காமல் ஈடுகொடுத்துச் சண்டை செய்தது. புருஷோத்தமர் காயமடைந்து சிறைப்பட்டார். இந்திய ஸேனை ஓடிவிட்டது. புருஷோத்தமரை அலெக்ஸாண்டருக்கு எதிரில் கொண்டுபோனதும், அலெக்ஸாண்டர், "உம்மை நான் எங்ஙனம் நடத்தவேண்டு மென்பது உம்முடைய விருப்பம்?" என்று கேட்டார். புருஷோத்தமர், "ராஜனை நடத்துகிற விதமாகவே நடத்துக" என்றனர். வீரனுன அலெக்ஸாண்டர் இந்த வார்த்தையைக் கேட்டு ஸந்தோஷம் அடைந்து, புருஷோத்தமரிடத்தில் அவருடைய ராஜ்யத்தைத் திரும்பக் கொடுத்துவிட்டார். அதுமுதல் புருஷோத்தமர் அலெக்ஸாண்டருக்கு மிகவும் உண்மையான நண்பராய்விட்டார். அலெக்ஸாண்டருக்கு அப்படிப்பட்ட நண்பன் வேறெவனு மில்லை.

இந்தியாவுக்கு வந்து இரண்டு வருஷம் ஆவதற்குள், பல தேசங்களை ஜயித்துவந்த அலெக்ஸாண்டர் ஸேனை சலிப்படைந்து திரும்பிப்போக விரும்பியது. அதனுல் அலெக்ஸாண்டர் தம் தேசத்துக்குத் திரும்பிவிட்டார்.

ஹிந்துஸ்தானத்தின் முதல் சக்ரவர்த்தி

அலெக்ஸாண்டர் காலத்தில் வட இந்தியாவில் அநேக ராஜ்யங்கள் இருந்தன. அவைகளெல்லாவற்றிலும் மிகவும் பெரிதாய் பலத்திருந்தது மகதராஜ்யம். அந்த ராஜ்யத்தில் (பாட்னு) பாடலிபுத்ரம் முக்ய பட்டணம். அங்கே நந்தன் என்கிற மஹாராஜன் அரசு செய்திருந்தார்.

மகததேசத்தில் சந்த்ரகுப்தர் என்ருெரு காளை இருந்தார். இவர் உயர்ந்த பரம்பரையைச் சேர்ந்தவரல்லர். ஆயினும் எதற்கும் அஞ்சாதவர் : அதிக திறமை உள்ளவர்.

மற்ற ராஜ்யங்கள் எல்லாவற்றையும் அலெக்ஸாண்டர் வெற்றிகொண்டார். ஆயினும் அவர் மகததேசம் வரையில் போகாமல் திரும்பிவிட்டார். திரும்பினபோது, தாம் வென்ற இந்திய ராஜ்யங்களை ஆளும்படி அலெக்ஸாண்டர் தளகர்த்தர்களையும் தண்டுகளையும் ஏற்படுத்தினுர். திரும்பிப்போன சில வருஷங்களில் அலெக்ஸாண்டர் இறந்துபோன செய்தி இந்தியாவில் தெரியவந்தது பழமையான இந்திய ராஜ்யங்களை இதரதேசத்தார் ஆள்வதைப் பொருத சந்த்ரகுப்தர், அலெக்ஸாண்டர் இறந்த செய்தியைக் கேள்வியுற்றதும், க்ரீஸ் தளகர்த்தர்களை இந்தியாவிலிருந்து துரத்திவிட வேண்டுமென்று தீர்மானம் பண்ணிக்கொண்டார். அநேக ராஜகுமாரர்கள் அவரோடு சேர்ந்தனர். எதிரிகளைத் தோற்கடிக்கக்கூடிய பெரிய ஸேனையும் சேர்ந்தது.

இந்த ஸேனையைக் கூட்டிக்கொண்டு போய்ச் சந்த்ரகுப்தர் நந்தராஜனை எதிர்த்து மகதராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டார். அப்பால் வட இந்தியாவிலுள்ள மற்ற ராஜ்யங்களையும் உடனே வளைத்துக்கொண்டு, பாடலிபுத்ரத்திலிருந்தே, விஸ்தாரமான இந்த ராஜ்யத்தை விமரிசையாய் ஆட்சி செய்திருந்தார்.

அவருடைய அரமனையில் அழகான பொருள்கள் நிரம்பியிருக்கும். சுவர்களின்மீது பொன்னுல் கொடிமுந்திரிக்கொடிகளும் கொடிகளின்மீது வெள்ளிய பறவைகளும் தொற்றவைத் திருக்கும். ஸிம்ஹாஸநம் ஆடம்பரமாகச் செய்திருந்தது. அரசன் பானம்பண்ணும் வட்டில்கள் பொன்னுற் செய்தவை. அந்தப்புரத்தில் செம்புகள்கூட ரத்னம்

இழைத்தவை. அதற்கு முன் எந்த ஹிந்துராஜனுடைய ஸமஸ்தானத்திலும் இப்படிப்பட்ட ஆடம்பரங்களை எவரும் கண்டதில்லை.

சந்த்ரகுப்தர் துரத்திவிட்ட க்ரீஸ் தளகர்த்தர்கள் ஹிந்துகுசமலைக்கு வடக்கில் அலெக்ஸாண்டர் ஸ்தாபித்திருந்த ராஜ்யத்தில் போய்ச் சேர்ந்தனர். அந்த ராஜ்யம் பாக்ட்ரியா (Bactria) எனப் பெயர்பெற்றிருந்தது. அங்கே ஸேல்யுகஸ் நிகேடர் (Seleucus Nikatur. நிகேடர்-ஜயசிலர்) என்னும் ஒரு பெரிய க்ரீஸ் அரசன் ஆட்சி செய்திருந்தார்.

அவர் ஒரு பெரிய ஸேனையோடு இந்தியாவின்மீது படையெடுத்தார். சந்த்ரகுப்தர் அவரைத் தோற்பித்துப் பஞ்சாபையும் காபூலையும் கைப்பற்றிக்கொண்டார். அதன்மேல் சந்த்ரகுப்பதருடைய ராஜ்யத்துக்கு மார்ய ராஜ்யம் என்று பெயர் வழங்கலாயிற்று. அதற்குக் காரணம் அவருடைய நிறைபெயர் சந்தரகுப்த மார்யன் என்பதே.


ஹிந்துஸ்தானத்தில் பாக்ட்ரியா ராஜ்யத்தின் தானுபதியாக இருந்தவர் மேகஸ்தனிஸ் (Megasthenes) என்பவர். அவர் பல வருஷகாலம் பாடலிபுரத்தில் வஸித்திருந்தார். குடிகளுடைய போக்குகளையும் பழக்க வழக்கங்களையும் அவர் ஒரு புஸ்தகமாக விவரித்து எழுதிவைத்திருந்தார். க்ரீஸ் நூலாசிரியர்கள் தங்கள் நூல்களில் இந்தப் புஸ்தகத்திலிருந்து அநேக மேற்கோள்கள் காட்டியிருக்கின்றனர். இந்தப் புஸ்தகம் இறந்துவிட்டதாயினும், இரண்டாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டு அவர் குறித்துவைத்திருந்த ஸங்கதிகளை மற்ற க்ரீஸ் நூலாசிரியருடைய நூல்களில் இப்பொழுதும் படித்தறியலாம்.

அசோகவர்த்தன மஹாராஜா

நாம் இப்போது கவனிக்கிற அக்காலத்தில் இருந்த ஜனங்கள், இக்காலத்தில் இருப்பவர்களைவிட அதிக கொடுமை உள்ளவர்கள். திருடினவனுக்கு தண்டனையாக அவன் மூக்கை அறுத்துவிடுவர். துரைத்தன வரியைச் செலுத்தாதவனைக் கொலைசெய்துவிடுவர். யுத்த காலத்தில் பயங்கரமான அநேக

கொடுமைகளைச் செய்வார்கள். யுத்தத்தோடு யாதொரு ஸம்பந்தமு மில்லாத எளிய ஸ்த்ரிகளையும் சிசுக்களையும் கொடிய போர்வீரர்கள் கொன்றுவிடுவர். அக்காலத்தில் மிகவும் நாகரிக மடைந்திருந்த க்ரேக்கர்கள்கூட, சண்டை உக்ரத்தில் ஸ்திரிகளையும் சிசுக்களையும் கொலைசெய்து வந்தார்களாம்.

சந்த்ரகுப்தர் இறந்து சில வருஷங்கள் ஆனபிறகு, அவருடைய பௌத்ரன் அசோகவர்த்தன மஹாராஜா ஸிம்ஹாஸனம் ஏறினர். அவர் நல்லவரே. ஆயினும், இதர தேசங்களை வென்று வளைத்துக்கொள்ளவேண்டும் என்கிற பேராசை அவருக்கு உண்டு. அவருடைய பிதாவும் பாட்டனும் நல்ல வெற்றி வீரர்கள். தானும் அவர்களைப்போல் வெற்றிப்ரதாபம் அடையவேண்டு மென்பது அவருடைய விருப்பம்.



மகதராஜ்யத்துக்குத் தெற்கிலிருந்த ஒரிஸ்ஸா என்னும் சிறிய கலிங்க ராஜ்யத்தை ஓரரசன் ஆண்டிருந்தான். அவனிடத்தி லிருந்த ஸேனை சிறியது. அசோகர் தம்முடைய பெரிய ஸேனையை அழைத்துக்கொண்டு போய்க் கலிங்கத்தின்

மீது படையெடுத்தார். ஸேனையை அழைத்துப் போகும்போது ஸேனையில் தைர்யமுள்ள வீரரைக் கண்டு அவருக்குண்டான பெருமிதம் என்ன! யுத்தத்தில் எவ்வளவு பெருமை கிடைக்குமென்று எண்ணியிருந்தார்! அந்தச் சிறிய ராஜ்யத்தை வென்றுகொண்டார். அதனால் விசேஷமான பெருமை ஒன்றும் உண்டாகவில்லை. எதிர்த்து நிற்க முடியாத ராஜ்யத்தோடு யுத்தம் செய்வதில் பெருமை எங்கிருந்து உண்டாகும்? ஸாதாரண ஜனங்கள் பலபேர்களுடைய உயிரை வாங்கிவிடுவதனாலும் அமைதியான க்ராமவாஸிகளுடைய மாஸ்லைகளை அழிப்பதனாலும், என்ன பெருமை உண்டாகும்?

ஈரநெஞ்சமுள்ள இந்த ராஜனுக்கு இந்த வெற்றியால் ஸந்தோஷம் ஒன்றும் உண்டாகவில்லை: தாம் உண்டாக்கிய துன்பத்தால் அவருக்கு துக்கமே அதிகரித்தது. இனி யுத்தத்துக்குப் போவதில்லை யென்று மனதை திடப்படுத்திக்கொண்டார். மதத்தைப்பற்றி ஆழ்ந்த ஆலோசனை செய்யும்படி அவரைத் தூண்டியது இந்த யுத்தமே. கௌதம புத்தர் போதித்திருந்த மதத்தின் விசேஷத்தை அறிந்தவளவில் அசோகர் பௌத்தரானார்.

இந்த நல்ல மதத்தால் மற்ற ஜனங்களும் நன்மையடைய வேண்டுமென்கிற எண்ணங்கொண்டு, அந்ய தேசங்களில் இந்த மதததைப் பரவச்செய்யும்படி அநேக ப்ரஸங்கிகளை அனுப்பினார். தம்முடைய ராஜ்யத்து ஜனங்கள் படித்தறியுமாறு புத்தருடைய நியமனங்களை சிலாசாஸனம் செய்வித்தார். சில நியமனங்களைப் பாறைகளின் மீதும், சில நியமனங்களைக் குகைகளின் சுவர்களிலும், சில நியமனங்களைக் கல் கம்பங்களிலும் வெட்டுவித்தார். அக்காலத்தில் ஹிந்துஸ்தானத்தில் வழங்கியிருந்த பாலி பாஷையில் அவைகளை எழுதுவித்தார்.

வழிப்போக்கர்களுக்கு உதவியாகும்படி அவர் பாதைகளின் பக்கத்தில் கிணறுகள் வெட்டுவித்தார். நோயாளிகளைப் பரிபாலிக்கும்படி வைத்யசாலைகளைக் கட்டினார். இந்த மஹாத்மா ஜீவப்பிராணிகளையும் மறந்தவரல்லர்: அவைகளுக்கென்றும் வைத்யசாலைகளைக் கட்டினார். சிறுவர்கள் தாய் தந்தையரிடம் அன்புடன் மரியாதையாய் நடக்கவேண்டு மென்று

கட்டளையிட்டார். அவருடைய ராஜ்ய முழுவதும் ஸமாதானமும் த்ருப்தியும் விசுவாஸமும் நல்லெண்ணமும் பாவியிருந்தன. இந்த மஹாராஜனை ஸர்வோத்தம னென்றே சொல்ல வேண்டும்.

சீன யாத்ரிகரான பாஹியேன்

புத்தமதத்தை போதிக்குமாறு அந்ய தேசங்களுக்கு அநேகர் மதப்ரசாரகர்களை அனுப்பியிருந்தா ரன்றோ. அவர்களில் சிலர் சீன தேசத்துக்குச் சென்றனர். சினர்கள் அவர்களுக்கு நல்வரவளித்து புத்தமதத்தைத் தழுவிக் கொண்டனர். இந்த மதத்தில் ஈடுபட்டு அது பரவவேண்டு மென்று அதிக ஊக்கங் கொண்டவரான ஒரு சினர், புத்தருடைய ஜன்மதேசத்தை தரிசிக்க வேண்டுமென்று புறப்பட்டார். அவர் பெயர் பாஹியேன்.

அக்காலத்தில் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்கு யாத்ரைபோவது எளிதான கார்யமன்று. கப்பல்கள் சிறியவை. கப்பலில் நல்ல ஆஹாரமும் கிடைக்காது; போதுமான ஆஹாரமும் கிடைக்காது. யாதொரு ஸௌகர்யமுமே கிடைக்காது. ஆகையால் மாலுமிகள் நடுக்கடலில் துணிந்து செல்லமாட்டாது கரையின் ஸமீபமாகவே பயணம் செய்வர். கரைக்கு அதிக ஸமீபமாகச் சென்றால், கப்பல்கள் பாறைகளில் மோதிக்கொண்டு உடைவதும் கரைதட்டிக் கவிழ்ந்து போவதுமான அபாயங்கள் உண்டு. தவிர, கடற்கொள்ளைக்காரருடைய உபத்ரவமும் ஒருபக்கம் உண்டு. இவ்வாறே சினவிலிருந்து இந்தியாவுக்கு நிலமார்க்கமாய்ப் பயணம் செய்வதென்றாலும், இடையில் காடும் மேடும் காலும் பள்ளமுமான தேசங்களின் மூலமாய் நெடுநாள் பயணம் பண்ண வேண்டியிருந்த-



தால், பயணம் செய்பவர்கள் அலுப்புறுவதோடு அபாயத்துக்குட்பட்டிருந்தனர். அக்காலத்தில் சீனுவிலிருந்து இந்தியாவுக்குத் தனித்துப் பயணம் செய்வது மிகவும் துணிகரமான கார்யம்.

இந்தியாவில் சென்று சேர்ந்தால், ஜனங்கள் தம்மைக்கொல்ல மாட்டார்கள் என்பது அவருக்கு எங்ஙனம் தெரியும்? அந்ய தேசங்களிலிருந்து வருகின்றவர்களை ஹிந்துக்கள் செவ்வையாய் ஆதரிப்பவர்கள் என்பதும் அன்புடன் உபசரிப்பவர்களென்பதும் அவருக்குத் தெரியாது. இந்திய பாஷைகளில் யாதொன்றையும் ஒரு சிறிதும் அவர் அறியார். அதிக ஊக்கமும் தைர்யமும் உள்ளவராகையால், வந்தது வரட்டுமென்று துணிந்து மலைகளையெல்லாம் கடந்துவந்தார்.

சீனுவில் வித்வான்களுக்கு அதிக கௌரவம் உண்டு. பாஹியென் பக்திமானும் நல்ல கல்விமானும் ஆனவர். போனபோன இடங்களில் கண்டதையெல்லாம் புத்தகமாக எழுதிவைப்பது அவருக்கு வழக்கம். இந்தியாவில் அவர் கண்ட ஒவ்வொரு ராஜயத்திலும் ஜனங்கள் அவருக்கு அன்புடன் நல்வரவளித்தார்கள். இவ்வாறு பல ராஜ்யங்களைப் பார்த்துக்கொண்டு இந்தியாவில் நெடுநாள் இருந்தார். அவர் இந்தியாவுக்கு வந்து, இத்தனை காலம் ஆனபிறகு இப்பொழுது அவருடைய புத்தகம் எவ்வளவு உபயோகமாக இருக்கிறது! அதுமுதல் இதுவரையில் எத்தனையோ கோடி ஜனங்கள் பிறந்து இறந்து போயினர். ஆயினும் பாஹியென் எழுதிவைத்த புத்தகம் அக்காலத்து ஸங்கதிகளை எக்காலத்தும் விளக்கும் அழிவுறுத சாஸனமாக இருக்கிறது.

வட இந்தியாவில் மிகவும் முக்யமாய் மத்ய ராஜ்யமென்று வழங்கியிருந்த மகதராஜ்யத்தை அவர் வந்து பார்த்தார். மௌர்ய சந்த்ரகுப்த னென்னும் சக்ரவர்த்தியின் ஆட்சியில் சட்டங்களைத் திட்டமாய் வரையறுத்துக் கடுந்தண்டனை விதித்திருந்தது நமக்குச் சரித்ரத்தில் தெரிந்த ஸங்கதி. பாஹியென் வந்து பார்த்தபோது மகதராஜ்யத்தில் சட்டங்கள் தணிவாயிருந்தன வென்றும், அங்கங்கே மடங்கள் ஏற்பட்டிருந்தன வென்றும், ஏழைகளுக்கு அன்னவஸ்த்ரம் அளிக்கும்படி மடங்களுக்கு துரைத்தனத்தார் பொருளுதவி செய்துவந்தன ரென்றும் அவர் எழுதிவைத்திருக்கிறுர்.

பாஹியென் அசோகருடைய அரமனையைப் பார்த்தார். அசோக மஹாராஜன் இறந்துபோய் அப்போது அறுநூறு வருஷ காலம் ஆய்விட்டது. அவ்வளவு காலம் ஆகியும் அவ்வரமனை மிகவும் அழகாய் விளங்கியிருந்தது. அந்த உத்தம புருஷன் பரிவோடு செய்த கார்யங்களெல்லாம் நன்மை பயப்பனவாயின அறுநூறு வருஷ காலம் ஆகியும் அவருடைய தேசம் குறைகூற இடமில்லாமல் அமைதியாய் இருந்தது.

பாஹியென் வந்தபோது மகதராஜ்யத்தில் சந்த்ரகுப்த விக்ரமாதித்யன் ஆட்சிசெய்திருந்தார். இந்தியாவில் அரசாட்சி செய்த பேரரசர்களில் அவர் ஒருவர். அசோகருடைய பாட்டனான முதலாவது சந்த்ரகுப்தர் மகதத்தில் ராஜ்யபாரம் பண்ணி எழுநூறு வருஷ காலம் ஆய்விட்டது. சந்த்ரகுப்த விக்ரமாதித்யர் ஹிந்து மதத்தைத் தழுவினவர். ஆயினும் புத்தமடங்களுக்குப் பொருளுதவி செய்வதை அவர் நிறுத்தவில்லை. ஹிந்துமதமும் புத்தமதமும் ஒன்றின் பக்கல் ஒன்றாய் ஒன்றுக்கொன்று உதவி செய்தும் அறங்களை வளர்த்தும் வந்த காலத்தில், மகததேசம் எவ்வளவு ஸந்தோஷமாயும் க்ஷேமமாயும் இருந்திருக்க வேண்டும்!

இந்த மஹாராஜனுடைய ஆட்சியில் சான்றோர் பலர் இருந்தனர். அவருடைய ஸமஸ்தானத்து வித்வான்களுக்கு "நவரத்நங்கள்" என்றொரு சிறப்புப் பெயர் உண்டு. அவர்களில் சிலர் பெயர்பெற்ற க்ரந்தகர்த்தர்கள்: சிலர் தத்வசாஸ்த்ரத்தில் தேர்ச்சியடைந்தவர்கள். இவர்களில் மிக்க பெயர் பெற்றவர் காளிதாஸர் என்கிற ஸம்ஸ்க்ருத மஹாகவி. இவருடைய காவ்யங்களும் நாடகங்களும் அக்காலத்திற்போலவே இக்காலத்திலும் புகழ்பெற்றிருக்கின்றன. அக்காலத்தில் ஸம்ஸ்க்ருதம் உச்சநிலை பெற்றிருந்தது. சில புலவர்கள் நக்ஷத்ரங்களின் கதிகளை ஆராய்ச்சி செய்து வானசாஸ்த்ரம் எழுதினர். சிலர் ஞானசாஸ்த்ரமும் சிலர் சரித்ரமும் எழுதினர்.

பாடலிபுத்ரத்தில் மூன்று வருஷகாலம் தங்கியிருந்து பாஹியென் ஸம்ஸ்க்ருதம் கற்றுக்கொண்டார். வட இந்தியாவில் பதினொரு வருஷ காலம் பயணம்பண்ணிப் பல மாகாணங்களைப் பார்த்து, பல வரலாறுகளை எழுதிய புத்தகங்களுடனே அவர் கப்பலேறிச் சீனவுக்குத் திரும்பினர்.

சீன யாத்ரிகரான ஹியான் ஸான்

கவிராஜரான ஹர்ஷவர்த்தனர்

கி-பி ஏழாவது நூற்றுண்டில் இந்தியா இரண்டு பேரரசுகளாகப் பிரிவுண்டிருந்தது. எப்போதும் உள்ளது போலவே வடஇந்தியாவில் அக்காலத்தில் அநேக ராஜ்யங்கள் இருந்தன. மேற்கில் இப்போது கூர்ஜரம் இருக்கும் இடத்தில் வல்லபி என்கிற ராஜ்யம் இருந்தது. கிழக்கில், இப்போது அஸ்ஸாம் என்பது அப்போது காமரூப ராஜ்யமென்று வழங்கியிருந்தது. மத்ய இந்தியாவில் உஜ்ஜயினி ராஜ்யமும் வங்காளத்தில் புண்ட்ரவர்த்தன ராஜ்யமும் இருந்தன. இங்ஙனம் வட இந்தியாவில் பலராஜ்யங்களை ஆண்டிருந்த ராஜாக்களுக்கெல்லாம் ராஜனுய் ஹர்ஷன் என்னும் பெரிய சக்ரவர்த்தி கன்னோசியை ராஜதானியாகக் கொண்டிருந்தார்.

அவருடைய ஸமஸ்தானம் வித்தைக்கு ஓர் இருப்பிடம். அவர் வித்வான்களை ஸன்மானிப்பவர்: தம்மட்டிலும் பெரியவித்வான்: நல்ல கவிராஜர். இவருடைய ஸன்மானம் பெற்ற புலவர் அநேகர் கன்னோசியில் வாஸம் செய்துகொண்டு க்ரந்தங்கள் எழுதியிருந்தார்கள்.

ஹர்ஷவர்த்தனர் ஆட்சி செய்திருந்த் காலத்தில் சீனுவிலிருந்து ஹியான் ஸான் என்றொரு தேசாந்தரி வந்தார். அவர் பெரும் புலவர். அவர் நிலமார்க்கமாகவே பால்க் காபுல் என்கிற ராஜ்யங்களின் வழியாய் வந்தார். இந்தியாவில் புத்தருடைய ஞாபகக்குறிப்பான பொருள்களைச் சேகரிப்பதில் பத்துவருஷ காலம் கழிந்தது. சிலகாலம் அவர் அஸ்ஸாமில் தங்கியிருந்தார். அங்கே குமார ராஜனுடைய ஸமஸ்தானத்திலிருந்து தம்முடைய தேசத்துக்குத் திரும்பவிருந்த ஸமயத்தில், ஹர்ஷவர்த்தன ரிடத்திலிருந்து அவருக்கு ஒரு நிருபம் வந்தது. அவர் அந்த மஹாராஜனுடைய ஸமஸ்தானத்துக்கு வரவேண்டுமென்று அந்த நிருபத்தில் கட்டளையிட்டிருந்தது.

ஜான்யுஅரி மாதத்தில் ஹர்ஷர் இருபது சிற்றரசர்களோடு ப்ரயாகைக்குப் பயணமானர்: அவர்களோடு ஹியான் ஸானையும் அழைத்துப் போனர். ப்ரயாகை கங்கையும் யமுனையும் ஒன்றாய்க் கூடுகிற இடத்தில் இருக்கிறது. ஹர்ஷர் ஐந்து

வருஷத்துக்கு ஒருமுறை கங்காதீரத்தில் மதஸம்பந்தமான ஒரு ஸங்கம் கூட்டுவது வழக்கம். ஆறுவது முறை இவ்வித ஸங்கம் ப்ரயாகையில் கூடியது. அப்போது அங்கே ஒரு பெரிய உத்ஸவம் நடந்தது. வந்திருந்த ஜனங்களின் தொகை ஸுமார் ஐந்துலக்ஷம் இருக்கும். ஹிமாலயத்தில் பனிக்கட்டிகள் உருகாத கால மாகையால், அப்போது கங்கையிலும் யமுனையிலும் ஜலம் வடிந்திருந்தது. அங்கங்கே மணலில் பல்லாயிரம் ஜனங்கள் கூடியிருந்தனர்.

முதல்நாளில் புத்த விக்ரஹத்துக்கு உத்ஸவம் நடத்தி விலைமிக்க காணிக்கைகளை அளித்தார்கள். இரண்டாவது நாளில் ஸூர்யதேவனுக்கும் மூன்றாவது நாளில் சிவனுக்கும் அங்ஙனமே செய்தார்கள்.

அந்த உத்ஸவத்துக்கென்று ஐந்து வருஷ காலமாகப்பொருள் சேகரித்திருந்தார்கள். உத்ஸவத்துக்கு முன்னே அவை பல நூறு வீடுகளில் நிரம்பியிருந்தன. இவ்வளவையும் உத்ஸவகாலத்தில் ப்ராஹ்மணரும் பௌத்தரும் ஜைநருமாகிய ஸாதுக்களுக்கு அளித்து விட்டார்கள். ஹர்ஷ மஹாராஜன் யானைகளும் குதிரைகளும் படைக்கலங்களும் தவிர, தாமணிந்திருந்த பூஷணங்க ளெல்லாவற்றையும் ஸாதுக்களுக்குக் கொடுத்து விட்டார்.

ராஜாக்களெல்லாரும் முதலில் விக்ரஹங்களின் பின்னால் பவனிவந்தார்கள். இவ்விதம் உத்ஸவம் எழுபத்தைந்து நாள் நடந்திருந்தது. அப்பால் கூட்டமெல்லாம் கலைந்து விட்டது. ஹியான் ஸான் தம்முடைய தேசத்துக்குத் திரும்புவதென்று புறப்பட்டார். புறப்படுமுன்னே அஸ்ஸாம் அரசனான குமாரராஜன் மெத்தென்றிருக்கும் ரோமங்களால் செய்த ஒரு சால்வையை அவருக்குக் கொடுத்தார். சக்ரவர்த்தி மூவாயிரம் மோராக்களை மூட்டையாகக் கட்டி ஒருயானையின்மேல் வைத்துக் கொடுத்தார். தேசாந்தரியை வழிவிட்டு வரும்படி சக்ரவர்த்தியானவர் ஓரரசனை அங்கக் காவலருடனே அனுப்பினார். புத்தருடைய ஞாபகக் குறிப்பான பொருள்களும் புத்த நூல்களும் இருபது குதிரைகளின் மேல் ஏற்றிக்கொண்டு ஹியான் ஸான் சீனவுக்குத் திரும்பினார்.

புலிகேசி

ஹர்ஷன் பெரிய சக்ரவர்த்தியே. அவருடைய நாவசைந்தால் நாடசையும். அவர் ஒரு வார்த்தை சொன்னுல் எண்ணிக்கையில்லாத வீரர்கள் ஆயுதமெடுத்துப் புறப்படுவார்கள். அவருடைய தளகர்த்தர்கள் மஹா பராக்ரமசாலிகள்: அவர் கையை அசைத்துக் குறிப்புக் காட்டினுல், பலராஜ்யங்களிலுள்ள த்ரவ்யத்தை யெல்லாம் அவருக்குப் பாதகாணிக்கையாகக் கொண்டுவந்து சேர்க்கத் தக்கவர்களே. இவ்வளவு பலாட்டியராக இருந்தும், தெற்கில் தக்ஷிண ராஜ்யத்தை வெல்வது ஹர்ஷ வர்த்தனருக்கு அஸாத்யமாகவே இருந்தது.

புலிகேசி என்கிற மஹாராஜன் தக்ஷிணத்தில் வடபி என்கிற நகரை ராஜதானியாகக் கொண்டிருந்தார். இந்தியாவின் தெற்கிலுள்ள அரசர்களெல்லாரும் புலிகேசியை ராஜாதி ராஜனுக அங்கீகரித்திருந்தனர். மேற்கில் தென்கூர்ஜரம் கொங்கணம் என்கிற ராஜ்யங்களும், கிழக்கில் கொடிய பல்லவ ராஜ்யங்களும், தெற்கில் பழமையான சோழராஜ்யமும், புலிகேசிக்கு ஐக்யமானவைகள். வெகு தூரத்திலுள்ள பெர்ஷிய ராஜன்கூட இந்த மஹாராஜனுடைய கீர்த்தியைக் கேள்வியுற்றுச் சில தானுபதிகளை அவரிடம் அனுப்பினுன். இந்த ராஜ்யத்தை ஹியான் ஸான் வந்து கண்டபோது. அஜன்டாவிலுள்ள அதிசயமான குகைகளை அவருக்குக் காட்டினுர்கள். அவை தக்ஷிண ராஜாக்களுடைய உத்தரவினுல் வெட்டினவை. குகைகளில் ஒன்றில் பெர்ஷியவிலிருந்து வந்த தானுபதிகளுக்குப் புலிகேசி நல்வரவளித்த காட்சி சித்ரித்திருந்தது.


இங்ஙனம் தக்ஷிணத்தில் ஏகாதிபத்யம் செய்திருந்த ராஜபரம்பரை சளுக்க (சாளுக்ய) பரம்பரை என வழங்கியிருந்தது. ஒருமுறை ஹர்ஷன் இந்த ராஜ்யத்தின்மேல் ஒரு ஸேனையை அழைத்துவந்து படையெடுத்தார். புலிகேசியின் ஸேனைகள் ஹர்ஷவர்த்தனரைத் தோற்கடித்துத் துரத்திவிட்டன. அந்தப் பரம்பரையார் வலிமை பெற்றிருந்த வரையில், விரோதிகள் எவரும் நர்மதையைக் கடந்து தங்கள் தேசத்தில் புகாதபடி அவர்கள் பார்த்து வந்தனர்.

மஹா ராஜ ராஜ சோழர்

மஹா யுத்தவீரரான ஹர்ஷவர்த்தனரைப் புலிகேசி மஹாராஜன் தோற்கடித்ததை வாசித்தோம். புலிகேசியும் தம் மட்டில் பெரிய வெற்றிவீரரே. அவருடைய ஸேனைகள் நல்ல யுத்தப்பயிற்சி யுள்ளவை; ஆதலால், அவை தென்னிந்தியாவிலுள்ள மற்ற ராஜர்களைத் தோற்கடித்துவந்தன. ஆயினும், அக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்த ராஜ்யங்களும் ஸாமான்யமானவை யல்ல: சலிக்காமல் சண்டை செய்யக்கூடிய பலத்த ராஜ்யங்களே. யுத்தப்ரியரான பல்லவராஜாக்கள் க்ருஷ்ணாநதி தீரத்திலுள்ள வெங்கி, இப்போது பாலக்காடு என வழங்கும் பாலக்கா, காஞ்சி என்னும் ராஜ்யங்களை ஆண்டிருந்தனர். முன்னே மஹாராஷ்ட்ர ராஜ்யத்தை ஆண்டிருந்த ராஷ்ட்ரகூட வம்சம் ஒருபக்கம் அரசாட்சி செய்திருந்தது. கொஞ்சகாலத்துக் கப்புறம் யாதவர் என்னும் தேவகிரி ராஜபுத்ர ராஜாக்கள் ஒருபக்கம் அரசாட்சி செய்திருந்தனர். தேவகிரி யென்பது தௌலதாபாத் நகரத்துக்கு முற்காலத்தில் வழங்கியிருந்த பெயர்.

புலிகேசி இறந்துபோன பிறகு சண்டைகள் அதிகம் நேரிட்டன. சில ஸமயங்களில் பல்லவர்கள் தென்னிந்தியாவில் மற்றவர்களைக் காட்டிலும் பலத்திருந்தனர்; சில ஸமயங்களில் (சளுக்கர்) சாளுக்யர் வலியுற்றிருந்தனர். நெடுங்காலம் ராஷ்ட்ர கூடத்தினர் மற்ற எல்லாரினும் பலமுற்றிருந்தனர். தென்கோடியில் தக்ஷிண ராஜ்யங்களைக் காட்டிலும் பேர்போனவை மூன்று ராஜ்யங்கள் இருந்தன. அவை பாண்டியராஜ்யம் சேரராஜ்யம் சோழராஜ்யம் என்கிற பழமையான த்ராவிட ராஜ்யங்கள்.

சோழராஜ்யத்தில் திருச்சினாப்பள்ளியும் கும்பகோணமும் முக்ய பட்டணங்கள். பாண்டியதேசத்தில் மதுரை ராஜதானி: அது முற்காலத்தில் தமிழ் அபிவ்ருத்தியடைந்த இடம். பாண்டியர்களுக்குச் சேல் கொடியும் சேரர்களுக்கு வில்கொடியும் உரியவை. சேரதேசம் என்பது மேற்குக்கடலின் கரையிலுள்ள மலையாள ராஜ்யம்.



கி-பி பதினோராவது நூற்றாண்டில் சோழதேசத்தில் ஒரு பேரரசன் அரசாட்சி செய்திருந்தார். அவர் மஹா ராஜராஜ தேவர் என்பவர். அவர் தெற்கிலுள்ள ராஜ்யங்களையும் வெகு தூரத்திலுள்ள கலிங்கராஜ்யத்தையும் வென்றார். கொடிய பல்லவர்களையும் பேர்போந்த சளுக்கர்களையும் வென்றார். அவர் இறப்பதற்கு முன்னே சோழராஜ்யத்நில் தக்ஷிணமும் தென்னிந்தியாவும் முழுவதும் அடங்கியிருந்தன. அவருக்குத் தஞ்சாவூர் ராஜதானி. அங்கே அவர் ஒரு பெரிய ஆலயம் கட்டியிருக்கிறார். அவருடைய விஜயப்ரதாபங்களெல்லாம் அவ்வாலயத்தின் சுவர்களில் சிலாசாஸனமாகச் செய்திருக்கின்றன.

சோழராஜ்யத்துக்கு ஒரு பலத்த நிலப்படையோடு ஒரு கப்பற்படையும் இருந்தது. இந்தக் கப்பற்படையின் உதவி-

யால் அவர் லங்காத்வீபத்தை வெற்றிகொண்டார். அவர் காலத்தில் அந்த த்வீபம் அவருடைய ராஜ்யத்தில் ஒரு பாகமாயிருந்தது.

அவர் சைவ மதஸ்தரேயாயினும் தம்முடைய ராஜ்யத்தி-லுள்ள புத்தர்களுக்கு யாதொரு கொடுமையும் செய்யாமல் அவர்களைப் பக்ஷமாகவே பரிபாலித்திருந்தார்.

பார்ஸிகள் இந்தியாவில் குடியேறியது

பார்ஸிகள் இந்தியாவில் குடியேறியது ஒரு பெரிய கதை. அந்தக் கதை மிகவும் தூரதேசமாகிய அரேபியாவில் ஆரம்ப-மாகிறது.

அரேபியா ஓர் அதிசயமான தேசம். அங்கே அநேக பாகங்களில் மழை எப்போதும் பெய்வதே யில்லை. வறட்சி-யான பெரிய பெரிய மணல் வெளிகள் அங்கங்கே உண்டு. அவைகளில் கண்ணுக்குப் பசுமையாய்க் குளிர்ச்சியான புல் பூண்டுகள் முளைப்பதேயில்லை. ஆயினும் மேக மண்டலத்தை அளாவிய மலைகள் சில பாகங்களில் உண்டு. அவைகளின் மேல் அப்போதப்போது மழை பெய்யும் உள்பாகத்தில் விஸ்தாரமான மணல் வனாந்தரம் அநேக மைல் தூரம் பரவி யிருக்கிறது. அங்கே ஸூர்யவெப்பம் மிகவும் கொடுமையா-யிருக்கும். மலைகளின்மேல் பெய்கிற மழைநீர் பூமியில் சுவறி அங்கு மிங்கும் பரவி அந்த வனாந்தரத்தில் சில இடங்களில் சுரந்து வந்து சிறிய குளங்களாகியிருக்கும். இந்தக் குளங்-களைச் சுற்றி ஈச்சமரங்களும் சில நல்ல புல்வகைகளும் வளர்ந்திருக்கும். மனோஹரமாய்ப் பசுமையான இந்த இடங்-களை ஒயஸிஸ் (Oasis) என்பார்கள்.

ஒட்டகத்தின்மேல் ஏறி வனாந்தரத்தில் பகலெல்லாம் பயணம்பண்ணி அலுத்துப்போகிற அரேபியன், நிழல்தரும் ஈச்சமரங்களை தூரத்தில் கண்டால், அங்கே குடிக்க நீரும் இளைப்பாற நிழலும் கிடைக்குமென்று எவ்வளவு ஸந்தோஷம் அடைகிறான்! அவனை ஏற்றிக்கொண்டு வந்தது குதிரையா-னால், அது, ஒயஸிஸின் குளிர்ந்த ஜலத்தை மோப்பம் பிடித்த அளவில், என்னம் பரபரப்பாக அடியிட்டுச் செல்கிறது!


முகம்மதியர்களுடைய பரமாசார்யரான முஹம்மது என்பவருக்கு அரேபியா ஜன்மபூமி.

மழை பெய்கிற இடங்களில் ஜனங்கள் நகரவாஸமாகக் கூடியிருக்கின்றனர். அரேபியாவில் மக்கா என்கிற பட்டணம் முஹம்மதுவின் பிறப்பிடம். அக்காலத்தில் அரேபியர்கள் கொடுமையுள்ளவர்கள். அரேபியாவில் வெவ்வேறு பட்டணத்து ஜனங்களுக்குள் அடிக்கடி சண்டை சச்சரவுகள் நேரிட்டிருந்தன. புத்தர் தம் தேசத்தாருடைய துன்பத்தை விலக்க முயன்றது உங்களுக்குத் தெரியுமே. அங்ஙனமே, முஹம்மது தம் தேசத்தாருடைய கெட்ட வழக்கங்களைத் தவிர்க்கும்படி ப்ரஸாரணம் பண்ணி அவர்களை நல்லொழுக்கங்களை மேற்கொள்ளும்படி வற்புறுத்தினார். முற்காலங்களிலிருந்த ஸாதுக்கள் அவ்வக்காலங்களில் செய்து வந்தபோதனைகளால் நாம் எவ்வளவு நன்மை அடைந்திருக்கிறோமென்பதை இப்போது எவரும் சொல்வது முடியாது. அவர்கள் சொன்னவைகளையும் செய்தவைகளையும் கவனித்து அவர்கள் நடந்த விதம் நடக்க முயல்வதே நாம் அவர்களிடத்தில் பாராட்டத்தக்க நன்றியாம்.

தம்முடைய தேசத்தவர்களை தர்மஞ்செய்து நல்லவர்களாகும்படி முஹம்மது வற்புறுத்தினார். மக்காவிலுள்ளவர்கள் அவரைத் தங்கள் பட்டணத்திலிருந்து துரத்திவிட்டார்கள். ஸமீபத்திலுள்ள மேடினு பட்டணத்து ஜனங்கள் அவருக்கு நல்வரவளித்து அபயம் கொடுத்தார்கள்.

அரேபியர்கள் யுத்தப்ரியர்கள். முஹம்மதுவின் மதத்தைத் தாங்கள் அங்கீகரித்த பிறகு, உலகமுழுவதும் அந்த மதத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். முஹம்மது காலகதியடைந்த பிறகு ஏற்பட்ட முஹம்மதிய மதத்தலைவர்கள் காலிபா (Caliph) என்ற பட்டம் பெற்றனர். காலிபாக்களின் கட்டளையின்படி அரேபிய ஸேனைகள் அடிக்கடி புறப்பட்டு திக்விஜயம் செய்துவந்தன.

ஒரு ஸேனை இந்தியாவுக்கு வந்து மூல்டான் பட்டணம் வரையில் ஸிந்துதேசத்தை வென்றது. வேறு ஸேனைகள் பெர்ஷியவுக்குப் போய் பெர்ஷியவிலுள்ள பட்டணங்களில் கொள்ளை யடித்து ஜனங்களைத் தங்கள் பழைய மதத்தைக் கைவிட்டு முகம்மதியராகும்படி செய்தன.



அதற்கு நெடுங்காலத்துக்கு முன்னே பெர்ஷியவில் ஜோரோ ஆஸ்டர் (Zoroaster) என்கிற பரமாசார்யர் போதித்த மதம் பரவியிருந்தது. பூலோகத்தில் ப்ராணன் முதலான ஸகலத்துக்கும் காரணமான ஸூர்யனைத் தொழுவதே அந்த மதத்தின் முக்ய கொள்கை.

பெர்ஷியர்களும் யுத்தவீரர்களே. முற்காலத்தில் டேரியஸ் என்னும் சக்ரவர்த்தி ஆட்சிசெய்திருந்த நாளில் பெர்ஷியர்கள் யூரபில் பலமுறை வெற்றிகொண்டவர்கள். க்ரேக்கர்கள்கூட அக்காலத்தில் பெர்ஷியர்களுக்கு பயந்திருந்தவர்களே. இப்படிப்பட்டவர்களை இப்போது முகம்மதியர்கள் தங்கள் மதத்தைத் தழுவும்படி பலவந்தம் பண்ணினர்கள். அதைக் கண்டு, பெர்ஷியர்களில் அநேகர், செத்தாலும் சாவதேயன்றி முகம்மதியராவதில்லை யென்று துணிந்து, தங்கள் ஸ்வதேசத்தை விட்டு வேறே எவ்விடத்திலாவது போய் அமைதியாக வாழ்வதென்று புறப்பட்டார்கள். இந்தியா எக்-

காலத்திலும் புதிதாய் வருவோர்க்கு நல்வரவளிக்கப் பின்வாங்காத தேசம்: மற்ற மதங்களிடத்தில் விரோதம் பாராட்டாமல் பொறுத்துக்கொண்டு போகிற தேசம்.

ஆகவே பார்ஸிகள் என்று வழங்கும் அந்தப் பெர்ஷியர்கள் இந்தியாவில் வந்துசேர்ந்தனர். தங்கள் தேசத்திலிருந்து வந்தபோது, முதலில் இந்தியாவின் மேல்கரையில் இறங்கி, ஸூரத் பொம்பாய் என்னும் பட்டணங்களுக்கு ஸமீபத்தில் தங்கி நிலைத்தலாயினர். நாளதுவரையில் அவர்களுக்கு அவ்விடமே உறைவிடமா யிருக்கிறது.

கஜ்னீமஹமூத்

ஏஷ்யவில் அரேபியவுக்கும் டிபெட்டுக்கும் இடையிலுள்ள எல்லா தேசத்து ஜனங்களையும் அரேபியர்கள் முஹம்மதிய ராக்கிவிட்டனர். அந்த தேசங்களில் அப்கானி ஸ்தானம் ஒன்று அது இந்தியாவுக்கு வடமேற்கி லிருப்பது உங்களுக்குத் தெரியும். அக்காலத்தில் அப்கானி ஸ்தானத்தில் கஜனீ என்கிற பட்டணம் ராஜதானி. அந்தப் பட்டணத்து ஜனங்கள் அனைவரும் முஹம்மதியர் மஹமூத் என்றொரு ஸுல்தான் (Ghajni) கஜ்னீயில் ஆட்சி செய்திருந்தார்.

அந்தப் பட்டணம் மலைகளின் நடுவில் உள்ளது. அங்கே மஹமூத் அழகான ஓர் அரமனையில் வஸித்திருந்தார். அவர் நல்ல கல்விமான்: சித்ரவித்தைகளில் அபிருசியுள்ளவர். ஆகவே அவர் பலவித புஸ்தகங்களையும் விசித்ரமான பொருள்களையும் அரமனையில் சேகரித்து வைத்திருந்தார். அநேக கவிகள் அவரைச் சூழ்ந்திருந்தனர். அக்கவிகளை அவர் ஸன்மானித்துப் போற்றிவந்தார். சாஸ்த்ரங்களில் தேர்ச்சியுள்ள விவேகிகளும் அவருடைய ஸமஸ்தானத்தில் அநேகர் கூடியிருந்தனர். கல்விக்கும் விசித்ர வித்தைகளுக்கும் கஜ்னீ அக்காலத்தில் முக்யஸ்தானமாயிருந்தது.

முஹம்மதிய மதமே உண்மையான மதமென்பது அவருடைய கொள்கை. அதனல் மற்ற மதங்களின் மீது அவருக்கு அதிக விரோதம் உண்டாயிற்று. உண்டாகவே அக்-

காலத்து முஹம்மதியர்போலவே அவர் இதரதேசத்தவர்களை முஹம்மதிய மதத்தைத் தழுவும்படி செய்வதைவிட வேறு நல்ல கார்யம் இல்லை யென்றும், முஹம்மதிய ரல்லாதவரைக் கொலை செய்வது புண்யமே என்றும் எண்ணியிருந்தார். அவர் அவர்களோடு மதவிஷயங்களைப் பற்றி வாதம் செய்வதும் இல்லை; நல்ல விதத்தில் அவர்களை முஹம்மதியராக்குவதும் இல்லை. பெரிய யுத்தவீர ராகையால், பட்டணங்களில் கொள்ளை யடிப்பதும் முஹம்மதிய ராகாதவர்களை வெட்டி விடுவதும் அவருக்கு வழக்கம். இப்படிப்பட்ட மதவைராக்ய முள்ளவ ராதலால், இந்தியாவில் கொள்ளையடிப்பதென்றும், நெடுங்காலமாகத் தாங்கள் தழுவியிருந்த மதங்களைக் கைவிட்டு முஹம்மதிய ராகாத ஹிந்துக்களை வெட்டி விடுவதென்றும், அவர் மனவுறுதி பண்ணிக்கொண்டார். இந்த வைராக்கிய மில்லாவிட்டால், அவர் எத்தனையோ மேலான கார்யங்களைச் செய்திருக்கக் கூடும்.

மஹமூதைச் சேர்ந்தவர்கள் இந்தியாவில் செய்த கொடுமைகள் ஒன்றிரண்டு அல்ல. அவர்கள், பட்டணங்களில் கொள்ளையடித்தார்கள்: ஆலயங்களை அழித்தார்கள்; ப்ராஹ்மணர்களைக் கொன்றார்கள்; க்ராமங்களைக் கொளுத்தினார்கள்; தான்யங்கள் பழுத்துப் பொன்போலிருந்த வயல்களைக் கரியாக்கினார்கள்; கிளரியாயிருந்த வீடுகளைப் பாழாக்கினார்கள். பரமாசார்யரான முஹம்மதின் நற்போதத்துக்கு முற்றும் மாறாகவே செய்துவந்தனர். அவருக்குப் பிற்பட்டவர்கள்-ஆயினும் மஹமூதும் அவருடைய ஸிபாய்களும் தங்கள் கெட்ட நடவடிக்கைகளை நல்ல நடவடிக்கை என்றே நம்பியிருந்தார்கள்.


மஹமூத், இந்தியாவின்மேல் முதலில் படையெடுத்து வந்த போது பிஷாவுரில் பாளய மிறங்கியிருந்தார். அப்போது ஹிந்துஸ்தானத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று முயற்சி செய்தவர். லாஹூர் அரசனான ஜயபாலர் ஒருவரே. ரஜபுத்ர குதிரைவீரர்களையும் காலாள்களையும் அநேக யானைகளையும் கூட்டிக்கொண்டு அவர் முஹம்மதிய ஸேனையைத் துரத்திவிடும்படி போனார்.

ரஜபுத்ர ஸேனையானது சண்டை துவக்கும்படி ஆவலாய்ச் சென்றது. முஹம்மதியர்களும் எதிர்நோக்கி வந்த-

னர். இருதிறத்தாரும் ஒருவர்மே லொருவர் அம்பு போட்டுக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாய் நெருங்கினர். கிட்ட நெருங்கின வளவில், சண்டை மும்முரமாகி மளமளவென்று ஸந்தடி கேட்டது, முஹம்மதிய வீரர்கள் யானைகளின் தும்பிக்கைகளைக் கத்திகளால் வெட்டினர்: அவைகளின் கால்களில் ஊடுருவிப் போகும்படி அம்புகளை எய்தனர். அதனால் யானைகள் திரும்பி ஹிந்து ஸேனையிலுள்ள வீரர்களையே மிதித்துத் துவைத்து ஓடின. முஹம்மதியர் மதாவேசத்தோடு கொடுமையாய் எதிர்த்ததனால் ரஜபுத்ரர்கள் கட்டுக்குலைந்து ஓடத்தொடங்கினர்.

முஹம்மதியர் ஜயபாலரைக் கயிற்றால் கட்டிக்கொண்டுபோய் ஸுல்தான் எதிரில் விட்டனர். சிறைப்பட்டவர்களில் சிலரைப் பின்கட்டாகக் கட்டிக்கொண்டு போயினர்: சிலரைத் தாடையைப் பிடித் திழுத்துக்கொண்டு போயினர்: சிலரைப் பிடரியைப் பற்றி நெட்டித் தள்ளிக்கொண்டு போயினர். ஜயபாலருடைய கழுத்திலிருந்த பெரிய முத்து வடங்களையும் ரத்னமாலைகளையும் கழற்றி யெடுத்துக்கொண்டு, அவருடைய அவமானத்தைக் காணும்படி அவருடைய குமாரர்களுக் கெதிரில் அவரைக் கொண்டுபோயினர். அப்பால் அவரை விடுவித்து லாஹூருக்குப் போகும்படி அனுப்பிவிட்டார்கள். கர்வங்கொண்ட அந்த மஹாவீரர், அந்த அவமானத்தை அடைந்தபின் உயிரோடிருக்க விரும்பாமல், மூத்த குமாரனான அநந்தபாலரிடம் ராஜ்யத்தை ஒப்பித்துவிட்டு அக்நிப்ரவேசமானார்.

மஹா யுத்தவீரரான அநந்தபாலர் முஹம்மதியருக்கு விட்டுக்கொடுக்காமல், ரஜபுத்ரர்களை உதவி செய்யும்படி அழைத்தார். ரஜபுத்ர ராஜாக்கள் தங்கள் ஸேனையோடு வந்தனர். ஹிந்து ஸ்த்ரீகள் தங்கள் பர்த்தாக்களுக்கும் ஸிபாய்களுக்கும் பணம் சேகரித்துக் கொடுக்கும்படி தங்கள் பொன்னணிகளை உருக்கிவிட்டார்கள். ரஜபுத்ர கூட்டம் மிகவும் பெரிதா யிருந்தமையால், மஹமூத் நெடுநாள் வரையில் அவர்களை எதிர்க்க தைர்யமில்லாமல் சும்மா இருந்தார். அதன்மேல் ரஜபுத்ரர்கள் போய் முஹம்மதியரை எதிர்த்தனர். மறுபடியும் முன்போலவே யானைகள் மிரட்சியடைந்து திரும்பி ரஜபுத்ர ஸிபாய்களை மிதித்துத் துவைத்தன. கட்டுக்குலைந்த



ரஜபுத்ரவீரரும் அவர்கள் தலைவனும்

ஸேனையின்மேல் முஹம்மதிய ஸிபாய்கள் பாய்ந்து ரஜபுத்ரர்களைத் துரத்திவிட்டார்கள்.

அப்பால் ஸுல்தான் மஹமூத் தன்னிஷ்டம்போல் கொள்ளையடிக்க இடமுண்டாயிற்று. ஹிந்துஸ்தானத்தில் அவர் அநேக திவ்யக்ஷேத்ரங்களைத் தரையோடு தரையாக்கி ஆலயங்களை அழித்தார். அவர் ஸோமநாதபுர ஆலயத்தை முற்றுகை செய்தபோது, ரஜபுத்ர வீரர்கள் இரண்டு மூன்று நாள் வரையில் அதிக ஊக்கத்தோடு காவல் செய்திருந்தனர். கடைசியில் முஹம்மதியருடைய வீராவேசத்துக்கு எதிர் நிற்கமாட்டாமல் சிதறியோடினர். மஹமூத் சாகிறவரையில் ஹிந்துஸ்தானத்தில் கொலையும் கொள்ளையும் ஒழியவேயில்லை.

ஜயசந்த்ர மஹாராஜன் ராஜஸூய யாகம் நடத்தியது

ரஜபுத்ரர்களில் கஹர்வார் (Gaharwar) சௌஹன் (Chauhan) என்றும் அந்ஹல் வாரா (Anhulwarra) என்றும் சில பிரிவுகள் உண்டு. கஹர்வார்கள் கன்னோசி நாட்டைச் சேர்ந்தவர்கள். சௌஹன்கள் டில்லியைச் சேர்ந்தவர்கள். அந்ஹல்வாராக்கள் கூர்ஜரத்தில் உள்ளவர்கள். இந்தப் பிரிவினர்கள் ஒருவர்மீதொருவர் விரோதம் பாராட்டியிருந்தனர்.

கஹர்வார்கள் சிறப்புற்றிருந்த காலத்தில் கன்னோசி ராஜ்யம் பலத்திருந்தது. கன்னோசியில் ஜயசந்த்ரரும் டில்லியில் ப்ருத்வியும் அரசாட்சி செய்திருந்தனர். ஜயசந்த்ர மஹாராஜனுக்குப் போனபோன திசையெல்லாம் வெற்றி கிடைத்து வந்தது. ஸிந்துநதிக்கப்பால் பல வடநாடுகளில் ஆட்சி செய்திருந்த அரசர்களில் எட்டுப்பேர் அவரிடம் சிறைப்பட்டிருந்தனர். கூர்ஜரத்தரசன் அவரிடத்தில் இருமுறை தோல்வியடைந்தான். அவருடைய ராஜ்யம் நர்மதாநதிவரையில் பரவியிருந்தது. பெரிய வெற்றிவீரனான கோர் ஸுல்தான் படையெடுத்து வந்தபோது, கன்னோசிநாட்டுப் படைவீரர்கள் எதிர்த்துச் சென்று எதிரியின் ஸேனையைக்கலக்கி, ஸிந்து-

நதியின் நீலநீரைச் செந்நீ ராக்கினர். (செந்நீர்-ரத்தம்). வீர-சிகாமணியாகிய ப்ருத்வி ஒருவர் இல்லாவிட்டால், ஜயசந்த்-ரர் ஏகசக்ராதிபதியாய் ரஜபுத்ர ராஜ்யங்கள் எல்லாவற்றை-யும் தன் குடைநிழலில் ஒருங்குசேர்த்து வைத்திருப்பார்.


விஜயலக்ஷ்மியும் தனலக்ஷ்மியும் வீற்றிருக்கப் பெற்ற ஜய-சந்த்ரர் ராஜஸூயயாகம் நடத்தி ஸம்ராட் என்று பட்டங்-கட்டிக்கொள்ள விரும்பினர். இறந்த காலத்தில் எவ்வளவு தூரம் எட்டிப்பார்த்தாலும், இந்த யாகம் செய்து ஸுகப்பட்-டவர் எவரும் இல்லை. இந்த யாகம் செய்தே பாண்டவர்கள் அரசாட்சியை இழந்தார்கள். ராஜஸூயயாகம் நடக்கப்போ-கிறது என்றும், அந்த ஸமயத்தில் தம்முடைய ஏகபுத்ரியின் ஸ்வயம்வரமும் நடக்கப்போகிறது என்றும், ஜயசந்த்ரர் அநேக தேசத்து ராஜாக்களுக்குப் பத்ரிகை அனுப்பினர்.

பத்ரிகையைக் கண்டபோது ப்ருத்விராஜனுக்குக் கோபம் மூண்டது. சௌஹன் ரஜபுத்ரர் எவராவது கன்னேசி யரசனை ஸம்ராட் என்று அங்கிகரிப்பார? அந்த யாகத்துக்குத் தாம் போவதில்லையென்று ப்ருத்வி அலக்ஷ்யமாக இருந்தார்.

முன் ஒருமுறை ப்ருத்விராஜன் மாறுவேஷத்தோடு கன்-னேசிக்குப் போயிருந்தார் என்றும் ஜயசந்த்ருடைய ஸுந்-தர குமாரியைக் கண்டு மோஹமடைந்தார் என்றும் கதைகள் சொல்லுகின்றன. யாகம் நடக்கிற ஸமயத்தில் ஸ்வயம்வர-மும் நடக்கப்போகிற ஸங்கதியை அறிந்து அவருக்குக் கோபம் பின்னும் பொங்கியெழுந்தது.

பத்ரிகையைப் பெற்ற ஒவ்வோர் அரசனும் யாகசாலைக்கு வந்திருந்தான். சௌஹன் ராஜனை ப்ருத்வி ஒருவர்மட்டும் வரவில்லை. அந்த யாகசாலையைக் கவிகள் மிகவும் அலங்கார-மாய்ச் சிறப்பித்துப் பாடியிருக்கிறர்கள்.

ராஜஸூயயாகம் நடக்கிற காலத்தில் அரமனையில் செய்ய-வேண்டிய ஊழியங்களையெல்லாம் சிற்றரசர்கள் செய்யவேண்-டும். இங்ஙனம் செய்வது அந்த யாகம் நடத்தும் அரசனை ராஜாதிராஜனென்று அங்கீகரித்தபடியாம். ஓரரசன் வராவிட்-டாலும் யாகத்தை நடத்தலாகாது. அதற்குப் பரிஹாரமாய் ஜயசந்த்ரர், ப்ருத்வியைப்போல் ஒரு பொன்பொம்மை செய்-வித்து, அதை வாயில் காப்போனக அரமனை வாயிலில் வைத்தார். மஹா வீர சிகாமணியாகிய ப்ருத்வியை இங்ஙனம்



காவல்காரனுக வைப்பது தகுதியன்று என்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்த ஸங்கதியே. ஆகவே, ப்ருத்விராஜனுக்குச் செய்தலான அவமானம் இதைவிட வேறே இல்லை.

இந்தச் செய்தி தெரிந்தவுடனே, ப்ருத்விராஜன் பழிதீர்த்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணங்கொண்டார். யாகத்தை நடவாதபடி நிறுத்திவிடுவதென்று உறுதிசெய்துகொண்டு, அவருடைய போர்வீரர்களில் பேர்போனவர்கள் அறுபத்தைவரோடு புறப்பட்டார். ஒவ்வொரு வீரனும் தன்தன் ஜமாவைக் கூட்டிக்கொண்டு வந்தான். இவர்களன்றியும் அவருடைய நண்பர்களில் அம்பர் அரசன் புஜ-னும் மீவார் பரம்பரையைச் சேர்ந்த கோவிந்த காஹலட்டும் அவரோடு போயினர்.

எல்லாரும் குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு அதிவேகமாய்க் காட்டைக் கடந்து நடுப்பகலில் கன்னோசியில் புகுந்தார்கள். புகவொட்டாமல் தங்களைத் தடுக்கவந்த கஹர்வார்களை வெட்டிக்கொண்டே போய் உள்ளே புகுந்து, எல்லா அரசருக்கும் எதிரில், ப்ருத்விராஜன், ஜயசந்தராருடைய புத்ரியை எடுத்துக்கொண்டு வாயுவேகமாகத் திரும்பினர்.

கன்னோசி வீரர்கள் குதிரைகளின்மேல் ஏறித் துரத்திக்கொண்டு போயினர். ஐந்து நாள் வரையில் மும்முரமாகச்

சண்டை நடந்தது. சௌஹான் வீரர்களில் அநேகர் கொலையுண்டனர். தினம் அவர்களுடைய தொகை குறைந்துவந்தது. முதல்நாளில் கோவிந்தரும் புஜுனும் வெட்டுண்டனர். புஜுனுடைய ஸஹோதரர் கோபம்பொங்கி, சண்டைமுகத்தில் பாய்ந்து, கர்ணனே என்று நினைக்கும்படி, ரணகளத்தைக் கலக்கினர். ஐந்தாவது நாளில் சௌஹான்கள் எதிரிகளைத் தோற்கடித்துவிட்டு டில்லிக்குப் போய்ச் சேர்ந்தனர். அப்பால் ப்ருத்விராஜன் அந்த ராஜகுமாரத்தியைக் கல்யாணம்பண்ணிக்கொண்டு ஸுகமாக வாழ்ந்திருந்தார்.

ஹிந்துஸ்தானத்தில் படையெடுத்து வந்தவர்களோடு ப்ருத்விராஜன் போர்புரிந்தது

சித்தூர் ராஜகுமாரனாகிய ஸமர்ஸிங்க் என்பவர் ப்ருத்வியின் ஸஹோதரியை மணம் புரிந்துகொண்டவர். இவருக்கும் ப்ருத்விக்கும் அதிக ஸ்நேஹவாஞ்சை உண்டு. ப்ருத்வி கன்னோசி ராஜனோடு செய்த யுத்தங்களில் ஸமர்ஸி அடிக்கடி அவருக்கு உதவி செய்திருந்தார்.

ப்ருத்வி ராஜன் பல யுத்தங்களில் வெற்றிமாலை தரித்தவர். அந்த ரணவீரஸிங்கத்தின் ப்ரதாபங்களை டில்லியில் ஸமஸ்தான வித்வானயிருந்த சந்த்ரகவி என்பவர் ஒரு ப்ரபந்தமாகப் பாடியிருக்கிறர். வயது சிறிது தளர ஆரம்பித்த பிறகு அவர் யுத்தகளத்துக்குப் போவதில்லை. ஸமர்ஸியின் உதவியால், நாஜுரில் நெடுங்காலமாய் பூமியில் புதையுண்டிருந்த ஒரு புதையல் அவருக்குக் கிடைத்தது. இதனல் அவர் முன்னிலும் தனவந்தராய் பலவானனர்.

கன்னோசி ரஜபுத்ரர்களும் கூர்ஜர ரஜபுத்ரர்களும் சௌஹான்களோடு எப்போதும் சண்டை செய்திருந்தனர். சௌஹான் ராஜனுக்குப் புதையல் அகப்பட்ட செய்தியைக் கேட்டபோது, அவர்களுக்குப் பொறாமை உண்டாயிற்று. ஜயசந்த்ரருக்கு ப்ருத்வி விஷயத்தில் பயம் அதிகரித்தது. அதனல் அவரும் கூர்ஜர ராஜனும் ஒன்றுகூடி, ப்ருதிவியோடு சண்டை செய்ய நினைத்து, அதற்காக ஒத்தாசை செய்யும்படி அப்கானியரைக் கேட்டுக்கொண்டார்கள். ஒரு ஹிந்து ராஜன் மற்-

ஞெருரு ஹிந்துராஜனேடு சண்டை செய்ய வேறு தேசத்து விரோதியை ஒத்தாசைக்கு அழைத்தது ஹிந்துஸ்தானத்தின் கெட்ட காலத்துக்கு ஆரம்பம்

அப்கானிய அரசனுன கோர் முஹம்மத் ஹிந்துஸ்தானத்தின்மேல் படையெடுத்து வருகிற செய்தியைக் கேட்ட போது, ப்ருத்வி ராஜன், தங்கள் தேசத்தைக் காப்பாற்றும் பொருட்டு, ரஜபுத்ர வீரரை ஒன்றுய்க் கூட்டினர். இந்த ஸேனையுடனே எதிர்த்துச் சென்று, அவர் அப்கானியரைக் கர்னுலுக்கு ஸமீபத்தில் உள்ள டராவரியுத்தகளத்தில் ஸந்தித்தார்.

கோர் அரசனுகிய முஹம்மத் ஸேனுதிபத்யம் பண்ணுவதில் சிறந்தவர். அவருடைய ஸிபாய்களும் நல்ல ரணசூரர்கள். ஆயினும் அவர்களுடைய சூரத்வமெல்லாம் ரஜபுத்ருடைய சூரத்வத்துக்கு முன்னே பஞ்சாய்ப் பறந்தது. முஹம்மதுக்கு காயம் பட்டது. அவருடைய ஆள்கள் அவரை யுத்தபூமியிலிருந்து ஒரு குதிரைமேல் ஏற்றிக்கொண்டு போயினர். அவருடைய ஸிபாய்களெல்லாம் சிதறியோடினர். இப்படிப் பட்ட வெற்றியை ஹிந்து ஸேனைகள் எப்போதும் பெற்றதில்லை.

அப்கானிய அரசன் அந்தமட்டில் விட்டுவிட வில்லை. பராக்ரமசாலி யாகையால் தோல்வியடைந்த அவமானத்தைப் போக்க விரும்பி, ரஜபுத்ரர்கள் தங்கள் ஊரில் போய்த் தங்கித் தரிப்பதற்குள், கோர் முஹம்மத் லக்ஷத்து முப்பதினுயிரம் ஸிபாய்களைக் கூட்டிக்கொண்டு எல்லையைக் கடந்து வந்தார்.

ராஜபோகங்களை அனுபவித்துக்கொண்டு அரமனையில் ஸுகித்திருந்த ப்ருத்விராஜன், மறுபடியும் யுத்தத்துக்குப் போக விரும்பவில்லை. முஹம்மத் சௌஹன்களுடைய மாகாணத்தில் கொஞ்சங் கொஞ்சமாய் நெருங்கினர். கடைசியில் சித்தூரரசனுன ஸமர்ஸி, அப்கானியர் நெருங்கிவருவதைக் கண்டு திகைத்து, தன்னுடைய ஸ்நேஹிதருக்கு உதவி செய்யும்படி ஒரு ஸேனையைக் கொண்டுபோனர். டில்லியிலுள்ள ரஜபுத்ரர்கள் சித்தூரிலிருந்து வந்த தங்கள் உறவினரைக் கண்டு எவ்வளவு ஸந்தோஷமாக நல்வரவளித்தார்கள்! ஸமர்ஸி ராஜனை டில்லி ஜனங்கள் எவ்வளவு ஆடம்பரத்தோடு எதிர்கொண்டார்கள்!

ப்ருத்வி ராஜனும் ஸமர்ஸியும் இன்னும் அநேக ராஜகுமார ராஜாக்களும் தங்கள் ஸேனையோடு புறப்பட்டுப் போய், சூறையாடியிருந்த முஹம்மதிய ஸேனையை எதிர்த்தனர். ப்ருத்வி வீரசிகாமணிதான். ஸமர்ஸி பதறாமல் சிதறாமல் சண்டை செய்பவரே. மந்த்ராலோசனையிலும் விவேக முள்ளவரே. டில்லி வீரருக்கும் சித்தூர் வீரருக்கும் அவரிடத்தில் அளவற்ற அன்பு உண்டு. என்ன இருந்தும், இப்போது ஒன்றும் பலனில்லாமற் போயிற்று. அவர்கள் முன்னே வெற்றிபெற்ற அதே யுத்த பூமியில், மறுபடியும் அவர்களுக்கும் முஹம்மதியருக்கும் பெரிய யுத்தம் நடந்தது. ரஜபுத்ரர்களுக்கு இப்போது என்ன அவலம் உண்டாயிற்று! யுத்தத்தில் ஸமர்ஸியும் அவருடைய புத்ரனும் உயிரிழந்தனர். சித்தூரிலிருந்து வந்த மஹா வீரர்களில் பதின்மூவாயிரவர் மாண்டனர். அப்கானியர்கள் திரள் திரளாக வந்து ரஜபுத்ர ஸேனையின்மீது நெருக்கினர். முன்னணிச் சேனையில் நின்று சண்டை செய்திருந்த ப்ருத்வி சிறைப்பட்டார். அவருடைய ஸேனையும் சிதறுண்டும் கொலையுண்டும் சிறைப்பட்டது.

ஸமர்ஸியின் மனைவியான ப்ரீதா, தன் புருஷன் உயிரிழந்ததையும், யுத்தவீரர்கள் மாண்டதையும், ஸஹோதரன் சிறைப்பட்டதையும் கேள்வியுற்றுத் திக்குளித்தாள்.

முஹம்மதிய வீரர்கள் அப்பால் டில்லியை முற்றுகை செய்தார்கள். டில்லியைக் காவல் செய்திருந்த கடைசி ராஜகுமாரனையும் கொன்றுவிட்டனர்.

இவ்விதமாய்ச் சௌஹன் ரஜபுத்ரர்கள் அழிவுறுவதற்குக் காரணமா யிருந்தவர், கன்னோசி ராஜனான ஜயசந்த்ரரே. இங்ஙனம் விரோதிகளுடைய விநாசத்தைக் கண்டபிறகு கஹர்வார்களும் நெடுநாள் ஸந்தோஷித்திருக்கவில்லை. முஹம்தியர் கன்னோசியையும் பிடித்துக்கொண்டார்கள். ஹிந்துஸ்தானத்தைக் காட்டிக்கொடுத்த ஜயசந்த்ரரையும் அவர்கள் கங்காஜலத்தில் அமிழ்த்திவிட்டார்கள்.

அழகிய தங்கள் தேசத்திலிருந்து துரத்துண்ட ரஜபுத்ரர்கள் ஸிந்து வனாந்தரத்திலும் மத்ய இந்தியாவிலும் போய்ச் சேர்ந்தனர். பிற்காலத்தில் எத்தனையோ ஸேனைகள் ஒன்றின்பின் ஒன்றாக வந்து எதிர்த்தும், அவர்கள் எக்காலத்-

தும் தோல்வியடைந்ததே யில்லை. அதுமுதல் நடந்த யுத்தங்களில் சித்தூர் ராணுக்களுக்கு உண்டான கீர்த்தி வேறெவருக்கும் உண்டாகவில்லை.

அல்லா-உத்-தீன் சித்தூரைப் பிடித்தது
சித்தூர் ராணி பத்மினியின் கதை

பட்டாணி (Pathan) அரசனுகிய அல்லா-உத்-தீன் சித்தூர்க் கோட்டையைக் கைப்பற்றியதைக் குறித்து ஒரு கதை வழங்கிவருகிறது. அது அக்காலத்தில் ஒரு கவி எழுதியதாகையால், அவ்வளவும் உள்ளபடி நடந்ததன்றி ஒருவாறு கட்டுக்கதையாகவும் இருக்கலாம். யுத்தமே அதிகரித்திருந்த அக்காலத்தில் இப்படிப்பட்ட ஸம்பவங்கள் ஸஹஜமாயிருந்தமையால், அக்கதை மொத்தத்தில் சிறிது உண்மையாகவும் இருக்கலாம். அக்கதையை இங்கே சுருக்கிச் சொல்லுகிறோம்.

அல்லா-உத்-தீன் டில்லியில் அரசாண்டிருந்தபோது, சித்தூரில் பீம் ஸிங்க் என்னும் ரஜபுத்ரராஜன் ஆட்சிசெய்திருந்தார். அவருடைய மனைவி பத்மினி மிக்க அழகுவாய்ந்தவள். அவளுடைய அழகைப்பற்றிக் கதைகளிலும் பாட்டுகளிலும் வர்ணித்திருப்பதை இப்பொழுதும் காணலாம்.

அக்காலத்தில் அல்லா-உத்-தீனைப் போன்ற வெற்றிவீரன் வேறெவரும் இல்லை. அவருடைய துருப்புகள், கொன்றும், எரித்தும், ராஜாக்களிடத்தில் கப்பம் வாங்கியும், இந்தியாவின் தென்கோடி வரையில் சென்றன. அவருடைய தளகர்த்தனுன மலிக் காபுர் தென்கோடியில் பாண்டியராஜ்யத்தையும் ஜயித்தவன். எங்கே யுத்தமானுலும் ஆயிரம் யானைகளும் பதினுயிரம் வீரர்களும் தயாராயிருப்பது வழக்கம். எந்த யுத்தத்திலாவது அவன் தோல்வியடைந்ததும் இல்லை. எவராவது அவனை அச்சுறுத்தியதும் இல்லை. அல்லா-உத்-தீன் இட்டது சட்டம். இந்தியா முழுவதிலும் அந்த ஸுல்தானைச் சட்டைசெய்யாமலிருந்தது ரஜபுத்ர கூட்டம் ஒன்றே.

பத்மினிபோல் அழகில் சிறந்தவள் உலகில் வேறொருத்தியு மில்லை என்கிற ஸங்கதி அல்லா-உத்-தீன் செவியை எட்டி-

யது, அதுவரையில் அவர் ரஜபுத்ரரை ஜயித்துக் கீழ்ப்படுத்தவில்லை: உடனே சித்தூர்மேல் தண்டெடுத்துப் போனார். ரஜபுத்ரர்கள் தங்கள் மலைக்கோட்டையில் புகுந்து கதவைப் பூட்டிக்கொண்டார்கள். கீழே ஒவ்வொரு பக்கத்திலும் பட்டாணிவீரர்களுடைய கொடிகள் தெரிந்தன; பேரிகள் கேட்டன.

நெடுநாள் வரையில் முற்றுகை செய்திருந்தும் ரஜபுத்ர வீரர்களுடைய வீரத்தன்மை தணியாமையைக் கண்டு, ராணியின் உருவத்தை ஒரு நிலைக்கண்ணாடியில் காட்டினால் அதைப் பார்த்து ஸந்தோஷமடைந்து போய்விடுவதாக அல்லா-உத்-தீன் ரஜபுத்ர ராஜனுக்கு ஒரு செய்தி சொல்லியனுப்பினார். இதில் ஒன்றும் தோஷமில்லையே என்று ரஜபுத்ரராஜன் இதற்கு இணங்கினார். அல்லா-உத்-தீன் கையில் ஓர் ஆயுதமும் இல்லாமல் தன்னுடன் ஒருவருமின்றிக் கோட்டையில் ப்ரவேசித்துத் தன் விருப்பத்தின்படி கண்ணாடியில் பத்மினியின் உருவத்தைப் பார்த்தார்.

கூடே ஒருவருமின்றி அல்லா-உத்-தீன் தனியாய் வந்தமையால், ரஜபுத்ரருக்கு அவர் விஷயத்தில் நம்பிக்கை உண்டாயிற்று. அவருக்கு உபசாரமாக வழிவிடப்போன பீம்ஸிங்கும், கூடே ஒருவரு மின்றி, பட்டாணிகளின் படைவீடு வரையில் போனார். இங்ஙனம் நேரிடக்கூடுமென்று எண்ணி, அல்லா-உத்-தீன் சிலரை ஒளித்துவைத்திருந்தார். பீம்ஸிங்க் தனியாய் வருவதைக் கண்டு அவர்கள் அவரைப் பிடித்துக்கொண்டு போயினர். பத்மினியைக் கொடுத்துவிடுவதானால் ராஜாவை விட்டுவிடுவதாக அல்லா-உத்-தீன் ரஜபுத்ரரிடம் உரைத்தார்.

இந்த அகௌரவமான செய்கையைக் கண்டு ரஜபுத்ரர்களுக்குக் கோபம் மூண்டது. அந்த ஸங்கதியை அவர்கள் பத்மினிக்கு அறிவித்து ராஜாவையும் ராணியையும் காப்பாற்றும்படி ஒரு சூழ்ச்சி செய்தார்கள். ராணி, தன் தாதியர் பலருடனே ஸுல்தானுடைய படைவீட்டுக்குத் தான் வருவதாய்ச் சொல்லியனுப்பினாள். ஸுல்தான் அதற்கு ஸம்மதித்தார். அதன்மேல் கோட்டையிலிருந்து எழுநூறு பல்லக்குகள் பட்டாணிப் படைவீட்டுக்குப் போயின. ஒரு பல்லக்கில் ராணி ஏறியிருந்தாள். மற்றவைகளில் சித்தூர்ப் போர்-

வீரர்களில் மிகவும் பராக்ரமசாலிகளான எழுநூற்றுவர் ஆயுதபாணிகளாய் ஒளித்திருந்தனர்.

அல்லா-உத்-தீனுக்கு ரஜபுத்ர ராஜனை விட்டுவிடுகிற எண்ணம் இல்லை. ராணுவையும் ராணியையும் தம் வசத்தில் வைத்திருக்கவே அவர் உத்தேசித்திருந்தார். பீம் ஸிங்கை எதிரில் கொண்டுவந்ததும், ரஜபுத்ரவீரர்கள் பல்லக்கிலிருந்து குதித்துப் போய் ராணுவையும் ராணியையும் சூழ்ந்துகொண்டு, எதிர்ப்பட்ட பட்டாணி வீரர்களை வெட்டிக்கொண்டே கோட்டைக்குப் போயினர்.

மறுபடியும் பட்டாணிகள் மும்முரமாய் முற்றுகை செய்யத் தொடங்கி, ரஜபுத்திரர்களில் பல நூறு பேர்களைக் கொலைசெய்தனர். ஆயினும் ரஜபுத்ரர்கள் இளைக்காமல் சண்டைசெய்யவே, அவர்களை வெல்ல முடியாமல் அல்லா-உத்-தீன் அந்த முறை சும்மா போய்விட்டார்.

சித்தூர் சீரழிந்தது

சித்தூரில் அடைந்த தோல்வி அல்லா-உத்-தீன் மனத்தைவிட்டு அகலவில்லை. பல வருஷங்கள் கழிந்தபிறகு வேறொரு பலத்த ஸேனையைக் கூட்டிக்கொண்டு போய், அவர் சித்தூர்க் கோட்டையை மறுபடியும் முற்றுகைசெய்தார். முன்னே ரஜபுத்ரர்களுடைய சௌர்யத்தைக் கண்டவர்களாகையால், பட்டாணிகள் இந்த முறை அதிக எச்சரிக்கையோடு கார்யங்களை நடத்தினர். குண்டு படாதபடி கிடங்குகள் செய்துகொண்டு கொஞ்சங் கொஞ்சமாய்க் கோட்டைக்கு ஸமீபத்தில் போனார்கள். பட்டாணிகள் எப்போது கோட்டை மதில்களின்மேல் தாக்கிவருவார்களென்று தெரியாமையால், உள்ளிருந்த ரஜபுத்ர வீரர்கள் இளைப்பாறுதற்கு நேரமில்லாமல் இரவும் பகலும் கஷ்டப்பட்டார்கள். ரஜபுத்ரர்கள் பலமுறை பட்டாணிகளைக் கீழே தள்ளிவிட்டார்கள். பட்டாணிகளும் தளராமலும் சலிக்காமலும் மீண்டும் மீண்டும் வந்து தாக்கினார்கள். சிலர் கொலையுண்டும் சிலர் காயப்பட்டும் ரஜபுத்ரர்களுடைய தொகை நாளுக்குநாள் குறைந்துவந்தது. பட்டாணிகளின் தொகை அதிகமாக இருந்ததால், அவர்களுக்கு பலம் குறையவில்லை.

இனி வெல்வோம் என்கிற உறுதி இல்லாமையால், ரஜபுத்ரர்கள் கடைசிமுறையாய் ஒரு சண்டை செய்து சண்டையில் சாவதென்று தீர்மானம்பண்ணிக்கொண்டார்கள். ஒரு மணிநேரம் கோட்டைச் சுவர்களைக் காத்திருந்தனர். இதற்குள் ரஜபுத்திர ஸ்த்ரீகள் ஜோஹர் செய்தார்கள்: அதாவது, கோட்டையின் கீழே ஒரு பெரிய சுரங்கத்தில் கட்டைகளைப் போர் போராய் அடுக்கித் திமூட்டி, அதில் அவர்கள் பதறாமல் சிதறாமல் ஒவ்வொருவராய் விழுந்திறந்தனர். பாவம் இப்படியிறந்தவர்களுடைய தொகை சில ஆயிரம் இருக்கும். பத்மினியும் கடைசியாக விழுந்திறந்தாள். ராணுவின் குமாரன் விரோதிகளுக்குத் தெரியாமல் ஒரு சிறிய கூட்டத்துடன் தப்பிப்போய்விட்டான். தம் ஸந்ததி அடியோடு அற்றுப்போகாது என்று உறுதி செய்துகொண்டபின், ராணு சண்டைக்கு ஆயத்தமானார்: அன்புள்ள வீரர்களை அழைத்தார். அவர்கள் கோட்டைவாயிலைத் திறந்தனர். உடனே பட்டாணிகள் உள்ளே பாய்ந்தனர். ரஜபுத்ரர்கள் அவர்கள்மேல் விழுந்து சண்டைசெய்து எல்லாரும் மாண்டனர்.

சித்தூர் முற்றுகை இவ்விதம் முடிந்தது. ஒரு ரஜபுத்ரனுயினும் அல்லா-உத்-தீன் கையில் உயிரோடு அகப்படவில்லை. வெறுஞ்சுவர்கள் தவிரக் கோட்டையில் அல்லா-உத்-தீனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை.

டில்லி ஸுல்தானுகிய பால்பன் வங்காளத்தில் உண்டான கலஹத்தை வேரறுத்தது.

கோர் முஹம்மத் இறந்த பிறகு டில்லியிலுள்ள பட்டாணி யரசர்கள் ஹிந்துஸ்தானத்தை நெடுங்காலம் ஆட்சி செய்திருந்தனர். அவர்களில் சிலர் நல்லவர்கள்; குடிகளிடத்தில் பக்ஷமுள்ளவர்கள். பெரும்பான்மையோர் இரக்கமில்லாத கொடியர்கள். சிலர் அரமனையில் ஸுகபோகங்களை அநுபவித்துக்கொண்டு துரைத்தனத்தை ஸமஸ்தான உத்யோகஸ்தரிடம் விட்டிருந்தனர். எங்கே பார்த்தாலும் களவும் குற்றமும் பெருத்திருந்தன. பட்டாணி உத்யோகஸ்தருடைய

கொட்டத்தை அடக்குவார் எவரும் இல்லை. அவர்களுடைய கொடுமைகள் எண்ணித்தொலையாதவை; ஏட்டில் அடங்காதவை. பாவம் ஹிந்துக்களுக்கு அது பீடை பிடித்த அரிஷ்டகாலமாயிருந்தது.

சிலகாலம் பால்பன் என்பவர் ஸுல்தானு யிருந்தார். அவர் நல்ல பலாட்டியர். கூட இருப்பவரோடு நகைப்பதாவது பரிஹாஸம் பண்ணுவதாவது கிடையாது: மிகவும் வெடுவெடுப்பானவர். ஆயினும் அவர் நிர்த்தாக்ஷிண்யமாய் நீதி செலுத்தி யிருந்தவர். அங்கங்கே வேவுகாரரை நியமித்து, நடக்கும் ஸங்கதிகளை அப்போதப்போது தெரிந்துகொண்டு, செய்யத்தக்கவைகளைச் செய்துவந்தார்.

பால்பனுடைய பரிவாரத்தில் ஒருவன் ஒருநாள் ஓராளை அடித்துக் கொன்றுவிட்டான். இறந்தவனுடைய மனைவி உடனே ஸுல்தானிடம் சென்று நடந்த செய்தியை முறையிட்டுக்கொண்டாள். அதைக் கேட்டு பால்பன் அதிக கோபமாகி, அவளெதிரில்தானே அந்த ப்ரதானியை அடித்துக் கொல்லும்படி உத்தரவு செய்தார்.

பால்பன் ஸிம்ஹாஸநம் ஏறினபோது, டில்லிராஜ்யத்தில் ரஸ்தாக்கள் ப்ரயாணிகளுக்கு பத்ரமில்லாமல் ஆபத்துக்கேதுவா யிருந்தன. பல்லாயிரம் கள்ளர்கள் அங்கங்கே அடவிகளில் பதுங்கியிருந்து ப்ரயாணிகளின்மேல் புலிபோல் பாய்ந்து வழிபறித்திருந்தனர். ஸுல்தான் ஆனதும், அவர் அடவிகளில் வேட்டையாடி, கள்ளரைப் பிடித்து, அநேகரைக் கொலைசெய்துவிட்டார். முஹம்மதிய அரசில் அதற்குமுன் எப்போது மில்லாத கட்டுக்காவல் ஏற்பட்டது.

வங்காளம் அக்காலத்தில் டில்லிராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு மாகாணம். அங்கே துக்ரல் கான் என்பவன் பட்டவர்த்தனனுய் ஆட்சி நடத்தியிருந்தான். இவன் கலஹம்பண்ணி-தான் வங்காளத்துக்கு ஸ்வயாதிபதியென்று மகுடவர்த்தனனுனன். இவன் துருக்கன், தைர்யசாலி, உதாரகுணமுள்ளவன்: சண்டை செய்வதில் நல்ல ஸாமர்த்தியமுள்ளவன். அநேக போர்வீரர் அவனோடு சேர்ந்திருந்தனர்.

இந்த துக்ரல் கான், ஸுல்தானுடைய அடிமைகளில் அவருக்கு ப்ரியமானவர்களில் ஒருவன். இவன் இங்ஙனம் கலஹம் பண்ணியது ஸுல்தானுடைய பலத்துக்குக் குறைவாக

இருந்தது. கோபமும் துக்கமும் உண்டாகவே ஸுல்தா-னுக்கு ஆஹாரத்தின்மேலும் நினைவு போகவில்லை. சிலநாளில் அவன் தன்பேரால் நாணயங்கள் அடிக்கிற செய்தியைக் கேட்டு, ஸுல்தானுக்குப் பின்னும் கோபம் பொங்கியெழுந்தது. உடனே அமீர்கான் என்னும் தளகர்த்தனை ஒரு ஸேனை-யோடு வங்காளத்துக்கு அனுப்பினார்.

துக்ரல் அந்த ஸேனையை எதிர்த்துத் தோற்கடித்தான். ஸுல்தானுடைய ஸேனையில் அநேகர் எதிரியின் ஸேனையில் போய்ச் சேர்ந்துவிட்டனர். இங்ஙனம் அந்த ஸேனை தோல்வி-யடைந்து த்ரோஹம்பண்ணின செய்தியைச் செவியுற்றபோது ஸுல்தானுக்கு நாணமுங் கோபமும் அதிகரித்தன. அமீர்-கான் திரும்பிவந்தபோது அவனை அயோத்தியின் மதில்வாயி-லில் தூக்கிலே போடும்படி உத்தரவு செய்தார்.

அடுத்த வருஷம் ஸுல்தான் இன்னொரு ஸேனையை வங்-காளத்துக்கு அனுப்பினார். அதுவும் தோல்வியடைந்தது. எதிரி பணங்கொடுத்து அநேகம் ஸிப்பாய்களை வசப்படுத்திக்-கொண்டான். இதைக் கேட்டபோது ஸுல்தானுக்கு அடங்-காத கோபம் உண்டாயிற்று. அப்போது கூதிர்காலம்: சோனு-மாரி பெய்துகொண்டிருந்தது. வயதுசென்றவராக இருந்தும், ஸுல்தான் மழையைப் பொருட்டுசெய்யாமல், இரண்டுலக்ஷம் பேர் உள்ள பெரிய ஸேனையைக் கூட்டிக்கொண்டு உடனே புறப்பட்டார். அவசியமான இடங்களில் தோணிகளில் ஏறி-யும், சேறுசிரான மற்ற இடங்களில் கால்நடையாக நடந்தும், அந்த மழையிலே வங்காளத்துக்குப் போனார்.

ஸுல்தான் வருகிற ஸங்கதி தெரிந்தவளவில், துக்ரல்கா-னும் அவன் ஸேனையும் அச்சமடைந்து, ரொக்கரோஜனையைக் கையிலெடுத்துக்கொண்டு, யானைகளோடு ஓடிப்போயினர். ஸுல்தான் அவர்களை விடாமல் துரத்திக்கொண்டு போனார். துக்ரல் செத்தாலொழிய டில்லிக்குத் திரும்புவதில்லை, டில்லி-யைப்பற்றி நினைப்பதுமில்லையென்று ஸுல்தான் ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொண்டார். ஸுல்தான் ஸேனை ஸமீபத்தில்போகும்-போது, ஸுல்தான் அவ்வளவு ஸமீபத்தில் வந்துவிட்ட ஸங்-கதி எதிரிகளுக்குத் தெரியாது. அதனால் அவர்கள் தங்கள் படைவீட்டில் நிர்ப்பயமாயிருந்தனர். சிலர் மதுபானம் பண்-ணிக்கொண்டும் சிலர் பாட்டுகள் பாடிக்கொண்டும் இருந்தனர்.

சிலர் உடுப்புகளை வெளுத்திருந்தனர். யானைகள் மாக்கிளைகளை மேய்ந்திருந்தன. குதிரைகளும் ஆடுமாடுகளும் அடுத்த மைதானத்தில் மேய்ந்திருந்தன. அந்த ஸமயத்தில் ஸுல்தானுடைய ஸேனையிலிருந்து நாற்பது குதிரைவீரர்கள் திடும் ப்ரவேசமாய் எதிரியின் படைவீட்டை நெருங்கினர்.

அவர்கள் கத்திகளை உருவிக்கொண்டு துக்ரல்! துக்ரல்! என்று கூவிக்கொண்டு படைவீட்டில் பாய்ந்தனர். ஸுல்தானுடைய ஸேனை முழுவதும் வந்துவிட்டதாக பயந்து, துக்ரல் தன் கூடாரத்திலிருந்து அப்படியே ஓடிப்போனான். போகும் போது அவன் விலாவில் ஓரம்பு போய்ப் பாய்ந்தது. அவ்வளவிலே அவன் கீழே விழுந்திறந்தான். ஆள்கள் அவன் தலையை வெட்டி ஸுல்தானிடம் கொண்டுபோயினர். அநேக வீரரும் துக்ரலின் குமாரரும் சிறைபிடிக்கப்பட்டனர்.

அந்த நாற்பது வீரர்களுக்கும் ஸுல்தான் கௌரவ உடுப்புகள் அளித்தார். அப்பால் அவர் லக்நாட்டி என்கிற பட்டணத்துக்குப் போனார். அங்கே நடந்த செய்தி மிகவும் பயங்கரமானது. பழி தீர்த்துக்கொள்ளும்படி ஸுல்தான் துக்ரலின் குமாரரையும் துக்ரலின் ஊழியக்காரர்களையும் ஒருவனையும் விடாமல் எல்லாரையும் கொலைசெய்து, கடைத்தெருவில் எல்லாரும் பார்க்கும்படி அவர்கள் தலையை வரிசையாகக் கட்டித் தொங்கவிடும்படி செய்தார். தண்டனை இரண்டு மூன்று நாள்கள் வரையில் நடந்திருந்தது. இந்த கோரங்களைக் கண்டவர்கள் குடல் நடுங்கினார்கள். ஹிந்துஸ்தானத்தில் இவ்விதமான தண்டனைகள் எந்தக்காலத்திலும் நடந்ததாக எங்கும் ப்ரஸ்தாப மில்லை.

அப்பால் ஸுல்தான் தம்முடைய இளைய குமாரனிடத்தில் ஒரு சந்த்ரவட்டக் குடையைக் கொடுத்து அவனை வங்காளத்துக்குத் தலைவனாக நியமித்தார். அப்பால் வங்காளத்திலிருந்து திரும்பும்போது, அந்தக் குமாரனைப் பார்த்து, அவர் "மாமுத்! பார்த்தாயல்லவா?" என்றார். அவ்விதம் கேட்டபோது ராஜகுமாரன் பதில் சொல்லாமல் ஸ்தம்பித்துநின்றான். மறுபடியும் ஸுல்தான் "மாமுத்! பார்த்தாயல்லவா?" என்றார். திரும்பவும் மூன்று முறை அங்ஙனம் கேட்டபோது, குமாரன் பதில் சொல்லாமல் நிற்பதைக் கண்டு, "கடைத்தெருவில் நான் செய்த தண்டனைகளைப் பார்த்தாயல்லவா?" என்று கேட்-

டார். கேட்ட கேள்வி விளங்கியதற்கு அடையாளமாகக் குமாரன் தலையசைத்தான். ஸுல்தான் "எந்தத் தலைவனு-வது, என் பிள்ளையேயாயினும் ஸரி, எனக்கு விரோதமாய்க் கத்தியை ஓங்கினால், அவனுக்கு இந்த கதியே கிடைக்கும்; பத்ரம்! அவனுடைய மனைவி மக்களுக்குங் கூட அதே கதி-தான்" என்றார்.

இங்ஙனம் எச்சரிக்கை செய்தபிறகு, இரும்புபோன்ற இந்த ஸுல்தான் அந்த இளைய குமாரனுக்குச் சில புத்தி போதனைகளைச் சொல்லினார். அப்பால் அவனைத் தழுவிக்-கொண்டு கண்ணீர் சொரிந்து அவனை வாழ்த்திவிட்டு டில்லிக்-குத் திரும்பினார்.

முதல் பஹமனீயரசன் முடிதரித்தது

முஹமத் துக்ளக் யுவராஜனாக இருந்தபோது டில்லியில் கங்கூ என்று பெயருள்ள ஒரு பிராமணன் இருந்தான். அவன் ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் நிபுணன். அவனிடத்தில் ஹஸன் என்ற பெயருள்ள ஓர் அப்கானியன் யோக்யமாய் ஊழியம் செய்திருந்தான். அதினிமித்தம் பயிரிட்டுக்கொள்-ளும்படி அவனிடத்தில் அந்த பிராமணன் ஒரு ஜதை மாடும் ஒரு துண்டு நிலமும் கொடுத்துவைத்தான்.

ஒரு நாள் ஹஸன் அந்த நிலத்தில் உழுதுகொண்டிருக்-கும்போது, காறு நகராதபடி கீழே ஏதோ முட்டிக்கொண்டு தடை செய்தது. கிளறிப் பார்க்கையில், ஒரு வளையம் தென்-பட்டது. செவ்வையாய்த் தோண்டிப் பார்க்கையில், அந்த வளையம் ஒரு செம்புத்தவலையில் தொடுப்புண்டிருந்தது. தவ-லையை யெடுத்துத் திறந்து பார்த்தபோது, மோகராக்கள் நிறைய இருந்தன. நிலம் தனக்கு ஸொந்த மல்லாமையால், ஹஸன் தானெடுத்த புதையலைக் கொண்டுபோய் பிராமணனி-டத்தில் கொடுத்துவிட்டான்.

பிராமணன் இந்த ஸங்கதியை யுவராஜனிடத்தில் சொல்-லிக் கொண்டான். யுவராஜன் அதை அரசனுக்குத் தெரிவித்-தான். அதைக்கேட்டு அரசன் அதிக ஸந்தோஷ மடைந்து, ஹஸனை அழைத்து, அவனை நூறு குதிரைவீரருக்குத் தலை-

வனாக நியமித்தான். அக்காலத்தில் ராஜஸேவையில் தலையெடுப்பதற்கு அதுதான் முதல்படி.

ஹஸனுக்குக் கொஞ்ச காலத்தில் ராஜயோகம் நடக்கப் போகிறதென்று பிராமணன் ஜாதகபலன் சொல்லியிருந்தான். ஹஸன் அதைக் கேட்டுத் தான் ராஜாவானால் கங்கூ என்கிற பெயரை வைத்துக்கொண்டு அந்த பிராமணனை மந்திரியாக்கிக்கொள்வதாய் வாக்கிட்டிருந்தான். முஹம்மத் துக்ளக் ராஜாவானபோது தக்ஷிணதேசத்தில் ஹஸனுக்கு ஒரு ஜாகீர் கிடைத்தது. ஹஸன் போய் அந்த ஜாகிரை ஒப்புக்கொண்டு காலங் கழித்திருந்தான்.

முஹம்மத் துக்ளக் நல்லவனல்லன்; நம்பிக்கை வைக்கத் தக்கவனு மல்லன்; மிகவும் கொடியவன். அவனை வெறியனென்றே ஜனங்கள் கொண்டிருந்தார்கள். ஸமஸ்தானத்துக்குப் போகிற ஜனங்கள், தங்களுயிர் தங்களுடைய தன்றென்றே எண்ணிக்கொண்டு போவர். சில ஸமயங்களில் அவன் நிஷ்காரணமாய் ஜனங்களுக்கு ஸிரஸாஜ்ஞை விதிப்பான். அதனால் அவனுடைய ஆட்சியில் அநேக கலஹங்கள் உண்டாயின.

கூர்ஜாத்திலிருந்த அப்கானிய ப்ரபுக்கள் அவனுக்கு விரோதமாய்க் கலஹம் பண்ணியிருந்தார்கள். அவர்களை தண்டிக்கும்படி அவன் டில்லியிலிருந்து புறப்பட்டுப் போனான். அவன் வருகிற செய்தி தெரிந்து அவர்கள் தக்ஷிணத்துக்கு ஓடிப்போயினர். தக்ஷிணம் அக்காலத்தில் பட்டாணி ராஜ்யத்தில் சேர்ந்திருந்தது. அப்படியிருந்தும், அங்கிருந்த ப்ரபுக்கள் கூர்ஜரத்திலிருந்து வந்தவர்களை அபயங்கொடுத்துக் காப்பாற்றினார்கள்.

இந்த ஸங்கதி செவியுற்றபோது ஸுல்தானுக்குக் கோபம் பிறந்தது. தக்ஷிணத்திலிருந்த ப்ரபுக்கள் எல்லாரையும் கூர்ஜாத்துக்கு அனுப்பிவிடும்படி துக்ளக் தௌலதாபாத்திலிருந்த ஷாராளிக்கு உத்தரவனுப்பினான். அந்த ப்ரபுக்கள் தாங்கள் கலஹம் பண்ணினதற்காக துக்ளக் தங்கள் தலையை வாங்கிவிடுவானே யென்று அஞ்சியிருந்தார்கள். அப்போது தக்ஷிணத்திலிருந்த ஹிந்து ராஜாக்கள், பட்டாணி ஸுல்தானோடு சண்டை செய்வதற்கு அதுதான் நல்ல தருணமென்று ஸந்தோஷமாய்க் கலஹக்காரர்களோடு கூடிக்-

கொண்டனர். அந்தக் கலஹம் க்ஷண நேரத்தில் தக்ஷிண முழுவதும் பற்றிக்கொண்டது. தௌலதாபாத் சீக்கிரத்தில் கலஹக்காரர் கையில் அகப்பட்டது. அவர்கள் தங்களில் ஒருவனைத் தலைவனாக நியமித்துக்கொண்டனர். கலஹத்தில் உதவியாயிருந்த எல்லாருக்கும் கௌரவங்கள் கிடைத்தன. ஹஸனுக்கு ஜாப்பர்கான் (Zaffurkhan) என்கிற பட்டம் கிடைத்தது.

துக்ளக் கலஹக்காரர் மீது தண்டெடுத்து வந்து அவர்களை வெல்ல முடியாமல் திரும்பிவிட்டான். இந்த யுத்தத்தில் ஜாப்பர்கானுக்கு வெற்றி உண்டாயிற்று. ப்ரபுக்கள் அவனை அரசனாக்கி அவனுக்கு முடிசூட்டினர். அவனுடைய அரசில் அடித்த காசுகளில் "அல்லா-உத்-தீன் ஹஸன்" என்கிற பட்டம் முத்ரித்திருந்தது.

அவன் குல்பர்க்கா என்கிற பட்டணத்தை ராஜதானியாக்கிக்கொண்டு அதிக யூகத்தோடு அரசாட்சி செய்திருந்தான். வாக்கிட்டிருந்தபடியே பிராமணனை மந்திரியாக வைத்துக்கொண்டான். தன் பட்டங்களோடு கங்கூ என்கிற பெயரையும் சேர்த்துக்கொண்டான். அவனுடைய பரம்பரைக்கு பஹமனி பரம்பரை என்று பெயர் வழங்கலாயிற்று. அரசனுடைய முத்ரை மோதிரத்தில் "கங்கூ பஹமனீ" என்கிற வார்த்தைகள் பொறித்திருந்தன. அவனுக் கப்புறம் பஹமனீ ராஜ்யம் நூற்றைம்பது வருஷ காலம் நீடித்திருந்தது. அந்த ராஜ்யத் தரசரெல்லாம் அந்த முத்ரைமோதிரத்தையே உபயோகித்துவந்தனர். பஹமனீ யென்பது "ப்ராஹ்மணன்" என்கிற வார்த்தையின் சிதைவு.

அவன் பதினொரு வருஷகாலம் ஆட்சிசெய்திருந்து கடைசியாய்க் காய்ச்சல் கண்டு இறந்துபோனான். த்ரவ்ய பலமில்லாமலும் ஸேனாபலமில்லாமலும் அரசனானது எங்ஙனமென்று அவனை எவரோ ஒருமுறை கேட்டபோது "எனக்கு ஸ்நேஹிதரிடம் விசுவாஸம் உண்டு; விரோதிகளிடம் உதாரத்வம் உண்டு; எல்லாரிடத்திலுமே தயாளமும் மரியாதையும் உண்டு. இதுதான் காரணம்" என்றான்.

பஹமனீ ராஜ்யம் இந்தியாவில் மிகவும் பலத்திருந்த ராஜ்யங்களில் ஒன்றாயிற்று. பஹமனீ அரசர்களில் சிலரிடம் மூவாயிரம் யானைகள் இருந்தன. கூர்ஜரம் உள்பட இந்த

ராஜ்யம் இந்துநதி தீரத்தில் டைபுல் (Daibul) என்கிற துறை முகப்பட்டினம் வரையில் பரவியிருந்தது: கிழக்கில் வாரங்கல் (ஓாங்கல்) அரசர் பஹமனீ அரசர்களுக்குக் கப்பங்கட்டியிருந்தனர்.

பிரோஜ்

ப்ரஜைகளின் பிதா

டில்லி ஸுல்தான்கள் எல்லாருமே நல்லவரல்லர். அநேகர் அநீதர்: அநேகர் மிகவும் கொடியவர்கள். பால்பன் நிர்த்தாக்ஷிண்யமாய் நீதிமுறை தவருமல் ஹிந்துஸ்தானத்தை அரசாண்டிருந்ததைப்பற்றி முன்னே வாசித்திருக்கிறோம். இப்பொழுது ஒரு நல்ல பட்டாணி ஸுல்தானைப்பற்றி வாசிப்போம்.

பால்பன் அரசாட்சி முடிந்து ஸுமார் நூறு வருஷகாலம் ஆனபிறகு, துக்ளக் பரம்பரையில் மஹா ஸாதுவான பிரோஜ ஸிம்ஹாஸநம் ஏறினர். அவருடைய தாய் ரஜபுத்ர ராஜகுமாரி. ஆகவே பிரோஜைப் பாதி ஹிந்து என்னவேண்டும். அவர் சாந்தமும் இரக்கமும் உள்ளவர். போர்புரிவ தென்றால் அவருக்கு அருவருப்பு: ரத்தம் சிந்துவதென்றால் நேத்ர உபத்ரவம்.

அவருடைய மந்த்ரி மக்புல் கான் (Makbul Khan) என்பவர் ஹிந்துமதஸ்தர்: மஹோத்தமர். மதியூகியாகிய இந்த மந்த்ரியின் புத்தியைக் கேட்டு, ஸுல்தான் குடிகள் இறுத்துவந்த பளுவான வரிகளைத் தணித்தார். அதனால் குடிகள் க்ஷேமப்பட்டனர். பிரோஜின் ஆட்சியில் ஒவ்வொருவர் வீட்டிலும் தான்யமும் தனமும் நிரம்பியிருக்கும். ஆபரணங்கள் அணியாத ஸ்த்ரீகள் இல்லை.

டில்லிராஜ்யம் செல்வப்பெருக் கடைந்தது. குடியுயரக் கோனுயரும் என்பது நிச்சயம். ஸுல்தான் அழகான அநேக பட்டணங்களைக் கட்டத் தொடங்கினர். அவர் ஸ்தாபித்த நகரங்களில் பட்ஹாபாத் (Fathabad) என்பது ஒன்று. ஜான்பூர் என்பது வேறொன்று. இன்னும் சில இன்றளவும் உண்டு. இத்தப் புதிய பட்டணங்களுக்கு ஜலம் சேகரிக்கும்

படி அவர் யமுனா ஸட்லெஜ் நதிகளிலிருந்து பல கால்வாய்கள் வெட்டுவித்தார். இவைகளில் ஒன்றான யமுனைக்கால்வாயே தற்காலத்தில் டில்லி பட்டணத்துக்கு ஜலதாரம். அங்கங்கே அவர் பழைய கட்டடங்களைப் புதுக்கினார்: புதிய பாலங்களையும் மசூதிகளையும் கல்லூரிகளையும் கட்டினார்.

ஏழைகளுக்கும் வேலை செய்து ஜீவிக்கமுடியாத வயோதிகர்களுக்கும் அவர் ப்ரதிவருஷமும் அதிக பணம் உதவி வந்தார். நோயாளிகளுக்கு உதவியாகும்படி தர்மவைத்ய சாலைகளும் கட்டினார். தம்முடைய ப்ரஜைகளுக்கு அவரைப் பிதாவென்றே சொல்லலாம்.

உத்யோகஸ்தன் எவனாகிலும் வயது சென்றவனாகி வேலைசெய்ய முடியாவிட்டால் அந்த உத்யோகத்தில் அவன் பிள்ளையை வைத்துக்கொள்வார். அவருடைய ஆட்சியில் குடிகளுக்கு ஏக்கம் கவலை ஒன்றுமில்லை. யாதொரு கலஹமும் குழப்பமு மின்றி எல்லாரும் க்ஷேமமாக வாழ்ந்திருந்தார்கள்.

தயமூர் லங்க்

தார்த்தாரி தேசத்தில் **செங்கிஸ்கான்** என்றொரு பேரரசன் இருந்தான். அவன் கால்வழியில் ப்ரஸித்தமானவன் **தயமூர் லங்க்** என்பவன். ஸமர்க்கண்ட் என்கிற பட்டணம் அவனுக்கு ராஜதானி. முஹம்மதிய ரல்லாதவர்கள்மீது படையெடுத்துப் போகவேண்டுமென்று அவன் மனதில் ஒரு விருப்பம் உண்டு. சீனாவுக்குப் போவதா ஹிந்துஸ்தானத்துக்குப் போவதா என்பது ஒன்றும் அவனுக்குத் தோன்றவில்லை. சண்டைக்குப் போவதா இல்லையா என்பது ஸ்திரப்படாமல் ஒருநாள் அரண்மனையில் உட்கார்ந்திருந்தவன், குரானை யெடுத்துத் தட்டித் திறந்தான். உடனே "ஓ பரமாசார்யனே, இஸ்லாமிய மதத்தை நம்பாதவர்களோடு யுத்தம் பண்ணுக: அவர்களைக் கொடுமையாய் நடத்துக" என்கிற ஸ்ருதிவாக்யம் அவன் கண்ணெதிர்ப் பட்டது. அதன்மேல் தயமூர் லங்க் ஹிந்துஸ்தானத்தின்மீது சண்டைக்குப் போகும்படி ஒரு பெரிய ஸேனையைச் சேகரிக்கத் தொடங்கினான். முற்காலத்தில் ஹிந்துஸ்தானத்துக்கு எத்தனை விரோதிகள்!

அவன் உயரமானவன்: காத்ரமான சரீரக்கட்டுள்ளவன். அவனுக்குத் தலை பெரியது; குரல் கெட்டியானது: தாடி நீளமானது. கால்களில் ஒன்று முடம்: கைகளில் ஒன்று ஊனம்.

பிள்ளைகளிடத்திலும் ப்ரதானிகளிடத்திலும் அவன் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். பிள்ளைகளில் காபுல் கவர்னரான பிர் மஹம்மத் என்பவன், சேனைகளைச் சேகரிப்பதில் உதவியாயிருந்தான். சண்டைக்கு உடன்போக விரும்பிய மற்றொருவன் "இந்தியாவில் பஞ்சலோஹங்களும் நவரத்னங்களும் அடங்கிய ஆகரங்கள் அநேகம் உண்டு. அது பசுமையாய் ரம்யமான தேசம். அங்கே கரும்பு விசேஷம். வஸ்த்ரம்செய்வதற்குரிய செடிகள் அங்கே உண்டு" என்று இந்தியாவின் வளங்களை விரித்துரைத்தான்.

மற்றப் பிள்ளைகள் அபாயஹேதுக்களை எடுத்துப்பேசினர்:—அந்த தேசத்துக்கு நான்கு அரண்கள் உண்டு. முதலாவது, ஐந்து பெரிய நதிகள் இருக்கின்றன: தோணிகளும் பாலங்களு மில்லாமல் அவைகளைக் கடப்பது முடியாது. இரண்டாவது, கிளையோடு கிளை பின்னிப் பிணைந்திருக்கிற மரங்களடர்ந்த அடவிகளும் காடுகளும் இருக்கின்றன: அவைகளில் நடந்து போவது கஷ்டம். மூன்றாவது, அங்கே ரணவீரர்கள் இருக்கிறார்கள்: ராஜாக்களும் ராஜகுமாரர்களும் காடுகளில் கோட்டைகள் கட்டிக்கொண்டு வனவிலங்குகள் போல் வஸிக்கின்றனர். நான்காவது, அங்கே கவசம் தரித்து யுத்தம் பண்ணுகிற யானைகள் உண்டு: அவை ஸேனையின் முன்னணியாகச் செல்பவை. அவை, ஒரு குதிரையை அதன் மேல் ஏறியிருப்பவனோடு தும்பிக்கையால் சுற்றிப்பிடித்து அந்தரத்தில் கிளப்பிச் சுழற்றித் தரையில் மோதியடிக்கப் பயிற்சி பெற்றிருக்கின்றன.

இதனால் தார்த்தாரியர்களுக்கு அக்காலத்தில் இந்தியாவைப்பற்றி அதிகம் தெரியா தென்பது நிச்சயம்.

மற்ற ப்ரதானிகள், "ஸுல்தான் மஹமூத் ஹிந்துஸ்தானத்தை ஜயித்தானே. நாம் ஏன் ஜயிக்கக்கூடாது? அமீரோடு போவதற்கு நாலாயிரம் தார்த்தாரியக் குதிரைவீரர்கள் இருக்கிறார்களே. அவர்களோடு போனால் ஜயம் கிடைக்கும்" என்றனர்.

தயமூர்லங்க் இந்தியாவின்மேல் படையெடுப்ப தென்று மனவுறுதி செய்துகொண்ட நாள், இந்தியாவுக்கு க்ரஹசாரம் போதாத நாளே. உத்தமபுருஷனுன பிரோஜ்ஷாஹ என்னும் ஸுல்தான் ப்ரஜைகளைத் தனிகராக்கி க்ஷேமப்படுத்தினர். யுத்தம் கொள்ளை என்பதையெல்லாம் மறந்து, ஆபத்து அபாயமென்கிற அச்சமே யில்லாமல், ஜனங்கள் ஸந்தோஷத்தோடு விதை விதைப்பதும் அறுப்பறுப்பதுமாய்க் காலங்கழித்திருந்தனர்.

நாகரிகம் நிரம்பாத கொடிய குதிரைவீரர்களைக் கூட்டிக்கொண்டு தயமூர் திடும்ப்ரவேசமாய் வந்து ஹிந்துஸ்தானத்தின்மேல் விழுந்தான். தங்கள் மதஸ்த ரல்லாதவரைக் கொல்வதே அந்தக் குதிரைவீரர்களுடைய நோக்கம். நகரம் நகரமாய்க் கொள்ளையடித்தும், க்ராமங்களை எரித்தும், ஜனங்களை ஆயிரமாயிரமாக விலங்கிட்டுச் சிறைப்படுத்தியும், அவர்கள் உள்ளே போயினர். அவர்களுடைய ப்ரதாபம் அவர்களுக்கு முன்னே சென்றது. அவர்களுடைய வரவைக் கேட்டு ஜனங்கள் பட்டணங்களையும் க்ராமங்களையும் விட்டு ஓட்டம் பிடித்தார்கள். தார்த்தாரி ஸேனையானது காலியாயிருந்த பட்டணங்களையும் க்ராமங்களையும் கடந்து டில்லிக்கு வெளியிலுள்ள (Panipat) குருக்ஷேத்ர பூமியை அடைந்தது. புறப்பட்டதுமுதல் அதுவரையில் அவர்களை ஒருவரும் எதிர்க்கவில்லை. இங்கே அவர்களோடு சண்டைசெய்ய டில்லியில் ஒரு ஸேனை தயாராக இருந்தது.

துக்ளக் பரம்பரையில் கடைசி ஸுல்தானுன மாமூதின் ஸேனை எதிர்த்து நின்றது. ஸேனையின் முன்னணியில் நூற்றுக் கதிகமான யானைகள் கவசமணிந்து நின்றன. விஷம் பூசிய வாள்கள் அவைகளின் தந்தங்களில் தொடுத்திருந்தன. விரோதியின் குதிரைகளை மிரட்டும்படி இந்திய ஸிபாய்கள் ஆகாச பாணங்களும் வைத்திருந்தனர்.

இந்திய ஸேனையைக் கண்டவளவில் தயமூருக்கு அச்சம் உண்டாயிற்று. சிறைபிடித்தவர்களுக்குக் காவலாகச் சில வீரர்களை விட்டுவைத்திருந்ததனுல் சண்டைசெய்தலான ஸேனையின் பலம் குறைவு படுவதைக் கண்டு, ஸுமார் லக்ஷம்போான சிறைபாளிகளை யெல்லாம் அந்தப் பாவி கொலைசெய்து விடும்படி கட்டளையிட்டான். திடீரென்று பேரிகைகள் கொட்-



சக்ரவர்த்தியின் சேனைத்தலைவர் விரோதிகளுடைய
தலைகளைக் கொண்டுவருவது.

டின. சண்டை ஆரம்பமாயிற்று. எதிரிகள் ஈட்டியால் குத்தியும் அம்புகளை எய்தும் யானைகளைக் கலக்கி யானைப்பாகர்களைக் கொல்லலுற்றனர். காயப்பட்ட யானைகள் கலக்கமுற்றுத்

திரும்பின. அவ்வளவில் இந்திய ஸிபாய்கள் சிதறியோடினர். மாமூத் தன்னுடைய யானையின்மீது ஏறிக்கொண்டு டில்லிக்கு ஓடினார். அந்த யானையானது வழியிலுள்ள ஸிபாய்களை மிதித்துத் துவைத்துக்கொண்டு போயிற்று. இந்திய ஸேனையைப் பரிஷ்காரமாய்த் தோற்கடித்துத் தயமூர் டில்லியில் ப்ரவேசித்தான்.

டில்லிமதில்களுக்குள் தார்த்தாரியர் முடிவாகச் செய்த கார்யம் மிகவும் பயங்கரமானது. ப்ரஜைகளை ஒன்றும் செய்வதில்லையென்று தயமூர் வாக்கிட்டிருந்தான். அவனுடைய வீரர்கள் பட்டணத்தில் கொள்ளையடிக்கும்போது அவர்களுக்கும் ஜனங்களுக்கும் சண்டை நேரிட்டது. அந்தக் கொடியர்கள் உயிரோடு ஒருவரையும் அங்கே விடாமல் அநேகரைக் கொன்றார்கள். மற்றவர்களைச் சிறைப்படுத்தினார்கள். அவர்கள் வந்தகார்யம் முடிவுபெற்றது. தயமூர் வந்தவழியிலும் போனவழியிலும் நெருப்பும் புகையும் பிணநாற்றமும் தவிர வேறொன்று மில்லாதபடி பட்டணங்களையும் க்ராமங்களையும் பாழாக்கிவிட்டு ஆப்கானிஸ்தானத்து மலைகளுக்குத் திரும்பினான். ஹிந்து ஜனங்கள் அவனை யமதூதனென்று வழங்கலாயினர்.

புராதன இந்தியாவின் வ்யாபாரமும் வ்யாபாரிகளும்

மஹா ராஜ ராஜ சோழருடைய வரலாற்றில், சோழராஜ்யத்து வர்த்தகர்களுக்கும் யூரபிய வர்த்தகர்களுக்கும் வ்யாபாரம் நடந்திருந்த செய்தியை வாசித்திருக்கிறோம். இந்தியாவில் விளையும் வாஸனைப் பண்டங்கள் மற்ற தேசங்களில் விளைவதில்லை. அவை அந்த தேசத்தார்களுக்கு மிகவும் அருமையானவை. இந்தியாவிலிருந்து யூரபிய வர்த்தகர்கள் சுக்கு மிளகு ஏலக்காய் ஜாதிக்காய் லவங்கம் வால்மிளகு லவங்கப்பட்டை முதலான வாஸனைப் பண்டங்களைத் தங்கள் தேசங்களுக்கு வாங்கிக்கொண்டு போவது வழக்கம். முத்து, வைரம் சரிகை துணுஸுகள், இந்திய தொழிலாளிகள் செய்யும் விசித்ரமான பொருள்கள், என்ற இவை லோகப்ரஸித்த மானவை.

இக்காலத்தில் பலதேசத்துக் கப்பல்களும் பலவித ஸாமான்களை ஏற்றிக்கொண்டு ஸமுத்ரத்தில் குறுக்கும் நெடுக்குமாக ப்ரயாணஞ்செய்கின்றன. ரஜபுத்ரர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டும் பட்டாணியரசர்கள் ஹிந்துஸ்தானத்தை வெல்லும்படி ஆயத்தம் பண்ணிக்கொண்டும் இருந்தபோது, பலதேசத்தவர்களும் இங்ஙனம் ப்ரயாணஞ் செய்யவில்லை. அரேபியர்கள் மாத்ரமே மலையாளத் துறைமுகங்களிலிருந்து தங்கள் கப்பல்களில் பலவித சரக்குகளை ஏற்றிக்கொண்டுபோய் யூரபில் விற்பனை செய்திருந்தனர்.

அரேபியர்கள் யுத்தவீரர்களாகி, ஊர்களை எரித்தும், ஜனங்களை வெட்டியும், தங்கள் முஹம்மதிய மதத்தை தூரதேசங்களில் பரவச்செய்த ஸங்கதியைப் படித்திருக்கிறோம். இதுவல்லாமல் அவர்கள் தைர்யமுள்ள மாலுமிகளாகி வர்த்தகமும் செய்திருந்தனர். இக்காலத்தில் நாம் காண்கிற கப்பல்களைப்போல் அவர்களுடைய கப்பல்கள் அவ்வளவு பெரியவையல்ல. அக்காலத்தில் உலகத்தில் இப்பொழுதுள்ள அவ்வளவு ஜனங்களில்லாமையால், வர்த்தகம் குறைவாகவே நடந்தது. அதிக ஸாமான்கள் அக்காலத்தில் அவசியமில்லை. அரேபியர்களுடைய தோணிகள் அரேபியாவில் ஜெட்டா ஏடென் மஸ்கட் என்கிற துறைமுகங்களிலிருந்து வருவதும், இந்தியாவில் கள்ளிக்கோட்டை டைபுல் என்கிற துறைமுகங்களிலிருந்துபோவதுமாக இருந்தன. சில கப்பல்கள் செங்கடல் மார்க்கமாக எகிப்தின் ரேவுதுறைகளுக்குப் போய் ஸாமான்களை இறக்குவதுண்டு. அங்கிருந்து அந்த ஸாமான்கள் கெயிரோ பட்டணத்துக்குப் போகும். அங்கிருந்து அவை அலெக்ஸாண்ட்ரியாவுக்குப் போகும். அங்கிருந்து அவைகளை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் மத்யதரைக் கடலைக் கடந்து யூரபுக்குப் போகும்.

இந்தியாவில் ஸ்வல்ப விலைக்கு வாங்குகிற பண்டங்கள் யூரபில் அதிக விலைக்கு விற்பனையாகும். அதனால் முற்காலங்களில் அரேபிய வர்த்தகர்கள் அதிக தனவந்தராயினர். இந்த வர்த்தகம் அவர்களுக்குப் பெரும் பேறாக இருந்தது. இப்படி யிருக்கையில் வேறொரு ஜாதியார் இந்தியாவின் பண்டங்-

களை முன்போல் அவ்வளவு செலவும் கஷ்டமு மில்லாமல் யூரபுக்குக் கொண்டுபோகும் வழியைக் கண்டுபிடித்தபோது, அரேபியர்களுக்கு எவ்வளவு கோபம் உண்டாயிருக்கும்! இவ்வழியைக் கண்டுபிடித்தவர்கள் போர்ச்சுகிசியர்.

1497-ம் வருஷத்தில், குட்ஹோப் முனையைச் சுற்றிக்கொண்டுபோய் இந்தியாவைக் கண்டுபிடிக்கும்படி, போர்ச்சுகல் அரசன், வாஸ்கோ ட காமா (Vasco da Gama) என்கிற மாலுமித்தலைவனை லிஸ்பன் துறையிலிருந்து நான்கு சிறிய கப்பல்களோடு கூட்டியனுப்பினர். பூலோகத்தைப்பற்றி அதிகம் தெரியாதிருந்த அக்காலத்தில், இந்தக் கப்பல் யாத்திரை அதிக ஸாஹஸமானதென்றே சொல்லவேண்டும். அந்தக் கப்பல்களில் வந்த மாலுமிகளுக்கு பூலோகம் உருட்சியானதென்கிற ஸங்கதிதானும் தெரியாது. என்றைக்கோ பூலோகத்தின் கோடியில் போய்ச்சேர்ந்து பாதாளத்தில் தலைகீழாக விழுந்துவிடப்போகிறோமென்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். மாலுமித்தலைவன் ஓர் ஆப்ரிகத் துறையில் ஏற்றிக்கொண்ட ஒரு முஹம்மதியனை நம்பி, முன்னே வழிகாட்டிப் போகும்படி அவனை நியமித்துக்கொண்டு, இந்து மஹாஸமுத்ரத்தில் தைர்யத்தோடு கப்பல்களை நோய்விட்டான்.

இங்ஙனம் வழிதேடி வந்தவன், இந்தியாவின் கரையை அடைந்து கள்ளிக்கோட்டையருகில் நங்கூரம் போட்டான். வேண்டுமான பண்டங்களை வாங்கி நிரப்பிக்கொண்டு, அவன் கப்பல்களைத் திருப்பி ஓட்டிக்கொண்டு போனான். லிஸ்பனில் போய்ச் சேர்ந்தபோது, போர்ச்சுகிசியர் அவனை அதிக ஸந்தோஷத்தோடு உபசரித்தார்கள். இந்தியாவிலிருந்து வாங்கிப்போன பண்டங்களை அவன் ஒன்றுக்கு அறுபதாக விற்பனை செய்தான். அதற்குமுன் எக்காலத்தும் போர்ச்சுகல் தேசத்தில் அப்படிப்பட்ட லாபம் கிடைத்ததில்லை.

அக்காலத்திலுள்ள சிறிய கப்பல்களில் குட்ஹோப் முனையைச் சுற்றிக்கொண்டு இந்தியாவுக்கு ப்ரயாணம்போவது பெரிய அபாயஹேதுவாக இருந்தது. லிஸ்பனிலிருந்து புறப்பட்ட நாலு கப்பல்களில் இரண்டுதான் திரும்பின. வாஸ்கோடகாமாவின் ஸொந்த ஸஹோதரனே உடைந்த கப்பல்களில் ஒன்றிலிருந்து முழுகிப்போய்விட்டான்.

ராஜவ்யாபாரி ஆல்புகார்க்

இந்தியாவுக்கு நேரே போகும் ஸமுத்ரமார்க்கத்தைக் கண்டுபிடித்த வுடனே, போர்ச்சுகல் அரசன் அநேக கப்பல்களை முஸ்திப்பு செய்து இந்தியாவுக்கு அனுப்பினார். இந்தக் கப்பல்களில் சிலவற்றை பீரங்கிகளும் பீரங்கிமருந்தும் குண்டும் வைத்து மற்றவைகளுக்கு ஆதரவாய் அரண்பண்ணிவைத்தார். போர்ச்சுகீசியர் கடுமையானவர்கள்: கிறிஸ்திய மதத்தில் அதிக வைராக்ய முள்ளவர்கள். பழைய காலத்தில் முகம்மதிய மதத்தைத் தழுவிய யுத்தவீரர்கள் ஸ்பெயினையும் போர்ச்சுகலையும் ஜயித்திருந்ததனால், போர்ச்சுகீசியருக்கு முஹம்மதியர்மேல் அதிக த்வேஷம் உண்டு. முஹம்மதியரை அவர்கள் மூர்கள் என்பர். இந்த மூர்களை அவர்கள் தங்கள் தேசத்திலிருந்து துரத்திவிட்டனர். ஆனாலும் அவர்கள் மீதிருந்த காரம் தணியவே யில்லை. இந்தியக் கடல்களில் முஹம்மதியரோடு சண்டைபோடவும், அவர்கள் வர்த்தகத்துக்குக் கெடுதி தேடவும் இப்பொழுது இடமுண்டானது, அவர்களுக்கு அதிக ஸந்தோஷம்.

முதலில் அவர்கள் கள்ளிக்கோட்டையில் வர்த்தகம் பண்ண ஆரம்பித்தார்கள். கள்ளிக்கோட்டை, தம்பிரான் (Zamorin) என்கிற இந்திய அரசனுடைய ராஜ்யத்தைச்சேர்ந்தது. அவர்களுடைய கப்பல்களுக்குப் பக்கத்தில் அரேபியாவிலிருந்து வந்த தோணிகளும் தங்கியிருந்தன. போர்ச்சுகீசிய மாலுமித் தலைவன் தன் பண்டங்களை விற்பனை செய்யும்படி கூடிய சீக்ரத்தில் போர்ச்சுகலுக்குத் திரும்பிப் போக வேண்டுமென்று விரும்பியிருந்தான். அவனுடைய கப்பல்களில் பண்டங்கள் சீக்ரம் ஏற்றுமதியாகாமல் தவக்கப்பட்டதனால், அவன் அவசரப்பட்டு என்ன செய்தான் தெரியுமா? புறப்பட்டுப் போவதற்குத் தயாராக இருந்த ஒரு அரேபிய தோணியிலிருந்த பண்டங்களை யெடுத்துத் தன் கப்பலில் ஏற்றிக் கொண்டான். இதனால் சண்டை உண்டாயிற்று: போர்ச்சுகீசியர் பல கொடுமைகளைச் செய்தனர்.

ஒருமுறை வாஸ்கோ -ட - காமா கள்ளிக்கோட்டையின் அருகில் ஓர் அரேபிய கப்பற்கூட்டத்தைப் பிடித்துக்கொண்டான். அந்தக் கப்பல்களில் எண்ணூறு பேர் இருந்தனர்.

அவர்களுடைய கைகளை வெட்டிக் காதுகளையும் மூக்குகளையும் அறுத்து விட்டான். அதனால் தம்பிரானாகிய அரசன் போர்ச்சுகீசியரோடு சண்டை போடும்படி நேரிட்டது. அவர்கள் அங்கே வர்த்தகஞ் செய்யக்கூடாதென்று அவர்களைத் தடுத்து விட்டான். அதன்மேல் போர்ச்சுகீசியர் வேறொரு துறையைத் தேடிக்கொண்டு போய்க் கோச்சியில் சேர்ந்தார்கள்.

சில வருஷ காலம் இங்ஙனம் சண்டையும் வர்த்தகமும் நடந்துகொண்டிருந்த பிறகு, அந்த வர்த்தகத்தை நன்றாக நடத்தும்படி போர்ச்சுகல் அரசன் ஒரு பெரிய ஆஸாமியை அனுப்பினார். அந்த ஆஸாமி ஆல்புகர்க் என்பவர். அவர் அதிக வைராக்யமுள்ள கிறிஸ்தியர். அவர் மனதில் பெரிய எண்ணங்கள் வைத்திருந்தார். தம்முடைய தேசத்தை மிகவும் உன்னதமான பதவிக்குக் கொண்டுவரவேண்டு மென்பது அவருடைய விருப்பம். ஆனால், தம் ஊரார் எல்லாரையும் போலவே அவருக்கும் முஹம்மதியர்மேல் அதிக வைஷம்யம் உண்டு. அரேபியர்களுடைய வ்யாபாரத்தைப் பரிஷ்காரமாய் நிறுத்தி விடும்படி அவர் ஓர் ஆலோசனை பண்ணினார்:—அரேபியர்களுக்குரிய மாகாணங்களில் எகிப்து அதிக செல்வப் பெருக்குள்ளது. எகிப்தின் வளத்துக்கு நீலநதியே ஆதாரம். அந்த நதியிலிருந்து புதிய கால்வாய் ஒன்று செங்கடலில் வெட்டி விட்டால், அந்த நதியின் ஜலமெல்லாம் செங்கடலில் போய் விழுந்து விடும். அப்பால் எகிப்தில் ஒன்றும் விளையாது. இங்ஙனம் செய்தால் முஹம்மதியர் நாசமாய் விடுவர். இந்தப்ரகாரம் ஆலோசனை பண்ணி, அங்ஙனம் செய்ய ஆள்களை அனுப்பும்படி அவர் போர்ச்சுகல் அரசனிடத்தில் ப்ரஸ்தாபித்தார்.



அல்பான் ஸோடி ஆல்புகர்க்

முஹம்மதியர்மேல் வைஷம்யம் உடையவரே யாயினும் ஆல்புகர்க் ஸாதாரணமானவ ரல்லர். அவர் தம்முடைய லாப-

த்தைக் கிஞ்சித்தும் கவனிக்காத தேசாபிமானி. தம்முடைய அரசனுக்குக் கீர்த்தி உண்டாகவேண்டும், தம்முடைய தேசம் முன்னுக்கு வரவேண்டும் என்பதே அவருடைய நோக்கம். அவர் யூகமாகத் திட்டஞ்செய்து, இந்தியாவின் ஸமுத்ரதீரத்திலும் மலாக்கா ஜலஸந்தியிலும் வெகுதூரத்திலுள்ள சீனுவிலும் இங்ஙனம் பல இடங்களில் வ்யாபாரச்சாலைகள் கட்டுவித்தார். இவைகளில் மிகவும் ப்ரஸித்தமான குடியிருப்புகள் டிஸ்யூ கோவா மாலாக்கா என்பவை. ஆல்புகர்க் ஸ்தாபித்த இப்படிப்பட்ட குடியிருப்புகள் நூறுக்குக் குறைவில்லை. இந்து மஹாஸமுத்ரத்தில் அரேபியக் கப்பல்கள் தலைபெடுக்க முடியாமல் நசித்துப்போயின. கொஞ்ச காலம் போர்ச்சுகீசியர் வ்யாபாரத்தில் உயர்ந்தோங்கி யிருந்தார்கள்.

ஆல்புகர்க்குக்குப் பின்னுல் ஏற்பட்ட கார்யகர்த்தர்கள் அவரைப்போலவே கௌரவமானவர்களாக இருந்தால், போர்ச்சுகீசியருடைய வ்யாபாரம் இன்றளவும் சிறப்புற்றே யிருக்கும். பின்னுல் ஏற்பட்ட அரசன் சார்பிலே வந்த வ்யாபாரிகளெல்லாம் கள்ளர்கள். சீக்ரத்தில் த்ரவ்யவந்த ராகவேண்டுமென்று அவர்கள் களவும் கொலையும் செய்து வந்தனர். அநேகர் கடற்களவாணிகள் ஆயினர். அதனுல் அவர்கள் எல்லா ஜாதியாருக்குமே விரோதிகளாயினர். ஆல்புகர்க் தம்முடைய தேசத்தை முன்னுக்குக் கொண்டுவரும்படி செய்யத் தொடங்கிய கார்யம் இவ்விதம் அகௌரவமாய் முடிந்தது. அக்காலத்துப் போர்ச்சுகீசிய மாலுமிகளின் ஸந்ததியார் தற்காலத்தில் பூலோகமுழுவதும் பரவியிருப்பதைக் காணலாம்.

போர்ச்சுகல் அரசன் இந்தியாவுக்கு அனுப்பிய கப்பற்கூட்டத்தில் ஒன்றை அட்லான்டிக் ஸமுத்ரமூலமாய்க் காற்று மோதிக்கொண்டுபோய் அமெரிகாவில் ப்ரேஸீல் தேசத்துக்கரையில் சேர்த்து விட்டது. அதுமுதல் போர்ச்சுகீசியர் சிலர் அங்கே பரவி நிலைத்தலாயினர்.

பாபர்


கள்ளிக்கோட்டையிலுள்ள அரேபியர்களோடு சண்டை செய்யும்படி போர்ச்சுகீசியர் கப்பல்களை அனுப்பிக்கொண்டிருந்த காலத்தில் மஹா யுத்தவீரனுன பாபர் அரசன் அப்-

காபூலிஸ்தானத்து மலைகளில் தம்முடைய ராஜ்ய நிமித்தம் சண்டை செய்துகொண்டிருந்தார். அப்பால் கொஞ்சகாலத்தில் அவர் ஹிந்துஸ்தானத்தை வென்று கொண்டார்.

ஸமர்க்கண்ட் பட்டணத்தில் இருந்துகொண்டு விஸ்தாரமான ஒரு ராஜ்யத்தை ஆண்டிருந்த தயமூர் என்னும் பேரரசனைப் பற்றி வாசித்திருக்கிறீர்கள். தயமூர் இறந்துபோனபொழுது, அவனுடைய உறவினர் தங்களுக்குள்ளே சண்டையிட்டு அந்த ராஜ்யத்தைப் பல பாகங்களாகப் பங்கிட்டுக்கொண்டனர். தயமூர் இறந்து ஆறு தலைமுறைகள் ஆனபிறகு, பாபர் என்னும் ராஜகுமாரன் தொலைதூரத்திலுள்ள ஆக்ஸஸ் நதிக்கு ஸமீபத்தில் பெர்கானு (Ferghana) என்னும் ராஜ்யத்தில் ஸிம்ஹாஸகம் ஏறினர். அவர் பாதி துர்க்கியும் பாதி மங்கோலியுமான இரத்தக்கலப் புள்ளவர். அவரிடத்தில் ஆண்மையும் உண்டு, பெரும் பெயர் பெறவேண்டு மென்கிற ஊக்கமும் உண்டு, அதற்கேற்ற ஸாமர்த்யமும் உண்டு. இவைகளோடு அவரிடத்தில் உதாரகுணமும் உண்டு. ஸமர்க்கண்ட் பட்டணத்தை வென்றுகொண்டு, அங்கிருந்தே தயமூருடைய ராஜ்யத்தை ஆட்சி செய்யவேண்டு மென்பது இளமையிலிருந்தே அவருக்குள்ள நோக்கம்.

பாபர் சண்டைகளின் நடுவிலே வளர்ந்தவர். மலைகள் நிரம்பிய அந்த தேசத்தில் அநேக அரசர்கள் இருந்தனர். ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு ராஜ்யமும் ஒவ்வொரு ஸேனையும் உண்டு. ஒருவனுக்கு பலம் விஞ்சினுல், மற்றவர்கள் பொருமையடைந்து ஒன்றுகூடி, அவனை மட்டந்தட்டி விடுவார்கள். இப்படிப்பட்ட இடத்தில் சிறிய ராஜ்யத்தை ஆண்டிருந்த பாபர், ஸமர்க்கண்டையும் அதைச் சேர்ந்தவைகளையும் வென்றுகொள்வது எவ்வளவு கஷ்டம்! அப்படியிருந்தும் அவர் இரண்டுமுறை ஸமர்க்கண்டைக் கைப்பற்றினர். இரண்டு முறையும் அது கைநெகிழ்ந்து போயிற்று.

சில ஸமயங்களில் பாபர் வசத்தில் பலத்த ஸேனை இருப்பதுண்டு. ஒவ்வொரு ஸமயம் தோல்வியடைந்தால், ஸேனுவீரர்கள் அநேகர் அவரைக்காட்டிலும் பலமுள்ள சிற்றரசனிடத்தில் போய்ச் சேர்ந்துகொள்வர். அப்படிப்பட்ட ஸமயங்களில் அவரிடம் சில நூறு வீரர்கள்தான் இருப்பார்கள். எப்படிப்பட்ட கஷ்டம் நேரிட்டாலும் பாபர் தைர்யத்தை விடுவ



பாபர் ஸமர்க்கண்டைப் பிடித்தது.

தில்லை. ஒருமுறை மிகவும் நிர்ப்பாக்ய ஸ்திதியில் இருந்தபோது, துணிகரமாய் ஓடி யடித்து முன்னே இழந்ததையெல்லாம் திரும்பவும் கைப்பற்றிக் கொண்டார். ஸமர்க்கண்டை வெல்வதென்று புறப்பட்டுப் போகையில், அவருக்கு நட்பாயிருந்தவர்கள் அவரை நழுவவிட்டார்கள். அதன்மேல் அவர், ஸேனையை இட்டுக்கொண்டு, கல்லிலும் காட்டிலும் விழுந்து திரும்பவேண்டியதாயிற்று. ஒட்டகங்களும் குதிரைகளும் மாண்டன. இருநூற்றுநாற்பது ஸிபாய்கள் தவிர மற்றவர்களெல்லாரும் அவரைக் கைவிட்டுப் போயினர். ப்ரதான உத்தியோகஸ்தர்களை ஒன்றாய்க் கூட்டினார். இனிச்செய்யத் தக்கது என்னவென்று எல்லாரும்கூடி ஆலோசித்தார்கள். விசுவாஸத்துடன் தம்மைத் தொடர்ந்து வருவாரோடுபோய் ஸ்மர்க்கண்ட் பட்டணத்தைக் கைக்கொள்ளும்படி முயற்சி செய்வதென்று மனத்தை திடப்படுத்திக் கொண்டார்.

இந்த அபாயகரமான வேலையில் ஏன் அடியிட்டுக் கொண்டோமென்று அவருக்கு வழியில் அதைர்யம் உண்டாயிற்று. தூங்கும் பொருட்டு ஒரு தோப்பில் படுத்துக்கொண்டார். தூங்கியிருக்கும்போது ஒரு கனவுகண்டார். விழித்தெழுந்ததும் ஸமர்க்கண்டை எதிர்ப்பதென்று அவருக்குத் துணிவு பிறந்தது. தாமே எழுதிய தம்முடைய சரித்திரக்குறிப்பில் இந்தக் கனவை விவரித்திருக்கிறார். கூடவிருந்த வீரர்கள் தங்கள் குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டுபோய் நடுராத்திரியில் மோகாட் (Moghat) பாலத்தை அடைந்தார்கள். அங்குநின்றும் காதலன் குகைக்கு (Lovers' Cave) ஸமீபத்தில் சுவர் தாழ்வாக இருந்த இடத்துக்கு பாபர் எண்மரை முன்னே அனுப்பினார். அப்பால் மீதி பேர்களை (Firoza Gate)பிரோஜா வாயிலுக்கு அழைத்துக் கொண்டுபோய், அங்கிருந்த காவலாளிகளைக் கொன்று விட்டார். வாயிலைத் திறந்ததும் உடன் வந்த இருநூற்றுநாற்பது வீரருடனே உள்ளே பாய்ந்துபோயினர். அந்த வீரர்கள் அவருடைய பெயரைக் கெட்டியாகச் சொல்லி ஆரவாரித்தவளவில், தூங்கியிருந்த ஜனங்கள் எழுந்து, கூடிய வேகத்துடன் ஓடிப்போயினர்கள். இவ்விதமாய் பாபர் பத்தொன்பதாவது வயதில் ஸமர்க்கண்டை ஜயித்தார்.

கடைசியில் ஹிந்துஸ்தானத்தை ஜயிக்கவேண்டு மென்கிற எண்ணங்கொண்டு, பாபர் ஸமர்க்கண்டைச்சேர்ந்த ராஜ்யத்தை



சக்ரவர்த்தி ஆக்ராவில் அரமனை கட்டிக்கொண்டு அதில்
தோட்டம் வைத்தது.

வெல்வதான கருத்தைக் கைவிட்டார். இந்தியாவின்மீது நான்கு முறை படை யெடுத்து வந்தார்: நான்கு முறையும் தோல்வியே உண்டாயிற்று. அக்காலத்தில் அவர் ஆண்டிருந்தது காபுல் ராஜ்யம். காபுலைவிட்டு ஹிந்துஸ்தானத்துக்குப் புறப்பட்டுப் போனதும் அவருடைய விரோதிகள் காபுல்மேல் தண்டெடுத்து வந்தனர். அதனால் அவர் உடனே திரும்பிப்போவது அவசியமாயிற்று. ஐந்தாவதுமுறை வந்தபோது டில்லிக்கு வெளியிலுள்ள (பானிப்பட்) குருக்ஷேத்ரபூமியை அடைந்தார். அவரோடு வந்த ஸேனை பெரிதல்ல. அதில் இருந்தவர்களெல்லாம் பதின்மூவாயிரம் பேர்களே. அப்போது டில்லியில் ஆட்சி செய்திருந்த பட்டாணி ஸுல்தானாகிய இப்ராஹீம் லோடி நூறு யானைகளுள்ள பெரிய ஸேனையோடு வந்து எதிர்த்தார்.

மோகல் ஸேனையின் மத்தியில் பெரிய துப்பாக்கிகள் தோல் வடங்களால் ஒன்றுப்பத் தொடுத்திருந்தன. இந்திய ஸேனை மோகல் ஸேனையின்மீது வெடிதீர்த்தது. அதற்கு இளைத்துப் பின்வாங்காமல் மோகல் குதிரை வீரர்கள், இந்திய ஸேனையைச் சூழ்ந்துகொண்டு, அவர்கள்மீது பின் புறத்திலிருந்து தாக்கினர்கள். இந்திய ஸேனை சிதறி ஓடலுற்றது. லோடியைச் சூழ்ந்திருந்த பட்டாணி வீரர்கள் ஏறக்குறைய எல்லாருமே கொலையுண்டனர். அப்பால் பார்க்கும்போது ஸுல்தானுடைய சவமும் யுத்த பூமியில் விழுந்து கிடந்தது. பாபருடைய ஆள்கள், சுறையாளிகளோடும், யானைகளோடும், ஸுல்தான் தலையைக் கொண்டுபோய் பாபரெதிரில் ஸமர்ப்பித்தார்கள்.

ஆறு நாள்கள் ஆனபிறகு டில்லி மஸூதியில் முதல் மோகல் சக்ரவர்த்தியின் பேரால் ப்ரார்த்தனை நடந்தது.

ஹிந்துஸ்தானத்துக்குச் சக்ரவர்த்தியானதும், பாபர், பாத்ஷாஹ என்று பட்டம் தரித்துக்கொண்டார். ஒவ்வொருவரையும் அடக்கும் பொருட்டு பாத்ஷாஹ பல யுத்தங்கள் செய்ய வேண்டிய தாயிற்று. அவைகளில் சித்தூரில் ரஜபுத்ரராஜனை ஸங்காரானுவோடு செய்ததே மிகவும் பெரிய யுத்தம். அந்த யுத்தத்தில் ரஜபுத்ரர்கள் ஒருவாறு தோல்வி யுற்றனர்.

ஹுமாயூன் அரசிழந்தது

ஹிந்துஸ்தானத்தை ஜயித்த பிறகு பாபர் நெடுங்காலம் ஜீவித்திருக்கவில்லை. கொஞ்ச காலத்தில் காய்ச்சல் கண்டு இறந்துபோனார். அவருடைய குமாரன் ஹுமாயூன் ராஜ்யபாரத்தை ஏற்றார்.

ஹுமாயூன் தீரமும் கௌரவகுணமும் உள்ளவர். ஆயினும் ஹிந்துஸ்தானத்தில் அவருக்கு விரோதிகள் அநேகர் ஏற்பட்டிருந்தனர். பிஹாரில் அப்கானியத் தலைவனான ஷெர்கான் ஸூர் என்பவனும் பலாட்டியனான கூர்ஜரராஜன் பஹதூர் ஷாஹ என்பவனும் அவர்களில் முக்யமானவர்கள்.

கூர்ஜர ராஜனோடு யுத்தம் செய்கையில், ஒருநாள் இரவில் அவர் தம்முடைய வீரர் சிலரோடு ஒரே பாறையான ஒரு சுவரின்மேல் ஏறி ஒரு கோட்டையில் ப்ரவேசித்துக் கோட்டையைக் காவல் செய்திருந்த ஸிபாய்களை ஓடிப்போகும்படி செய்தார். அவர் ஆண்மையும் விகடவார்த்தையும் பாங்குபரிசனையும் உள்ளவ ராகையால், அவரிடத்தில் ஜனங்களுக்குப்ரியம் அதிகம். ஆயினும் அதிக உல்லாஸப்ரியராய் வீண்காலம் கழிப்பவ ராகையால், ராஜ்யத்தை இழக்கும்படி நேர்ந்தது. அவர் எத்தனையோ முறை வெற்றி பெற்றவரே. ஆயினும் வெற்றிபெற்றவுடனே செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், ஆக்ராவுக்குத் திரும்பியோ, அல்லது மநோஹரமான இடத்தில் தங்கியிருந்தோ, ஸங்கீதத்திலும் விளையாட்டிலும் விநோதித்திருப்பார். அவர் இங்ஙனம் விநோதித்திருக்கையில், அவருடைய விரோதிகள் புதிய ஸேனையைச் சேகரித்துக்கொண்டு மறுபடியும் அவரை எதிர்த்து வருவார்கள். தவிரவும், லாஹூருக்கு அரசரான அவருடைய ஸஹோதரன் காம்ரான், அவரிடம் பொறாமையுள்ளவ ராகையால், அவருக்கு யாதோ ருதவியும் செய்வதே யில்லை.

அநேக யுத்தங்கள் நடந்த பிறகு, ஹுமாயூனுடைய விரோதியானவன் கடைசியில் அவருடைய ஸேனையை சதிமோசத்தால் கலைத்துவிட்டான். ஷெர்ஷாஹவோடு யுத்தம்பண்ண ஆயத்தமாய் ஹுமாயூன் பாடிவீட்டில் படுத்திருந்தார். இருவருக்கும் த்ருப்திகரமாக ஒரு ஸமாதான உடன்படிக்கை செய்துகொண்டு யுத்தத்தை நிறுத்தி விடுவதென்று

ஷெர்ஷாஹ ப்ரேரேபித்தார். தைர்யமும் கௌரவகுணமும் உள்ளவ ராகையால், ஹுமாயூன் அதை மெய்யென்றே நம்பியிருந்தார். அந்த அப்கானியனுடைய ப்ரஸ்தாபனை தந்த்ரோபாயமே யன்றி வேறில்லை. அவன் சதிமோசம் செய்வானென்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. அபாயஹேது ஒன்றுமில்லையே யென்று அவரும் அவருடைய ஸிபாய்களும் எச்சரிக்கைபற்றுப் பாடிவிட்டில் உறங்கியிருக்கும்போது, அப்கானியர் போய் எதிர்த்து, ஸிபாய்களைக் கொலைசெய்தும் கங்கையில் மூழ்த்தியும் தொலைத்தார்கள். ஸாமர்த்யமான ஒரு ஸிபாயின் உதவியைக் கொண்டு, ஹுமாயூன் கங்கையைக் கடந்து போய் ஆக்ராவை யடைந்தார். அடைந்ததும், அந்த ஸிபாயை அரைநாள் ஸிம்ஹாஸநத்திலிருந்து இஷ்டப்படி செய்கவென்று உத்தரவு கொடுத்தார். அந்த ஸமயத்தில் அவன் இஷ்டமான ஸ்நேஹிதர்களுக்கு இஷ்டமான வெகுமதிகளைக் கொடுத்தான்; தனக்கு இஷ்டமான பொருளையும் எடுத்து வைத்துக் கொண்டான்.

அடுத்த வருஷத்தில், ஹுமாயூன் வேறொரு ஸேனையைக் கூட்டிக்கொண்டுபோய், கங்கைக் கரையில் கன்னோசியில் அப்கானியரை எதிர்த்தார். அப்போது அவருடைய ஸேனையிலிருந்த அப்கானிய ஸிபாய்கள் அநேகர் போய் ஷெர்ஷாஹவின் ஸேனையில் சேர்ந்து கொண்டார்கள். அதனால் தோல்வியடைந்து, ஹுமாயூன் ரஜபுதனத்துக்கு ஓடிப்போகும்படி நேரிட்டது. அப்கானியர் விடாமல் தொடர்ந்து சென்றதனால், அவர் தம்மிடத்திலிருந்த சிறிய ஸேனையோடு மேலும் மேலும் மேற்கு நோக்கியே செல்லலுற்றார். வழியில் வநாந்தரம் எதிர்ப்பட்டது. அவ்வளவிலே அந்த ஸேனையிலும் பெரும்பாகம் அவரைக் கைநெகிழவிட் டகன்றது. போனவர்கள் போக மிகுந்திருந்தவர்கள் ஏறக்குறைய இருபது பேருக்கு அதிகமில்லை. வழியில் ஒருமுறை அவர்களுக்கு மூன்றுநாள் வரையில் தாஹ சாந்திக்குத் தண்ணீர் தானும் கிடைக்கவில்லை. நாலாநாள் ஒரு கிணறு எதிர்ப்பட்டது. அதிலிருந்து ஒரு தொட்டி ஜலம் வலிப்பதற்குள் மாடுகளை ஓட்டியிருந்தவன் வெகுதூரம் போய்விட்டான். தண்ணீர் கிடைத்ததற்கு அறிகுறியாக அடித்த பறையோசையும் அவனுக்குக் கேட்கவில்லை. அந்தக் கிணற்றில் ஜலம் அவ்வளவு ஆழத்தில் இருந்தது.

கடைசியாய் அந்தக் கூட்டத்தோடு ஹுமாயூன் அமரக்கோட்டை என்கிற பட்டணத்தில் போய்ச்சேர்ந்தார். ராஜவானவர், அவர்கள்மீது இரக்கங்கொண்டு, அவர்களுக்கு விசுவாஸமாய் உபசாரம் பண்ணினார். அங்கே தங்கியிருக்கையில், (கி-பி. 1542ஞ அக்டோபர்மீ 14உ) ஹுமாயூனுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளைக்கு அக்பர் என்று பெயரிட்டார்கள்.

அப்பால் ஹுமாயூன் அங்கிருந்து காந்தஹாரத்துக்குப் போய், அங்கு நின்றும் பெர்ஷியாவில் ஸிஸ்டானில் போய்ச் சேர்ந்தார். பெர்ஷியா ராஜனாகிய டமஸ்ப் ஷாஹ அவரை இஸ்பஹானில் தமது ஸமஸ்தானத்துக்கு வரும்படி அழைத்து, அவருடைய ராஜ்யத்தை மீட்டும் வென்றுகொள்ள உதவிசெய்வதாக வாக்கிட்டார். அதன்மேல் ஹுமாயூன் சிலகாலம் இஸ்பஹானில் தங்கியிருந்தார்.

ஷேர் ஷாஹ ஸூர் அரசாட்சி: ஹுமாயூன் அரசுமீட்சி

ஷேர் ஷாஹ ஸூர் என்பது பட்டப்பெயர்: ஆதியில் அவருக்கு இட்ட பெயர் பாரிட் (Farid) என்பது. அவர் கோர் வம்சத்தின் கால்வழியாகிய ஸூர் என்னும் அப்கானிய குடும்பத்தைச் சேர்ந்தவர். பால்யத்தில் ஏதோ மனவருத்தத்தால் அவர் வீட்டைவிட்டு வெளியேறினார். முதலில் அவர் ஜான்பூர் கவர்னருடைய ஸேவையில் ஸாமாந்யமான ஒரு ஸிபாயாக அமர்ந்திருந்து, கடைசியில் ஹிந்துஸ்தானத்துக்குச் சக்ரவர்த்தியாகிவிட்டார். ஏதாவது தவறு நேரிட்டால் ஆதரிக்கத்தக்க உற்றார் உறவினர் ஒருவரு மின்மையால், தம் கார்யத்தில் தவறு நேரிடாதபடி அவர் எச்சரிக்கையாகவே இருந்து வந்தார். தம்முடைய கார்யஸித்தியில் ந்யாய அந்யாயங்களை அதிகம் கவனிக்காதவ ராகையால், அவரை ஸத்ய ஸம்பந்நரென்று சொல்வது முடியாது. ஆயினும் அவர் ஸாமாந்யமானவ ரல்லர்: பல விதத்திலும் அவரை பாரி மனிதன் என்றே கொள்ளவேண்டும். ஒருவிதத்தில் அவரை வித்யா விநோதியென்றும் சொல்லவேண்டும். சரித்-

ரங்களும் காவ்யங்களும் வாசிப்பதில் அவருக்கு அதிக ப்ரியமுண்டு.


ஜான்பூரில் சில வருஷகாலம் அவர் ஸேவை செய்திருந்த பிறகு, அவருடைய தந்தை தம் ஜாகிரை அவரிடத்தில் ஒப்பித்தார். ஜாகிரை ஏற்றுக்கொள்ளும்போது, அவர், நல்ல துரைத்தனத்துக்கு ந்யாயமே ஆதார மாகையால், எவ்விதத்திலும் நீதிமுறை தவறாமல் நடக்கவேண்டுமென்று உறுதிசெய்துகொண்டு, ஏழைகளுக்கு யாதொரு அக்ரமமும் செய்யாமல் ந்யாயத்தையே அநுஸரித்து வந்தார். ஜாகீரில் க்ருஷி செவ்வையாய் நடந்தது. பயிர்கள் நன்றாய்ப் பலிதமாகிக் குடிகள் க்ஷேமமடைந்தார்கள். வரிகள் க்ரமமாய் வஸூலாகி வந்தன.

கொஞ்சகாலத்தில் அவருடைய ஜாகீர் அவர் கையை விட்டு நழுவிப் போயிற்று. அதன்மேல் அவர் பீஹார் மஹாராஜனுடைய குமாரனிடத்தில் ஒரு வேலையில் அமர்ந்தார். ஒருநாள் மஹாராஜா சில ப்ரதானிகளோடு வனவேட்டையாடிக்கொண்டிருக்கையில், ஒரு சிங்கம் தன் குகையிலிருந்து கிளம்பி வந்தது. எல்லாரும் திடுக்கிட்டிருக்கையில், பாரித் நேராக ஓடிக் கையிலிருந்த வாளை ஓங்கி ஒரே வெட்டில் சிங்கத்தைக் கொன்றுவிட்டார். அதுகண்ட ராஜன் உடனே அவருக்கு ஷேர் கான் (அதாவது, சிங்கநாதன்) என்று பட்டமளித்தார். அது முதல் அப்பெயர் அவருக்கு வழங்கத்தொடங்கியது.

யௌவன பருவத்தில், ஷேர்கான், பாபருடைய பாடிவீட்டைப் பார்க்கப் போனார். ப்ரதானிகள் அவரைப் பாத்ஷாஹவின் ஸந்நிதாநத்தில் காட்டிக்கொடுத்தனர். பாத்ஷாஹவோடு எல்லாரும் போஜனம் பண்ணும்போது, மாம்ஸத்தைக்கண்டம் செய்துண்ண அவரிடத்தில் கத்தியில்லை. உடனே உடைவாள் கொண்டு கண்டம் விண்டு மனதார உண்டார். அது கண்டு பாபர் "இவர் உரிய கருவி இல்லையென்று ஊக்கம் தளராதவர்: எடுத்துக்கொண்ட கார்யத்தை எவ்விதத்திலாயினும் இனிது முடிப்பார். பெயர்பெற்ற பெரிய மனிதனுகக்கூடும்" என்றுரைத்தார்.

பீஹார் அரசனுடைய ஸேவையில் படிப்படியாய் உயர்ந்து, கடைசியில் அவர் அரசனுக்கு இரண்டாவதாகி அர-

சன் என்கிற பட்டமில்லாமலே அரசாட்சியை நடத்தலானார். அரசன் பால்ய ஞகையால் ஒன்றும் செய்ய முடியாமல் வங்காள ராஜனிடம் போய் அவரை ஓட்டிவிட உதவி செய்யும்படி வேண்டிக் கொண்டார். வங்காளத்தரசன் படையெடுத்துவந்து தோல்வியடைந்தார். ஷெர்கானுக்கு அநேக யானைகளும் அதிக த்ரவ்யமும் கிடைத்தன.



அடுத்தாற்போல் அவர் சூனாரிலுள்ள உரமான கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு அப்பால் ரோஹ்டாஸ் (Rohtas) என்கிற கோட்டையையும் கைப்பற்றிக்கொண்டார். அதைப்போல் உரமான கோட்டை உலகத்தில் வேறே இல்லை என்கிறார்கள். அவர் ஸேனைபலத்தாலாவது வேறு ஸாமர்த்தியத்தாலாவது அந்தக் கோட்டையைப் பிடிக்கவில்லை. கோட்டைக்குரிய அரசனிடத்தில் அவர் "நான் வங்காளத்தின்மேல் தண்டெடுக்கப் போகிறேன். யுத்தம் முடிவாகிறவரையில் என் குடும்பத்தையும் என்னுடைய நிதியையும் கோட்டையில் வைத்து பத்ரமாய்ப் பரிபாலிக்கவேண்டும். நான் சண்டையில் மாண்டால் நிதி உம்முடையதே" என்று சொன்னார். தம் கையில் சிக்கிய நிதி மீளவும் திரும்பப்போகிறதா என்று உறுதி செய்துகொண்டு, அந்த ராஜன் அந்த வேண்டுகோளுக்கு இணங்கினான். அவ்வளவிலே அநேக டோலிகள் வரிசையாய் ஒன்றின்பின் ஒன்றாக வந்து கோட்டையில் சேர்ந்தன. கூலியாட்கள் அநேகர் தாங்கள் சுமந்துவந்த பொதிகளை இறக்கத் தொடங்கினார்கள். ரோஹ்டாஸ் ராஜன், முன்னே வந்த சில டோலிகளைத் திறந்துபார்த்தான். அவைகளில் கிழவிகள் உட்கார்ந்திருந்தனர். மற்ற ஸ்த்ரீகளெல்லாம் மற்ற டோலிகளில் இருப்பரென்று எண்ணிக்கொண்டு போய், ஆள்கள் இறக்கியிருந்த பொதிகளை எண்ணிக்கொண்டிருந்தான்.

பிற்பட்டு வந்த டோலிகளில் ஸ்திரீகள் ஏறிவரவில்லை: யுத்த வீரர் ஏறியிருந்தனர். பொதிகளில் நிதி யாதொன்றும் இல்லை: துப்பாக்கி ரவை குண்டுகள் வைத்துக் கட்டியிருந்தன. ராஜன் பொதிகளை எண்ணிக்கொண்டிருக்கையில், டோலிகளில் இருந்த வீரர்கள் குதித்துப்போய்க் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

கொஞ்சகாலத்துக் கப்புறம் ஷெர்கானுக்கு மொகலாயரோடு யுத்தம் செய்யத்தக்க பலாத்காரம் உண்டாயிற்று. அதற்கு முன்னமே வங்காளத்தில் பழைய ராஜதானியான கார் (Gaur) பட்டணத்தை அவர் பிடித்துக்கொண்டார். இதுவரையில் கான் (அதாவது பாளையக்காரன்) என்கிற குறும்பனுயிருந்ததுபோய் இப்போது அரசனுய்விட்டார். ஷெர்கான் (சிங்காதன்) என்கிற பட்டத்தைத் தவிர்த்து ஷெர்ஷாஹ (சிங்கராஜன்) என்று பட்டந்தரித்துக்கொண்டார். இந்தக் காலத்தில்தான், முன்னே நாம் வாசித்தபடி, இவர் வஞ்சகமாய் ஹுமாயூனைத் தோற்கடித்துத் துரத்தியது. இந்த ப்ரகாரம் கடைசி காலத்தில் அவர் ஹிந்துஸ்தானத்துக்குச் சக்ரவர்த்தியானுர்.

தம்முடைய ஜாகிரில் செவ்வையாய் ஆட்சி நடத்துவதற்கு அந்த நாளில் அநுஸரித்த நல்ல முறைமைகளை யெல்லாம் இப்பொழுது அநுஸரிக்கத் தொடங்கினுர். வங்காளத்திலிருந்து லிந்துநதிவரையில் இரண்டாயிரம் மைல் நீளமுள்ள ஒரு பெரிய ரஸ்தா உண்டு. அந்த ரஸ்தாவில் அங்கங்கே வாணிகச்சாத்தும் பாட்டைசாரிகளும் தங்குதற்கேற்ற வசதியான ஸத்ரங்களைக் கட்டினுர். வழிநடந்து இளைப்படைகின்றவர்களுக்கு நிழலும் பழமும் உதவும்படி ரஸ்தாவின் பக்கங்களில் பழந்தரும் மரங்களை வைத்து வளர்ப்பித்தார். தாஹசாந்தியின் பொருட்டு அங்கங்கே கிணறுகள் வெட்டுவித்தார். துரைத்தனத்துக்கு வர்த்தமானங்களைத் தெரிவிக்கும் நிமித்தமாகவும் வர்த்தக நிமித்தமாகவும் குதிரைத் தபால்கள் ஏற்படுத்தினுர்.

ஷெர்ஷாஹ தம்முடைய ராஜ்யத்தில் எல்லாப் பிரிவுகளுக்கும் நம்பகமான கவர்னர்களை நியமித்தனுப்புவார். ஸத்ரங்களெல்லாம் செப்பனிட்டு ஒழுங்காக இருக்கின்றனவா

என்று பார்த்துக்கொள்வதும், களவு நடவாதபடி தவிர்ப்பதும், வரிகளை க்ரமமாக வஸூலிப்பதும், அவர்கள் கடமை.

ஷெர்ஷாஹவின் அரசாட்சியில் வயது முதிர்ந்த கிழவிகூட ஒரு கூடைநிறையப் பொன்னுபரணங்களைத் தலையிலெடுத்துக்கொண்டு எங்கே வேண்டினும் அங்கே ப்ரயாணம் போகலாம்; சக்ரவர்த்தியின் ஹர்க்கார்களுடைய தண்டனைக் கஞ்சி எந்தக் கள்வனும் அவளை அணுகான் என்று சொல்லியிருக்கிறது. அப்படிப்பட்ட சுக்ரீப ஆக்கினை அதற்குமுன் எப்பொழுதும் இல்லை.

ஷெர்ஷாஹ பால்யத்தில் தம் வீட்டில் வளர்ந்தவரல்லர்: விசுவாஸமான பராமரிப்பில் வளர்ந்தவரு மல்லர்: ராஜகுடும்பத்தில் பிறந்தவரு மல்லர். வெற்றி பெறும்படி சண்டை செய்வதே அவருக்கு ஓயாத வேலையாயிருந்தது. அதனல் அவரிடத்தில் சில துர்க்குணங்கள் வேர்கொண்டிருந்தன. இல்லாவிட்டால், நல்ல ராஜோத்தமனுய் விளங்கியிருப்பார்.

ஷெர்ஷாஹ இறந்த பிறகு அவருடைய குமாரன் ஸலீம் என்பவர் அரசாட்சியைப் பெற்றுர். அவருக்கு இஸ்லாம் ஸூர் என்றும் மறுபெயர் உண்டு. ராஜ்யாதிகாரமெல்லாம் அவருடைய மந்த்ரியான ஹீமூவின் கையில் சிக்கியது. ராஜ்யமெல்லாம் எக்கசக்கமாய்த் தாறுமாறுற்றது. கொஞ்சகாலத்தில் ஹுமாயூன் பெர்ஷியா அரசன் உதவியால் ஒரு ஸேனையைக் கூட்டிக்கொண்டு ஹிந்துஸ்தானத்துக்கு வந்தார். ஆதிமுதல் அதுவரையில் அவரிடத்தில் உண்மையாய் ஒட்டியிருந்த தளகர்த்தனை டைராம்கானும் அவருமாக ஸிர்ஹிண்டில் பெரிய யுத்தம்பண்ணி வெற்றியடைந்து டில்லியை அடைந்தார்கள். உடனே ஹுமாயூன் மறுபடியும் ராஜ்ய பாரத்தை ஏந்திக்கொண்டார். அப்பால் அவர் நெடுங்காலம் வாழவில்லை: அடுத்தவருஷம் அரண்மனையின் மேன்மாடத்திலிருந்து இறங்கும்போது கற்படியில் காலிடறிவிழுந்து இறந்துபோனுர்.

அக்பர் மஹாராஜன்

அக்பர் பாத்ஷாஹ, கௌரவகுணமுள்ள ராஜோத்தமர்களில் ஒருவர். மிகவும் பெரிய பலாட்டியராகையால், எப்-

படிப்பட்டவர்களையும் வெல்வது அவருக்கு ஸுலப ஸாத்யம். ஆகவே தம்மையெதிர்த்துச் சண்டைசெய்தவர்களை வருத்தாமல் மன்னித்துவிடுவது அவருக்கு ஸஹஜம். பெருந்தன்மையும் உதாரத்வமும் உள்ளவராகையால், உத்தமபுருஷர் அநேகர் அவரைச் சூழ்ந்திருந்தனர். அவரை அநுஸரித்திருந்தவர்கள் அவரிடத்தில் வைத்திருந்த விசுவாஸத்தினுலும் மதிப்பினுலும், ஆபத்து உற்றவிடத்தில் அவருக்கு உயிரை வேண்டுமானுலும் வழங்கத்தக்கவர்களே.

ஒருமுறை பாத்ஷாஹ ஆஜ்மீரிலிருந்து ஆக்ராவுக்கு ப்ரயாணமாயிருக்கையில் வழியில் ஒரு பெரிய பெண்புலி வந்தது. அவர் குதிரையை விட்டிறங்கிப் புலியின்மீது துப்பாக்கியை வெடித்தார். துப்பாக்கிக் குண்டு புலியின் உடலில் பாயாமல் முகத்தின்மீது உராய்ந்துபோகவே, புலி மூர்க்கமாய் அவர்மீது பாய்ந்துவந்தது. அதுகண்டு அவர் மறுபடியும் ஒரு வேட்டுப் போட்டார். காயம் பட்டதே தவிர, அந்த வேட்டினுலும் புலி சாகவில்லை. கூடவந்த ப்ரதானிகளில் தைர்யஸ்தரான ஒருவர் தம்முடைய வில்லில் ஓரம்பு தொடுத்துப் புலியின்மேல் எய்தார். பாத்ஷாஹவை நோக்கி வந்திருந்த புலி, இப்பொழுது இந்த ப்ரதானியின்மேல் பாய்ந்து, அவரைக் கீழேதள்ளி அவர் தலையைப் பற்றிக்கொள்ளப் பார்த்தது. இதற்குள் அந்த வீரர் ஒரு கையைப் புலியின் வாயில் நுழைத்தி, மற்றொரு கையால் உடைவாளை உருவிப் புலியின் விலாவில் பாய்ச்சினுர். மற்றவர்கள் புலியைக் கொல்வதற்குள், அது அவருடலைப் பல இடங்களில் பல்லால் கிழித்துவிட்டது. அந்த காயங்களால் அவர் மாண்டுபோனுர். தம்முயிரைப் பறிகொடுத்து அவர் பாத்ஷாஹவின் உயிரைக் காப்பாற்றினுர்.

அக்பருடைய ஆட்சியில் பெரும்பாகம் யுத்தங்களில் கழிந்தது. ஒவ்வொரு யுத்தத்திலும் அவருடைய ஸிபாய்கள் ஒரேவிதமான ஊக்கம் காட்டிவந்தனர். அவருக்கும் அவர்களிடத்தில் அதிக கருத்தும் கவனமும் உண்டு. ரஜபுத்ரர்களோடு யுத்தம் செய்து சித்தூர்க் கோட்டையை முற்றுகை செய்கையில், கோட்டையின் சுவர்கள் வரையில் சுரங்க மறுப்பது அவஸ்யமாயிருந்தபோது, அந்த அபாயமான வேலையைச் செய்யும்படி அவர் ஒருவரையும் பலவந்தம்பண்ணா

வில்லை. துணிகரமாய் அந்தவேலையைச் செய்வோருக்கு அதி-கப் பொருள் கொடுப்பதாகச் சொன்னார்.


அக்பர் பெருந்தன்மையுள்ளவர். தம்மோடு யுத்தம் செய்த மகுடாதிபதிகள் எவரையும் அவர் உயிர்வாங்கின-தில்லை; தமக்கு நெருக்கமாயுள்ளவர்களில் தமக்கு விரோதமாய்த் திரும்பின பேர்களையும் அவர் உயிர் வாங்கினதில்லை. முதலில் ஸிம்ஹாஸகம் ஏறினபோது அக்பர் தம் பிதாவின் விஸ்வாஸ மித்ரரும் தண்டத் தலைவருமான பைராம்கானிடத்தில் அதிக நம்பகம் வைத்திருந்தார். இந்தத் தண்டத் தலைவருக்குக் கான் கானன் அதாவது ப்ரதானிகளில் ப்ரதானி (ப்ரபுக்களில் ப்ரபு-மஹாப்ரபு) என்கிற பட்டம் வழங்கியிருந்தது. இவர் அக்பருக்கு பால்யத்தில் ஆசிரியராக இருந்தவர்.



அக்பர்.

இவருக்கு நல்ல பகுத்தறிவுண்டு. அக்பரிடத்தில் உண்மை-யான நண்பர்போல் நடந்துவந்தார்.

இவருடைய யூகத்தால்தான், ஹீமூவைத் தோற்கடித்து ஸிம்ஹாஸநத்தை பத்ரப்படுத்துவது அக்பருக்கு ஸுல்ப ஸாத்ய மாயிற்று. ஹுமாயூன் இறந்தவுடனே, ஹீமூ டில்லி-யைக் கைப்பற்றிக் கொண்டு, பெரிய ஸேனையோடு அக்பரை எதிர்க்கப் புறப்பட்டான். அக்பருடைய ப்ரதானிகள், டில்-லியை மறந்துவிட்டுக் காபுலுக்குத் திரும்பலாமென்று ஆலோ-சனை சொல்லினர். அதற்கு பைராம் காதுகொடுக்காமையால், சண்டை செய்வதே யென்று ஸ்திரப்படுத்திக்கொண்டு, அக்பர்



மொகலாயர் சித்தூரை முற்றுகை செய்தது.

யுத்தம் செய்யலானார். ஹீமு அதிக வீரத்துடன் யுத்தம் செய்தும், பைராமுடைய ஸாமர்த்யத்தாலும் ஸேனையின் சலியாத பராக்ரமத்தாலும் அக்பருக்கே வெற்றி கிடைத்தது.

பைராம் தருக்குக் கொண்டவர், தம்முப்பாய் நடப்பவர்: இதுவே அவரிடத்துள்ள முக்யதோஷம். ஹுமாயூன் அரசிழந்து திக்குமில்லாமல் திசையுமில்லாமல் பரதேசியாய் உழன்றுகொண்டிருந்த காலத்திலும் இவர் உண்மை நண்பராய் ஒட்டியிருந்தார். அரசு மீட்சியிலும் இவர் ஹுமாயூனுக்கு உதவி செய்தார். ஆகவே கையிலுள்ள அதிகாரம் அவ்வளவையும் அக்பரிடம் ஒப்பித்துவிட பைராமுக்கு மனம் ஒப்பவில்லை. துராக்ருகமாய் நடந்துவந்ததனால், பைராமுக்கு அந்தரங்க விரோதிகள் அநேகர் ஏற்பட்டனர். அவர்கள் அக்பருக்கும் பைராமுக்கும் தந்த்ரோபாயத்தால் மித்ரபேதம் பண்ணத் தொடங்கினார்கள். பைராம் உண்மையுள்ளவரென்று நம்பியிருந்ததனால், அவர்மேல் சொல்லும் அபவாதங்களை அக்பர் காதுகொடுத்துக் கேட்பதில்லை. அப்படியிருந்தும், அக்பரும் பைராமும் ஒருவர்மீதொருவர் மனஸ்தாபமும் ஸந்தேஹமும் கொள்ளலாயினர். அதனால், பைராம் தம் அதிகாரத்தை அக்பரிடம் கொடுக்கிற விஷயத்தில் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பின்வாங்கி வந்ததனால் அக்பர் அவரிடத்திலிருந்து கட்டறுத்துக் கொள்வது அவசியமாயிற்று.

அதன்மேல் பைராம் கலஹத்துக்கு ஆரம்பித்தார். ஆரம்பித்தாரே தவிர, மற்றப்படி கலஹத்தில் மனப்பூர்த்தி யில்லை. விசுவாஸமுள்ள ராஜகுமாரனோடு யுத்தம் பண்ணவும் அவருக்கு மனம் ஒருப்படவில்லை. அவ்வளவில் ஓராளை அனுப்பித் தம்மை க்ஷமிக்கும்படி கேட்டுக்கொண்டார். அக்பர் க்ஷமித்து விட்டதாகச் சொல்லி, பைராமைக் கொலுவுக்கு வரும்படி உத்தரவனுப்பினார். கொலுவை அடைந்தவுடனே, கண்ணீரும் கம்பலையுமாய் தண்டாகாரமாக விழுந்து நமஸ்கரித்த பைராமை அக்பர் கைநீட்டி யெடுத்து அவருடைய யதாஸ்தானத்தில் உட்காரவைத்தார். அரசனுடைய க்ஷமையைப் பெற்றும், தம்நெஞ்சே தம்மைச் சுடுவதால், சித்தஸமாதானம் உண்டாகாமல், பைராம் மக்காவுக்கு யாத்ரையாய்ப் புறப்பட்டார். புறப்பட்டுப் போகும்போது, கூர்ஜரத்தில் ஒருவன் பழிதீர்த்துக் கொள்ளும்படி அவரைக் கொலைசெய்து விட்டான்.



தோமர்.

அப்பால் அக்பர் நெடுங்காலம் ஆட்சிசெய்திருந்தார். காலத்துக்குக் காலம் அவருடைய ராஜ்யம் விஸ்தாரமாகி வந்தது. புதியபுதிய ஸ்நேஹிதர்கள் நாளுக்குநாள் அதிகரித்து வந்தனர். மதிமந்த்ரியும் சரித்ர வாசிரியருமான அபுல் பஜல் அக்பருடைய ஸ்நேஹிதரில் மிகவும் முக்யமானவர். அவருடைய ஸஹோதரரான பைஜீ ஸமஸ்தான கவியாக வீற்றிருந்தார். மதியூகியான ராஜா தோடர்மல் என்னும் ரஜபுத்ரர் டிவானாகச் சிறந்திருந்தார். ராஜா மான் ஸிங் ராஜா பகவான்தாஸ் முதலான ரஜபுத்ர வீரகம்பீரர்கள் அநேகர் அக்பர் ஸமஸ்தானத்தில் விளங்கியிருந்தனர். எந்த மதஸ்தருக்கும் பாத்ஷாஹ தம்முடைய ஸமஸ்தானத்தில் நல்வரவளித்தார். பாத்ஷாஹ தம்மளவில் சில ரஜபுத்ர ராஜகுமாரிகளை மணம்புரிந்து கொண்டார். பட்டாணி ஸுல்தான் ஷெர்ஷாஹ ஏற்படுத்திய துரைத்தன முறையையே ராஜா தோடர்மல் அக்பருடைய ஆட்சியில் அநுஸரித்து வந்தார். ரஸ்தாக்களில் கள்ளர் பயம் இல்லாதபடி பந்தோபஸ்துகள் ஏற்பட்டன. வரிகள் ந்யாயமாகத் திட்டஞ்செய்திருந்தன. பட்டாணி ஸுல்தான்களுடைய கொடுங்கோல் ஒழிந்து, இப்பொழுது குடிகளெல்லாரும் குழப்பமொன்றுமின்றி த்ருப்திகரமாய் ஸந்தோஷத்தோடு வாழ்ந்திருந்தார்கள்.

ஆக்ராவில் அக்பருடைய அத்தாணி அதிக ஆடம்பரமானது. யானைச்சாரில் ஐயாயிரம் யானைகளும், குதிரை மந்திரத்தில் பன்னீராயிரம் குதிரைகளும் இருக்கும். ஆயிரம் வேட்டைச் சிவிங்கிகள் வேட்டைக்குத் தயாராக இருக்கும். படிஹ்பூர் ஸிக்ரியில் அவர் கட்டிய அழகிய அரண்மனையில் ஆபரணங்கள் அமிதமாயிருக்கும். அரண்மனையின் ஆசாரவாசலில் ஊற்றுக்குழிகள் கட்டி அவைகளிலிருந்து ஜலம் அலங்காரமாக வர்ஷித்திருக்கும். உயர்ந்த உடுப்புகள் உடுத்துக் கவிகளும் வீரர்களும் மந்த்ரிமார்களும் ஸலவைக்கல் முற்றங்களில் அங்கங்கே கூடி விநோதித்திருப்பர்.

அக்பர் மாண்டபோது அவருடைய ராஜ்யம் காபூலிலிருந்து தக்ஷணம் வரையிலும் மேல்கரையிலிருந்து வங்காள விரிகுடா வரையிலும் விஸ்தரித்திருந்தது. அவர் அநேக ரஜபுத்ர ராஜர்களை ஜயம்பண்ணி முதலில் அவர்கள் மதிப்பையும் அப்பால் அவர்கள் நண்பையும் பெற்றார். அவருடைய



அக்பர் கலகம் செய்த ஒரு சிற்றரசனுடைய பிள்ளையை ஒப்படையப் பெற்றது.

ஸேனையில் ரஜபுத்ர தளகர்த்தர்கள் அநேகர் உண்டு. ராஜ்யத்தை ஸுபாக்களாகப் பிரித்து வரி வஸூலுக்குண்டான வழிதுறைகளை வகைப்படுத்தின மந்த்ரியும், ராஜா தோடர்மல் என்னும் ரஜபுத்ரரே.

அக்பர் பாத்ஷாஹ ஐம்பது வருஷம் ஆட்சிசெய்திருந்து 1605 வருஷத்தில் இறந்துபோனர். அவருடைய அரசாட்சியின் விவரமெல்லாம் அவருடைய நண்பர் அபுல் பஜல் எழுதிய "அயினி அக்பரி" யில் உரைத்திருக்கின்றது.

பராக்ரமியான ஒரு ராணி

ஹஸன் என்பவர் தக்ஷணத்தில் பஹமனீ ராஜ்யத்தை ஸ்தாபித்ததும், அவருடைய பரம்பரை கங்கூ பஹமனீ பரம்பரையென்று வழங்கிவந்ததும், நமக்குத் தெரியும். பஹமனீ ராஜ்யம் சிரும் சிறப்பும் அடைந்து தலையெடுத்துவந்தது. அப்கானிஸ்தானத்தில் பாபர் தம் விரோதிகளோடு சண்டை செய்திருந்த காலத்தில், இந்தியாவில் உள்ள எல்லா ராஜ்யங்களிலும் பஹமனீ ராஜ்யமே மிகவும் பலத்தது. பாபர் இந்தியாவில் ப்ரவேசிப்பதற்குள் பஹமனீ ராஜ்யம் அநேக சிறிய ராஜ்யங்களாகப் பிரிவுற்றுப் பெருமை குறைவதாயிற்று. இங்ஙனம் பிரிவுற்றவை பீரார் பீஜபூர் பீடர் அஹமத்நகர் கோலக்கொண்டா என்பனவாம். இப்போது சொல்லலுற்ற கதை அஹமத்நகரின் ஸம்பந்தமானது.

அஹமத்நகரில் நிஜாம் ஷாஹி வம்சத்தில் எண்மர் ஒருவர்பின் ஒருவராக அரசு செய்துவந்தனர். அப்பால் அரச ஸந்ததி அற்றபடியால், யார் அரசைப் பெறுவதென்று ப்ரதானிகள் ஒருவரோடொருவர் சண்டை செய்தனர். அந்த ராஜ்யத்தில் தண்டத்தலைவனாக இருந்த அபிஸினியன் ஒன்று செய்யலாமென்றான். மந்த்ரியாகிய மியான் மாஞ்சு என்பவன் வேறொன்று செய்யலாமென்றான். கடைசி யரசனுடைய அத்தையாகிய சாண்ட் பீபி யென்பவள் தன்னிஷ்டப்படி செய்யவேண்டுமென்றாள். இந்தப்ரகாரம் அஹமத் நகரில் பெரிய பிரிவினை ஏற்பட்டிருந்தது.

அக்காலத்தில் அக்பருடைய பெருமையும் எவராலும் வெல்லமுடியாத அவருடைய ஸேனையின் ப்ரக்யாதியும் எங்-

கும் ப்ரஸித்தமாய், விரோதிகளெல்லாம் மனங்கலங்கி நடுங்கி-யிருந்தார்கள். மொகலாயரும் ரஜபுத்ரரும் சேர்ந்த ஒரு ஸேனையோடு பாத்ஷாஹவின் குமாரன் மூராத் அஹமத்நகரை நோக்கி வருகிற ஸங்கதி சாண்ட் பீபிக்குத் தெரியவந்தது. பெரிய தண்டத்தலைவர் இருவரும் அந்த ஸமயம் அஹமத்நகர் ஸேனையோடு வெளியேறியிருந்தனர். சில்லாயிரம் வீரர்களே அப்போது அங்கிருந்தவர்கள். அப்படியிருந்தும் சாண்ட் பீபி கொஞ்சமும் அதைர்ய மடையவில்லை. ராஜதானியின் மதில் சுவர்கள் உயரமாய் உரமானவை. கையிலிருந்த வீரர்களும் நல்ல பராக்ரமசாலிகள். மதில் சுவர்களின்மீதுள்ள பீரங்கிகளை வெடிப்பதற்கு அந்த ராணி வெடிமருந்தும் குண்டும் ஆயத்தம்பண்ணினுள்: சுற்றுப்பக்கத்திலுள்ள க்ராமவாஸங்-களில் கிடைக்கக்கூடிய தான்ய தவசங்களையெல்லாம் சேகரித்-துவைத்தாள். பாத்ஷாஹவின் ஸேனை வருவதற்குள் இவ்-வளவும் செய்துமுடித்து, அவள் அந்த ஸேனையின் வரவை எதிர்பார்த்திருந்தாள்.

ஒருநாள் அவள் நகரின் மதில்சுவர்களின்மே லிருந்து பார்க்கையில் மொகல் ஸேனை வருவதைக் கண்டாள். காலாள்-களும் குதிரைவீரர்களும் அன்றியும், மோகல் ஸேனையோடு பீரங்கிகளும் என்ஜினியர்களும் வருவது தெரிந்தது. நகரம் நிசப்தமாயிருந்தது. இரண்டாநாள், மூராத் பாடிவீட்டி-லிருந்து சில என்ஜினியர்களையும் தளகர்த்தரையும் அழைத்-துக்கொண்டு நகரத்தை நோக்கி வந்து, ஸிபாய்களின்மேல் குண்டுகள் படாதபடி சுரங்கமறுக்குமாறு என்ஜினியர்களுக்-கும். ஸிபாய்களை எங்கே கொண்டுபோய் நிறுத்துவதென்று தளகர்த்தருக்கும் உத்தரவு கொடுத்திருந்தார். அஹமத் நக-ரில் அடைபட்டிருந்தவர்கள், இதையெல்லாம் கண்டபோது, எவ்வளவு கவலைகொண்டு தவித்திருப்பார்கள்!

மதில்சுவர்கள் மிகவும் உயரமாகையால், எவ்விதமான ஸிபாய்களும் அவைகளின்மேல் ஏறி நகரத்தைப் பிடிப்பது அஸாத்யம். சுவரைத் தகர்த்து வழிகள் செய்துகொண்டா-லன்றி, ஸிபாய்கள் உள்ளே போவது முடியாது. சுவரைத் தகர்க்கும்படி சுவர்வரையில் கிழறைகள் அமைத்துச் சுவர்-களின் கீழே வெடிமருந்து மூட்டைகளை வைத்து வெடிப்ப தென்று மோகல் என்ஜினியர்கள் வேலைசெய்யத் தொடங்கி

னர். மொகல் கிழறைகளைக் கண்டுபிடித்து அவைகளை அழித்துவிடும்படி சாண்ட் பீபியின் ஸிபாய்களும் தங்கள் சுவரின் ஓரமாய்க் கிழறைகள் தோண்டத் தொடங்கினர். அந்தப்ரகாரம் மூன்று கிழறைகளைக் கண்டுபிடித்து அவைகளை அழித்துவிட்டார்கள். மற்ற இரண்டு கிழறைகளைக் கண்டு பிடிப்பதற்குள், மொகல் அதிகாரிகள் அவைகளிலிட்ட மருந்து மூட்டைகளை வெடித்தனர். இடியோசை போல் வெடிசத்தம் கேட்டது: மேகபடலம்போல் புழுதி கிளம்பியது: அவ்விடத்தில் சுவர் தகர்ந்து பெரிய பொந்தாயிற்று.

மோகல் ஸிபாய்கள் அந்த பொந்தை நோக்கிச் சென்றார்கள். உடனே அஹமத்நகரத்துத் தளகர்த்தர்கள் ஓடிப்போகத் தொடங்கினார்கள். அப்போது சாண்ட்பீபி கவசமணிந்து முகத்தின் மீது முக்காடிட்டுக் கையில் கத்திகொண்டு அந்த பொந்தைக் காவல்செய்யப் போனாள். அவ்வளவில் தளகர்த்தர்கள் மீண்டும் தைர்யமடைந்தனர். அவர்களுடைய ஸிபாய்களும் வந்து கூடினார்கள். மோகல் ஸேனை எவ்வித முயற்சி செய்தும் அந்தப் பொந்தில் புகுந்துபோக முடியாமல் சலித்துப் போனார்கள். சுவரின் எதிரில் உள்ள பள்ளத்தில் சவங்கள் நிரம்பின. பொழுது சாய்கையில் மோகல் ஸேனை திரும்பி விட்டது.

அவளுடைய ஸாஹஸத்தைக் கண்டு அவளுடைய ப்ரதானிகளும் அதிசயித்தார்கள்; அக்பருடைய ஸேனாவீரரும் அதிசயித்தார்கள். அன்று முதல் அவளுக்கு சாண்ட்பீபி என்கிற பெயர் வழங்கவில்லை. எல்லாரும் அவளை சாண்ட் ஸுல்தானா (சாண்ட் மஹாராணி) யென்று வழங்கலுற்றார்கள். அன்றிரவே அந்த பொந்தைச் செப்பனிடும்படி கட்டளையிட்டு எதிரிலேயே நின்றிருந்தாள். பொழுது விடிவதற்குள் சுவர் எழுடி உயரம் கிளம்பியது. வெளியேறியிருந்த தண்டத்தலைவரை உடனே வந்துசேரும்படி அடுத்த நாள் தூதனுப்பினாள். தூதாள்கள் கொண்டுபோன நிருபம் மூராத் கையில் அகப்பட்டது. அந்த ராணியின் பராக்ரமத்தை மெச்சி, மூராத் அந்த நிருபத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி தம் ஸிபாய்களில் ஒருவனை அனுப்பினார். இந்த யுத்தமான பிறகு மொகலாயர் அஹமத்நகரை எதிர்ப்பதில்லை யென்று தவிர்த்து ஒரு ஸமாதான உடன்படிக்கை செய்து

கொண்டார்கள், இவ்விதமாக அந்தப் பாரக்ரமி தம் ராஜ்யத்தின் ஸ்வதந்த்ரத்தைக் காப்பாற்றினாள்.

ஜஹாங்கீர்

ஹிந்துஸ்தான முழுவதையும் ஒரு சக்ரவர்த்தி தன் குடைநிழலில் வைத்து ராஜ்யபாரம்பண்ணுகிற ஸங்கதி இங்க்லண்டை எட்டியிருந்தது. அக்பருடைய குமாரர் ஜஹாங்கீர் இங்கே ஆட்சிசெய்கையில், முதலாவது ஜேம்ஸ் என்பவர் இங்க்லண்டில் ஆட்சிசெய்திருந்தார். ஹிந்துஸ்தானத்துச் சக்ரவர்த்தியோடு மித்ருபாந்தவ்யம் கொண்டாடினால், இங்க்லீஷ் வர்த்தகம் நாளுக்குநாள் விர்த்தியாகுமென்கிற எண்ணங்கொண்டு, ஜேம்ஸ் மஹாராஜன் ஸர் தாமஸ் ரோ என்பவரை ஹிந்துஸ்தானத்துக்கு ஸ்தானாதிபதியாக அனுப்பினார். அந்த ஸ்தானாதிபதி வந்து ஸூரத்தில் இறங்கினார். அங்கே முன்னமே ஓர் இங்க்லிஷ் வர்த்தகசாலை கட்டியிருந்தது. அங்கு நின்றும் அவர் ஆக்ராவுக்குப் போய்ச் சக்ரவர்த்தியின் ஸமஸ்தானத்தை அடைந்தார்.

அவர் நல்ல வ்யுத்பத்தியுள்ள உத்தமபுருஷன். ராஜ ஸபைக்குரிய பாங்குபரிசனைகளை உணர்ந்த ஆசாரபோசகன். அதனால் ப்ரதானிகளோடு உறவாடுவதில் அவருக்கு அச்சம் அளுக்கல் ஒன்றுமில்லை. ப்ரதானிகளும் அவருடைய தன்மையை அறிந்து குறியாய் நடந்துகொள்வர்.

இங்க்லிஷ்காரரைப்பற்றிச் சக்ரவர்த்திக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் நாகரிகமுள்ள பலத்த ஜாதியார் என்பதும் அவர்களுடைய ராஜன் யூரபில் முதன்மையான ராஜர்களில் ஒருவர் என்பதும் அவருக்குத் தெரியாது. ஸர் தாமஸ் ரோ ஆக்ராவில் இரண்டு வருஷ காலம் தங்கியிருந்தார். சக்ரவர்த்தியின் குணுகுணங்களும் ஸங்கதிகளும் அவருக்கு அதிகம் தெரியும். இங்க்லீஷ் ராஜனுடைய ப்ரதாபத்தை எவ்வளவு எடுத்துச் சொல்லியும், ஜஹாங்கிருக்குத் தம்மைப்போல் மாட்சிமை தங்கிய பேரரசர் பூலோகத்தில் இதரர்கள் உளர் என்பது விளங்குவதே யில்லை.

ஆக்ராவிலுள்ள போர்ச்சுகீசியர், சக்ரவர்த்தியிடத்தில் இல்லதும் பொல்லதும் சொல்லி, இங்க்லிஷ்காரர்மீது நிஷ்டூரம் உண்டாக்கும்படி இயன்றமட்டில் முயற்சிசெய்தார்கள். ஆயினும் ஸர் தாமஸ் ரோவின் ஸாமர்த்தியத்தால் இங்க்லிஷ்காரருக்கு வர்த்தக ஸ்வதந்தரம் கொடுக்கும் சாஸனங்கள் கிடைத்தலாயின.

இந்தியாவி லிருந்தபோது தாம் கண்டது செய்ததை யெல்லாம் ஸர் தாமஸ் ரோ தினசரிக்குறிப்பு எழுதியிருந்தார். சக்ரவர்த்தி பிறந்த நாளைக் கொண்டாடும் வைபவங்கள் அந்தக் குறிப்பில் விரித்திருக்கின்றன. அதைப் பார்த்தால் மோகல் சக்ரவர்த்தி ஸமஸ்தானத்தின் ப்ரதாபங்களும் ஆடம்பரங்களும் நன்ருய் விளக்கமாகும். ஸெப்டம்பர் மாதம் முதல் தேதி சக்ரவர்த்தி பிறந்த நாள். அந்த நாளில், ஒரு பெரிய சிங்காரத் தோட்டத்தை நன்ருய் அலங்கரித்து, ஸ்வர்னமயமான துலாக் கோல் நாட்டியிருக்கும். தராசுத்தட்டுகள் பொன்னுல் செய்து ஓரங்களில் கல்லிழைத்திருக்கும். அவைகளைத் தொங்கவிட்டிருக்கும் சங்கிலிகள் பெரியனவாய்ப் பொன்னுல் செய்து, பாரம் தாங்கும்படி பட்டுநூல் கயிறுகள் சேர்த்துக் கட்டியிருக்கும். சக்ரவர்த்தி வருகிறவரையில் ப்ரபுக்கள் சுற்றிலும் ஜமுக்காளங்களின்மீது உட்கார்ந்திருப்பர்.

கடைசியாகச் சக்ரவர்த்தி நவரத்னங்கள் இழைத்த ஆபரணங்களை அநேகமாகத் தரித்துவந்து ஒரு தராசுத்தட்டில் ஏறியிருப்பார். மறுதட்டில் அவருடைய பாரத்துக்கு ஸரியாக முதலில் வெள்ளிமூட்டைகளை ஏற்றுவார்கள். அப்பால் அவைகளை இறக்கிவிட்டு, மறுபடியும் பொன்னும் நவரத்னங்களும் ஏற்றுவார்கள். அவைகளை இறக்கிவிட்டு, மறுபடியும் ஸரிகை வஸ்திரங்களும் பட்டு வஸ்திரங்களும் வாசனைத்ரவ்யங்களும் இன்னும் பலவித பண்டங்களும் ஏற்றுவார்கள். அவைகளை இறக்கிவிட்டுக் கடைசியாய் வெண்ணெயும் தான்யமும் ஏற்றுவார்கள். இதை வாணியரான (Baniyas) வர்த்தகர்களுக்குக் கொடுப்பது வழக்கம். மற்றவற்றை தானமாக ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவர். இந்தச் சடங்கு துலாபாரந்தூங்குதல் எனவழங்கும்.

ஜஹாங்கீருடைய ப்ரியமனைவி நூர்மஹால் என்பவள். அவள், பெர்ஷியவிலிருந்து வந்து அக்பர் ஸமஸ்தானத்தில்

ஸேவித்திருந்த ஓர் உத்யோகஸ்தனுடைய புத்ரி. அவளை மணஞ்செய்துகொள்ள ஜஹாங்கிர் முதலில் விருப்பங் கொண்டார். அக்பர் அதற்கு அநுகூலிக்கவில்லை. வங்காளத்து ப்ரதானி ஒருவன் ஷேர்கான் என்பவன் அவளை மணஞ்செய்து கொண்டான். அவன் இறந்து ஜஹாங்கிர் பாத்ஷாஹ ஆனதும், அவர் அவளை வரவழைத்தார். அவள், கணவ னிறந்த துக்கத்தால் ஆறு வருஷ காலம் வரையில் இணங்காமலிருந்தவள். அப்புறம் ஜஹாங்கிரை மணஞ்செய்துகொண்டாள்.

அவள் மஹா ஸௌந்தர்யவதி: அதிக ஸாமர்த்யம் உள்ளவள். எந்த ஸங்கதியைப் பற்றியும் ஜஹாங்கிர் அவளிடத்தில் ஆலோசித்து, அவள் சொல்லின்படி செய்யத் தொடங்கினர். கொஞ்ச காலத்தில், ஜஹாங்கிர் பேரளவில் சக்ரவர்த்தியே தவிர, உள்ளபடி ராஜ்யபாரத்தை நடத்துகின்றவள் அவளே யாயினள். முதலில் அவளுக்கு வழங்கியிருந்த பெயர் நூர் மஹால்: அதற்கு “அரமனை ஜோதி” என்பது பொருள். அப்பால் அது போய் அவளுக்கு நூர்ஜஹான் என்கிற பெயர் வழங்கலாயிற்று: அதற்கு “ஜக ஜோதி” என்பது பொருள். அவள் உதாரகுணமும் தர்மசிந்தையுமுள்ளவள். எளிய பெண்களுக்குத் தன் கைப்பணத்தைச் செலவிட்டுக் கல்யாணம் செய்விப்பாள். அவளுடைய உதாரத்வத்தைப் பற்றி நன்றி பாராட்டினவர்கள் எத்தனையோ ஆயிரம் பேர் இருப்பர்.

ஜஹாங்கிர் அதிக உல்லாஸ ப்ரியர்: அமிதமாக மதுபானம் செய்பவர். அதனல் ராஜகார்யங்களை, அவர் நல்லபடி நிர்வாஹம் பண்ணவில்லை. நூர்ஜஹானுடைய விவேகத்தால் ராஜ்யம் ஒழுங்காக நடந்துவந்தது.

ஷாஹஜஹான்

பல கட்டடங்களைக் கட்டிய பாத்ஷாஹ

ஜஹாங்கிரின் குமாரர் ஷாஹஜஹானுடைய ஆட்சியில் மோகல் ராஜ்யம் மிகவும் நன்முய்ச் செழித்துத் தழைத்தோங்கியது. அக்காலத்தில் இந்தியாவை வந்து பார்த்த தேசாந்தரிகள் தங்கள் ப்ரயாண விவரங்களைப் புஸ்தகரூபமாக எழுதி-

வைத்தனர். அவர்களில் முக்யமானவர்கள், டவெர்னியர் பெர்னியர் என்னும் ப்ரெஞ்சுகாரர்கள்.

ராஜ்யத்தில் மத்யஸ்தானமாகிய டில்லி ஸமஸ்தாநத்தில் சித்திரப் பேச்சும் கேளிவிலாஸமும் பெருத்திருந்தன. ஸமஸ்தாந ஸம்ப்ரமங்களில் பொருள் அதிகம் செலவழிந்துவந்தது. அதனுல் வரிகள் அதிகப்பட்டன. ஆயினும் அவை ந்யாயமானவை யாதலால், எங்கும் கலஹமில்லாமல் அரசாட்சி ஒழுங்காக நடந்துவந்தது.

இங்ஙனம் ஷாஹ ஜஹான் பல வருஷ காலம் அதிகவைபவத்தோடு ஆட்சிசெய்திருந்தார். ஜயிக்கக்கூடிய மாகாணங்களை யெல்லாம் அவருக்கு முற்பட்ட பாத்ஷாஹக்கள் ஜயித்துவைத்தமையால், ராஜ்யம் செழித்தோங்கி, ராஜவருமானம் அதிகமாயிற்று. ஆகவே ஷாஹ ஜஹான் தம்முடைய ராஜ்யத்தின் பெரிய பட்டணங்களில் அழகான கட்டடங்களைக் கட்டத் தொடங்கினுர். முன்னிருந்த மோகல் பாக்ஷாஹக்களும் அநேக அழகான கட்டடங்களைக் கட்டியிருந்தனர். ஆயினும் அவைகள் இவ்வளவு ஆடம்பரமானவை யல்ல: இவ்வளவு பணச்செலவு கொண்டனவு மல்ல. ஷாஹ ஜஹான் கட்டிய கட்டடங்களில் மிகவும் ப்ரஸித்தி பெற்றது, அவருடைய ப்ரிய மனைவியான மும்தாஜ்மஹாலின் ஞாபகக் குறியாகக் கட்டிய ஸமாதியே. அந்த ஸமாதி அவ்வளவும் ஸலவைக்கல்லால் அமைத்தது: அங்கங்கே ரத்நங்கள் இழைக்கப்பெற்றது. அதை நிர்மித்தவன் ஓர் இட்டாலிய சில்பி. பல்லாயிரம் இந்திய வேலையாள்கள் பல வருஷ காலம் கஷ்டப்பட்டு அந்த ஸமாதியைக் கட்டி முடித்தார்கள். வேலை நடக்கும்போது ப்ரதிதினமும் பாத்ஷாஹ அரமனையின் செங்கற் சாளரத்திலிருந்து வேலையைப் பார்வையிடுவார். காலை வெயிலில் அந்த ஸமாதி வெளேலென்று ப்ரகாசிப்பதும், பக்கத்தில் ஆறு மெல்லென்று அரமனை மதில்களை நோக்கிப் பாய்ந்துவருவதும், அதிக ரம்யமாக இருக்கும். அந்த ஸமாதிக்கு தாஜ்மஹால் என்று பெயர் வழங்கிவருகின்றது.

ஆக்ரா கோட்டைக்குள் கட்டியிருக்கும் அலங்காரமான முத்துமசூதி அவர் கட்டியதே. டில்லியில் அவர் கட்டளையால் ஷாஹ ஜஹான்பாத் என்ருெரு புதிய பட்டணம் ஏற்பட்டது. அப்பால் அந்தப் பட்டணத்தில் ஒரு கோட்டை-




அரசை இழந்த சக்ரவர்த்தி ஆக்ராவுக்குப் போவது.

யும் அரமனையும் கட்டப்பெற்றன. அவர் கொலு வீற்றிருக்கும் டிவான்-இ-அம் என்கிற மண்டபமும் அந்தரங்கமாக வீற்றிருக்கும் டிவான்-இ-காஸ் என்கிற மண்டபமும் அந்த அரமனையைச் சேர்ந்தவை. பிற்கூறிய மண்டபத்தில்,

"பூலோக ஸ்வர்க்கம் ஒன்றுண் டெனுரல்
அது இதுவே அது இதுவே"

என்று பாரஸீக பாஷையில் எழுதியிருப்பதை இன்றும் காணலாம்.



தாஜ் மஹால், ஆக்ரா.

ஷாஹ ஜஹான் முதிர்பருவம் அடைந்தபோது அவருடைய குமாரர் நால்வரும் ஸிம்ஹாஸநம் ஏற அவஸரப்பட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பாத்ஷாஹ ஆகவேண்டும் என்கிற விருப்பம் உண்டாயிற்று. அதனுல், பிதாவின் காலம் முடிவாவதற்குள் அவர்கள் ஒருவரோடொருவர் சண்டைசெய்யத் தொடங்கினர். முடிவில் ஔரங்க்ஜேப் மற்ற ஸஹோதரர்களை வென்று, பிதாவை ஆக்ரா அரமனையில் சிறைப்படுத்திவைத்து, தான் பாத்ஷாஹவென்று பட்டங்கட்டிக்கொண்டார். ஷாஹ ஜஹான் பாவம் கடைசி ஏழு வருஷகாலமும் சிறையிலிருக்கும்படி நேர்ந்தது.

மஹாராஷ்ட்ரத் தலைவராகிய சிவாஜி மோகல் பாதுஷாஹவை இகழ்ந்தது

ஔரங்க்ஜேப் கொஞ்சமும் நீதிநெறி தவறாதவரே ஆயினும் மதவைராக்ய முள்ளவ ராகையால், இந்தியா முழுவதும் தன்னுடைய மதக்கோள்கையை அநுஸரிக்கவேண்டு மென்பது அவருடைய விருப்பம். அக்பரைப்போல் மற்ற மதங்களிலும் மதஸ்தரிடத்திலும் உள்ள நன்மைகளை ஸமாஸமாகப் பாராட்டும் தன்மை அவரிடத்தில் இல்லை. ஹிந்து மதத்தின்மீது அவருக்கு த்வேஷம் அதிகம். தன்மட்டில் ஸுன்னி பிரிவைச் சேர்ந்தவ ராகையால், தக்ஷிணத்தில் ஷியா பிரிவினரான கோலக்கொண்டா பிஜபூர் நவாபுகளின்மீதும் அவருக்கு த்வேஷம் அதிகம்.

மதத்வேஷம் தவிர ஔரங்கஜேபிடத்தில் வேறு குற்றம் ஒன்று மில்லை. மஹாதைஸ்வர்யமும் மஹா போகங்களும் சூழவிருந்தும், ரத்னாபரணங்க ளணிவதும் உயர்ந்த வஸ்த்ரங்கள் தரிப்பதுமின்றி, ஸாமாந்யமான உடை உடுத்து ஸாதாரணமான உணவு உண்டிருந்தார். மதுபானம் பண்ணுகிற வழக்கம் அவரிடத்தில் பரிஷ்காரமாய்க் கிடையாது. ஒழிவுகாலத்தில் வேதத்தைப் பார்த்தெழுதுவார், அல்லது அப்படிப்பட்ட ஆத்மார்த்தமான கார்யம் எதாவது செய்வார். அவர் எப்போதும் சோம்பியிருப்பதே யில்லை.

அரசாட்சி செய்ய ஆரம்பித்ததும், ஹிந்து மதத்துக்கு விரோதமானவைகளை சீக்ரத்தில் தேடலுற்றார். பட்டாணியரசர்கள் ஹிந்துக்களுக்கு விதித்திருந்த ஜாஸ்யா என்னும் வரியை அக்பர் ஒழித்துவிட்டார். அதை மறுபடியும் ஔரங்க்ஜேப் ஏற்படுத்தினர். இந்த வரி ஹிந்துக்களுக்கு இயல்பாய் அருவருப்பைத் தருவது. அதனுல் ராஜபுத்ர்கள் மனக்கொதிப் படைந்தனர்: தக்ஷிணத்திலுள்ள ஹிந்துக்கள் கலஹத்துக்கு ஆரம்பித்தனர்.

ஹிந்துஸ்தான முழுவதையும் அக்பர் ஜயித்தது முதல், மோகல் பாத்ஷாஹ்க்களுக்குப் பேரும் புகழும் பெரிதாயிற்று. அதனுல் அவர்களுடைய விரோதிகள் யாவரும் மனஅடக்கம் அடைந்திருந்தார்கள். இந்தியாவில் உள்ள எண்ணிக்கையில்-



லாத ஜனங்களின் உயிர்களும் திரள்திரளாகக் குவிந்துள்ள த்ரவ்யங்களும் பாத்ஷாஹவின் அதீனமன்றோ? டில்லி அரமனையில் இருந்தபடியே ஔரங்க்ஜேபின் நாவசைந்தால், அவருடைய நாடுமுழுவதும் அசையும். அவர் வாயிலிருந்து ஒரு வார்த்தை புறப்பட்டால், அதை நிறைவேற்ற ஆயுதபாணிகளாய்ப் பதினாயிரம் வீரர் ஆஜராயிருப்பர். அவர் முகத்தில் கோபக்குறி தோன்றினால், எப்படிப்பட்ட பராக்ரமசாலிக்கும் நடுக்க முண்டாகும். அப்படிப்பட்ட ஏகசக்ராதிபதியின் நிர்வாஹம் எவ்வளவென்று ஒருகை பார்க்கும்படி தக்ஷிணத்தில் ஒரு மூலையில் ஒருவன் ஏற்பட்டான். அவன் மஹாராஷ்ட்ர கூட்டத்தைச் சேர்ந்தவன். இன்னும் கௌமாரபர்வம் அடை-

யாத ஒரு காளே: தேவகிரி ராஜாக்களின் கால்வழியில் வந்தவன்: சிவாஜி என்று பெயர்கொண்டவன்.

மேற்கு மலேத்தொடரில் ஒரு பாறையின்மீது ராய்கர் என்றொரு கோட்டை உண்டு. அது சிவாஜி தனக்கும் தன் பரிவாரத்துக்கும் அரனுகக் கட்டிக்கொண்ட கோட்டை: முதலில் சிவாஜியும் அவரைச் சேர்ந்த வீரசூரர்களும் துடிதுடிப்பான மட்டங்களின்மீது ஏறிக்கொண்டு மலேயிலிருந்து இறங்கிப்போய் பிஜபூர் ராஜ்யத்திலுள்ள பட்டணங்களே எதிர்க்கத் தொடங்கினர். பெரிய ஸேனேகள் வந்தால், அவர்கள் வேறுவேருகப் பிரிந்து ஓடிப்போய்விடுவர்: அபாயம் நீங்கினுல் மறுபடியும் ஒன்றுகூடி வந்து சூறையாடுவர்.

உள்ளபடியே பெரிய தளகர்த்தருக் குரிய லக்ஷணங்களெல்லாம் அந்த மஹாராஷ்ட்ரச் சிறுவரிடத்தில் அமைந்திருந்தன. அவரிடத்தில் தைர்யமு முண்டு; சாதுர்யமு முண்டு: தம் கிழுள்ளவர் தம்மிடம் நம்பிக்கைவைக்கும்படி செய்து கொள்ளும் சக்தியு முண்டு. ஆயினும் அவரிடத்தில் ஒரு பக்கம் கொடுமையு முண்டு; கபடமு முண்டு. தக்ஷணத்தில் உள்ள ஹிந்துக்களே ஐக்யப்படுத்தினவர் அவரே. இந்த ஐக்யமே ஆரம்பமாக விர்த்தியடைந்து, மஹாராஷ்ட்ர ஜாதியார் பலாட்யராகி, மொகல் ராஜதானியான டில்லியையும் கைப்பற்றத் தக்கவராயினர். சிவாஜியின் ஜமாவோடு சண்டை செய்ய முடியாமல் பிஜபூர் ஸேனேகள் சலித்துப்போயின. அதனுல், சிவாஜி பிஜபூர் பட்டணங்களின்மீது படையெடுக்காம லிருக்கிறபக்ஷத்தில், அவருக்கு வருஷவாரியில் சௌத் என்கிற பகுதிப்பணம் கட்டுவதாக பிஜபூராசன் ஏற்பாடு செய்துகொண்டார்.

அதன்மேல் சிவாஜி புதிய பட்டணங்களே ஜயிப்பதென்று புறப்பட்டார். அவ்வளவிலே ஔரங்கபாத் என்னும் மொகல் பட்டணத்தை எதிர்த்தார். அதனுல் ஔரங்க்ஜேபுக்குக் கோபம் மூண்டது. அவர் அனுப்பிய ஸேனே மஹாராஷ்ட்ர அதிபதியைப் பிடிக்க முடியாமல் திரும்பிவிட்டது. பாத்ஷாஹ தம்மட்டில் மஹா பராக்ரமசாலியாகையால், சிவாஜியின் ஸௌர்யத்தை மெச்சி, சிவாஜியை டில்லிக்கு வருகவென் றழைத்தார்.

பாத்ஷாஹவைப் பார்க்கும்படி சிவாஜி டில்லிக்குப்போ-ஞர். தம்முடைய ஸௌர்யத்தால் ப்ரக்யாதி பெற்றவரே யாயினும், பாத்ஷாஹவின் அதிகார பலத்தைக் கண்டபோது அவருக்கு அச்சம் உண்டாயிற்று. மொகலாயர் கௌரவ-மானவர்கள் என்பது ப்ரஸித்தமாகையால், அவர்கள் வசத்-தில் இருப்பதில் பத்ரக்குறைவு ஒன்றுமில்லை யென்றே எண்ணியிருந்தார். சிவாஜி அபாயகரமானவ ராகையால், பாத்ஷாஹ தம் கௌரவகுணத்தைத் தவிர்த்து சிவாஜியைச் சிறைப்படுத்த விரும்பினர். இறங்கியிருந்த வீட்டில் தம்-மைச் சிறைப் படுத்திவைத்ததைக் கண்டு, சிவாஜி தந்த்ரமாய் ஒரு மூங்கிற் பெட்டியில் ஏறிக்கொண்டு, தம்முடைய ஆள்-கள் ஏதோ ஸாமான் எடுத்துப்போவதாகக் காவலருக்குப் போக்குக் காட்டிவித்து, வெளிப்பட்டு வந்து தக்ஷிணத்தை யடைந்தார். அடைந்தவுடனே மொகலாயர்மீது சண்டைக்-குப் புறப்பட்டு ஸூரத்பட்டணத்தைச் சூறையாடி, அணி-வகுத்துச் சண்டைசெய்த ஒரு மொகல் ஸேனையைத் தோற்-கடித்தார். தங்களைக் கண்டு அஞ்சாத விரோதியை மொக-ல்யர் இதற்கு முன் எங்கும் கண்டதில்லை.

அதன்மேல் தக்ஷிணத்தை வெற்றிகொள்ள வேண்டும் என்-கிற அவா ஔரங்க்ஜேபுக்கு உண்டாயிற்று. அங்கே ஏற்பட்-டிருக்கிற ராஜ்யங்களை வென்றுவிட்டால் இந்த மஹராஷ்ட்ர பாலனை ஸுலபமாய் வென்றுவிடலாம் என்பது அவருடைய எண்ணம். ஆகவே இதற்குமுன் எப்பொழுதுமில்லாத அவ்-வளவு பெரிய மொகல் சேனையைக் கூட்டிக்கொண்டு பிஜ-பூர், கோலக்கொண்டா பட்டணங்களின்மீது படையெடுத்துப் போனர். அந்தப் பட்டணங்களின் ஸேனைகள் அதிக வீரத்-தோடு எதிர்நின்று சண்டை செய்தமையால், அவைகளைப் பிடிப்பது மிகவும் கஷ்டஸாத்ய மாயிற்று. ஔரங்க்ஜேபின் ரஜபுத்ர தளகர்த்தர்களுக்கு அவரிடத்தில் நம்பிக்கையுமில்லை: விசுவாசமு மில்லை. அதனல் அவர்கள் முழுமனதோடு வேலை செய்யவில்லை. ஆயினும் தக்ஷிணத்திலுள்ள முஸல்மன் ராஜ்யங்கள் ஜயமாகிவிட்டன. இனி கவனிக்க வேண்டிய விஷயம் மஹராஷ்ட்ரர்களை ஜயம்பண்ணுவதே.

இந்த வேலை மிகவும் ஸுலபஸாத்ய மென்று ஔரங்க்-ஜேப் எண்ணினர். அங்ஙனம் எண்ணியது பெரிய தவறு.

மஹாராஷ்ட்ரர்கள் சண்டைபோடுவதில் அதிக தந்த்ரமுள்ளவர்கள். அவர்கள் மொகலாயரோடு நேராக யுத்தத்துக்கு வருவதில்லை. பெரிய ஸேனையிலிருந்து சிறிய பிரிவுகள் பிரிந்து தனித்திருக்கும்போது, அவைகளை மஹாராஷ்ட்ரர் வெட்டிவிடுவர். மொகல்ஸேனை பலங்கொண்டு எதிர்க்க வருகிற ஸமயத்தில் மஹாராஷ்ட்ரர் தங்கள் மட்டங்களின் மீதேறிப் புறுதகதியாய்ப் பாய்ந்து போய்விடுவார். சிவாஜி இறந்த பிறகு அவருடைய குமாரர் சண்டையை நடத்திவந்தார்.

மொகலாயர் தக்ஷிணத்தில் இருபத்தைந்து வருஷகாலம் தங்கியிருந்தனர். பாத்ஷாஹவின் தலைமயிரும் நரைத்துப் போயிற்று. மஹாராஷ்டிரரை வென்றபாடில்லை. கடைசியாய் ஔரங்க்ஜேப், ஸேனையை அஹமத்நகருக்குக் கொண்டுபோய்விட்டார். ஒவ்வொரு பக்கத்திலும் ரஜபுத்ரரும் மஹாராஷ்ட்ரரும் கலஹத்துக்கு ஆரம்பித்தார்கள். முடிவில் மொகலாயர் தோல்வியுற்றனர். அஹமத்நகரை அடைந்த பிறகு கொஞ்சகாலத்தில் ஔரங்க்ஜேப் அந்த்யதசை யடைந்தார். மொகல் ராஜ்யமும் அவரோடு முடிவாயிற்று.

திடமனதுள்ள ஓரரசன்

பிஜபூர் தோல்வியடைந்த பிறகு ஔரங்க்ஜேப் கோலக்கொண்டாவின்மீது படையெடுத்துப் போனார். கோலக்கொண்டா நவாப், அப்துல் ஹஸன், தாம் கீழ்ப்படிவதாக அனுப்பிய தூதை அங்கிகரித்துப் பாத்ஷாஹ போய்விடுவாரென்று எண்ணினர். ஆயினும் மொகல் ஸேனை சிறிது சிறிதாய் நெருங்கிவருகிற செய்தியைக் கேட்டவளவில், சண்டை செய்து சண்டையில் மாண்டாலும் மாள்வதேயென்று துணிந்து, அவர் சண்டைக்கு வேண்டியவைகளை ஆயத்தம் பண்ணினர்.

நீண்டகாலம் தம் கோட்டையைக் காவல்செய்திருந்தால், ஔரங்க்ஜேப் சலிப்படைந்து முற்றுகை தவிர்த்துப் போய்விடுவாரென்றெண்ணி, கோலக்கொண்டா நவாப் தான்யதவசங்களை மிகுதியாகச் சேகரித்துவைத்தார். மதில் சுவர்களின்

மீதுள்ள பீரங்கிகளை வெடிப்பதற்கு வேண்டிய பீரங்கி மருந்தும் குண்டும் அதிகமாகவே இருந்தன.

கோலக்கொண்டாவை அடைந்ததும், மொகல் ஸேனை, ஊரார் வெளியிலிருந்து கோட்டைக்குள் புகாதபடிக்கும், கோட்டையிலிருப்பவர் வெளிவராதபடிக்கும், கோட்டையைச் சூழ்ந்துகொண்டது. ஒளரங்க்ஜேப், கோட்டை மதில்களின் உயரத்தையும் சுற்றிலும் நீர் நிறைந்திருந்த அகழியின் ஆழத்தையும் ஆராய்ந்து பார்த்தார். கோட்டை மிகவும் உரமானது; சுவர்களைத் தகர்த்தாலன்றி உட்புகுவது முடியாத காரியம்; ஆகவே அகழியைத் தூர்த்துக்கொண்டு பீரங்கியால் சுவர்களைத் தகர்க்கவேண்டும்: இதற்கு அநுகூலமாகக் கோட்டைக்கு ஸமீபமாகச் சுரங்கங்க ளறுக்கும்படி ஒளரங்க்ஜேப் தம்முடைய என்ஜினியர்களுக்கு உத்தரவு செய்தார்.

மொகல் என்ஜினியர்களை வேலை செய்யவொட்டாமல் துரத்திவிடும்படி நவாப் பட்டணத்திலிருந்து ஐம்பதினாயிரம் குதிரைவீரர்களை அனுப்பினர். மதில்களின் மீதிருந்த ஸிப்பாய்களும் பீரங்கிக் குண்டுகளை வெடித்துக்கொண்டிருந்தார்கள். ஆயினும் ஒளரங்க்ஜேபின் என்ஜினியர்கள் இரவோடு இரவாய் இருட்டில் அதிகவேலை நடத்திப் பட்டணத்துச் சுவர்களின் அருகில் சுரங்கங்கள் அறுத்துவந்தனர். சுவர்களின் மேலிருந்து வரும் பீரங்கிக் குண்டுகளுக்குத் தப்பி, மொகல் ஸிப்பாய்கள் சுரங்கங்களின் வழியாய் நகர்ந்து செல்வது ஸாத்யமாயிற்று. மொகல் ஸிபாய்கள் மண்மூட்டைகளைப் போட்டு அகழியைத் தூர்க்கலாயினர். முதல் மூட்டையைப் பாத்ஷாஹவே மூடித்தைத்தார். அகழியை இங்ஙனம் சிலர் தூர்த்திருக்கையில், மண்மேடுகளின்மீது சிலர் பீரங்கிகளை யேற்றிக் கோட்டைக்கு நேராக பீரங்கிக் குண்டுகளை வெடித்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்விதம் நடந்துவருகையில் ஒருநாள் இரவில் மொகல் வீரர்கள் சுவர்களின்மீது ஏணிகளைச் சார்த்தி மேலே ஏறினர்கள். ஒரு நாய் குரைக்கலுற்றது. க்ஷணநேரத்தில் கோலக்கொண்டா ஸிப்பாய்கள் சுவர்களினிடம் பாய்ந்துவந்து மொகல் ஸிப்பாய்களை மடக்கித் துரத்தி ஏணிகளையும் தள்ளிவிட்டார்கள்.



ஔரங்க்ஜேப் பிஜபூரை முற்றகை செய்தது.

இவ்வளவு காலமும் மொகல் ஸேனைக்கு உணவு கிடைப்பது கஷ்டமாயிருந்தது. மஹாராஷ்ட்ரர் கோலக்கொண்டாவுக்கு ஒத்தாசையாக வந்தனர். சிவாஜியின் குமாரரான ஸம்பாஜி

அவர்களைக் கூட்டிவந்தார். அவர்கள் பட்டணத்தைச் சுற்றிப் பல மைல்தூரம் வரையில் மாஸூல்களை அழித்து விட்டார்கள். அதனால் மொகல் ஸேனைக்கு நெல்லும் கிடைக்கவில்லை; அரிசியும் கிடைக்கவில்லை. ஸேனையில் அநேகருக்குக் காய்ச்சலும் பலவித வ்யாதிகளும் கண்டிருந்தன. வர்ஷம் வர்ஷிக்கையில் கோலக்கொண்டா ராஜன் தம் துருப்புக்களோடு பாய்ந்துபோய் அநேகரைச் சிறைப்படுத்தி வந்தார். ராசி ராசியாகக் குவித்திருந்த தான்ய தவசங்களைச் சிறையாளிகளுக்குக் காட்டி, பாத்ஷாஹ முற்றுகையைத் தவிர்த்து விட்டால் அவருடைய ஸேனைக்கு ஆஹாரம் இடுவதாக அவர்களிடத்தில் சொல்லியனுப்பினர். கைகளைக் கூப்பிக்கொண்டு ஹஸன் தம்மை வந்து வணங்கினாலொழிய முற்றுகையைத் தவிர்ப்பதில்லை யென்று ஔரங்க்ஜேப் உறுதியாய்த் தெரிவித்தார்.

கோலக்கொண்டாவை வெல்வதற்கு மநுஷ தைர்யமும் பீரங்கி மருந்தும் குண்டும் பலவிதமான யுத்த தந்த்ரங்களும் எதுவும் பயன்படவில்லை. இவைகளால் முடியாத கார்யம் கடைசியில் வஞ்சகத்தால் முடிவுபெற்றது. பட்டணத்தில் இருந்த எவரோ ஒருவர் ஒரு வாயிலைத் திறந்துவிட்டார். முற்றுகை செய்திருந்தவர்கள் கபகப வென்று புகுந்துவிட்டார்கள். கோட்டையைக் காவல் செய்திருந்த தளகர்த்தரில் உண்மையுள்ளவனாகிய அப்டர் ரஜக் என்பவன் நடந்தசெய்தியைக் கண்டு தன் குதிரையின்மீது தாவியேறி ஒரு டஜன் ஸிப்பாய்களோடு வாயிலை நோக்கிப் பாய்ச்சலாகப் போனான். விரோதிகள் பாய்ந்து வருவதை நிறுத்த முடியவில்லை. உடம்பெல்லாம் காயமாய்ச் சண்டை போட்டுக்கொண்டே அவன் வெளியில் போனான்.

தெருக்களில் உண்டான ஆரவாரத்தையும் புலம்பலையுங் கேட்டு, அரசன் தன் பட்டணம் விரோதிகளின் கையில் அகப்பட்டதென்று தெரிந்துகொண்டார். உடனே அவர் அந்தப்புரமடைந்து பிரியாவிடை பெற்றுக்கொண்டுபோய் ஸபாமண்டபத்தில் வீற்றிருந்து, மொகலாயர் வருகையை எதிர்பார்த்திருந்தார். ஔரங்க்ஜேபின் உத்யோகஸ்தர்கள் அங்கே தாவி வந்தபோது, ஓரதிசயமும் நடவாததுபோல், அவர் ராஜகௌரவத்தோடு அவர்களை உபசரித்தார்; அப்பால் தம்

குதிரையைக் கொண்டுவரச் சொல்லி, அவர்களோடு ஔரங்க்-ஜேபிடம் ஸவாரிபோனுர். விரோதியானுலும் தைர்யமுள்ள-வனை மெச்சுவது ஔரங்க்ஜேபின் இயற்கையாகையால், அவர் கோலக்கொண்டா அரசனை மரியாதையோடு உபசரித்-தார்.

தக்ஷிண ராஜ்யங்களைப் பற்றிய ஸங்கதி

பஹமனி ராஜ்யம் சிற்றரசுகளாகப் பிரிவுபட்டது முதல் கோலக்கொண்டாவும் பிஜபூரும் பலாத்காரத்தோடு சலிக்காமல் சண்டைசெய்யக் கூடியவைகளா யிருந்தன. ஆடில் ஷாஹி வம்சத்தைச் சேர்ந்த பிஜபூராசர்கள் கோலக்கொண்டா அரசர்களைப்போலவே சண்டைசெய்வதில் ஸாமர்த்ய முள்ள-வர்கள். ஒருமுறை பிஜபூரில் இளம்பிராயமுள்ள ஒரு ராஜ-குமாரன் ஸிம்ஹாஸந மேறினுன். அவனுக்கு வயது வரு-கிறவரையில் ராஜ்யபாரத்தை நடத்தும்படி ஓரதிகாரி ஏற்பட்-டிருந்தான். அவன்தானே ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொள்ள விரும்பி ராஜகுமாரனைச் சிறைப்படுத்தும்படி ஒரு நாள் ஸிப்பாய்களோடு அரமனைக்குப் போனுன். ராஜகுமாரனையும் அவன் மாதாவையும் காவல் செய்திருந்த ஸிப்பாய்கள் அர-மனையில் சிலரே இருந்தனர். பராக்ரமியாகிய மாதா என்ன செய்தாள் தெரியுமா?

அந்தராணி முதலில் அரமனை வாயில்களை மூடிவிடும்படி கட்டளையிட்டாள். ராஜனைக் கைவிடவேண்டாமென்று காவ-லாயிருந்த ஸிப்பாய்களை வேண்டிக்கொண்டாள். அப்பால் அவளும் வேறொருத்தியும் கவசமணிந்து ஆண்வேஷத்தோடு கையில் வில்லும் அம்பும் எடுத்துக்கொண்டு வெளியில் வந்-தனர். ராஜகுமாரன் அவர்கள் பின்னுல் வந்தான். அவ-னுடைய பிதாவின் குடையை ஒரு துருக்கி யடிமை அவன்-மீது பிடித்துவந்தான். அரமனை மதில் சுவர்களின்மீது நூலேணிகளை விட்டிறக்கினுர்கள். ராஜவிசுவாசமுள்ள ஸிப்பாய்கள் பின்னும் சிலர் பட்டணத்திலிருந்து அவ்வே-ணிகளின்மீதேறி அரமனையில் வந்திறங்கினர். அதன்மேல் எல்லா ஸிப்பாய்களும் கூடி அதிகாரியின் தைர்யமற்ற ஸிப்-பாய்களைத் துரத்திவிட்டனர்.

பிஜபூர் ஒரு பெரியபட்டணம். அதில் அலங்காரமான கட்டிடங்கள் அநேகம் உண்டு. இந்தப் பட்டணத்திலிருந்துதான்பெரிஷ்டா (Ferishta) என்பவர் ப்ரஸித்தமான சரித்ரம் எழுதினர். அங்ஙனம் எழுதும்படி அவரை உத்ஸாஹப்படுத்தி ஆதரித்தவர் பிஜபூர் பேரரசர்களில் ஒருவரே.



பிஜபூரைப்போலவே கோலக்கொண்டாவும் ஒரு பெரிய ராஜ்யத்துக்கு ராஜதானியாக இருந்தது. அந்த ராஜதானி அதிக நேர்த்தியானதென்பதற்கு இன்றளவுமுள்ள அநேக அழகிய கட்டிடங்கள் ஸாக்ஷியாயிருக்கின்றன. கோலக்கொண்டாவில் அரசு செய்திருந்த வம்சத்துக்கு குட்ப் ஷாஹி வம்சம் என்று பெயர் வழங்கியிருந்தது.

கோலக்கொண்டா ராஜ்யமும் பிஜபூர் ராஜ்யமும் அடிக்கடி ஒன்றோடொன்று சண்டைசெய்திருந்தன. அவைகளுக்கு மிகவும் வைரமான விரோதி விஜயநகர ஹிந்து ராஜ்யம். விஜயநகரத்து ராஜர்களுக்கு முஸல்மன்களுடைய நாடுகளை ஜயம்பண்ணவேண்டுமென்பது விருப்பம். முஸல்மன்களுக்கு எப்போதும் ஹிந்துக்களோடு சண்டைசெய்வது விருப்பம். முஸல்மன் ஸேனைகளுக்கும் ஹிந்து ஸேனைகளுக்கும் பல யுத்தங்கள் நடந்தன. முஸல்மன் சேனைகள் பலமுறை கர்நாடகத்தில் சூறையாடின. இங்ஙனம் சூறையாடும்போது, தங்கள் மாஸூலைச் செவ்வையாய் விளைப்பது தவிர வேறு கவலையில்லாத ஸாது ஜனங்களான க்ராமவாஸிகள் எத்தனை பேர்கள் கொலையுண்டார்களென்பது இப்போது ஒருவருக்கும் தெரியாது. கடைசியாகத் தலைக்கோட்டை (Talikota) யில்

நடந்த பெரிய யுத்தத்தில் ஹிந்துக்கள் தோல்வியடைந்தனர். அதற்கப்பால் பிஜபூர் தென்னிந்தியாவில் மிகவும் பலத்த ராஜ்யமாயிற்று.

விஜயநகர ராஜ்யம் இருந்த இடம் எங்கே? இந்த ப்ரஸித்தமான ராஜ்யத்தின் ப்ரதான பட்டணத்தில் இருந்த கட்டிடங்கள் இடிந்து பாழடைந்திருப்பதை தக்ஷிணத்தில் ஹம்பியென்னும் க்ராமத்தருகில் இப்போது காணலாம். இங்கே ஒரு காலத்தில் ராஜமாளிகைகளும் யானைச்சார்வுகளும் குதிரைமந்திரங்களும் இருந்தன. கொலுமண்டபம் இன்னும் அப்படியே இருக்கிறது. துங்கபத்ரா நதிதீரத்தில் இந்தப் பட்டணத்தை ஸ்தாபித்தவர்கள் ஹரிஹரன் (ஹக்கா) புக்கா என்கிற ஸஹோதரர் இருவர்.

இந்த ஸஹோதரர் இருவரும், மஹமத் துக்ளக்கோடு யுத்தம்பண்ணி, அநேக ஹிந்துக்களைத் தம்மைச் சூழச் சேர்த்துக்கொண்டார்கள். அவர்களுடைய சிற்றரசு அப்பால் பெரிய ராஜ்யமாயிற்று. அவர்கள் ஸ்தாபித்த பட்டணத்தின் பெயரே அந்த ராஜ்யத்துக்குப் பெயராயிற்று.

மோகல் அரசாட்சியின் வீழ்ச்சி

ஔரங்க்ஜேப் இறந்தபோது, ராஜ்யமுழுவதும் ஹிந்துக்கள் கலஹத்துக்கு ஆரம்பித்தார்கள். ரஜபுத்ரர்கள் ஜாஸ்யா வரியைக் கட்டுவதில்லையென்று மறுத்தார்கள். மஹராஷ்ட்ரர் சண்டைசெய்வதை நிறுத்தவேயில்லை. ஔரங்க்ஜேபின் கொடுமையால் வட இந்தியாவில் இன்னொரு ஹிந்து பிரிவினர் பலாஷ்டிகராகிக் கிளம்புதலாயினர். இவர்கள் சிக்கர்கள்.

வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பெரியோர்கள் ஏற்பட்டு வெவ்வேறு மதங்களை ஜனங்களுக்கு ப்ரசாரணம் பண்ணுவது ஸஹஜம். இவர்கள் உத்தமர்கள்: ஜனங்கள் செம்மைப்படவேண்டு மென்கிற நோக்கங்கொண்டே தங்கள் காலத்தையெல்லாம் கழித்தவர்கள். ஹிந்துமதச் சார்பாக ப்ரசாரணம் பண்ண முன்னாளில் ஏற்பட்டவர் சங்கராசார்யர். புத்தமதம் இந்தியாவில் தலைகாட்டாமல் போய்விட்டதற்கு அவருடைய மதப்ரசாரணமே காரணம். அப்பால் ராமாநுஜர் சைதந்யர் என்பவர்கள் ஏற்பட்டனர்: அவர்களும் வ்யத்பத்தி-



கோவிந்த ஸிங்.

யும் விவேகமுமுள்ள உத்தமர்களே. இந்தியாவின் வடமேற்கில் கபீர் என்பவர், ஹிந்துக்களையும் முஹம்மதியர்களையும், மதவித்யாஸத்தை மறந்து, ஒரே மதத்தைப் பின்பற்றும்படி வற்புறுத்தினர். இது உத்தமமான கருத்து. இந்த மதப்ரசாரகர் எல்லாரினும் முற்பட்டவர் புத்தர்.

பட்டாணியரசர்களில் கடைசியரசன் டில்லியில் ஆட்சி செய்திருந்தபோது, லாஹுரில் விவேகமுள்ள மதப்ரசாரகர் ஒருவர் பிறந்தார். இவர் சங்காரசார்யருக்கு நெடுங்காலம் பிற்பட்டவர். சங்கரர்போலவே இவரும் மதச்சீர்திருத்தத்தை நாடினவரே. இவருக்கு நாநக் என்பது இளமையில் இட்ட பெயர். அவரிடத்துள்ள ப்ரீதியால் பலர் அவரை பாபா நாநக் எனவழங்கினர். மனிதரெல்லாருக்கும் கடவுள் ஒருவரே; ஹிந்துக்களாயினும் முஸல்மன்களாயினும் ஜைநராயினும் புத்தராயினும் எவராயினும் எல்லாமனிதரிடத்தும் கடவுள் ஸமமாகவே அருள்செய்கிறார் என்பது அவருடைய கொள்கை. அவரிடத்தில் மதத்வேஷ மில்லை: எவரிடத்தும் உருக்க முள்ளவர். எல்லா மதஸ்தரும் பரஸ்பர விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டு மென்பதே அவருக்குப் பூர்ணமான கருத்து. பஞ்சாப் ஜனங்களெல்லாரும் அவரை கௌரவித்தார்கள். அநேகர் அவருடைய போதத்தை ஏற்றுக்கொண்டனர். அவருடைய மதத்தைப் பின்பற்றினவர்களுக்கு சிக்கர் எனப் பெயர் வழங்கும். அந்த வார்த்தைக்கு சிஷ்யர் என்பது பொருள்.

சிக்கர்களுக்கு நாநக் ஆதி குரு. அவருக்கு அப்பால் ஒன்பது குருமார்கள் ஏற்பட்டிருந்தார்கள். அவர்களுடைய வேதம் க்ரந்த் என்பது.

சிக்கரைப் பாஷண்டிகளென்று கொண்டு ஔரங்க்ஜேப் அவர்கள்மீது த்வேஷங்கொண்டார். பல நூற்றுண்டுகளுக்கு முன்னே கஜ்னி மஹமூத் ஹிந்துக்களைக் கொலை செய்தபோது, தாம் அங்ஙனம் செய்வது புண்யமென்று எண்ணினர். ஔரங்க்ஜேபும் ஒன்பதாவது சிக்ககுருவைக் கொன்றபோது அவ்விதமே எண்ணினர். அவ்வளவு காலமாகியும் இன்னும் முஹம்மதியரில் பலர் மதத்வேஷத்தை ஒழிக்கவேயில்லை. ஒன்பதாவது குரு கொலையுண்டபோது அவருடைய குமாரர் கோவிந்தருக்கு முஹம்மதியர் மீது வைஷம்யம் பொங்கி

யெழுந்தது. அது வரையில் சிக்கர்கள் தங்கள் மதபோதத்தின்படி ஒரு சோலிக்கும் போகாத பரம ஸாதுக்களாய் இருந்தவர்கள். கோவிந்தரை குருவாகக் கொண்ட பிறகு, அவர்கள் ஸிங்க் (அதாவது ஸிம்ஹம்) என்று பட்டந் தரிக்கலாயினர்: தாடியை வளர்க்கத் தொடங்கினர். சாகிற வரையில் முஹம்மதியரோடு சண்டை செய்வதென்று அவர்கள் ஒரு கட்டாகக் கூடினார்கள். கோவிந்த ஸிங்க் கொலையுண்ட பிறகு, ஸர்தார்கள் என்னும் சிக் தலைவர்கள் பஞ்சாபில் பல இடங்களில் கோட்டைகளைக் கட்டினார்கள். பஞ்சாபிலுள்ள முஸல்மன்களை எதிர்த்து, அவர்கள் மஸூதிகளை இடித்துத் தகர்த்து அவர்கள் குருமார்களைக் கொலைசெய்து, அவர்களுடைய க்ராமங்களைப் பாழாக்கினார்கள்.

மஹாராஷ்டிரர் டில்லிக்குச் சென்றது

ஔரங்க்ஜேப் தக்ஷிணத்தில் மஹாராஷ்ட்ரரை வெல்ல முடியாமல் போய்விட்ட செய்தியை முன்னே வாசித்திருக்கிறோம். ஔரங்க்ஜேபின் ஸேனைகள் திரும்பிப் போய்விட்ட பிறகு மஹாராஷ்ட்ரர் தங்கள் படைக்கலங்களை எறிந்துவிடவில்லை. சிவாஜி மஹாராஜாவின் தூண்டுகோலால், அவர்கள், அமைதியாய் க்ருஷி செய்வதை விட்டொழித்து, முஹம்மதியரோடு சண்டை செய்வதே தொழிலாகக் கொண்டனர். பாத்ஷாஹவின் ஸேனைகளைத் தோற்கடித்த பிறகு, அவர்கள் இந்தியாவைப் பழையபடி ஒரு பெரிய ஹிந்து ராஜ்யமாக ஏன் செய்யக்கூடா தென்கிற எண்ணத்தைக் கொள்ளலாயினர்.

ஸம்பாஜி இறந்த பிறகு, சிவாஜியின் ஸந்ததியார்களுக்கு சிவாஜியிடத்திலிருந்த தீவிரமும் ஊக்கமும் குறைவதாயின. மஹாராஷ்ட்ரருடைய ராஜ்யாதிகாரம் பீஷ்வா என்னும் ப்ரதான மந்த்ரியின் கைக்குப் போய்விட்டது. சீர்திருத்தமில்லாத அக்காலங்களில், திடமன துள்ளவர்களே மேலான பதவியைத் தேடிக்கொண்டனர். பீஷ்வாக்க ளானவர்களில் அநேகர் ஆண்மையும் ஸாமர்த்யமும் உள்ளவர்கள்.

பீஷ்வாக்களில் முதல்வராகிய பாலாஜி விசுவநாத் ஒரு ஸேனையைக் கூட்டிக்கொண்டு டில்லிக்குப்போனார். அப்போது அங்கிருந்த பலஹீநனான மொகல் அரசன் பயந்து தக்ஷிணத்-



பெர்ஷியா தேசத்து நாதர் ஷாஹவுக்கும் டில்லி அரசனான மஹமுத்துக்கும் கர்நாலில் நடந்த யுத்தம்.

தில் சோளத் வஸூல் செய்துகொள்ளும்படி அவருக்கு ஸ்வதந்தரம் கொடுத்தான். அவருக் கப்பால் பீஷ்வாவாக வந்தவர் பாஜிராவ். அவருக்குப் பிற்பட்டவர் பாலாஜி பாஜிராவ். இந்த ஸாமர்த்யவான்களுடைய காலத்தில் மஹாராஷ்ட்டார் உச்ச நிலைமை உற்ருர்கள். அப்போது அவர்கள் கூர்ஜரம் மால்வம் (இப்பொழுது மத்யமாகாணங்கள் என்று வழங்கும்) பிரார் ஒரிஸ்ஸா என்னும் தேசங்களை வென்று கொண்டார்கள்: வங்காளத்திலும் பஞ்சாபிலும் சூறையாடினுர்கள். எந்தப் பக்கத்திலும் அவர்களுடைய அதிகாரம் செல்வதாயிற்று. அவர்களுக்கு பலம் ஏற ஏற மொகல் பாத்ஷாஹக்களின் பலம் இறங்கிவந்தது. அதிகாரமெல்லாம் நீங்கி பாத்ஷாஹக்கள் பேருக்கு மாத்ரமே அரசரென்று காலந்தள்ளிவந்தனர்.


பெர்ஷியா ராஜன் வீரகம்பீரனை நாதிர்ஷாஹ ஹிந்துஸ்தானத்தின்மீது படைபெடுத்து வந்ததுதான், மொகல் ராஜ்யம் பலக்ஷய மடைந்ததற்கு முதற் காரணம். அவன் டில்லிக்கு வருவதற்கு முன்னமே மொகல் மாகாணமாக இருந்த காபூலைக் கைப்பற்றிக்கொண்டான். அங்கிருந்து வந்ததும் டில்லியைச் சூறையாடிப் பல்லாயிரம் ஜனங்களைக் கொலைசெய்து, மொகல் பாத்ஷாஹவின் அரமனையில் கிடைத்த அரிய பொருள்களை யெல்லாம் பெர்ஷியவுக்குக் கொண்டுபோய் விட்டான்.

இவ்விதம் ப்ரபௌத்ரனுடைய மதவைஷம்யத்தால் அக்பருடைய ராஜ்யம் சீர்குலைந்து பாழாய்விட்டது.

வர்த்தகக் கம்பனிகள் சண்டை செய்யத் தோடங்கியது

மஹாராஷ்ட்ர சேனைகள் டில்லிக்குப் போன செய்தியையும், ஏறக்குறைய அதே காலத்தில் நாதிர்ஷாஹ அந்தப் பட்டணத்தைச் சூறையாடிய செய்தியையும் படித்திருக்கிறோம். அதற்குப் பதினுன்கு வருஷங்களுக் கப்புறம் காந்தஹார் அரசனுகிய அஹமத் ஷாஹ துரானீ என்னும் கொடிய அப்கானியன் வந்து டில்லியைச் சூறையாடினுன். இந்தியாவினுள்ளே இந்த மாறுதல்கள் நேரிடுகையில், இந்தியாவின் ஸமுத்ர தீரங்களில் நேரிட்டிருந்தது என்ன?

அங்கே துறைமுகப் பட்டினங்களில் சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்யும்பொருட்டு இங்க்லிஷ் ப்ரெஞ்ச் டச்சுக் கப்பல்கள் வருவதும் போவதுமா யிருந்தன. ஜஹாங்கிர் காலத்தில் போர்ச்சுகீசியர் தோல்வியடைந்தனர். அதுமுதல் இந்த ஜாதியார்கள் ஸமாதானமாய் வர்த்தகம் செய்துவந்தார்கள். யூரபிலிருந்து வருவோருக்கு இந்தியாவின் மேற்குக் கரையே ஸமீப மாகையால், முதலில் யூரபியர்கள் மேற்குக்கரையிலே வ்யாபார ஸ்தானங்களை ஏற்படுத்தியிருந்தனர். அவைகளில் முற்பட்டது ஸூரத். அப்பால் பொம்பாயில் வர்த்தகசாலைகள் ஏற்பட்டன. கொஞ்சகாலத்தில் பொம்பாய் மேற்குக் கரையில் முக்யமான துறைமுக மாயிற்று. இங்ஙனம் இந்தியாவில் வந்து வர்த்தகம் செய்யும்படி இங்க்லிஷ்காரர்களும் ப்ரெஞ்ச்காரர்களும் டச்சுக்காரர்களும் ஈஸ்ட் இன்டியா கம்பனிகளை ஏற்படுத்திக்கொண்டனர்.



கல்கத்தாவிலுள்ள வில்லியம் கோட்டை.

மேற்குக் கரைக்கு வந்துகொண்டிருந்த யூரபியக் கப்பல்கள் கொஞ்ச காலத்தில் தென்கோடியைச் சுற்றிக்கொண்டு கிழக்குக் கரைக்கும் வருதலாயின. ஷாஹ ஜஹான் காலத்தில் ஸ்தாபிதமான ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை சீக்ரத்தில் மட்-

ராஸ் (சென்னை) என்று வர்த்தகத்துக்குரிய பட்டினமாகிவிட்-டது. ஒளரங்க்ஜேப் காலத்தில் ஜாப் சார்னக் என்னும் ப்ர-பலமான இங்க்லிஷ்காரர், வில்லியம் கோட்டையை ஸ்தாபித்-தார். அதைச் சுற்றிலும் கொஞ்ச காலத்தில் வர்த்தகத்துக்கு முக்யமான கல்கட்டா பட்டணம் ஏற்பட்டது. புதுச்சேரி (Pondicherry) ப்ரெஞ்ச்காரருக்கு முக்ய வ்யாபாரஸ்தானம் ஆயிற்று.

அக்காலம் இந்தியாவில் சண்டைகள் அதிகரித்திருந்த காலம். முதலில் மஹாராஷ்ட்ரர்கள் டில்லியில் ப்ரவேசித்தார்-கள். அப்பால் அப்கானியர் டில்லியை வென்றனர். அப்புறம் மஹாராஷ்ட்ரர் அப்கானியரை டில்லியிலிருந்து துரத்திவிட்-டனர். கடைசியில் அப்கானியர் மறுபடியும் பஞ்சாபின்மேல் இருஞ்சிவந்து மஹாராஷ்ட்ரர்களைச் சிதறடித்தார்கள். இது வரையில் ஸமாதானமாய் வர்த்தகம் பண்ணிவந்த யூரபியர்-களும் இப்பொழுது சண்டைசெய்யத் தொடங்கினுர்கள். ஆகவே, இந்தியாவிலுள்ளே சண்டை நடப்பதோடு சுற்றிலும் ஸமுத்ரதீரங்களிலும் சண்டை நடப்பதாயிற்று.

இந்தியாவில் ப்ரெஞ்ச்காரர் குடியேறியிருந்த இடங்களுக்-கெல்லாம் அக்காலத்தில் டூப்ளே என்னும் ஒரு பெரிய ப்ரெஞ்ச்காரர் கவர்னராயிருந்தார். சில இந்திய ராஜாக்களோடு அவர் ஸ்நேஹம்பண்ணியிருந்தார். அவர்கள் சண்டை செய்ய நேரிட்டபோது, டூப்ளே அவர்களுக்கு உதவியாக ப்ரெஞ்ச் ஸிப்பாய்களை அனுப்புவதுண்டு. யூரபிய ஸிப்பாய்கள் சாஸ்த்ர ரீதியாக யுத்தப்பயிற்சி செய்விக்கப்பெற்றவர்களாதலால், அவர்-கள் இந்திய ராஜாக்களுடைய ஸிப்பாய்களை ஸுலபமாய்த்தோற்-கடிக்கக்கூடும். ஆகவே பல இந்திய ராஜாக்கள் அதிக அவா-வுடன் டூப்ளேவின் ஸ்நேஹத்தை நாடுதலுற்ருர்கள். அதனுல் டூப்ளேவுக்கு அதிக கண்யம் உண்டாயிற்று: ப்ரெஞ்ச்காரர் மிக்க பலாட்டியராயினர். முன்னே டச்சுக்காரர் போர்ச்சு-கீசியரைத் துரத்திவிட்டதுபோல், ப்ரெஞ்ச்காரர் தங்களைத் துரத்திவிடக்கூடுமேயென்று இப்பொழுது இங்க்லிஷ்காரருக்கு அச்சமுண்டாயிற்று. அக்காலம் யூரபில் இங்க்லன்டுக்கும் ப்ரான்ஸுக்கும் நீடித்தசண்டை அடுத்தடுத்து நடந்திருந்தது. யூரபில் அவைகளுக்குள் அடுத்தசண்டை உண்டானபோது,

சென்னையிலிருந்த இங்க்லிஷ்காரர் புதுசசேரியிலிருந்த ப்ரெஞ்ச்காரரோடு சண்டைசெய்தனர்.

அப்போது இந்தியாவின் தெற்கிலுள்ள இந்திய ராஜாக்களில் ஹைதராபாத் நிஜாம் முக்யமானவர். நிஜாமுக்கு அடங்கியிருந்த சிற்றரசர்களில் ஆற்காட் நவாப் முக்யமானவர். டூப்ளே தம்முடைய ஸ்நேஹிதர்களை நிஜாம் அந்தஸ்திலும் நவாப் அந்தஸ்திலும் வைக்க விரும்பினர். இங்க்லிஷ்காரர் தங்கள் ஸ்நேஹிதர்களை அதே அந்தஸ்துகளில் வைக்கவிரும்பினர். இந்த இரண்டு ஜாதியாரும் இப்பொழுது சண்டை துவக்கியிருந்ததனுல், இருவரில் ஒருவர் அபஜயமடைகிறவரையில் இருவருக்கும் த்ருப்தி உண்டாகாது. ஆகவே ஒன்றின் பின்னுல் ஒன்ருக அநேக சண்டைகள் தொடர்ந்தன. சில ஸமயங்களில் ப்ரெஞ்ச்காரருக்கும் சில ஸமயங்களில் இங்க்லிஷ்காரருக்கும் வெற்றி உண்டாகிவந்தது.

ஒரு ஸமயம், ப்ரெஞ்ச்காரர் இங்க்லிஷ்காரரைத் துரத்திவிடுவது நிச்சயம் என்னும்படியான அவ்வளவு ஹீனஸ்திதியில் இங்க்லிஷ்காரர் இருந்தனர். அப்போது இங்க்லிஷ் ஈஸ்ட் இன்டியா கம்பனியின் ஸேவையில் லேககராயிருந்த ஒரு பால்யர் ராபர்ட் க்ளைவ் என்பவருடைய ஸாமர்த்யத்தால் செய்திகளெல்லாம் கீழதுமேலது மேலதுகீழதாப் மாறிவிட்டன. அதனுல் இங்க்லிஷ்காரருக்கு நல்லகாலம் திரும்பிவிட்டது.

ஆற்காட்டின்மீது க்ளைவ் படையெடுத்துச் சென்றது

கர்நாடகத்தில் முன்னே நவாபாயிருந்தவரை நீக்கிவிட்டு, நிஜாம், அன்வார் உத்தின் என்பவரை நவாபாக நியமித்தார். நிஜாம் உடனே இறந்துபோகவே. பழைய நவாபின் குடும்பத்தைச் சேர்ந்த சண்டா ஸாஹேப் தனக்கு உதவிசெய்யும்படி டூப்ளேவை வேண்டிக்கொண்டார். டூப்ளே அன்வார் உத்தீனுடு சண்டைசெய்யும்படி ஒரு ஸேனையை அனுப்பினர். யுத்தத்தில் அன்வார் உத்தின் இறந்துபோகவே, அவருடைய குமாரன் மஹமத் அலீ திரிசிராப்பள்ளிக்கு ஓடினர். சண்டா ஸாஹேப் கர்நாடகத்துக்கு ராஜதானியான ஆற்காட்டைக் கைப்பற்றிக்கொண்டார்.

மஹமத் அலீ இங்க்லிஷ்காாருடைய ஸ்நேஹிதர். அவர் திரிசிராப்பள்ளியில் போய்ச் சேர்ந்தபிறகு, சண்டா ஸாஹேப் ப்ரெஞ்ச் துருப்புக்களின் உதவிபெற்றுப் போய்த் திரிசிராப் பள்ளியை முற்றுகை செய்தார். இங்க்லிஷ்காரர் மஹமத் அலீக்கு உதவியாக இருந்தனர். ஆயினும் ப்ரெஞ்ச் துருப்-புக்களைத் தோற்கடிக்கத்தக்க ஸேனைபலம் இங்க்லிஷ்காரருக்கு இல்லை. கையிலிருந்தது திரிசிராப்பள்ளி ஒன்றுதான். அதை இழந்துவிட்டால், மஹமத் அலீக்கு வேறு, கதியில்லாமல் போய்விடும். ப்ரெஞ்ச்காரருக்கு எங்கும் வெற்றிச்சிறப் புண்-டாகி பலம் அதிகரித்துவிடும். இங்க்லிஷ்காரர் அதோகதி யடைந்து, இன்னது செய்வதென்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது இங்க்லிஷ் ஸேனையில் ராபர்ட் க்ளைவ் சேர்ந்-திருந்தார். அவர் மனதில் ஒரு யோசனை உதித்தது. உடனே அவர் ஸெண்ட் டேவிட் கோட்டைக்குத் திரும்பி, இங்க்லிஷ் கவர்னரிடத்தில் பின்வருமாறு ப்ரேரேபனை செய்தார்.

பெரிய யுத்தம் நடத்தி வெற்றிபெற்று லொழியத் திரி-சிராப்பள்ளியிலிருந்து ப்ரெஞ்ச்காரரைத் துரத்திவிடுவது அ-ஸாத்யம். அதற்கேற்ற பலம் இங்க்லிஷ்காரருக்கு இல்லை. விரோதி ஸேனையின் சிறியசிறிய பிரிவுகளோடு அல்பமான யுத்தங்கள் செய்வதில் யாதொரு நன்மையும் இல்லை. சண்டா ஸாஹேபுக்கும் ப்ரெஞ்ச்காரருக்கும் ஆற்காட் அரணுன கோட்டை. இங்க்லிஷ்காரரும் மஹமத்அலீயும் பலக்ஷயப்-பட்டிருப்பதால், சீக்ரத்தில் வெற்றியடைந்து சண்டையை முடிக்கவேண்டு மென்று சண்டா ஸாஹேப் தன் ஸேனையில் பெரும்பாகத்தைக் கொண்டுவந்திருக்கிறுன். ஆற்காட்டில் போதுமான ஸேனைக்காவல் இல்லை. ஆகையால் இந்த ஸமயம் இங்க்லிஷ்காரர் விரோதியின் தேசத்தில் ப்ரவேசித்துப் போய் ப்ரதான பட்டணமான ஆற்காட்டைப் பிடித்துக் கொள்ள வேண்டும். இது செய்தால் சண்டா ஸாஹேப் ஆற்காட்டைக் கைக்கொள்ளும்படி திரிசிராப்பள்ளியை விட்டுத் திரும்பி வந்து விடுவான். அப்பால் திரிசிராப்பள்ளிக்கு அபாயமில்லை.

இந்த ஆலோசனையின் ஸூக்ஷ்மத்தை மெச்சி, இங்கிலிஷ் கவர்னர், இருநூறு இங்க்லிஷ் ஸிப்பாய்களையும் மூந்நூறு சுதேச ஸிப்பாய்களையும் கூட்டி, மூன்று சிறிய பீரங்கிகளோடு

க்ளைவையே ஆற்காட்டுக்கு அனுப்பினர். இங்க்லிஷ்காரரும் அவர்களுடைய ஸ்நேஹிதர்களும் திரிசிராப்பள்ளியில் நாசமடையப்போகிறார்களென்று ஒவ்வொருவரும் நினைத்திருந்தனர். ஓர் இங்க்லிஷ் ஸேனை ஆற்காட்டின்மீது படையெடுத்து வருமென்று எவரும் கனவிலும் நினைக்கவில்லை. அதனால் ஆற்காட்டில் காவலிருந்த சண்டா ஸாஹேபின் ஸிப்பாய்கள் பராமுகமாய் இருந்தார்கள். க்ளைவ் அதிதீவிரத்தோடு திடும்ப்ரவேசமாய்ச் சென்றதனால் விரோதி ஸேனை விதிர்விதிர்த்தது. அவர்கள் ஒன்றுகூடித் தடுப்பதற்குள் க்ளைவ் ஆற்காட்டைக் கைப்பற்றிக்கொண்டார்.

பட்டணத்தைக் கைப்பற்றினதும், க்ளைவ் கோட்டையை எச்சரிக்கையோடு காவல் செய்துவந்தார். நடந்த செய்தியைச் செவியுற்றால் சண்டா ஸாஹேப் எப்படியும் விரைந்து திரும்பிவருவா ரென்பது நிச்சயம். இங்க்லண்டிலிருந்து இங்க்லிஷ் ஸிப்பாய்கள் வந்துகொண்டிருந்ததனால், சீக்ரத்தில் தனக்கு ஒத்தாசையாக ஸைந்யம் வருமென்பதும், க்ளைவுக்கு நிச்சயம். இந்த ஸமயம் தாம் அதைர்யமடைந்து பின்னிட்டால், தம் தேசத்தின் கௌரவத்துக்கு ஹானி உண்டாகுமாகையால், கடைசிவரையில் விடாப்பிடியாய்ச் சண்டை செய்வதென்று க்ளைவ் மனதை திடப்படுத்திக்கொண்டார். தைர்யமுடையவ ராகையாலும், தம்முடைய துருப்புக்களின் ஸௌகர்யங்களை நன்றாய்க் கவனிப்பவ ராகையாலும், அவருடைய ஸேனாவீரர்கள் அவரிடத்தில் அதிக பக்தி விசுவாசம் வைத்திருந்தார்கள். இந்திய ஸிப்பாய்கள் அவரிடத்தில் அதிக குருத்வம் பாராட்டியிருந்தார்கள். முற்றுகை கடிபிடியில் ஆஹாரம் முட்டுற்றபோது, இந்திய ஸிபாய்கள் அன்னப்பாலைத் தாங்கள் உண்டு, அன்னத்தை இங்க்லிஷ் ஸிப்பாய்களுக்குக் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட தறுவாயில் இங்க்லிஷ் ஸேனை எவ்வளவு கஷ்டம் அநுபவித்திருக்கவேண்டும்!

எப்படிப்பட்ட கஷ்டத்துக்கும் சலிக்காமல் க்ளைவ் தம் ஆண்மையால் ஸேனையை உத்ஸாஹப்படுத்தித் தாபரித்து வந்தார். தளராமல் கோட்டையைக் காத்துவந்த ஸேனைக்குக் கடைசியில் உதவி வந்தது; குறையெல்லாம் தீர்ந்தது. ப்ரெஞ்ச்காரரும் சண்டா ஸாஹேபும் முற்றுகைதவிர்த்துப் போயினர். இங்க்லிஷ் ஸேனை அவர்களைத் துரத்திச் சிதறடித்தது. ஒன்-

றின்பின் ஒன்ருகப் பல வெற்றிகள் கிடைத்தன. இந்த யுத்தத்தில் க்ளைவோடு கார்ய நிர்வாஹம் பண்ணிவந்த மற்ெருரு முக்யஸ்தர் மேஜர் ஸ்ட்ரின்ஜா லாரென்ஸ் என்பவர். அவர் க்ளைவுக்கு மூத்தவர்: க்ளைவுக்கு நல்ல நண்பர். அதனுல் க்ளைவ் அவரிடத்தில் பக்திவிசுவாசம் பாராட்டியிருந்தார்.

கடைசியில் ப்ரெஞ்ச்காரர் சண்டையை நிறுத்தி ஸமாதானமாய்விட்டார்கள். இந்த யுத்தம் முடிவானபோது, டூப்ளேயைத் திரும்பிவரும்படி ப்ரான்ஸிலிருந்து உத்தரவு வந்தது. அவரை உதாசினப்படுத்தித் திரும்பிவரும்படி எழுதியிருந்த உத்தரவை ப்ரெஞ்ச் தூதர் புதுச்சேரி மந்த்ராலோசனை மண்டபத்தில் வாசித்து முடித்தபோது, எல்லாரும் நிசப்தமாயிருந்தார்கள். டூப்ளே "நம்மரசன் நீடுவாழ்க" என்ருர். அவர் இங்க்லிஷ்காரருக்கு இந்தியாவில் அபாயகரமான விரோதியே யாயினும், இங்க்லிஷ்காரனுயினும் இந்தியனுயினும் ப்ரெஞ்ச்காரனுயினும் எவனுயினும் அவருடைய ராஜவிசுவாசத்தைக் கண்டு அதிசயிக்காமல் இருக்கமாட்டான். ப்ரெஞ்ச்காரர் இந்தியாவில் அதிகச் சிறப்படைதலான முயற்சிகளை அவர் செய்துவந்தது ப்ரான்ஸில் ஒருவருக்கும் தெரியாது: ஆகவே, அவர் ப்ரான்ஸுக்குத் திரும்பியபோது அவருக்கு யாதொரு கௌரவமும் கிடைக்கவில்லை. இந்தப் பெரிய மனிதர், பாவம் வறுமையால் வருந்தியிருந்து, பத்து வருஷத்துக் கப்புறம் அந்த்யதசை யடைந்தார்.

இங்க்லிஷ்காரருக்கு வெற்றி தருவித்த பாலஸேனுபதியான ராபர்ட் க்ளைவுக்கு இங்க்லிஷ்காரர் பல கௌரவங்களைச் செய்தனர். இங்க்லன்டி லிருந்தால் ஒன்றுக்கும் உதவ மாட்டா ரென்று ராபர்ட்டை இந்தியாவுக்கு அனுப்பிவிட்ட அவர் தகப்பனுர், தமது மகன் பெற்ற வெற்றிகளால் அடைந்த அதிசயம் கொஞ்சமல்ல. ஈஸ்ட் இன்டியா கம்பனியில் முதலில் ஒரு ஸாதாரண லேககராய் வந்து சேர்ந்த க்ளைவ் இப்பொழுது கம்பனி ஸேனையில் கர்ன லானுர். அப்பால் அவர் வங்காளத்துக்கு கவர்னரு மானுர். ப்ரிட்டிஷ் இந்தியா சரித்ரத்தில் அவருடைய பெயரைப்போல் ப்ரஸித்தமானது வேறே இல்லை.

இங்க்லிஷ்காரர் வங்காளத்தில் துரைத்தனம் செய்யலுற்றது

நாதிர் ஷாஹ டில்லியின்மேல் படையெடுத்தபிறகு, அலீ-வர்டி கான் என்னும் யுத்தவீரன் வங்காளத்தைக் கைப்பற்றிக்கொண்டு அரசாட்சி செய்துவந்தார். வங்காளம் பழைய மோகல் ராஜ்யத்தில் ஒரு ஸுபாவாக இருந்தது. ஆகவே அவருக்கு ஸுபதார் என்கிற பட்டமே வழங்கியிருந்தது. அதுபோலவே நிஜாமுக்குக்கூட தக்ஷிணத்து ஸுபதார் என்பதே உத்யோக பட்டம். அலீ வர்டி கான் நல்ல மதியூகி. மூர்ஷிடாபாத் அவருக்கு ராஜதானி. வங்காளத்தில் கல்கத்தாவில் நிலைத்திருந்த இங்க்லிஷ் வர்த்தகர்கள் தங்கள் வர்த்தகத்தை அபிவிர்த்தி செய்வதற்குரிய அநுகூலங்களை ஏற்படுத்தினர். தம்முடைய ராஜதானிக்கு ஸமீபமாக பாட்னா டாக்கா காஸிம்பஜார் என்கிற வேறு பட்டணங்களில் அவர்கள் வர்த்தகசாலைகள் கட்டிக்கொள்வதற்கு அநுமதி கொடுத்தார். அவர் இறந்தபிறகு அவருடைய பேரன் ஸிராஜ உட் டௌலா என்பவர் அரசுபெற்றூர். அவர் பாலப்ராய முள்ளவர், விவேகமில்லாத மௌட்டியர், தம்மூப்பாய் நடப்பவர். இங்க்லிஷ்-காரர் தங்கள் (ஸென்ட் வில்லியம்) கோட்டைக்குப் புதிய மதில்சுவர்கள் கட்டியிருப்பதாகச் செவியுற்றபோது, ஸிராஜ் உட் டௌலா அந்த வேலையை நிறுத்தும்படி உத்தரவுசெய்தார். அதன்மேல் இங்க்லிஷ் கவர்னர், "புதிய சுவர்கள் கட்டவில்லை. பழைய சுவர்களையே பலப்படுத்திவருகிறோம்" என்று தெரிவித்தார். இங்க்லிஷ் கவர்னர் தெரிவித்த விடையைப் பெற்றபோது, ஸிராஜ் உட் டௌலாவுக்குக் கோபம் பொங்கி யெழுந்தது. உடனே அவர் ஐம்பதினாயிரம் பேர் அடங்கிய தம் ஸேனையோடு புறப்பட்டுப்போய் கல்கத்தாவின்மேல் படை யெடுத்தார். இங்க்லிஷ் கோட்டை இந்தப் படையெடுப்பைத் தாங்கத்தக்க நிலைமையி வில்லை. கோட்டையில் போதுமான பீரங்கிமருந்து மில்லை; குண்டுகளு மில்லை; அஹாரமும் இல்லை. அதனுல் அவர் ஒரு கஷ்டமும் இல்லாமல் கோட்டையைப் பிடித்துக்கொண்டார்.

அப்போது நூற்றுநாற்பத்தாறு பேர் இங்க்லிஷ்காரர் சிறைப்பட்டனர். அவர்களை நவாபின் அதிகாரிகள் ஒரு



லார்ட் க்ளைவ்.

சிறிய அறையில் அடைத்துவைத்தனர். அன்றிரவு அதிக வெப்பமாயும் ஒடுக்கமாயும் இருந்தது. நல்ல காற்றை ஸ்வாசிப்பதற்கு வழியில்லாமல், வெப்பத்தால் மெலிவுற்று, அந்தச் சிறையாளிகள் பாவம் ஒவ்வொருவராய் இறந்தனர். காலையில் கதவைத் திறந்தபோது, இருபத்துமூன்று பேர்களே உயிரோ டிருந்தவர்கள்.

மட்டாஸிலிருந்த இங்க்லிஷ்காரர்கள் இங்ஙனம் கல்கத்தாவில் தங்கள் தேசத்தார் மாண்ட செய்தியைக் கேட்டபோது அவர்கள் கிடுகிடுத்தார்கள். உடனே அவர்கள் ஸிராஜ் உட் டௌலாவை தண்டிக்க வேண்டுமென்று தீர்மானம்பண்ணிக்கொண்டு, க்ளைவின் வசமாக வங்காளத்துக்கு ஒரு ஸேனையை அனுப்பினர்.

இங்க்லிஷ் கப்பல்கள் ஹூக்லிநதியில் ப்ரவேசித்துச் சென்றன. க்ளைவ் தம் ஸிப்பாய்களோடு பஜ் பஜ் என்னுமிடத்-

தில் இறங்கினர். உடனே கல்கத்தாவைக் கைப்பற்றிக் கொண்டு, நவாபின் பட்டணத்தின்மேல் சென்றார். ஹூக்லி-திரத்துக்கும் முர்ஷிடாபாதுக்கும் இடையில் ப்ளாஸி என்கிற இடத்தில் முடிவாக ஒரு பெரிய யுத்தம் நடந்தது. இங்கே காலாள்களும் குதிரைவீரர்களுமான எழுபதினுயிரம் பே-ருள்ள நவாபின் ஸேனையும் பெரிய பீரங்கிகளோடு சில ப்ரெஞ்ச் துருப்புக்களும் இறங்கியிருந்தன. க்ளைவின் ஸேனை-யில் மூவாயிரம் பேருக்கு அதிக மில்லை. நவாபின் தளகர்த்-தரில் ஒருவர் மீர்ஜாபர், யுத்தம் ஆரம்பமாகும்போது, தம் ஸேனையை அழைத்துக்கொண்டு அப்புறப்பட்டுப் போவதாய் கர்னல் க்ளைவுக்கு வாக்கிட்டிருந்தார். சிறிய இங்க்லிஷ் ஸேனையை வங்காளத்துக் குதிரைவீரர்கள் எதிர்த்தபோது, இங்க்லிஷ் பீரங்கிக் குண்டுகளின் வெடியைப் பொறுக்காமல் பின்னிடைந்தார்கள். ஆயினும் அவர்கள் தோல்வியடைய-வில்லை. அப்படியிருந்தும் மீர்ஜாபரும் மற்றொரு தளகர்த்-தரும் ஓடிப்போவதே உத்தமமென்று நவாபுக்கு வற்புறுத்திச் சொல்லினார்கள். ஸிராஜ் உட் டௌலா ஓர் ஒட்டகத்தின்-மேல் ஏறி ஓடிவிட்டார் அதன்மேல் க்ளைவ், தலைவனில்லாத வங்காளத்து தண்டைத் துரத்திக்கொண்டுபோய்ச் சிதறடித்து-விட்டார்.

அதன்மேல் இங்க்லிஷ்காரர் மீர்ஜாபரை வங்காளத்துக்கு நவாபாக நியமித்தார்கள். புதிய நவாபுக்கு அரசுநடத்த-லான ஸாமர்த்யம் போதாது. ஆகவே அவர் ஸூத்ரப்ரதி-மையும் இங்க்லிஷ்காரர் ஸூத்ரதாரியுமாக வங்காளத்தின் அரசாட்சி நடந்துவந்தது.

வாரேன் ஹேஸ்ட்டிங்க்ஸ்

லார்ட் க்ளைவ் இந்தியாவை விட்டுப்போய் ஐந்து வருஷ-காலம் ஆனபிறகு, வேறொரு பெருமகன் வங்காள கவர்னரா-னார். அவர் வாரேன் ஹேஸ்டிங்க்ஸ் என்பவர். க்ளைவ் போலவே வாரேன் ஹேஸ்டிங்க்ஸ் இளம்பிராயத்தில் ஈஸ்ட் இன்டியா கம்பனி ஸேவையில் ப்ரவேசித்தவர்: ஸாதாரண லேககராயிருந்து படிப்படியாய் உயர்ந்த அந்தஸ்துக்கு வந்த-வர். கொஞ்ச காலத்துக் கப்புறம் அதிகாரிகள் அவரை வங்-

காளத்திலிருந்து மட்ராஸுக்கு மாற்றினார்கள். மட்ராஸில் அவர் கவர்னருடைய ஆலோசனை ஸபையில் ஒருவரானார். சில கால மானபின் வங்காள கவர்னராக மறுபடியும் வங்காளத்துக்குச் சென்றார்.

வாரென் ஹேஸ்டிங்க்ஸ், ஸாதுவானவர்; பாங்குபரிசனையுள்ளவர்; ஒரு கார்யத்தில் மனவுறுதி கொண்டால் அவ்வுறுதியில் நின்றும் அப்புறம் மாறாமல் ஒருமனப்பட் டிருப்பவர். இவர் ஒருமனப்பட்டவர் என்பது ஒருவருக்கும் தெரியாது.

அவருக்கு விரோதிகள் பலபேர் உண்டு. அவர்களில் முக்யமானவர் அவருடைய ஆலோசனை ஸபையில் ஒருவரான பிலிப் ப்ரான்ஸிஸ் என்பவர். வாரென் ஹேஸ்டிங்க்ஸ் ப்ரேரேபிப்பதை யெல்லாம் தட்டிவிடுவதே இவருடைய நோக்கம். பரிதானம் வாங்குவதாக வாரென் ஹேஸ்டிங்க்ஸ் மீது ஒரு முறைப்பாடு கொண்டுவரும்படியாகவும் செய்வித்தார். ஸரியாக மெய்ப்பிக்க முடியாமையால், அநீதமான அந்தக் கொடிய முறைப்பாடு அநுகூலப்படாமல் வீணாய்ப்போயிற்று.

எத்தனையோ இடைஞ்சல்களும் இடையூறுகளும் நேரிட்டன. வாரென் ஹேஸ்டிங்க்ஸ் அவைகளுக்கு இளைக்காமல் ஈடுகொடுத்து வங்காள துரைத்தனத்தைச் சீர்செய்து வந்தார். வரி வஸூல் நிமித்தம் இங்க்லிஷ் கலெக்ட்டர்களை நியமிக்கத் தொடங்கினவர் அவரே. வரிவஸூல் செய்வதோடு நீதிவிசாரணை செய்வதும் கலெக்ட்டருடைய கடமை. எவராகிலும் தமக்கு நேரிட்ட அக்ரமத்தைக் கலெக்ட்டரிடம் பிராது பண்ணிக்கொள்ளலாம். ஒருவன் நிலத்தை ஒருவன் கவர்ந்துகொண்டால், அந்த ஸங்கதியைக் கலெக்ட்டருக்கு விண்ணப்பம் பண்ணிக்கொள்ளலாம். நியாய அந்யாயங்களை ஆராய்ந்துபார்த்து கலெக்ட்டர் அந்த ஸங்கதியை ஸரியாக முடிவு செய்வார். மொகலாயர் காலத்திலும் பட்டாணி ஸுல்தான்கள் காலத்திலும் நியாயாதிபதிகள் இல்லாமற் போகவில்லை. வாரென் ஹேஸ்டிங்க்ஸின் ஏற்பாடு புராதனமான முறைகளை அநுஸரித்திருந்தது. கலெக்ட்டர்கள் ஸரியாக ந்யாயந்தீர்ப்பதற்குண்டான வழிவகையும் அவர் ஏற்படுத்தினார். கல்கத்தாவில் இரண்டு அப்பீல் கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்பெற்றன. ஸரியாக கலெக்ட்டர் ந்யாயந்தீர்க்கவில்லையென்று எண்ணுகின்றவன், தன் வழக்கை அப்பீல் கோர்ட்டுக்குக் கொண்-



வாரன் ஹேஸ்டிங்க்ஸ்.

டுபோகலாம். அங்கே புநர்விசாரணை நடக்கும். இந்தக் கோர்ட்டில் அப்போது ஸர் இலைஜா இம்பி என்பவர் ப்ரதான ந்யாயாதிபதி. அவர் மஹா நிபுணர். ஹிந்து ஜாதிகத்தையும் முஹம்மதிய ஜாதிகத்தையும் அநுஸரித்து, கவர்னர் ஜெனரல் ஒரு ந்யாயநூல் எழுதுவித்தார். அதுவே இந்த தேசத்தில் ஒவ்வொருவரும் அநுஸரிக்க வேண்டிய நியாயப் பிரமாண மாயிற்று.

தற்காலம் இந்துதேசத்தில் நடந்துவருகிற துரைத்தன ரீதியை வரையறுத்தவர் வாரென்ஹேஸ்டிங்ஸே. க்ராமங்களில்

சாமங்காக்கிற காவலாளிகளின் உதவியால் திருடர்களையும் மற்றக் குற்றவாளிகளையும் பிடிப்பதற்கு அவர் பொலீஸ்காரரை நியமித்தார். இரண்டு வருஷம் கவர்னராக வங்காள துரைத்தனத்தை நடத்தியிருந்தபிறகு, இந்தியாவில் ப்ரிட்டிஷ் மாகாணங்களுக்கெல்லாம் அவர் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பெற்ருர். பதின்மூன்று வருஷகாலம் கவர்னர் ஜெனரலாக இருந்து அப்பால் அவர் இங்க்லன்டுக்குத் திரும்பிவிட்டார். அவர் இந்தியாவில் செய்த உத்தமமான கார்யங்களின் நோக்கத்தை ஸரியாக உணர்ந்துகொள்ளாமல், அதிகாரிகள் அவர் விஷயத்தில் தப்பபிப்ராயம் கொண்டிருந்தார்கள். அவருடைய விரோதிகள் அவரைப் பற்றிப் பொய்யான அவதூறுகளைத் தூற்றியிருந்தார்கள். பார்லிமென்டார் அவைகளையெல்லாம் விசாரணை செய்து உண்மையை அறிதலானபோது, அவர் நிரபராதி என்று முடிவாயிற்று. அதன்மேல் ஈஸ்ட் இன்டியா கம்பெனியார் ஏற்படுத்திய உபகாரச் சம்பளம் பெற்று நெடுங்காலம் ஜீவித்திருந்தார்.

மைஸூர் ஸுல்தான் ஹைதர் ஆலீ

மைஸூர் கன்னடர்களுடைய தேசம். அநேக நூற்ருண்டுகளாக ஸொந்த ராஜாக்களே மைஸூரை ஆண்டுவந்தனர். தலைக்கோட்டை யுத்தத்துக்கு முன்னே விஜயநகர ராஜ்யம் செழித்தோங்கியிருந்தபோது. மைஸூர் அரசு அந்த ராஜ்யத்தில் ஒரு பாகமாக இருந்தது. தலைக்கோட்டை யுத்தத்துக்குப் பிறகு விஜயநகர ராஜ்யம் பல சிற்றரசுகளாகப் பிளவுபட்டது. அவைகளை ஆட்சி செய்திருந்தவர்கள் நாயக்கன்மார் அல்லது பாளையக்காரர் என வழங்கப்பெற்றனர். இந்தப் பாளையப் பட்டுகளில் சிலவற்றை மைஸூர் ராஜா ஜயம்பண்ணினர். அதனல் அவருடைய அரசு விஸ்தாரமாகி பலப்பட்டது. இங்ஙனம் ஜயம்பண்ணினவைகளில் ஸ்ரீரங்கபட்டணம் ஒன்று. அது மைஸூர் அரசருக்கு ராஜதானியாயிற்று.

க்ளைவ் வங்காளத்தில் சண்டை செய்திருந்தபோது, மைஸூரில் வேறொரு வீரர் ப்ரஸித்தி பெற்றுவந்தார். அவர் வடவிந்தியாவிலிருந்து வந்த ஒரு முஸல்மன் ஸிப்பாய்; ஹைதர்

ஆலி என்பவர். அவர் மைஸூர் ராஜஸேனையில் அமர்ந்திருந்தார். இந்த ஸிப்பாய்க்கு எழுதப்படிக்கத் தெரியாது. ஆயினும் அவர் நல்ல தைரியசாலி: பெரிய பதவிக்கு உயரவேண்டுமென்கிற அவா வுள்ளவர். முதலில் சாதாரண ஸிப்பாயாகச் சேர்ந்தவர், சிலகாலத்தில் மைஸூரில் ஸேனாதிபதியாய்விட்டார். அதற்கு மேற்பட்ட பதவி அரச பதவியே. கொஞ்சகாலத்தில் அரசபதவியும் அடைந்து, ஸுல்தான் என்று பட்டந் தரித்துக்கொண்டார்.

அரசபதவி யடைந்தபிறகு, ஹைதர் ஆலி ப்ரெஞ்ச் வீரர்களை நியமித்துத் தம்முடைய துருப்புக்களை யூரபிய ரீதியாக யுத்தப்பயிற்சி செய்வித்தார். அதனால் அவருடைய ஸேனைகள் எங்கே படையெடுத்துப் போனாலும் வெற்றியே கிடைத்து வந்தது. வரவே, அதிக பலாட்டியராகி, வடக்கே மஹாராஷ்டார்கள்மீதும்தென்கிழக்கில்கர்நாடகத்தை ஆட்சிசெய்திருந்த இங்க்லிஷ்காரர்மீதும் படையெடுக்கத் தொடங்கி, பல யுத்தங்கள் செய்தார். சிலமுறை வெற்றியும் அடைந்தார். ஸர் அயர் கூட் என்பவர் இங்க்லிஷ் ஸேனாதிபதியாக இருந்தபோது, பல முறை தோல்வியும் அடைந்தார். கடைசியாக ஒருமுறை இங்க்லிஷ்காரருக்குவிரோதமாய் டச்சுக்காரரும்ப்ரெஞ்ச்காரரும் ஹைதரோடு சேர்ந்துகொண்டார்கள். துருப்புக்கள் புறப்படுவதற்குள் மாரிகாலம் வந்துவிட்டது. வெயிற்காலம் திரும்புமுன்னே அவர் மரணமடைந்தார்.

ஸாமான்யமான ஸிப்பாய் பதவியிலிருந்து அரசபதவிக்கு வந்தவரிடத்தில் சில விசேஷ அம்சங்கள் இருந்திருக்கவேண்டும். அவருடைய தேகக்கூறுகளில் அப்படிப்பட்ட அம்சம் ஒன்றும் புலப்படவில்லை. ஆள் குள்ளம் மூக்குச் சிறியது. கண்கள் சிறியவை. வெயிலில் தீய்ந்து முகம் பழுத்திருந்தது. இப்படி யிருந்தாலும், அவருடைய உடுப்புகள் நேர்த்தியானவையே. அவருடைய தலைப்பாகை மிகவும் நீளமாய்ச் செக்கச்செவேரென்றிருக்கும். துருப்புகளை நடத்திக்கொண்டுபோகும்போது, யூரபிய ரீதியாய் ஒரேவித உடுப்பைத் தரிப்பார். இஜார் மஞ்சளாக இருக்கும். சட்டைஸரிகைப் பூவேலைசெய்த வெண்பட்டில் தைத்திருக்கும். துரைத்தன ஸம்பந்தமான உத்தரவுகள் எல்லாவற்றையும் அவர் தாமே நேரில் கொடுப்பார். அவருடைய அநுமதியில்லாமல் யாதொன்றும் செய்-

யக்கூடாது. எல்லா ஸங்கதிகளையும் ஸூக்ஷ்மமாய்க் கண்டறிந்துகொள்வார். படிப்பில்லாதவரே யாயினும், அவர் மனிதரை ஆட்சிசெய்யத் தக்க பேராசனே என்பதில் ஸந்தேஹம் இல்லை.

டிப்பு ஸுல்தானுடைய கடைசி யுத்தம்

தாம் இறப்பதற்குமுன், ஹைதர் ஆலீ, இங்க்லிஷ்காரரோடு யுத்தஞ்செய்ய வேண்டாமென்று தம் குமாரனுக்கு எச்சரிக்கைசெய்தார். ஆயினும் டிப்புவுக்கு இங்க்லிஷ்காரரிடம் த்வேஷமுண்டாயிருந்ததனால், ஸந்தர்ப்பம்நேரிட்டபோதெல்லாம் இங்க்லிஷ்காரரோடு யுத்தம்செய்துவந்தார். பிதாவைப் போலவே அவரும் தைர்யசாலி. ஆயினும் பிதாவின் விவேகம்



திப்பு ஸுல்தானுடைய கடைசி யுத்தம்.

அவருக்கில்லை. பிதாவைக்காட்டிலும் அவரிடத்தில் கொடூரம் அதிகம் உண்டு. அக்காலத்தில் ப்ரெஞ்ச்காரருக்குண்டாயிருந்த பலாஷ்டிகத்தைக் கண்டு இங்க்லிஷ்காரர் அஞ்சியிருந்தனர். ப்ரெஞ்ச் சக்ரவர்த்தியான நெபோலியன் போனபார்ட்டைப்போன்ற ஜயவீரன் அக்காலத்தில் எவருமில்லை. ப்ரெஞ்ச்

ஸேனைகளோடு சென்று படையெடுத்து அவர் யூரபில் ஏறக்குறைய ஒவ்வொரு தேசத்திலும் வெற்றிபெற்றிருந்தார் இங்க்லன்ட்மீதுகூட அவர் படையெடுக்க விரும்பினர். அப்பால் ட்யூக் அவ் வெலிங்க்டன் என்னும் இங்க்லீஷ் வீரகம்பீரர் நெபோலியனைத் தோற்பித்துச் சிறைப்படுத்தினர். ஆயினும் திப்புவின்காலத்தில் நெபோலியன் உச்சபலம் உற்றிருந்தார். அதனால் இங்க்லிஷ்காரர் ப்ரெஞ்ச்காருடைய செய்தி ஒவ்வொன்றையும் ஜாக்ரதையாக கவனித்துவந்தனர்.

டிப்பு தமது பிதாவுக்கு விரோதிகளான இங்க்லிஷ்காரரை நசுக்கிவிடும்படி ஸமயம் பார்த்துக்கொண்டிருந்தார். தமக்கு உதவிசெய்யும்படி அவர் ப்ரெஞ்ச்காரரை அழைத்தார். அப்போது கவர்னர் ஜெனரலாயிருந்த மார்க்விஸ் வெல்லெஸ்லி அதைக் கண்டு, அவரை எதிர்க்கும்படி உத்தரவு செய்தார். மட்ராஸிலிருந்து ஓர் இங்க்லிஷ் ஸேனையும் பொம்பாயிலிருந்து ஓர் இங்கிலிஷ் ஸேனையும் மைஸூருக்குச் சென்றன. டிப்பு இரண்டுமுறைதோல்விபடைந்து ஸ்ரீரங்கபட்டணத்துக்கோட்டையில் போய்ப் புகுந்துகொண்டார். இங்க்லிஷ் துருப்புகள் கோட்டையைச் சூழ்ந்துகொண்டு, கோட்டை மதில்களின் மீது பீரங்கிக்குண்டுகளை வெடித்தார்கள். அதனால் ஓரிடத்தில் ஒரு த்வாரம் உண்டாயிற்று. அதன்மூலமாய் இங்க்லிஷ் துருப்புகள் பட்டணத்துக்குள்ளே பாய்ந்துபோயின. திப்பு மதிலின்மீதிருந்து தைரியத்தோடு சண்டைசெய்து, விரோதிகளைத் திருப்பி ஓட்டிவிடும்படி ப்ரயாஸப்பட்டுக்கொண்டிருந்து கடைசியாய் சண்டையில் மாண்டுபோனர். அவ்வளவில் மைஸூர் அரசு இங்க்லிஷ்காரருக்கு உரியதாயிற்று. லார்ட் வெல்லெஸ்லி, மைஸூரை ஆண்டிருந்த பழைய ஹிந்து ராஜ வம்சத்தில் கடைசியாய் ஜீவந்தனுயிருந்த ராஜகுமாரனிடத்தில் பழைய பாகத்தைக் கொடுத்துவிட்டார்.

இந்தியாவுக்கு ஏகாதிபத்யம் உண்டானது
மஹாராஷ்ட்ரரை வேற்றிகோண்டது

உச்சபலம் பெற்றிருந்த காலத்தில் மஹாராஷ்ட்ரர் பஞ்சாபில் அப்கானியரோடு யுத்தம் செய்தபோது, மஹாராஷ்ட்ரர் அனைவரும் பேஷ்வாவைத் தங்கள் தலைவராகக் கொண்டி-

ருந்தனர். ஆயினும் பிற்பட்டுவந்த பீஷ்வாக்கள் ஆதியிலிருந்த பாஜிராவ் முதலான பீஷ்வாக்களைப்போல் தகுந்த யோக்யதை யில்லாதவர்கள். அதனுல் மஹாராஷ்ட்ர சிற்றரசர்கள் தங்கள் தங்கள்மட்டில் ஸ்வயாதிபதிகளாயினர். நாகப்பூரில் பான்ஸ்லே ராஜகுமாரும், இந்தூரில் ஹோல்காரும், க்வாலியரில் ஸிந்டியாவும், பரோடாவில்கெய்க்வாரும் இப்படியானவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தம்தம் ப்ரதான பட்டணத்தில் ஒவ்வோர் ஸமஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்டனர். ஒவ்வொருவரும் மஹாராஷ்ட்ரக் குதிரைவீரர்களுள்ள ஒவ்வொரு ஸேனையையும் ஏற்படுத்திக்கொண்டனர். ஸிந்டியாவின் ஸேனை ப்ரெஞ்ச் உத்யோகஸ்தரால் யுத்தப்பயிற்சி செய்விக்கப்பெற்றது.

தங்களைவிடத் தங்கள் விரோதி எங்கே விஞ்சிவிடுவானே என்று மஹாராஷ்ட்ர அரசர் ஒருவர்மீ தொருவர் பொறாமைகொண்டு ஒருவரோடொருவர் ஸதா சண்டைசெய்திருந்தனர். இவர்கள் இங்ஙனம் பலாட்யரா யிருந்தவரையில் இந்தியாவில் யாதோ ரொழுங்கும் ஏற்படாமலிருந்தது. பிண்டாரி யென்னும் கள்ளக் கூட்டத்தினரை வழிபறிக்கும்படி விட்டு, இவர்கள் அவர்களுடைய கொள்ளையில் ஒருபாகம் பெற்றுவந்தனர்.

அக்பர் முதலிய மொகல் பாத்ஷாஹக்கள் காலத்தில்போல இந்தியாவை ஏகாதிபத்யமாய் ஒரு குடை நிழலில் வைத்து ஆட்சி செய்தாலொழிய துரைத்தனம் ஒழுங்காக நடவாதென்கிற மர்மத்தை, கல்கத்தாவில் கவர்னர் ஜெனரலாயிருந்த லார்ட் வெல்லெஸ்லி தெரிந்துகொண்டார். அதன்மேல், மஹாராஷ்ட்ர அரசர்களை வெல்வதென்று அவர் மனவுறுதி செய்துகொண்டு, இரண்டு இங்க்லிஷ் தளகர்த்தர்களை நியமித்து, அவர்கள்வசம் பெரிய ஸேனைகளைக் கூட்டியனுப்பினர். அவர்களில் ஒருவர் ஸர் ஆர்தர் வெல்லெஸ்லி என்பவர்: கவர்னர் ஜெனரலுடைய ஸஹோதரர்: பின்னுல் ட்யூக் அவ் வெலிங்டன் ஆனவர் இவரே. மற்றவர் லார்ட் லேக் என்பவர்.

ஆஸ்ஸே என்னு மிடத்தில், ஸர் ஆர்தர் வெல்லெஸ்லி பெரிய யுத்தம் நடத்தி, பான்ஸ்லவைத் தோற்கடித்து தக்ஷணத்தை ஜயித்துக்கொண்டார். ஸிந்டியாவின் துருப்புக்களை லார்ட் லேக் டில்லியில் தோற்கடித்து, அவர்களை அந்தப் பட்டணத்திலிருந்து துரத்திவிட்டார்.

திருடர்களை அடக்கி அங்கங்கே நீதிமுறை ஸரியாக நடைபெறும்படி, மஹாராஷ்ட்ர அரசருடைய ஸமஸ்தானங்களில் லார்ட் வெல்லெஸ்லி ஒவ்வொரு இங்க்லிஷ் ரெஸிடென்டை நியமித்தார். இந்தப்ரகாரம் இந்தியா முழுவதையும் இங்க்லிஷ்காரருக்கு ஏகாதிபத்யமாக்கி, எங்கும் சண்டை சச்சரவில்லாமல் ஸமாதானமே உண்டாயிருக்கும்படி செய்தவர் இவரே. பிடிபட்ட தேசத்துக்குப் பிரதிகாவலராக நியமகம் பெற்றவருக்கு இங்க்லிஷில் கான்ஸல் என்றும் ப்ரோகான்ஸல் (Pro-consul) என்றும் பட்டம் வழங்கும். ஆகவே லார்ட் வெல்லெஸ்லியைப் பற்றிப் பேச நேரிடும்போது, இங்க்லிஷ்காரர்கள் இவரை "மஹா ப்ரோகான்ஸல்" என்று உபசரித்துப் பேசுவதுண்டு.

ஸர் தாமஸ் மன்றோ

இங்க்லிஷ்காரர் டிப்புஸுல்தானோடு செய்த யுத்தங்கள் அநேகம். அவைகளில் ஒன்றில் இங்க்லிஷ்காரரோடு நிஜாமும் கூடிக்கொண்டார். டிப்பு அபஜயமடைந்து அவர்களுக்குச் சில மாகாணங்களைக் கொடுத்து, ஒரு ஸமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். தங்களுக்குக் கிடைத்த பாகங்களில் வரி வஸூல் வ்யவஹாரங்களை ஒழுங்காகத் திட்டப் படுத்தும்படி, மட்ராஸ் துரைத்தனத்தார், சில உத்யோகஸ்தரை அனுப்பினர். அவர்களில் தாமஸ் மன்றோ என்பவர் சேலத்துக்குப் போனார்.

ஹைதர் அலியும் டிப்புவும் அரசாட்சிசெய்கையில், குடியானவர்கள் துரைத்தன உத்யோகஸ்தர்களிடம் பெருந்தொகைகள் கொடுப்பது அவசியமாயிருந்தது. அந்த ஸுல்தான்கள் பல யுத்தங்கள் செய்துவந்ததனால், அதிகப் பணம் தேவையாயிருந்தது. அந்தப் பணத்தை எவ்விதத்திலாயினும் சேகரிக்கவேண்டும். அதனால் க்ராமவாஸிகள் ஸம்பாதித்து வைத்திருந்த பணத்தை அவர்களிடத்திலிருந்து உத்யோகஸ்தர்கள் க்ரஹித்துக்கொண்டுபோவர். இப்பொழுது இங்க்லிஷ்காரருக்குக் கிடைத்த மாகாணத்தில், க்ராமவாஸிகள் மட்ராஸ் துரைத்தனத்தாருக்குக் கட்டவேண்டிய வரியின் அளவை மன்றோ திட்டப்படுத்தினர். அவர் அநுஸரித்த முறை ரயத்வாரி

முறை எனப்பெறும். அப்பால் இந்த முறையே ஏறக்குறைய சென்னை ராஜ்யம் முழுவதும் அநுஸரிக்கப்பெற்றது. இந்த முறையின்படி ரயததுக (குடிக) ளே வரிப்பணத்தை துரைத்தனத்தாருக்கு நேரில் செலுத்துவர். ஒவ்வொரு காணியாளனும் செலுத்தவேண்டிய தொகை இவ்வளவென்று ஸெட்டில்மென்ட் ஆபிஸர் திட்டம் செய்வார். ஸரியான காரணமில்லாமல் இந்தத் தொகையை எப்போதும் மாற்றுவதில்லை. விளைச்சலில்லாத வருஷங்களில் சில ஸமயம் இந்தத் தொகையைக் குறைப்பதுண்டு. நிலத்தை நன்ருய்ப் பண்படுத்திக் குடியானவன் அதிகப்படி மாஸூல் விளைவித்தால், அது நிமித்தம் துரைத்தனத்தார் அவன் செலுத்தவேண்டிய வரித்தொகையை அதிகப்படுத்துவதில்லை. உழைப்பின் மிகுதியால் குடியானவன் பெறுதலான பலனையெல்லாம் அவன் பெற்றுக்கொள்ளலாம்.

வரித் தொகைகளை திட்டம் செய்யும் ஸெட்டில் மென்ட் வேலை, தாமஸமாய் நீடித்து நடப்பது. ஸெட்டில்மென்ட் ஆபிஸர் இருந்த இடத்திலிருந்தே இந்த வேலையைச் செய்வது முடியாது. அவர் தம் வசத்தில் விடப்பெற்ற மாகாண முழுவதும் ப்ரயாணம்பண்ணி ஒவ்வொரு புலத்தையும் நேரில் பார்த்தே இந்த வேலையைச் செய்யவேண்டும். ஒவ்வொரு புலத்துக்கும் ஒவ்வொரு நம்பர் கொடுத்து, துரைத்தன ரெஜிஸ்டர்களில் அந்த நம்பரையும் காணியாளன் பெயரையும் அவன் அந்தப் புலத்துக்காகக் கட்டவேண்டிய தொகையையும் பதிவுசெய்வர்.

திப்பு இறந்துபோன பிறகு, இன்னும் சில மாகாணங்கள் இங்க்லிஷ் ஆட்சியில் சேர்ந்தன. அதுவரையில் சேலத்திலிருந்த மன்ரோவை துரைத்தனத்தார் கன்னடம் ஜில்லாவுக்கு அனுப்பினார்கள். அவர்காலத்துக்கு முன் க்ஷாமமாயிருந்த சேலம் அவர்காலத்தில் க்ஷேமமாயிற்று. போனஇடங்களிலெல்லாம் அவருக்கு ஜனங்கள் நல்வரவளித்தார்கள். நீதியும் இரக்கமு முள்ளவராதலால், இந்த ஸெட்டில்மென்ட் ஆபிஸரால் குடிகளுக்கு நன்மையே உண்டாயிற்று. இவர் கன்னடத்தில் போய்ச் சேர்ந்தபிறகு கன்னடர்களுடைய சஞ்சலங்கள் நீங்கி மனத்ருப்தி உண்டாயிற்று.

இந்த ஜில்லாவில எங்கே போனாலும், குடியானவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, "எங்களிடத்தில் தான்ய மில்லை, கால்நடைகள் இல்லை, பணமும் இல்லை. நாங்கள் வரி கட்டுவது எப்படி?" என்று கதறினார்கள். தங்களிடத்தில் உள்ளதை யெல்லாம் கவர்ந்துபோகும் திப்புவின் கொடிய உத்யோகஸ்தரைப் போன்றவரோ இவரும் என்று அஞ்சி, அவர்கள் தங்களிடத்தில் ஒன்று மில்லையென்று நடித்தார்கள். புதிய ஆபிஸர் தங்களிடத்தில் உள்ள பணத்தையெல்லாம் கவர்ந்துகொள்ள விரும்பினவர் அல்லரென்பது அவர்களுக்குப் படிப்படியாய்த் தெரியவந்தது. அவர்கள் தங்கள் நிலத்தில் ஒவ்வொரு வருஷமும் விளைவித்துக்கொள்ளக்கூடியது ந்யாயமாய் எவ்வளவென்பதை அறிந்துகொண்டு நிலவுரிமைக்காக அவர்கள் துரைத்-



ஸர் தாமஸ் மன்ரோ.

தனத்துக்குக் கட்டவேண்டிய தொகையை திட்டப்படுத்துவதே அவருடைய விருப்பம். தங்களுடைய ஸம்பாத்யம்

கொள்ளை போய்விடுமென்று இனி அஞ்சத்தக்க அவசியமில்லை யென்பதைக் குடியானவர்கள் பதினைந்து மாத காலத்தில் தெரிந்துகொண்டார்கள். கஷ்டப்பட்டு ஏருழவும் விதை விதைக்கவும் தொடங்கினார்கள். சீக்கிரத்தில் பயிர்வகைகள் பச்சைப் பச்சென்று முளைத்துக் கிளம்பின. முன்னே அல்லலும் அழுகையுமாயிருந்த சப்தமெல்லாம் ஒழிந்து, இப்பொழுது ஸந்தோஷமாய்த் தண்ணீர் பாய்ச்சுவதும் மடைமாறுவதுமான சப்தம் பெருகியது. கள்ளர்பயம் நீங்கிவிட்டது. நாட்டுப்புறத்தில் க்ராமவாஸிகள் கவலையில்லாமல் ஸுபிக்ஷமாய்க் காலங்கழிக்கலானார்கள்.

நிஜாம் இங்க்லிஷ்காரரோடு செய்திருந்த ஸமாதான உடன்படிக்கையின்படி, மைஸூர் யுத்தத்தில் மைஸூர் ராஜ்யத்தில் கிடைத்த ஜில்லாக்களை அவர் இங்க்லிஷ்காரருக்குக் கொடுத்துவிட்டார். அங்ஙனம் கொடுத்த ஜில்லாக்கள்தான் தற்காலம் பல்லாரி கடப்பை கர்னூல் அனந்தபூர் என வழங்குகின்றவை. கன்னடத்தில் ஸெட்டில்மெண்ட் வேலை முடிவானதும் துரைத்தனத்தார் மேஜர் மன்றோவை நிஜாம் ஒப்படைத்த ஜில்லாக்களுக்கு (Ceded districts) அனுப்பினர். மேஜர் மன்றோ போய் வேலையை ஒப்புக்கொண்டபோது, அந்த ஜில்லாக்களில் பாளையக்காரர் எண்மர், ஆயுதபாணிகளான முப்பதினாயிரம் ஸேவகர்களை வைத்துக்கொண்டு, கொள்ளையடிப்பதே தொழிலாக இருந்தார்கள். ப்ரயாணிகளை வருத்தி வழிபறிக்கும் திருடர் கூட்டங்கள் இஷ்டம்போல் உலாவியிருந்தன. ஒவ்வொரு க்ராமத்திலும் ஒவ்வொரு கோட்டை இருந்தது. கோட்டையில்லாத இடங்களில் க்ராமத்தைச் சுற்றிலும் சுவர்கள் எழுப்பியிருந்தன. சில விடங்களில் அவை கிலமாயிருப்பதை இன்னும் காணலாம். ஆகவே அக்காலத்தில் க்ராமவாஸிகள் எவ்வளவு பயத்தோடு இருந்திருப்பார்களென்று நாம் உத்தேசமாக உணரலாம். மத்ய மாகாணங்களில் இப்படிப்பட்ட சுவர்களை இன்னும் காணலாம். மஹாராஷ்ட்ர சிற்றரசருடைய ஆதரவைப் பெற்றிருந்த பிண்டாரிக் கள்ளர்கள் க்ராமம் க்ராமமாய்ச் சென்று கொள்ளையடித்திருந்தது இந்த மாகாணமே.

கள்வர் கூட்டங்களை நிர்மூலஞ்செய்து எல்லாருக்கும் த்ருப்திகரமாக ஸெடில்மெண்ட் வேலையைப் பொறுமையோடு

முடிந்தபிறகு, மன்ருேவுக்கு ஸ்வதேசத்துக்குத் திரும்ப-வேண்டுமென்கிற விருப்பம் உண்டாயிற்று. அவர் ஒரே நெட்-டாய் இந்தியாவில் இருபத்தேழு வருஷகாலம் ஸேவைசெய்-திருந்தார். தாய் தந்தையருக்குத் தவருமல் அப்போதப்-போது கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். ஸ்காட்லன்டில் தம்முடைய வீட்டில் தாய் தந்தையரோடு ஸந்தோஷமாக இருக்கலாமென்று எண்ணியிருக்கையில் பாவம் தாயார் இவர் போவதற்குள் காலமாய்விட்டார். தகப்பனர் தளர்பருவ மடைந்து பலஹீனமாய்விட்டார். இத்தனை வருஷகாலத்துக்-கப்புறம் வீடு இப்படிப்பட்ட ஸ்திதியில் இருந்தபோது, அங்கேபோய் வஸிக்கலானது அவருக்கு ஸந்தோஷமாக இருக்குமா? கொஞ்சகாலம் துக்கத்தோடு அங்கே தங்கி-யிருந்து, மறுபடியும் இந்தியாவுக்கு வந்தார்.

இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும், தார்வாரில் தக்ஷிண-மஹாராஷ்ட்ர தேசத்துக்குக் கம்மிஷன (விசாரணைக் கர்த்த)-ரானுர். இங்கே மஹாராஷ்ட்ரரோடு நடந்திருந்த சண்டையில் இவர் தலையிடும்படி நேரிட்டது. ஆதியில் ராணுவ உத்யோ-கஸ்தராயிருந்தவ ராகையால் அது அவருக்கு ஸம்மதமாகவே இருந்தது. ராணுவ ஸேவையில் கீர்த்தியடைந்து ஒரு தள-கர்த்தராய்விட்டார். அந்த யுத்தம் முடிவானதும் ஜெனரல் மன்ருே மட்ராஸ் கவர்னராக நியமகம் பெற்ருர். கெ. ஸி. பி. (K. C. B.) என்கிற அக்ஷரங்களால் குறிக்கப்பட்ட "நைட் கமான்டர் அவ் திபாத்" என்கிற கௌரவப்பட்டம் அளிக்கப் பெற்ருர். ப்ரயாண கதியிலிருக்கும்போது குத்திக்கு ஸமீபத்-தில் பட்டிகோண்டா என்னும் கிராமத்தில் அந்த்யதசை யடைந்தார். இந்த உத்தம புருஷனுடைய வாழ்நாள் இவ்-விதம் தனக்கு ப்ரியமான தேசத்தில்தானே முடிவாயிற்று. அவருடைய ஆட்சியில் இருந்த ஜனங்கள் அவரை உத்யோ-கஸ்தர் என்ருவது கவர்னர் என்ருவது பேசிக்கொள்வதில்லை: அவரைப்பற்றிப் பேசும்போதெல்லாம் விசுவாசமாய் "எங்க-ளப்பன்" "ப்ரஜைகளின் பிதா" என்று பேசிக்கொள்வார்கள்.

மௌன்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன்

திப்பு ஸுல்தான் நசிவுற்றபோது, சென்னை ராஜ்யத்தில் இங்க்லிஷ்காரர் வசத்தில் சேர்ந்த புதிய மாகாணங்களில் ஸர்-தாமஸ் மன்றோ ஸெட்டில்மென்ட் வேலையைச் செய்து முடித்ததுபோலவே, மஹாராஷ்ட்ரர் அபஜயமடைந்த பிறகு பொம்பாய் ராஜ்யத்தில் இங்க்லிஷ்காரர் வசத்தில் சேர்ந்த மாகாணங்களில் ஒரு பெரிய உத்யோகஸ்தர் ஸெட்டில்மென்ட் வேலையை நன்றாக நிர்வாஹம் பண்ணினர்.

மஹாராஷ்ட்ராருக்கும் இங்க்லிஷ்காராருக்கும் நடந்த யுத்தங்களின் விர்த்தாந்தம் நீளமானது. கல்கத்தாவில் மார்க்விஸ் வெல்லெஸ்லி கவர்னர் ஜெனரலாக இருந்தபோது மஹாராஷ்ட்ர அரசர்கள் தோல்வியடைந்தனர். அதன்மேல் அவர்கள் தங்கள் ராஜதானிகளில் இங்க்லிஷ் ரெஸிடென்டை ஏற்றுக்கொள்வது நிர்ப்பந்தமாயிற்று. இந்த ஏற்பாடு பீஷ்வாவுக்கு ஸரிப்படவில்லை: எப்பொழுது நிவர்த்திபண்ணிக்கொள்ளலாமென்று ஸமயம் பார்த்திருந்தார். ஆகவே அவர் இங்க்லிஷ்காரரோடு யுத்தம் செய்யத் தொடங்கினர். மூன்றாவது மஹாராஷ்ட்ர யுத்தம் என்று வழங்கும் இந்த யுத்தத்தில் பீஷ்வா தோல்வியடையவே, அவருடைய மாகாணங்களை இங்க்லிஷ் துரைத்தனத்தார் பொம்பாய் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டனர். ஸட்டாரா ராஜ்யத்தை சிவாஜி கால்வழியில் ஒருவருக்குக் கொடுத்தனர். தாங்கள் சேர்த்துக்கொண்ட புதிய ஜில்லாக்களில் ரெவின்யூ ஸெட்டில்மென்ட் செய்யும்படி மௌன்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டனை நியமித்தார்கள்.

இங்க்லிஷ்காரர் புதிதாய்ச் சேர்த்துக்கொண்ட மாகாணம் தபதி நதியிலிருந்து தெற்கில் மைஸூர் வரையில் பரவியிருந்தது. மஹாராஷ்ட்ர அரசர்கள் தங்கள் ஊர்களில் இங்குமங்கும் ஆயுதபாணிகளாக ஆள்களோடு போவதும், குடியானவர்கள் சேமித்து வைத்திருப்பதையெல்லாம் தீர்வையாகக் கொடுக்கும்படி நிர்ப்பந்திப்பதும், அநேக வருஷங்களாக வழக்கத்திலிருந்தது. சென்னை ராஜ்யத்தில் ஸர் தாமஸ் மன்றோவைக் கண்டு குடியானவர்கள் முதலில் அஞ்சியதுபோலவே, இந்த மாகாணத்திலும் குடியானவர்கள் மௌன்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டனைக் கண்டு அஞ்சுதலானார்கள். அதனால்

மன்ரோவைப் போலவே எல்பின்ஸ்டனும் ஹிதாஹிதமறிந்து கார்யநிர்வாஹம் பண்ணுவது அவசியமாயிற்று.

ஒவ்வொரு காணியாளனுடைய நிலத்திலும் விளைதலான மாஸூலுக் கேற்றபடி அவர் தீர்வையைத் திட்டம் செய்தார். ஒவ்வொரு வருஷமும் கட்டவேண்டிய தீர்வையின் தொகை முன்னிருந்ததைவிடக் குறைவாகவே இருந்தது: குடியானவனுடைய நிர்வாஹத்துக்கு அதிகமாகவும் இருக்கவில்லை. அந்த மாகாணத்தில் ஜமீன்தார்கள் இல்லை. பேடேல் என்னும் க்ராமக்காவலன் (தலையாரி) தீர்வையைக் குடியானவர்களிடம் வஸூல் செய்து துரைத்தன அதிகாரிகளிடம் கட்டிவிடுவான். க்ராமத்தில் சண்டைசச்சரவில்லாமல் பார்த்துக்கொள்வதும் தலையாரியின் கடமை. பட்டணங்களில் இவ்விதமான



மௌன்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன்.

வேலைகளை நிர்வஹிப்பவர்கள் கொத்துவால்கள். அந்த வார்த்தைக்கு முக்ய காவற்காரர் என்பது பொருள்.

க்ராம உத்யோகஸ்தர்களுக்கும் பட்டண உத்யோகஸ்தர்களுக்கும் தலைமையானவர் கலெக்ட்டர். ப்ரதானமான வ்யவஹாரங்கள் அவரிடம் போகும். சண்டை சச்சரவுகளை அவர் தாமே பைசல் பண்ணுவதும் உண்டு; அல்லது பஞ்சாயத்தாரிடத்தில் தீர்த்துக்கொள்ளும்படி அநுமதி கொடுப்பதும் உண்டு. பட்டணங்களில் வழக்குத் தீர்ப்பின் பொருட்டு அமீன்கள் என்னும் இந்திய நீதிபதிகள் நியமிக்கப்பெற்றனர்.

இந்த ப்ரகாரம் ஒழுங்கீனமான கொடுமைகளை நீக்கி நீதிமுறைமைகளை வகைப்படுத்தி ஆதரவான துரைத்தனம் ஏற்பட்டபிறகு, பொம்பாய் ராஜ்பத்தில் செல்வமும் சீரும் செழிப்பும் உண்டாயின. இந்த நன்மைக் கெல்லாம் காரண கர்த்தர் மௌன்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டனே. தம் வசத்தில் ஒப்பித்த தேசத்தின் நன்மைக்காக அவர் யாதொரு ஆடம்பரமில்லாமல் அதிகப் பரிவுடனே மிகவும் நிதானமாய்க் கஷ்டப்பட்டுவந்தார். அப்பால் அதிகாரிகள் அவரை பொம்பாய் கவர்னராக நியமித்தார்கள். அப்போது அவருக்கு வயது முப்பத்தொன்பது.

அவர் விவேகமும் ஸுகுணங்களும் வாய்ந்தவர். தம்முடைய ஆட்சியில் உள்ள ராஜ்யத்தின் ஒவ்வொரு பாகத்தையும் இரண்டு முறை நேரில் போய்ப் பார்த்தார். நீதிச் சட்டங்களைப் புஸ்தகரூபமாக எழுதுவித்தார். அதைப் பார்த்து ஒவ்வொருவரும், சந்தேஹத்துக் கிடமில்லாமல், ந்யாயத்தின் படி தன் தன் வ்யவஹாரம் ஸரிதானுவென்று ஸுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். தவிரவும், அவர் வித்யாசாலைகள் விஷயத்திலும் வித்யாபி விர்த்தி விஷயத்திலும் அதிக கவனம் செலுத்தினர். வித்யாபி விர்த்தி விஷயத்தில் அவர் பட்டபாடு கொஞ்சகாலத்தில் நன்மை தருவதாயிற்று. பொம்பாயில் ஏற்பட்ட கல்லூரிக்கு, எல்லாருங்கூடி அவரிடம் நன்றிபாராட்டி அவர் பெயரே பெயராக எல்பின்ஸ்டன் காலெஜ் என்று நாமகரணம் செய்தனர். அவருக்கு இங்க்லிஷில் நல்ல பாண்டித்யம் உண்டு. பாரஸீக பாஷையிலும் அநேக இந்திய பாஷைகளிலும் அவருக்குப் பரிச்சயம் உண்டு. அவர், உபகாரச் சம்பளம் பெற்று இங்க்லன்டை யடைந்தபோது, அதிக ஸாவகாசம் கிடைக்கவே, "இந்திய சரித்ரம்" எழுதினர். அது

ப்ரஸித்தமான ப்ரமாண நூலாக நெடுங்காலம் வரையில் மதிக்கப்பெற்றிருந்தது. பொம்பாய் ராஜதானியில் அவருடைய பெயர் எக்காலத்தும் நீடித்திருக்கும்.

லார்ட் வில்லியம் பேன்டின்க்

தங்கள் கணவர்களை வென்றவர் கையில் தாங்கள் அகப்பட்டுக்கொள்வதைக் காட்டிலும் உயிரை விடுவதே உத்தமமென்று துணிந்திருந்த ரஜபுத்ர ஸ்திரீகளைப்பற்றி வாசிக்கும்போது, அவர்களுடைய துணிகரத்தை அதிசயிக்காமலிருப்பது முடியாது. முற்காலத்தில் கணவன் இறந்தபோது உடன் கட்டையேறி உயிர்விட்டிருந்த பெண்டிரின் பக்திவிசுவாசத்தை மறுதலிப்பதும் முடியாது. ஆயினும், ஞானம் அபிவிர்த்தியாகி அறிவு தெளிவுறுதலான இக்காலத்தில் இப்படிப்பட்ட செய்கையைக் கண்டால், நமக்குப் பரிதாபமும் குடல் நடுக்கமும் உண்டாகின்றன. உடன்கட்டை யேறுவதான ஸதி என்கிற ஸம்ப்ரதாயம் எக்காலத்தில் ஏற்பட்டதென்பது நமக்குத் தெரியவில்லை: அது மிகவும் புராதனமானது. ஆயினும் விருப்பமில்லாதவளை உடன்கட்டையேறும்படி நிர்ப்பந்தம் செய்கிற வழக்கம் தப்பானது; கொடூரமு மானது. இங்ஙனம் நிர்ப்பந்திப்பதை அக்பர் பாத்ஷா ஹ விலக்கிவந்தார். இந்தியாவுக்கு கவர்னர் ஜெனரலாக வந்த லார்ட் வில்லியம் பென்டின்க், இந்தியாவில் இங்க்லிஷ் அரசில் கைம்பெண்கள் உடன்கட்டை யேறுவதைத் தவிர்த்து அதிக கீர்த்தி பெற்றார். உடன்கட்டை யேறுவதைச் சட்ட விரோதமான குற்றமென்று அவர் வரையறுத்ததனால், அந்த ஸம்ப்ரதாயம் அக்காலத்திலிருந்து நிற்பாடாயிற்று.

ஈரநெஞ்சுள்ள அந்த உத்தமர் செய்த சீர்திருத்தம் இந்த ஒன்றோடு நிற்கவில்லை. அவர் கவர்னர் ஜெனரல் ஆன காலத்தில், கொலையினால் ஜீவனம் செய்துவந்த சில கொடியர்கள் இந்தியா முழுவதும் அங்கங்கே பாவியிருந்தனர். அவர்கள் தக்கியர் என்பவர். அவர்களுக்குத் தமிழில் அரிதுலுக்கர் என்று பெயர். இவர்கள் கையில் யாதொரு ஆயுதமும் கொண்டுபோவ தில்லை. ஸாதாரணமான ப்ரயாணிகளுக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்யாஸமும் புலப்படுவதில்லை.

ஜனங்கள் போக்குவரத் தில்லாத இடங்களில் கையில் பொருளுள்ள ப்ரயாணி வழிநடக்கும்போது, தக்கியர்கள் உடன் வந்தால், அவர் ஓர் உத்தரீயத்தைக் கழுத்தி விட்டு அவனுடைய தொண்டையை நெரித்து, அவன் பணத்தை அபஹரித்துக்கொண்டு, அவனை அடுத்த புதரில் புதைத்துவிடுவார்கள். இந்த ஸங்கதி தெரிந்தவுடனே, லார்ட் வில்லியம் பென்டின்க் க்ராமங்களைப் பரிசோதித்து இந்தத் தக்கியர்களைக் கண்டுபிடிக்கும்படி சில உத்யோகஸ்தர்களை நியமித்தார். அவர்களில் மூக்யஸ்தராய் ப்ரஸித்திபெற்ற கர்னல் ஸ்லீமன் என்பவர் ஆறு வருஷத்தில் தக்கியர் ஆயிரத்தைந் நூற்றுவரைப் பிடிப்பித்தார். அதனோடு தக்கியர் கொடுமை ஒழிந்துபோயிற்று.

லார்ட் வில்லியம் பென்டின்க் ஆட்சிநடத்தியிருந்த காலத்தில் துரைத்தன வ்யவஹாரங்களெல்லாம் இங்க்லிஷில் நடக்கவேண்டு மென்கிற ஏற்பாடு பிறந்தது. அங்ஙனம் செய்யும்படி வற்புறுத்தினவர் ஆலோசனை சங்கத்தில் ஒருவரான மேக்காலே என்பவர். அவர் கல்கத்தாவில் பிறந்தவர்: சரித்ர ஆசிரிய ரென்று இங்க்லிஷில் ப்ரஸித்தமானவர்.

பொம்பாயில் எல்பின்ஸ்டன் கவர்னரா யிருந்தபோது, பென்டின்க் கல்கத்தாவில் கவர்னர் ஜெனரலா யிருந்தார். எல்பின்ஸ்டன் உபகாரச்சம்பளம் பெற்று இங்க்லன்டுக்குப் போனபிறகு, சில காலத்துக்குள் பொம்பாயில் கட்டி முடிந்த எல்பின்ஸ்டன் கல்லூரியைத் திறந்தவர் அவரே. கல்கத்தாவில் மருத்துவக் கல்லூரியைத் திறந்தவரும் அவரே. இந்தியாவில் வித்யாவிஷயமாக அவர் அநேக அநுகூலங்களைச் செய்தார். ஹிந்துக்களில் அநேக சீர்திருத்தங்களுக்குக் காரணகர்த்தராயிருந்த ராஜா ராம் மோஹன் ராய் என்பவர் வித்யாபிவிர்த்தி விஷயத்தில் லார்ட் வில்லியம் பென்டின்குக்கு அதிக ஸஹாயமாக இருந்தார்.

பஞ்சாப் ஸிம்ஹம்

சீக்கியர்கள் தங்கள் குருவான கோவிந்த ஸிங்கின் முயற்சியால் யுத்தவீரர்களாகி மொகலாயரோடு யுத்தம் செய்த ஸங்கதி உங்களுக்கு நினைவிருக்கும். அக்காலமுதல் சீக்-

கிய ஸர்தார்கள் பஞ்சாபில் பல ராஜ்யங்களை ஆட்சிசெய்திருந்தனர். 1799-ம் வருஷத்தில் ரஞ்சிட் ஸிங்க் என்கிற இளைய ஸர்தார் லாஹூர் பட்டணத்தைப் பிடித்துக்கொண்டார். இவர் ஸாமான்யமானவரல்லர்: ஸிம்ஹம்போல் தைர்யம் வாய்ந்தவர்: இந்திய வீரர்களிலும் அரசர்களிலும் மிகச்சிறந்தவர்களில் ஒருவர். அவர் பஞ்சாபில் மற்ற ஸர்தார்களையெல்லாம் வென்று தனக்கு ஐக்யமாக்கிக்கொண்டார். அதனால் உட்பிரிவு ஒன்றுமில்லாமல் சீக்யரெல்லாம் ஒன்றுகூடி ரஞ்சிட் ஸிங்கைத் தங்கள் மஹாராஜாவாகக்கொண்டாடினார்கள். ஸேனைகள் யூரபிய ரீதியாக யுத்தப்பயிற்சி செய்யப்பெற்று, ஒரேவிதமான உடை உடுத்து, குறி தவறாமல் பீரங்கிவெடிக்கவல்லவைகளாயின. ரஞ்சிட்ஸிங்க், லாஹூரை ராஜதானியாக்கிக்கொண்டு அவ்விடத்தில் நின்றும் எல்லா ஸம்பவங்களையும் அதிக யூகையோடு கவனித்திருந்தார். சீக்கிய ராஜ்யம் இங்ஙனம் மிகவும் பலத்த ராஜ்யமாயிற்று.



ரஞ்சிட் ஸிங்க்.

ரஞ்சிட் ஸிங்க் அதிசயமானவர்: மனிதரை ஆள்வதற்கென்றே பிறந்தவர். சிக்கிய ஜனங்களும் வீரர்களும் புரோஹிதர்களும் ப்ரதானிகளும் அவர் போன வழியே போகலுற்றனர். அவர் கட்டளைக்கு இரண்டாவது வார்த்தையில்லை. எல்லரும் கீழ்ப்படிந்து நடப்பர்.

அவர் உபரமானவருமல்லர், பார்வைக்கு கம்பீரமானவருமல்லர். ஏதோ வ்யாதி கண்டு அவருடைய ரூபத்தை விகாரப்படுத்திவிட்டது. இடக்கண் பரிஷ்காரமாய் மூடுண்டுபோயிற்று. வலக்கண் அகலத் திறந்து உருண்ட பார்வையா

யிருக்கும். முகம் ஒல்லியாய் அம்மை வடுக்கள் தோன்றி யிருக்கும். தாடிமயிர் நரைத்துக் கன்னத்தில் வெலித்தியாயும் மோவாய்க்கட்டையில் அடர்த்தியாயும் இருக்கும். இடது கையும் பாதமும் பாரிசவாயுவால் சோர்ந்திருக்கும். இப்படி யெல்லாம் இருந்தும், கரிய கேடகத்தை முதுகிலிட்டுக் குதிரையின்மீ தேறினவுடனே, அவரைப் பார்த்தால் வெற்றி வீரரைப்போல் தோன்றுவார்: உத்ஸாஹமும் சுறுசுறுப்பும் அடைந்து மிகவும் இளைய வீரன்போல் தமக்கு இஷ்டமானபடி சாரிபோவார்.

நாற்பது வருஷகாலம் ஆட்சிசெய்திருந்து இந்த மஹாராஜா பரலோகப்ராப்தி யடைந்தபோது அவர் குமாரர் த்யுலிப் ஸிங்க் பட்டந்தரித்துக்கொண்டார். ரஞ்சிட் ஸிங்க் உயிரோடிருந்தவரையில், இங்கிலிஷ்காரரோடு செய்திருந்த உடன்படிக்கைப்படி ஸட்லெஜ் நதிக்கு அப்பாற்பட்ட தேசத்தை எதிர்க்காமலே இருந்தார். த்யுலிப் ஸிங்கும் அவருடைய மந்த்ரிமார்களும் அந்த உடன்படிக்கையை மீறி, இங்க்லிஷ்காரருடைய ஆதரவிலிருந்த தேசத்தை எதிர்த்தனர். இதனால் சிக்கியர் இங்க்லிஷ்காரரோடு இரண்டு யுத்தங்கள் செய்யும்படி நேரிட்டது. இரண்டாவது, லார்ட் டல்ஹௌஸி காலத்தில் நடந்தது. சிக்கியர் தோல்வியடைந்தனர். பஞ்சாப் ப்ரிட்டிஷ் இந்தியாவில் ஒரு பாக மாயிற்று.

பஞ்சாபில் நல்ல துரைத்தனம் ஏற்படுத்துவதில் ஹென்றி லாரென்ஸ் ஜான் லாரென்ஸ் என்ற இங்க்லிஷ் ஸஹோதரர் இருவர் சிரத்தையெடுத்துக்கொண்டு ப்ரஸித்தியடைந்தனர்.

லார்ட் டல்ஹௌஸி

டல்ஹௌஸி கவர்னர் ஜெனரலானபோது, ப்ளாஸி யுத்தம் நடந்து ஏறக்குறைய நூறுவருஷ காலம் ஆய்விட்டது. க்ளைவை முன்னிட்டு இங்க்லிஷ்காரர் இந்தியாவில் அரசு செய்ய ஆரம்பித்த பிறகு எவ்வளவு மாறுதல்கள் உண்டாயின! முதலில் இங்க்லிஷ்காரர் ஸாமாந்ய வர்த்தகர்களாக இருந்தவர்கள். இங்க்லிஷ் சரக்குகளை இந்தியாவில் விற்பனை செய்யவும் இங்க்லன்டில் விற்பனைசெய்ய இந்திய சரக்குகளை

வாங்கிக்கொண்டு போகவுமே அவர்கள் இந்தியாவுக்கு வந்தவர்கள். ஈஸ்ட் இண்டியா வர்த்தகக் கம்பனிக்கு லாபந்தேடுவதே அவர்களுடைய விருப்பம். சண்டை போடுவதென்ருல் அபரிமிதமான பணம் செலவாகும். அதனுல் அவர்கள் சண்டைசெய்ய விரும்பவேயில்லை. அவர்கள் சோலிக்குப் போகாமலிருந்தால், அவர்கள் சண்டைக்கு வந்திருக்கவே மாட்டார்கள். ஸிராஜ் உட் டௌலாவின் கொடுமையே இங்க்லிஷ் அரசாட்சிக்கு அடிகோலியது. ஸிராஜ் உட் டௌலா தங்கள் தேசத்தாரைக் கொல்வித்ததனுல், அவர்கள் வங்காளத்து நவாபுகளின் பலத்தை வாங்கிவிட்டார்கள். அரசு நடத்த ஆரம்பித்த பிறகு, தங்கள் அரசின் கீழ்ப்பட்ட தேசத்தைப் பிறர் எதிர்க்காதபடி காப்பது அவர்களுக்கு அவசியமாயிற்று. மஹாராஷ்ட்ரர்கள் எந்த ஸமயத்திலாவது இங்க்லிஷ் மாகாணங்களின்மீது படையெடுத்து வருவார்களென்று அஞ்சி, இங்க்லிஷ்காரர் தாங்களே அவர்களோடு சண்டைக்குப் போயினர். மஹாராஷ்ட்ர தேசம் இங்க்லிஷ் ஆதிபத்தியத்தின்கீழ் வந்துவிட்டது. இங்ஙனம் ஆரம்பமான வேலையை நிறுத்துவது முடியாது. இதனுல் இந்தியாவில் இங்க்லிஷ் கவர்னர் ஜெனரலுடைய ஆட்சி நாளுக்குநாள் பலப்பட்டுவந்தது. இங்க்லிஷ் ஆட்சி பலப்பட்டு ந்யாயமாக நடந்துவரவே, முடிவில் இங்க்லிஷ்காரருக்கு இந்தியாவில் ஏகாதிபத்யம் உண்டாயிற்று.

இங்ஙனம் இங்க்லிஷ் ஆட்சி ஏகாதிபத்யமடைந்து இந்தியாவில் பெரும்பாகம் அதற்கு ஐக்யமான பிறகு வந்தவர் லார்ட் டல்ஹௌஸி. எந்த வேலையையும் அரைகுறையாய்ச் செய்வது அவருக்கு ஸரிப்படுவதில்லை. இங்க்லிஷ் ஆட்சியிலுள்ள தேசம் யாதொரு குழப்பமில்லாமல் செழித்திருக்க, சில ஹிந்து ராஜாக்களுடைய தேசங்களில் துரைத்தனம் தகுதியாக நடவாமையைக் கண்டு, அவர் பின்னும் சில மாகாணங்களை இங்க்லிஷ் துரைத்தனத்தில் சேர்த்துக்கொண்டார். அயோத்தி ராஜ்யம், மஹாராஷ்ட்ரர்களுடைய நாகபூர் ராஜ்யம், முதலானவை அங்ஙனம் சேர்த்துக்கொண்டவைகளில் முக்யமானவை. அவை அங்ஙனம் புதிய ஆட்சியில் சேர்ந்தபின்பு, அவற்றின் குடிகளுக்கு முன்னிலும் க்ஷேமம் அதிகரித்ததென்பது நிச்சயம்.

இங்ஙனம் நடந்து வருகையில் ஹிந்துஸ்தானமும் தென்னிந்தியாவும் இங்க்லிஷ் ஆட்சியில் ஒன்ருயின. லார்ட் டல்ஹௌஸி இருந்த காலம், நன்மைகள் வளர்ந்து வித்தியானகாலம். அதற்குக் கொஞ்ச காலத்துக்கு முன்னே நீராவியந்திரம் நிர்மிதமாகி இங்க்லன்ட் முழுவதும் இருப்புப்பாதைகள் ஏற்பட்டுவந்தன. யூரபில் தந்தி தபால் எங்கும் பரவி வந்தது. இந்தியா இப்போது ஒரே ராஜ்யமாய்விட்டதனுல், காலகதிக்கேற்றபடி இந்தியாவும் யூரபிய தேசங்களோடு ஏன் ஸரியொத்து நடத்தலாகாதென் றெண்ணி, லார்ட் டல்ஹௌஸி இந்தியாவில் இருப்புப்பாதைகள் போடுவிக்கத் தொடங்கிஞர். தந்திதபாலும் ஏற்படுத்திஞர். அவருக்குமுன் ஷெர்ஷாஹ காலமுதல் ஆள்கள் மூலமாகவும் குதிரைகளின் உதவி கொண்டும் நடந்து வந்த டாக் என்னும் தபால் முறையைச் சீர்செய்து, தபால் இருப்புப்பாதை மார்க்கமாகப் போகத்தக்க வழிவகைகளை ஏற்படுத்திஞர். இந்தியாவில் தபால் கட்டணம் மிகவும் குறைவாக விதித்தமையால், மிகவும் எளியவர்களும் தபால் மூலமாய்க் கடிதங்கள் அனுப்புவது ஸுலப ஸாத்யமாயிற்று.

லார்ட் டல்ஹௌஸி காலத்துக்கு முன்னே, இந்தியாவின் நிலைமை நெடுங்காலத்துக்கு முன் இருந்ததுபோலவே இருந்தது. இந்தியாவின் ஒருபக்கத்தில் வஸிப்பவர்களுக்கு மற்றப் பக்கத்தில் வஸிப்பவர்களைப்பற்றி அதிகம் தெரியாது. பக்கத்தில் பக்கத்தில் உள்ள ராஜ்யங்கள், ஸமாதானமாய் ஒத்திராமல், தங்கள் பலத்தை அதிகப்படுத்திக்கொள்ளும்படி அடிக்கடி சண்டை செய்திருந்தன. முற்காலங்களில் யூரபிலுள்ள தேசங்களும் அப்படித்தான் செய்திருந்தன. பல தேசங்களுக்குள்ளே வ்யாபாரம் நடக்கத் தொடங்கின பிறகு, அந்தந்த தேசத்தார் மற்ற தேசங்களைப் பற்றிப் பல ஸங்கதிகளை அறியலாயினர். இந்தப்ரகாரம் பலதேசங்களின் விசேஷங்களை அந்தந்த தேசத்தார் மேலும் மேலும் அறியலான போது, அவர்கள் முன்போல் விரோதம் பாராட்டாமல் மித்ரபாந்தவம் பாராட்டலாயினர். குணுகுணங்களை அறிந்த பிறகே ஒருவரை யொருவர் விரும்புதல் ஸாத்யம். இங்ஙனமே, இக்காலத்தில்புதிதாய் உண்டாகிய ஏற்பாடுகளில் இந்தியாவில் பல பாகங்களில் உள்ளவர்கள் ஒருவரை யொருவர்

அறியவும் விரும்பவும் தொடங்கினார்கள். வடக்கிலுள்ளவர்களையும் தெற்கிலுள்ளவர்களையும் கிழக்கிலுள்ளவர்களையும் மேற்கிலுள்ளவர்களையும் வ்யாபாரம் ஒன்றாக பந்திப்பதாயிற்று. சென்னையிலுள்ள வர்த்தகர்கள் தங்கள் சாக்குகளை பொம்பாய்க்கு அனுப்பலாயினர். பொம்பாய்ச் சாக்குகள் பஞ்சாபுக்கும் வங்காளத்துக்கும் போகத் தொடங்கின. முன்னே ஒரூரிலிருந்து ஒரூருக்குச் சாக்குகள் போவது துர்லபம். இப்போது இந்தியா முழுவதும் சாக்குகள் இருப்புப்பாதை மார்க்கமாய்ப் போகலுற்றன. க்ஷாமகாலங்களில் ஆஹாரம் கிடைப்பது அரிதாயிருந்த இடங்களுக்கு அரிசி இப்போது இருப்புப்பாதை மூலமாய் ஸுலபத்தில் போய்ச் சேர்கின்றது. ஒவ்வொரு பக்கத்திலும் தேசவாஸிகள் கண்விழிக்கலாயினர். நடந்தேறிவருகிற பலவிஷயங்களில் சிரத்தையெடுத்துக்கொள்ளத் தொடங்கினர். இந்தியா தற்கால அபிவிர்த்திகளை அடைந்து வருகின்ற தேசமாயிற்று. முன்போல் சண்டைசெய்தல் முதலான வீண்கார்யங்களை நினைக்கவும் நேரமில்லாமல், ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வேலையில் சிரத்தைவைத்து உழைக்கலாயினர்.

இந்தியா இங்ஙனம் நல்ல வழியில் திரும்புதலுற்றதற்கு மஹா ராஜதந்த்ர நிபுணரான டல்ஹௌஸியின் க்ருத்யமே காரணம்.

லார்ட் டல்ஹௌஸி இந்தியாவில் எட்டுவருஷ காலம் இருந்தார். அவ்வளவு காலமும் அவர் இந்தியாவின் அபிவிர்த்திக்காகப் பலவிதத்தில் கஷ்டப்பட்டுப் பல ஏற்பாடுகளை வரையறுத்தார். இந்தியாவில் பிறந்து இந்தியாவில் வளர்ந்தவர்களுக்கே இந்தியாவின் நிலமிதி (climate) ஒத்துக்கொள்வது ஏகதேசம். குளிர்ச்சியான தேசங்களிலிருந்து வருகின்றவர்களுடைய தேகஸௌக்யம் இந்தியாவின் நிலமிதியால் கெடுவது ஸஹஜம். லார்ட் டல்ஹௌஸி இங்க்லண்டுக்குத் திரும்பினபோது அவருடைய பலமெல்லாம் ஒடுங்கிவிட்டது. கப்பலில் ப்ரயாணம் பண்ணும்போது, இங்க்லண்டுக்கு இரண்டாவதாய்த் தமக்கு மிகவும் விருப்பமான இந்தியாவைக் குறித்த விஷயங்களைப்பற்றி எழுதிக்கொண்டுபோனார். இங்க்லண்டில் போய்ச் சேர்ந்து சிக்ரத்தில் இறந்துபோனார். கட-

மையின் நிமித்தமே அவர் ப்ராணத்யாகம் பண்ணினர். இந்த ராஜதந்த்ர நிபுணர் "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்பதற்கு ப்ரத்யக்ஷ உதாரணம்.

டில்லியின் கடைசி முற்றுகை

லார்ட் டல்ஹௌஸி காலத்தில் புதிதாக ஏற்பட்ட முறைகளெல்லாம் இந்திய ஜனங்களுக்கு அச்சத்தை உண்டாக்கின. தந்தி தபால்களையும் இருப்புப் பாதைகளையும் முன்னெப்போதும் அவர்கள் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. அதனால், புதுமையான இவைகளை அவர்கள் முதலில் நம்பவில்லை. அரசாட்சி கைக்கொண்டது முதல் இங்கிலிஷ் துரைத்தனத்தார் ஓர் இந்திய ஸேனையை வைத்துப் படைத்தனர். இந்திய ஸேனையிலுள்ள ஸிப்பாய்களுக்கும் மற்றவர்களைப்போலவே இருப்புப்பாதை என்ஜின்கள் அதிசயமாயிருந்தன. இப்படிப்பட்டவைகளை இந்தியாவுக்குக் கொண்டு வருகிற காரணம் இன்னதென்று அப்பொழுது அவர்களுக்கு விளங்கவில்லை.

ஸிப்பாய்களுக்குக் கொடுக்கும் துப்பாக்கி தோட்டாக்களின் கடுதாசியில் கொழுப்புப் பூசியிருந்தது. அக்காலத்தில் வழங்கியிருந்த தோட்டாக்களைத் துப்பாக்கியில் வைத்துத் தொடுப்பதற்குமுன் அவைகளைப் பல்லால் கடித்து வைப்பது அவஸ்யம். இந்தத் தோட்டாக்களில் பசுவின் கொழுப்போ பன்றியின் கொழுப்போ பூசியிருந்த ஸங்கதி இங்கிலிஷ் தளகர்த்தர்களுக்குத் தெரியாது. அப்படிப் பூசியிருக்கிற ஸங்கதி பின்னால் தெரியவந்தது. வேறு வகையில்லாமையால் ஸிப்பாய்கள் அந்தத் தோட்டாக்களை உபயோகிக்கவேண்டுமென்று மேலுத்யோகஸ்தர்கள் நிர்ப்பந்தித்தார்கள். தங்கள் மதத்தை மாற்றிவிடும்படி உத்யோகஸ்தர்கள் அவ்விதம் நிர்ப்பந்திப்பதாக நினைத்து, ஸிப்பாய்கள் அந்தத் தோட்டாக்களை உபயோகிக்க மறுத்துக் கலஹத்துக்கு ஆரம்பித்தார்கள். அதன்மேல் ஹிந்துஸ்தான முழுவதும் அநேக பயங்கரமான ஸம்பவங்கள் நிகழ்ந்தன. ஸிப்பாய்கள் வெறிகொண்டு இங்கிலிஷ் உத்யோகஸ்தர்களைக் கொன்றார்கள். உத்யோகஸ்தர்களோடு பல அபாயங்களுக்கு உட்பட்டு முன்னே அநேக யுத்-



ஸர் ஹென்ரி லாரென்ஸ்.

தங்களில் சண்டை செய்து உத்யோகஸ்தர்களிடம் விசுவாசம் வைத்திருந்த ஸிப்பாய்கள் மாத்ரம் அந்த சோவிக்குப் போகவில்லை. மற்றவர்கள், ஆணும் பெண்ணுமாக அநேக இங்கிலிஷ்காரர்களைக் கொன்றனர். . கலஹக்காரத் தலைவனொருவன் நாநாஸாஹிப் என்பவன் செய்த ஒரு பயங்கரமான செய்கை, அவனை எக்காலத்தும் சண்டாளனென்று இகழத்தக்கதாயிற்று. அப்போது நேரிட்ட கொடுமைகளெல்லாம் என்னைப் பிசகினுல் நேரிட்டவை. ஆதலால் அவைகளைப்பற்றி நாம் இப்போது பேசுவதில் பலனில்லை. கலஹக்காரர் கூடிக்கொண்டு மொகல் சக்ரவர்த்திகளின் கால்வழியில் ஒருவனை ஹிந்துஸ்தானத்துக்கு அரசனென்று ப்ரஸ்தாபித்தார்-

கள். அந்த மொகல் அரசன் டில்லியிலிருந்தான். இவர்கள் பல்லாயிரம் பேர் டில்லியில் சேர்ந்து நகரவாயிலை மூடிக்கொண்டார்கள்.

ஹிந்துஸ்தானத்தில் பலவேறு பாகங்களில் கோட்டைக்காவலாயிருந்த இங்க்லிஷ்காரரைக் கொலைசெய்யும்படி கலஹக்கார ஸிப்பாய்கள் சூழ்ந்துகொண்டனர். இந்தியாவின் நன்மையைக் கோரியிருந்த ஸர் ஹென்றி லாரென்ஸ் என்பவர் லக்னோவில் ரெஸிடென்ட் மாளிகையைக் காவல் செய்வதில் உயிரிழந்தார். டில்லியைப் பிடித்துக்கொண்டால் கலஹம் அடங்கிப் போகுமென்று நினைத்து, கலஹக்காரர்களை வெல்லும்படி துரைத்தனத்தார் இங்க்லிஷ் ஸேனைகளை சீக்ரமாக ஒன்றுகூட்டி டில்லிக்கு அனுப்பினார்கள்.

டில்லியினுள்ளே இருந்த கலஹக்காரரோ பல்லாயிரம்பேர்: இங்க்லிஷ் துருப்புகளோ மிகவும் ஸ்வல்பம். அதனால் அவஸரப்பட்டு ஒன்றும் செய்வதற்கு இடமில்லை. ஸாவகாசத்தில் இங்க்லண்டிலிருந்து துருப்புக்கள் வந்தன. கடைசியாக ஸர் ஜான் நிகல்ஸன் என்பவர் துருப்புக்களைக் கொண்டுபோய் டில்லியை முற்றுகை செய்து, பீரங்கியை வெடித்து மதில்சுவரில் வழிசெய்தார். பலநாள் வரையில் டில்லியின் தெருக்களில் மும்முரமாய்ச் சண்டை நடந்தது. கடைசியாகப் பட்டணம் கைப்பட்டது துருப்புக்களைப் பட்டணத்துக்குள்ளே அழைத்துக்கொண்டு போகும்போது, நிகல்ஸன் பாவம் கொலையுண்டார். அவரை யறிந்திருந்த இந்தியர்களும் இங்க்லிஷ்காரரும் அவரிடத்தில் அதிக மரியாதையும் விசுவாசமும் வைத்திருந்தார்கள். அப்பால் துரைத்தனத்தார் படிப்படியாய்க் கலஹத்தை அடக்கிவிட்டனர்.

கலஹம் அடங்கினபிறகு, இங்க்லிஷ் பார்லிமென்ட் ஸபையார், இந்தியாவின் துரைத்தனத்தை ஈஸ்ட் இண்டியா வர்த்தகக் கம்பனியார் கையிலிருந்து வாங்கிக்கொண்டு, இங்க்லண்ட் மஹாராணியை இந்தியாவின் அரசியென்று ப்ரஸ்தாபித்தார்கள். அதுமுதல் விக்டோரியா மஹாராணி இந்தியாவுக்கு அரசியானார். அரசியானவுடனே, ஜனங்களை நன்றாக ஆட்சிசெய்வதாகவும், துரைத்தனத்தில் உடந்தைப்பட்டிருக்க இடங்கொடுப்பதாகவும், ஒவ்வொருவரும் அவரவர்

மதத்தை அநுஸரிக்க விடுவதாகவும் வாக்குறுதிசெய்து ஒரு மஹாசாஸநம் அளித்தார். இந்த வாக்குறுதியைக் கேட்டு இந்திய ஜனங்களெல்லாரும் விக்டோரியா மஹாராணி யிடத்தில் அதிக விசுவாசம் பாராட்டினர்கள். கலஹம் அடங்கின அளவில் மொகல் அரசனுன பஹதூர் ஷாஹவை துரைத்தனத்தார் பர்மாவுக்கு அனுப்பிவிட்டனர். அவனேடு மொகல் பரம்பரை முடிவாயிற்று.

லார்ட் ரிப்பன்

லார்ட் ரிப்பன் இந்தியாவுக்கு ராஜப்ரதிநிதியானபோது நமக்கும் அப்கானிஸ்தானத்து அமீருக்கும் யுத்தம் நடந்திருந்தது. அவருடைய ஆட்சியில் முதல்வருஷ முழுவதும் இந்த யுத்தம் அவர் கவனத்தைக் கவர்ந்தது. கவர்ந்திருந்தும், இந்தியாவின் சீர்ப்பாட்டைப்பற்றிய சில பெரிய ஆலோசனைகளை அவர் மனத்தில் வைத்திருந்தார். லார்ட் ராபர்ட்ஸ் இங்க்லிஷ் ஸேனையோடு கான்டஹாருக்குப் போய், அப்கானியரைத் துரத்திவிட்டு, அந்தப் பட்டணத்தில் அடைபட்டிருந்த இங்க்லிஷ் ஸேனையைக் காப்பாற்றினர். அப்பால் யுத்தம் சீக்ரத்தில் முடிவாயிற்று. லார்ட் ரிப்பன் அப்புறம் தம்முடைய ப்ரஸித்தமான ப்ரதேச ஸ்வயாதிபத்யச் சட்டத்தை (லோகல் ஸெல்ப் கவர்ன்மென்ட் ஆக்ட்டை)க் கொண்டுவந்தார்.

லார்ட் ரிப்பன் காலத்துக்கு முன்னே ஜனங்கள் தாங்கள் தெரிந்தெடுத்து நியமித்தவர்களைக்கொண்டு ஸ்வயாதிபத்யம் நடத்துவது (Elective Self-Government) இன்னதென்பது இந்தியாவில் தெரியாத ஸங்கதி. முற்காலங்களில் அரசன் தன்னுடைய ராஜ்யத்தில் ஸர்வாதிகாரி. மந்த்ரி முதல் க்ராமாதிபதி வரையில் ஒவ்வொருவரும் அரசனுக்குக் கீழ்ப்பட்டு நடப்பர். அரசன் வார்த்தைக்கு எவரும் எதிர்வார்த்தை பேசமாட்டார்கள். அரசன் தான் இட்டது சட்டமாய் அரசாட்சி செய்யும் ஏகாதிபதி. முதலிலிருந்த இங்க்லிஷ் ராஜப்ரதிநிதிகள் (வைஸ்ராய்கள்) பழைய இந்திய அரசர்போல் ஏகாதிபதியாய் துரைத்தனம் நடத்தியிருந்தனர்.

சில நூற்றுண்டுகளுக்கு முற்பட்ட காலம் வரையில் யூரபிய அரசர்கள் ஏகாதிபதிகளாய் இருந்தவர்களே. சில நூற்றுண்டுகளில் யூரபில் பெரிய மாறுதல்கள் உண்டாயின. ஜனங்கள் தங்கள் தேசத்தின் துரைத்தனத்தைத் தாங்களும் உடந்தைப்பட்டு நடத்த விரும்புதலாயினர். நல்ல அரசர்கள் யாதொரு குழப்பமுமில்லாமல் தேசத்தை ஸரியாக ஆட்சிசெய்கையில், ஜனங்கள் த்ருப்திகரமாய் இருந்தார்கள். கெட்ட அரசர்கள் தங்கள் தேசத்தில் சண்டை சச்சரவுகளை உண்டாக்கி, சண்டைபோட இஷ்டமில்லாதவர்கள் அரசனுடைய இஷ்டத்தை அநுஸரித்துச் சண்டைபோடுவது நிர்ப்பந்தமானல், அவர்களுக்கு அத்ருப்தி உண்டாவது ஸஹஜம். இங்ஙனம் நேரிடலானபின் ஜனங்கள் அரசனையே விரோதித்துச் சண்டைசெய்யத் தொடங்கினர். இப்படிப்பட்ட சண்டைகளால்தான் இங்க்லிஷ் பார்லிமெண்ட் ஏற்பட்டது. பார்லிமெண்டின் கடமையாவது தேசத்துக்குரிய சட்டங்களை நிரூபணம் செய்தலே. ஜனங்கள் தங்களுக்குப் பதிலாகத் தெரிந்தெடுத்து நியமிப்பவர்களே எல்லாச் சட்டங்களையும் நிரூபணம் செய்வர். ஒரு யுத்தத்துக்குப் போவதானலும் ஜனங்களுடைய இஷ்டத்தை அநுஸரித்தே போகவேண்டும். எல்லாருக்கும் மேலாய் ராஜா அரசாட்சி செய்கிறர். ஒவ்வொன்றும் சட்டமாவதற்கு முன்னே அவருடைய அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும். ஜனங்களால் நியமனம் பெற்றவர்கள் நடத்துதலான துரைத்தனம் ஏதோ ஒருவிதத்தில் இந்தியாவில் ஒருகாலத்தில் ஏற்படக்கூடும் என்பது லார்ட் ரிப்பனுடைய எண்ணம். யூரபிய துரைத்தன முறைகளை இந்திய ஜனங்களுக்குக் கற்பிக்கும் பொருட்டு, அதற்கு பாலசிக்ஷையாக, அவர் இந்தியாவில் நகரபரிபாலன ஸபைகளை ஜனங்கள் நியமிக்கும்படி செய்தார்.

நகரபரிபாலன ஸபைகள் செய்யத்தக்க கார்யம் என்ன? பாதைகளை அப்போதப்போது செப்பமிடாவிட்டால், அவை சிதைந்து சீர் குலைகின்றன: அவைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கவேண்டும். அவைகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்: இல்லாவிட்டால் சீக்ரத்தில் வ்யாதி உண்டாகும். பட்டணங்களில் உள்ள பாலங்களையும் தெருவிலேற்றும் விளக்குகளையும் எல்லாருக்கும் பொதுவான கிணறுகளையும்

பரிபாலித்து வரவேண்டும். சிறுவர்களுக்கு பாலசிக்ஷையும் எளியவர்களுக்கு தர்மவைத்யமும் செய்விக்கவேண்டும். இவைகளெல்லாம் க்ராமபரிபாலன ஸபைகளும் நகரபரிபாலன ஸபைகளும் செய்யத்தக்க கார்யம். இவைகளைச் செய்வதற்கு வேண்டிய பணத்தைச் சவதரித்துக்கொள்ளுமாறு, லார்ட் ரிப்பனுடைய சட்டம் ம்யுனிஸிபல் கௌன்ஸில்களுக்கு வரிகள் வஸூல் செய்வதற்குரிய அதிகாரம் கொடுக்கிறது. வீடுகளின் மேலும் நிலங்களின் மேலும் வரிகட்டி வாங்குகிறார்கள். பாதைகளிலும் தோணித்துறைகளிலும் சுங்கம் வாங்குகிறார்கள். பொதுஜன நன்மைக்கு அவசியமானவைகளைச் செய்வதற்குப் போதுமான பணம் சவதரிக்கும் பொருட்டு வேறு பலவிதமான வரிகளையும் விதிக்கிறார்கள். பஞ்சாபில் பட்டணங்களிலும் ம்யுனிஸிபாலிடிகளிலும் ப்ரவேசிக்கிற ஸாமான்களின்மேல் (Octroi) சுங்கம் வாங்குகிறார்கள்.

நகரங்களின் துரைத்தனத்தையும் க்ராமங்களின் துரைத்தனத்தையும் ம்யுனிஸிபல் கௌன்ஸில்கள் நடத்துகின்றன. (ஜில்லாக்களுக்கும்) டிஸ்ட்ரிக்டுகளுக்கும் துரைத்தன முறைமையில்லாவிட்டால், பெரிய ரஸ்தாக்களை எவர் செப்பமிடுவர்? தர்மவைத்ய சாலைகளை எவர் கட்டுவர்? ஸத்ரம் சாவடிகளைக் கட்டுவார் எவர்? டிஸ்ட்ரிக்ட் துரைத்தனத்தின் பொருட்டு டிஸ்ட்ரிக்ட் (கௌன்ஸில்களை) போர்டுகளை ஜனங்கள் எலெக்ட் (நியமகம்) செய்கிறார்கள். டிஸ்ட்ரிக்ட் ம்யுனிஸிபாலிடிகள் எல்லாவற்றுக்கும் சமுதாயமான பெரிய வ்யவஹாரங்களை இந்த போர்டுகள் நடத்துகின்றன. டிஸ்ட்ரிக்ட் கௌன்ஸில்களும் தாங்கள் செய்யவேண்டிய கார்யத்துக்கு அவசியமான பணத்தை வரிகளின் வாயிலாய்ச் சவதரித்துக்கொள்கின்றன. போதுமான பணம் இல்லாவிட்டால் அந்த டிஸ்ட்ரிக்டுகளுக்குரிய மாகாணத்தின் துரைத்தனத்திலிருந்து பொருளுதவி கிடைக்கிறது. இந்தக் கௌன்ஸில்களில் நியமனம் (எலெக்ட்செய்யப்) பெறும் ப்ரதி மெம்பரும் மூன்று வருஷகாலம் மெம்பராயிருப்பது வழக்கம். அப்பால் அவர் கௌன்ஸிலில் இருக்க விரும்பினால் மறுபடியும் நியமனம் பெறவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால் அவருக்கு பர்த்தியாக வேறொரு கௌன்ஸிலரை நியமிப்பார்கள்.

இந்த யூகமான முறைதான் தற்காலத்தில் நடந்துவருகிற ப்ரதேச துரைத்தன (Local Government) முறை. மூன்று வருஷத்துக்கு ஒருமுறை இந்தக் கௌன்ஸில்களுக்கு வேண்டிய மெம்பர்களை ஜனங்கள் நியமகம் செய்கிறார்கள். இந்தியாவுக்கு ப்ரதேச ஸ்வயாதிபத்யம் கொடுத்தபோது லார்ட் ரிப்பன் கருதியிருந்த பெரிய சீர்திருத்தமும், இப்போது உருக்கொண்டுவிட்டது. லார்ட் மின்டோவின் புதிய இன்டியன் கௌன்ஸில்கள் ஆக்டின்படி இந்தியாவில் அந்தந்த ராஜ்யத்தில் அல்லது மாகாணத்தில் உள்ள (Legislative Council) சட்ட நிரூபண ஸபையிலும் வைஸ்ராயின் கௌன்ஸிலிலும் சில மெம்பர்களை ஜனங்கள் நியமிக்கிறார்கள்.

லார்ட் ரிப்பன் இந்தியாவில் இருந்தது நான்கு வருஷகாலமே யாயினும், அவரால் கிடைத்த பெரிய நன்மைகளைப் பற்றி ஜனங்கள் அவரிடத்தில் விசுவாசமும் நன்றியும் பாராட்டி வருகின்றனர்.

நமது துரைத்தனத்தின் வரலாறு

க்ளைவ் ப்ளாஸியுத்தம் நடத்தினபிறகு நூற்றைம்பது வருஷகாலம் கழிந்துவிட்டது. பெரிய இந்திய ராஜ்யத்தின் துரைத்தனத்தை நடத்த ஒருவர் பின் ஒருவராக இங்லன்டிலிருந்து பலபேர் வந்தனர். ஒவ்வொருவரும் துரைத்தனம் சீர்ப்படுவதற்கான ஒவ்வொரு நன்மையைச் செய்திருக்கிறார். வாரென் ஹேஸ்டிங்க்ஸ் கலெக்ட்டர்களை நியமித்ததுதான் தற்கால துரைத்தன முறைமைக்கு ஆரம்பம். ஒவ்வொரு கலெக்ட்டரும் ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டின் நிலவரியை வஸூல் செய்கிற அதிகாரி. கலெக்ட்டர்களுக்கு மேற்பட்ட அதிகாரிகள் கம்மிஷனர்கள். சில ஜில்லாக்கள் சேர்ந்த மாகாணத்துக்கு அவர்கள் தலைவர்கள். கம்மிஷனர்களுக்கு மேற்பட்ட அதிகாரி கௌன்ஸிலோடு கூடிய கவர்னர் ஜெனரல். வரி வஸூல் செய்வதோடு நியாயத்தீர்ப்பு செய்வது கலெக்ட்டருடைய வேலை. கலெக்ட்டர் செய்த தீர்ப்பு த்ருப்திகரமாக இல்லாவிட்டால், ஜனங்கள் அப்பீல்செய்துகொள்ளலாம்: அதாவது, மேலான கோர்ட்டில் தங்கள் வ்ழக்கைக் கொண்டுபோய்க் கலெக்ட்டருடைய தீர்மானத்தை நிவர்த்தித்துக் கொள்ள-

லாம், அல்லது மாற்றிக்கொள்ளலாம். இதன்பொருட்டாகக் கல்கத்தாவில் இரண்டு அப்பீல் கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப் பெற்றன.

வாரென் ஹேஸ்டிங்க்ஸுக்குப் பின்னால் வந்தவர்கள் ப்ரிட்டிஷ் ஆட்சியில் மேலும் மேலும் பல மாகாணங்களைச் சேர்த்துவந்தார்கள். முதலில் ஆட்சிசெய்திருந்த மாகாணங்களிலும் புதிதாய்ச் சேர்த்துக்கொண்ட மாகாணங்களிலும் ஆரம்பத்தில் இங்க்லிஷ் உத்யோகஸ்தர்களே நியமிக்கப்பெற்றனர். அப்பால் கொஞ்சகாலத்தில் இந்தியர்களுக்கும் மேலும் மேலும் உத்யோகங்கள் கிடைத்துவந்தன. இந்தியாவின் துரைத்தனத்தை நடத்துவதில், லார்ட் வில்லியம் பென்டின்க் தம்முடைய காலத்தில் இந்தியர்களுக்கே பெரும்பாகம் அளித்துவந்தார். அப்பால் இந்தியாவில் ஜனநியமக துரைத்தனம் (Representative Government) ஏற்பட்டது. ஜனநியமக துரைத்தனம் இன்னதென்பது உங்களுக்குத் தெரியுமா? சில பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்பிலும் (Cricket Team) பந்தாடுகிற ஒரு கூட்டம் உண்டு. இந்தக் கூட்டத்துக்குத் தலைவன் யார்? தலைவன் காப்டனே. காப்டனை நியமித்தவர் எவர்? நியமித்தவர் அந்த வகுப்பிலுள்ள பிள்ளைகளே. விளையாடுவதில் நல்ல ஸாமர்த்யம் பெற்றிருப்பதோடு பெரியதனத்தை நன்றாக நிர்வஹிக்கக்கூடியவனையே, வகுப்பின் பிள்ளைகள் காப்டனாகத் தெரிந்தெடுத்து நியமித்துக்கொண்டார்கள். (voted for).

இன்னொரு வகுப்போடு போட்டி போட்டுக்கொண்டு பந்தாடுவதானால், அதற்குரிய கூட்டத்தைத் தெரிந்தெடுப்பவர் எவர்? ஆடுதற்குரியவைகளைத் தெரிந்தெடுப்பவர் கம்மிட்டியாரே. அந்தக் கம்மிட்டி எப்படி ஏற்பட்டது? வகுப்பிலுள்ள பல வேறு பிள்ளைகளும் கம்மிட்டிக்குத் தகுந்த யோக்யதையுள்ளவரென்று தங்களுக்குள் தோன்றும் சிலருடைய பெயர்களைக் குறிப்பார்கள். அவ்விதம் குறிக்கப்பெற்றவர்களில் எவரெவர் கம்மிட்டியில் இருக்கவேண்டுமென்று தங்களுக்கு விருப்பமுண்டோ அவர்களை வகுப்பினர் ஸம்மதித்து நியமகம் செய்வர். இதுதான் வகுப்பினர் தங்களுக்கு ப்ரதியாக ஒரு கம்மிட்டியை (எலெக்ட் செய்கிற) நியமிக்கிற விதம். அந்தக் கம்மிட்டி எது செய்தாலும் அதுவெல்லாம அந்த வகுப்-

பின் பொருட்டுச் செய்ததேயாம். பந்து விளையாட்டில் நியமக துரைத்தனம் இதுவே. ஒரு தேசத்தில் ஜனநியமக துரைத்தனம் கார்யத்தளவிலே இவ்விதமாகவே நடக்கின்றது. ஆனால் அது பெருங்கணக்காய் நடக்கிறது. ஆனால், விளையாடுகிறவர்களைத் தெரிந்தெடுப்பதற்கு பதிலாக, ஒரு தேசத்து துரைத்தனத்தார், அந்த தேசத்தைக் காவல் செய்யும்படி ஸேனைகளை வைத்திருக்கின்றனர்: தேசத்தின் நன்மைக்காகவும் தங்களை நியமித்த ஜனங்களுடைய நன்மைக்காகவும் அவர்கள் நியாயாதிபதிகளை ஏற்படுத்துகிறார்கள்; வரிவஸூல் செய்கிறார்கள், இருப்புப்பாதைகளைப் போடுகிறார்கள், தபால் வேலையை நடத்துகிறார்கள்: இப்படிப்பட்ட பல வேலைகளையும் செய்கிறார்கள். ஸ்வயாதிபத்ய ஆக்ட் (The Self-Government Act) லார்ட் ரிப்பன் துரைத்தனத்தில் விதிக்கப்பெற்றது. இந்திய ஜனங்களுக்குத் தங்கள் பட்டணங்களில் ஜனநியமக துரைத்தன முறைமையைக் கற்பிப்பதே இந்த ஆக்ட்டின் கருத்து. பின்னால் ஜனங்கள் இந்த முறைமையை அறிந்துகொண்டால், இந்தியா முழுவதற்கும் இந்த முறைமையே துரைத்தன முறைமையாகுமென்பது அவருடைய எண்ணம். லார்ட் மின்டோ துரைத்தனத்தில் இந்தப் பெரிய சீர்திருத்தம் பின்னும் நன்றாய்த் திட்டமுற்றது. இந்தியாவில் இப்போது ஒருவிதமான ஜனநியமக துரைத்தனமே நடந்து வருகின்றது. சட்டங்கள் இப்போது கௌன்ஸில்களால் நிரூபணமாகின்றன. அந்தக் கௌன்ஸில்களில் அநேக மெம்பர்களை ஜனங்கள் தெரிந்தெடுத்து நியமிக்கிறார்கள். ஆகவே அந்தக் கௌன்ஸில்கள் ஜனநியமக மானவைகளே.

இந்தியாவின் ஆட்சியில் வெவ்வேறு காலங்களில் அநேக மாறுதல்களும் திருத்தங்களும் ஏற்பட்டன. ஒரு பக்கம் மரங்களை வெட்டிவந்தால் ஒரு பக்கம் மரங்களைப் பயிராக்கி வரும்படி காட்டிலாகா ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எந்தக் காலத்திலாவது இந்தியாவில் காடுகள் அற்றுப்போய்விடும் என்கிற பயம் இல்லை. குற்றங்களைத் தவிர்க்கும்படி போலீஸ் இலாகா ஏற்பட்டிருக்கிறது. வித்யாபிவிர்த்திக்குரிய உத்யோகஸ்தர்கள் தங்கள் அதிகாரத்திலுள்ள பாடசாலைகளை வருஷத்துக்கு வருஷம் சீர்ப்படுத்திவருகிறார்கள். ஆறுகளின் மீது பாலங்கள் கட்டவும், நீர்ப்பாய்ச்சலுக்குரிய வேலைகளைச்

செய்பவும், இருப்புப்பாதைகள் போடவும், சமுதாயக் கட்டடங்கள் கட்டவும், பப்ளிக் வொர்க்ஸ் உத்யோகஸ்தர்கள் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள். நியாயாதிபதிகளைப் பற்றியும் கலெக்ட்டர்களைப் பற்றியும் முன்னமே படித்திருக்கிறீர்கள். இந்தியாவின்மேல் படையெடுத்து வருவோரைத் துரத்திவிடும்படி, ப்ரிட்டிஷ் இந்திய உத்யோகஸ்தர்கள் படைக்கலப் பயிற்சி செய்விக்கும் இந்திய ஸேனை ஏற்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாகாணத்தின் துரைத்தனமும் ஒவ்வொரு ராஜ்யத்தின் துரைத்தனமும் மேல் சொன்ன பலவித இலாகாக்களால் நடந்துவருகின்றன. இந்த இலாகாக்களெல்லாம் துரைத்தனத்தாருடைய ஆட்சிக்கு உட்பட்டவை. அந்தந்த ராஜ்யத்தின் துரைத்தனத்துக்குத் தலைமையானவர் கவர்னர். அந்தந்த மாகாணத்தின் துரைத்தனத்துக்குத் தலைமையாயிருப்பவர் லெப்டெனன்ட் கவர்னர். எல்லா மாகாணங்களுக்கும் ராஜ்யங்களுக்கும் தலைவர் கவர்னர் ஜெனரல். இங்கிலன்ட் அரசரான இந்தியா சக்ரவர்த்திக்கு ப்ரதியாய் அதிகாரம் நடத்துகின்றவராகையால், கவர்னர் ஜெனரலுக்கு (வைஸ்ராய்) ராஜப்ரதிநிதி என்றும் ஒரு பட்டம் உண்டு.

ஒவ்வொரு கவர்னருக்கும் லெப்டெனன்ட் கவர்னருக்கும் ஒரு சட்ட நிருபண ஸபை (கௌன்ஸில்) உண்டு. இந்திய ஜனங்களுக்கு நன்மையான புதிய சட்டங்களை நிருபணம் செய்வதற்கு அந்த ஸபையினர் யுக்தி யாலோசனை சொல்லுகிறார்கள். லார்ட் மின்டோவுடைய ஆக்ட்டின்படி இந்த ஸபையின் மெம்பர்களில் அநேகரைப் பொது ஜனங்களும் காணியாளர்களும் தெரிந்தெடுத்து நியமிக்கிறார்கள். ஆகையால் கல்வியறிவுள்ள இந்தியன் ஒவ்வொருவனும் தன் தேசத்தின் துரைத்தன காரியத்தில் சிரத்தை எடுத்துக்கொள்வது ஸஹஜம். கௌன்ஸிலில் நடக்கிற ஸங்கதிகளை வர்த்தமான பத்ரிகைகளில் படித்தறியலாம். இந்தியாவில் அங்கங்கே நடந்துவருகின்ற செய்திகளை அறியும் பொருட்டு வித்யார்த்திகளும் வர்த்தமான பத்ரிகைகளை வாசித்துவரவேண்டும். மேன்மேல் அபிவிர்த்தியை நாடுவதும், உதவி வேண்டுவோர்க்கு உதவி செய்வதும், நமக்குக் கெடுதி விளைக்கின்றவர்களை அங்ஙனம் செய்யவொட்டாமல் தவிர்ப்பதும் நம்முடைய

அபீஷ்டமாகையால், நமது தேசத்தின் சட்ட நிரூபணத்தில் நாமெல்லாரும் சிரத்தை யெடுத்துக்கொள்வது அவசியம்.



விக்டோரியா மஹாராணி.

கவர்னர் ஜெனரலுடைய சட்டநிரூபண ஸபையே இந்தியாவில் மற்ற எல்லாவற்றிலும் மேலானது. மொத்தத்தில்

இந்திய ராஜாங்கத்தைப்பற்றிய சட்டங்கள் மாத்ரமே இந்த ஸபையில் நிரூபணமாகின்றன. அந்தந்த ராஜ்பத்திலுள்ளவை அததற்குரிய சட்டங்களை மாத்ரம் நிரூபணம் செய்கின்றன.

நம்முடைய இந்திய ராஜாங்கத்தின் துரைத்தன முறைமையை இப்பொழுது நீங்கள் ஒருவாறு உணர்ந்திருக்கிறீர்கள். பணமில்லாமல் இந்த முறைமை நடவாது. துரைத்தன உத்யோகஸ்தர்களெல்லாருக்கும் சம்பளங்கள் கொடுக்கவேண்டும். சமுதாய வேலைகளுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்க வேண்டும். பணமில்லாமல் ஒரு வேலையும் ஆகாது. வரிவஸூல் செய்வதற்கு இதுதான் காரணம். நம்முடைய துரைத்தனத்தின் செலவின் பொருட்டு நாமோவ்வொருவரும் நமக்குரிய ஸ்வல்ப பாகத்தைச் செலுத்துகிறோம். நாம் க்ருஷி செய்தால் ஸெட்டில்மென்ட் உத்தியோகஸ்தர் திட்டம் செய்திருக்கிற விதமாக நமது மாஸூலின் க்ரயத்தில் ஒருபாகத்தை துரைத்தனத்தாருக்குக் கட்டுகிறோம்.

இந்தியாவில் சில இருப்புப்பாதைகளை துரைத்தனத்தார் ஸொந்தத்தில் வைத்து நடத்துகிறார்கள். இவைகளில் கிடைக்கிற லாபம் தேசத்தின் வரிவருமானத்தோடு கணக்காகிறது. ஆகவே துரைத்தனத்தாருடைய இருப்புப்பாதையில் நாம் பிரயாணம் பண்ணுந்தோறும் நாம் கொடுக்கிற சத்தம் வரியின் பொருட்டுக் கொடுப்பதேயாகின்றது. தபால் இலாகாவிலும் தந்திதபால் இலாகாவிலும் கிடைக்கிற லாபமும் துரைத்தன வரிவஸூல் கணக்கிலேயே சேர்கிறது. ஆகவே நாம் கடிதமாவது தந்திஸமாசாரமாவது அனுப்புந்தோறும் ராஜாங்க வருமானத்தை ஓர் இம்மியளவாயினும் அதிகப்படுத்துகிறோமல்லவா. இந்த முறைமைக்கும் முற்கால முறைமைக்கும் எவ்வளவு வித்யாசம் பாருங்கள்! அக்காலங்களில் ராஜாங்கவருமானம் அவ்வளவையும் ராஜா செலவு செய்திருந்தான். அந்த வருமானத்தில் கொஞ்ச பாகத்தை நீர்ப்பாய்ச்சலுக்குரிய வேலைகளின் பொருட்டாவது இதரமான சமுதாய கார்யத்தின் பொருட்டாவது செலவுசெய்த ராஜனை மஹோத்தமனாக அக்காலத்தவர் கொண்டாடியிருந்தனர். இங்க்லிஷ்காரருடைய இந்திய துரைத்தன முறைமையில் ராஜாங்க வருமானம் அவ்வளவும் தேசத்தின் நன்மைக்கே செலவாகின்றது. தற்காலத்தில் நாமெல்லோரும் பொது நன்மையின் பொருட்டு

உழைத்து அவர்களால் கூடுமானதைக் கொடுத்து மொத்தத்தில் செலவு செய்துகொள்ளும் ஒரு பெரிய குடும்பம்போல் இருக்கிறோம்.

கடைசி அத்யாயம்

போன கதையில் நம்முடைய துரைத்தன முறையைப் பற்றியும், நமது தேசத்தின் துரைத்தனத்தை நடத்தும்படி இங்க்லண்டிலிருந்துவரும் அநுபவமுள்ள மதியூகிகளான ராஜ தந்த்ர நிபுணர்களைப் பற்றியும் துரைத்தன இலாகாக்களைப் பற்றியும் சில ஸங்கதிகளை வாசித்தோம். நமது துரைத்தனமாகிய சரீரத்தில் கௌன்ஸிலோடுகூடிய வைஸ்ராயைத் தலையென்றும் இலாகாக்களைக் கைகளென்றும் அலங்கரித்துச் சொல்லலாம். முன்னே வைஸ்ராயாக இருந்த லார்ட் மின்டோவும், இந்தியாவின் ஸெக்ரிடெரி அவ் ஸ்டேட்டாக இருந்த லார்ட் மார்லியும், விக்டோரியா மஹாராணியின் வாக்குறுதியை ஒட்டி துரைத்தன முறைமையைச் சீர்திருத்தினர். நமது தேசத்தின் துரைத்தனத்தை நடத்துவதில் அவர்கள் முன்னிலும் அதிகமான பாகத்தை நமக்களித்தார்கள்.

இந்தச் சீர்திருத்தங்கள் நடக்கிற ஸமயத்தில் விவேகமும் ஸுகுணமும் வாய்ந்த நமது VII-வது எட்வர்ட் மஹாராஜன் காலகதியடைந்தார். விக்டோரியா மஹாராணியின் பௌத்ரரான ஜார்ஜ் மஹாராஜன் ஸிம்ஹாஸநம் ஏறினர். இந்தியாவின்மேல் ஜார்ஜ் மஹாராஜனுக்கு எப்போதும் அதிக ப்ரியம் உண்டு. இங்க்லண்டில் பட்டாபிஷேகச் சடங்குகள் முடிவான பிறகு இந்தியாவுக்குப் போகவேண்டுமென்று உறுதிசெய்து கொண்டார். அப்படியே நமது சக்ரவர்த்தினியான மேரி மஹாராணியோடு ப்ரயாணம்பண்ணி இந்தியாவுக்கு வந்து டில்லிமாநகரத்தில் கொலுவீற்றிருந்தார்.

அங்ஙனம் ஸர்வாடம்பரத்துடனே கொலுவீற்றிருந்தபோது, அங்கே கூடின ராஜாக்களுக்கும் ஜனங்களுக்கும் தாம் மகுடந்தரித்த ஸங்கதியை அறிக்கை செய்து, எல்லாருடைய ஐக்யத்தையும் அங்கீகரித்த வைபவத்தைப்பற்றி நாமெல்லாரும் வாசித்திருக்கிறோம். அதனால் அவருக்கு நம்முடைய க்ஷேமத்தில் உள்ள நோக்கம் நன்கு புலப்படுவதாயிற்று.

நமக்கும் இங்கிலிஷ்காரருக்கும் பொதுவான ப்ரிட்டிஷ்ராஜாங்கத்தில் நமது இந்தியாவுக்குள்ள உந்நத பதவியை அவரும் நம்மோடு உடனுறையும் இங்கிலிஷ்காரரும் ஒப்புக்கொண்டதையும் ப்ரத்யக்ஷத்தில் கண்டோமன்றோ. அந்த தர்பாரில், அவர், புராதனமான டில்லிமாநகரமே அதுமுதல் ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு ராஜதானியாகக் கடவதென்று அறிக்கை செய்தார்.

அக்காலத்தில் வைஸ்ராயாயிருந்த லார்ட் ஹார்டின்ஜ் வித்யாபிவிர்த்தி செய்வதும் ஸுகாதாரத்திருத்தங்கள் செய்வதுமே தம்முடைய ப்ரதான நோக்கமென்று தெரிவித்தார். இந்த நோக்கம் மிகவும் சிறப்பான தாகையால், நம்மால் கூடுமாயின், அதனைக் கார்யப்படுத்த நாம் அவருக்குத் துணையாக நிற்கவேண்டும். ஸுகாதார ஸம்பந்தமாய் எவ்வளவோ செய்வது நமக்கு அவச்யமே. வ்யாதியைக் கண்டித்து நிர்மூலஞ் செய்யும்படி பயிற்சிபெற்ற வைத்யர்கள் வ்யாதிகளை வெல்லும் விதங்களை நமக்குத் தெரிவிக்க ஆயத்தமாக இருக்கிறார்கள் விஷஜ்வரம் இந்தியாவில் நாசகாலனாக இருக்கிறது. குளங்களிலும் ஓதமான இடங்களிலும் விர்த்தியாகிற ஒருவித கொசுவால் இந்த ஜ்வரம் ஒருவரிடத்திலிருந்து ஒருவரிடம் தொற்றிக்கொள்ளுகின்றது. நமது வைத்ய உத்யோகஸ்தர்களுடைய கற்பனையை அநுஸரித்து அநாவசியமான குளங்களைத் தூர்த்து ஓதமான இடங்களில் நீரை வடித்து வற்றடித்துவிட்டால் கொசுக்கள் பெருகமாட்டா. இந்தச்சனியனும் விட்டொழியும். வைஸ்ராயும் துரைத்தனத்தாரும் செய்துவருகிற முயற்சியில் நாம் ஸுலபமாய் உதவிசெய்யக் கூடிய வழி இது வொன்று. இந்த விஷஜ்வரத்தை ஒழித்துவிட்டு நீடித்த ஸௌக்யத்தால் நமக்கு அதிகப்படி பல மேறினால் நாம் பலவித முயற்சிகளில் ஊக்கங்கொண்டு க்ஷேமப்படலாம். இதனிடையில், நமது சக்ரவர்த்தி நேரில் வந்து இந்தியாவைக் கௌரவிக்கச் செய்தபோது நமக்குக்காட்டிய எதிர்காலச் சீரும் செழிப்பும் நமக்கு எப்பொழுது கிட்டுமென்று எச்சரிக்கையாகப் பார்த்துக்கொண்டிருப்போம்.

PRINTED AT THE MADRAS DIOCESAN PRESS, VEPERY—B. 16302,

லாங்மன்ஸ் இந்திய ப்ராக்டிகல் அரித்மெடிக்

இவை சென்னை வித்யா விசாரணை கர்த்தர்கள் எலிமெண்டரி பாடசாலைகளுக்கும் ஸெகெண்டரி பாடசாலைகளுக்கும் "புதிதாய் நியமித்திருக்கும் இடத்தையும் எண்களையும் குறித்த வேலை" க்குக் கூறியுள்ள பாடக்ரமத்தையொட்டி, உசிதமான இடங்களில் க்ஷேத்ர கணிதத்தையும், அளவுசாஸ்த்ரத்தையும் தழுவி கைப்பழக்கத்தால் அறிந்துகொள்ளக்கூடிய விஷயங்களையும் ஸம்பந்தப்படுத்தி, அநேக அப்யாஸங்களுடன் கான்ஸெண்ட்ரிக் முறையில் எழுதியிருக்கின்றன.

[மதராஸ் வித்யா விசாரணைகர்த்தர்கள் அங்கீகரித்தது.]

*I.	புஸ்தகம்.	பிள்ளைகளுக்கு,	3 அணா.
*I.	புஸ்தகம்.	உபாத்யாயர்களுக்கு,	8 அணா.
*II.	புஸ்தகம்.	பிள்ளைகளுக்கு,	9 அணா.
*II.	புஸ்தகம்.	உபாத்யாயர்களுக்கு,	ரூபா. 1–4 அணா.
III.	புஸ்தகம்.	முதல் பாரத்திற்கு,	6 அணா.
IV.	புஸ்தகம்.	இரண்டாம் பாரத்திற்கு,	8 அணா.
V	புஸ்தகம்.	மூன்றாம் பாரத்திற்கு,	7½ அணா.

*[மதராஸ் டைரக்டர் அவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் ஸர்க்கார் ஸ்கூல்களில் உபயோகிக்கலாமென்று அங்கீகரித்தது.]

லாங்மன்ஸ் இந்தியக் கதைகள்.

ராஜா ரவிவர்மாவினுடைய படங்களும் இன்னும் அநேக சிறந்த படங்களும் அடங்கியிருக்கின்றன.

இந்தக் கதைப் புஸ்தகங்கள் இந்திய பாலர்களுக்கென்றே புதிதாய் எழுதப்பெற்றவை. இவைகளிலுள்ள கதைகள் இந்தியர்களுக்கு நன்றாய்த் தெரிந்தவைகளாதலால், பாலர்கள் உத்ஸாஹத்தோடு வாசிக்கத்தக்கவை. தவிர, வாசகப் பாங்கு அந்தந்த வகுப்புக் கேற்றவாறு அமைந்திருக்கும்.

[மதராஸ் வித்யாவிசாரணைகர்த்தர்கள் அங்கீகரித்தவை.]

Grade I.

ராமனும் ஸீதையும். 24-பக்கம். 5-படம் ... 2 அணா
ஸூர்யா பாய். 22-பக்கம். 4-படம் ... 2 „

Grade II.

ஸ்ரீ க்ருஷ்ணபகவானுடைய இளம்பருவம்
36-பக்கம். 7-படம் ... 3 „
பஞ்சதந்த்ரக் கதைகள். 42-பக்கம். 5-படம்... 3 „

Grade III.

தென்னிந்தியக் கதைகள். 57-பக்கம். 8-படம் 4 „
முகம்மதியக் கதைகள். 60-பக்கம். 6-படம்.. 5 „

Grade IV.

ஓர் அரசன் கதை. 66-பக்கம். 8-படம் ... 5 „
ஸ்ரீராம சரிதம். 62-பக்கம். 10-படம். ... 5 „

Grade V.

ஹிந்து புராணக் கதைகள். 80-பக்கம்.
14 படம். 7 „

லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பனி
167, மௌண்ட் ரோட், மதராஸ்
பொம்பாய், கல்கத்தா